https://t.me/tamilpdfebooks



https://t.me/tamilpdfebooks


# ராணி முத்து

இலக்கியத் திங்கள் இதழ்

முத்து 79 ராட்சச ஆண்டு ஆடி (ஜூலை 1975)


## பொருளடக்கம்


அறிவுப் போட்டி:
ரூ. 1000 பரிசு! 6

அறிவுப் போட்டி (34) முடிவு 8

எண்ணூர் தரும் இந்தியத் தர மணல் 11

கோடரிக் கஞ்சி! 15

கண்ணதாசன் பேசுகிறேன்! 17

வேலங்குடித் திருவிழா 19


## சந்தா விவரம்


ஓர் ஆண்டு ரூ. 15-00

6 மாதம் ரூ. 8-00

சந்தாத் தொகை அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி,

"ராணி முத்து",

சென்னை-600007.


## புதிய தலைமுறை

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல கால வகையினாலே" என்று புதுமைக்கு "நன்னூல்" வரவேற்பு கூறுகிறது.

தமிழ் இலக்கிய உலகில் இன்று புதிய புதிய எழுத்தாளர்கள் தோன்றியிருக்கிறார்கள்.

அவர்கள் நடையிலும், கதை எழுதும் உத்தியிலும் புதிய புதிய உத்திகளை பின்பற்றுகிறார்கள்.

இது தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

இது இருபதாம் நூற்றாண்டு. எல்லாத் துறைகளிலும் புதுமைகள் வளர்ந்து வருகின்றன. தமிழ் இலக்கியமும் காலத்துடன் சேர்ந்து வளரவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், தமிழ் இலக்கியத்தை கால வெள்ளம் அடித்துச் சென்றுவிடும்.

ஆனால், இந்த வளர்ச்சி

https://t.me/tamilpdfebooks



நல்ல முறையில் இல்லை என்பதை கூறித்தான் ஆகவேண்டும்.

பழமையை உரமாகக் கொண்டுதான் புதுமை தோன்ற வேண்டும். அதுதான் நல்ல மரபு.

ஆனால், இன்றைய புதிய தமிழ் இலக்கியங்கள் தமிழ் மரபுடன்—தமிழ்ப் பண்பாட்டுடன் இசைந்ததாக இல்லை.

மேல்நாட்டு மரபைத் தழுவியதாக இருக்கிறது. கதைகள்—கருப் பொருள்—நடை எல்லாமே மேல்நாட்டைத் தழுவி பின்பற்றப்படுகின்றன. சிலர் ஆங்கிலத்திலேயே கூட தமிழ்க் கதைகளை எழுதுகிறார்கள்.

இது வரவேற்கத்தக்க வளர்ச்சி அல்ல. இது வளர்ந்தால் தமிழ் இலக்கியம் என்ற தனி இலக்கியமே இல்லாது போய்விடும். எனவே, புதுமை எழுத்தாளர்கள்—புதிய படைப்பாளர்கள், தமிழை ஏற்றி—தமிழில் சிந்தித்து—தமிழில் எழுதி—தமிழ் மரபுடன் கூடிய இலக்கியத்தை வளர்க்க முன் வருதல் வேண்டும்.

*

## அடுத்த முத்து:

### "லக்ஷ்மி" எழுதிய

# நாயக்கர் மக்கள்

புகழ்பெற்ற பெண் நாவல் ஆசிரியை "லக்ஷ்மி" எழுதிய "நாயக்கர் மக்கள்" என்ற நல்ல குடும்பக்கதை அடுத்த மாத (ஆகஸ்டு) "ராணி முத்து"வில் இடம் பெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

"லக்ஷ்மி"யின் படைப்புகள் ஒவ்வொன்றும் ஒரு முத்து. தமிழ் இலக்கியத்தின் சொத்து. என்றென்றும் தமிழ் மக்கள் படித்து மகிழத்தக்க படைப்புகள், அவை. இன்றைய இளைய தலைமுறையினர் படித்து மகிழ வேண்டும் என்பதற்காகவே இந்த நாவலை "ராணி முத்து"வில் வெளியிடுகிறோம். படிக்கத் தவறாதீர்கள்.

https://t.me/tamilpdfebooks




CHAITRA BLS 45 TAM


https://t.me/tamilpdfebooks

15

# கண்ணதாசன் பேசுகிறேன்!

எந்த நூலுக்கும் முன்னுரை என்று ஒன்று எழுதுவது சம்பிரதாயம். ஆனால் இது சம்பிரதாய முன்னுரை அல்ல. இந்த நூலுக்கு முன்னுரை கட்டாயத் தேவை.

காரணம்: இந்த நாவல் இருபது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது.



கவிதை எழுத வேண்டும், கட்டுரை எழுத வேண்டும், பல வகையான திரைப் பாடல்களும் எழுத வேண்டும். தத்துவம், சிறுகதைகள் எழுத வேண்டும், குட்டிக் கதைகள், செப்பு மொழிகள், பெரிய காவியங்கள் எல்லாம் எழுத வேண்டுமென்ற ஆசையோடு "நாவல்" எழுத வேண்டுமென்ற ஆசையும் எனக்

https://t.me/tamilpdfebooks



இருந்தது.

நாலைந்து நாவல்கள் எழுதினேன்; முடிவு பெற்ற நாவல்கள் சிலவே.

இந்த "வேலங்குடித் திருவிழா" அவற்றில் ஒன்று.

"தென்றல்" இதழில் வாரா வாரம் இதனைத் தொடர்கதையாக எழுதினேன்.

தொடர் கதைக்கு முக்கியமான நியாயம் எது?

கதையை இந்த வாரத்தில் நிறுத்தும்போது, அடுத்த வாரப் பத்திரிகையை ரசிகர்கள் எதிர்பார்க்க வேண்டுமென்பதே முதல் நியாயம்.

இதனை "போலி எழுத்தாளர்களின் வியாபார நியாயம்" என்றான் பெர்னட்ஷா.

அதுவும் ஒரு வகையில் உண்மைதான்.

அந்த நியாயத்தில்தான் நான் இதனை எழுதினேன்.

விளைவு என்ன?

சம்பவங்கள் திடீர் திடீரென்று மாறுகின்றன; பாத்திரங்கள் இடம் பெயர்ந்து ஓடுகின்றன; சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ, இடை இடையே தத்துவங்களும் தலைகாட்டுகின்றன.

முடிக்க நினைத்தது பிள்ளையார்தான்; ஆனால் அது குரங்காக முடியவில்லை. இடையில் குரங்காகி, கடைசியில் பிள்ளையாராகவே முடிகிறது.

இந்த நாவலுக்குக் கரு என்பதாக ஒன்றும் இல்லை; வெறும் கதைதான்.

கதையில் வரும் பாத்திரங்கள், வாரா வாரம் நானிருந்த நிலைமையை ஒட்டியே உருவாகி இருக்கின்றன.

செட்டி நாட்டுப் பின்னணியில் எழுத ஆசைப்பட்டதால் சென்னையில் மட்டுமே நடைபெறக் கூடிய சில சம்பவங்களை, செட்டி நாட்டிற்குக் கொண்டு போய் காட்டியிருக்கிறேன்.

மற்ற சில நாவல்களைப் போலவே இதையும் நீங்கள் ரசிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

காரணம் இதிலும் கற்பழிப்பு வருகிறது.

தமிழ் நாட்டு ரசிகர்களை எனக்குத் தெரியாதா!

அவர்கள் மனதிலுள்ள அரிப்பு எனக்கு இருக்காதா!

என் அரிப்புக்காக நான் எழுதினேன்; உங்கள் அரிப்புக்காக இதனை நீங்கள் படிக்கலாம்.

"பண்பாடு, பண்பாடு" என்று கதைக்கிறோமே, அந்தப் பண்பாடு இதிலும் இருக்கிறது.

காரணம், பண்பாடு பற்றிப் பேசுவோரைத் திருப்தி செய்ய.

உரை நடையில் எனக்கொரு பாணி உண்டு.

அந்தப் பாணியில் எதை எழுதினாலும் உங்களால் ரசிக்க முடியும்.

இதிலுள்ள கதை என்ன என்பது எனக்கு மறந்து போய்விட்டது! திரும்பவும் படித்துப் பார்த்து இந்த முன்னுரையை நான் எழுதவில்லை.

ஆகவே, இதைப் படிக்கின்ற துர்ப்பாக்கியம் யார் யாருக்கு நேரிடுகிறதோ, அவர்கள்தான் இதிலுள்ள குழப்பங்களை எனக்குத் தெரிவிக்க வேண்டும். ★

https://t.me/tamilpdfebooks

கண்ணதாசன்

எழுதிய

# வேலங்குடி திருவிழா

https://t.me/tamilpdfebooks

# 1

"இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்துருவாங்க, சீக்கிரம் சமுக்காளமெல்லாம் எடுத்துப் போடு" என்று மனைவி மங்கையர்க்கரசியை அவசரப்படுத்தினர் சின்னப்பபிள்ளை.

"கொஞ்சந்தான் பொறுங்களேன்! நான் ஒருத்தி என்னதான் செய்ய முடியும்?" என்று சலித்துக் கொண்டாள் மங்கையர்க்கரசி.

"அவங்கெல்லாம் வந்திருக்கிறபோதுதான் சமுக்காளம் விரிக்கிறதா?" என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தார், பிள்ளை. "கொஞ்சந்தான் நிக்கட்டுமே, என்ன கெட்டுப்போச்சு" என்று சட்டசபைக் கணக்கில் பதில் சொல்லிவிட்டு, யானை அசைந்தாடுதல் போல் உள்ளே சென்ருள் மங்கையர்க்கரசி.

சின்னப்பபிள்ளை என்ருல் புதுக்கோட்டை வட்டாரத்தில் பெரும்பாலோருக்குத் தெரியாது. ஆனுலும், அவர் முப்பதாண்டு காலத்திற்கு மேல் அங்குதான் வசித்து வருகிருர். தானுண்டு, தன் வேலையுண்டு என்று தன் வீட்டிலேயே கிடப்பார். அத்தி பூத்தது போல் வயல் பக்கம் போய் தனது இருபது ஏக்கர் நிலத்தையும் சாடையாகப் பார்த்து விட்டு வருவார். பூர்வீகச் சொத்துக்கள் ஏராளம். அவற்றிலே நகை பாதி, வங்கியிலே கிடக்கும் பணம் பாதி. ஊரிலே அவரைத் தெரிந்த ஒரு சிலர், அவரை அடைக்கோழிச் சின்னப்பபிள்ளை என்பார்கள்.

அவர் மனைவி மங்கையர்க்கரசி திருமயம் சேக்கப்பபிள்ளையின் ஒரே புதல்வி. ஒரு வரவுக்கு ஒரு செலவு எழுதி, கணக்கைச் சரிக்கட்டிய குடும்பங்களில் சேக்கப்பபிள்ளையின் குடும்பமும் ஒன்று. அதாவது, மங்கையர்க்கரசி பிறந்ததும், அவளுடைய தாய் இறந்துவிட்டாள். சேக்கப்பர் தன் ஒரே மகளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தார். "கணவனுக்குக் கடுதாசி எழுதத் தெரிகிற வரைக்கும்" மகளைப் படிக்க வைத்தார். பெண்கள் அதிகம் படிக்கக் கூடாது. படித்தால் கணவனுக்கு வளைந்து கொடுக்க மாட்டார்கள் என்பது அவருடைய சித்தாந்தம். புத்தனுக்குப் போதி மரத்தடியில் உதயமான ஞானத்தைவிட இந்தச் சித்தாந்தம் பெரியது என்பது அவரே தனக்குள் செய்து கொண்ட முடிவு. படிப்பு அதிகமில்லாமலே தன் மகள் பனை மரம் மாதிரி நிமிர்ந்து நிற்கக் கூடியவள் என்பது அப்போது அவருக்குத் தெரியாது. தாயில்லாவிட்டாலும் மங்கையர்க்கரசி உறுதியாக வளர்ந்தாள். சின்ன வயதிலேயே ஊரிலே உள்ள பெண்களுக்குள் சிண்டு

https://t.me/tamilpdfebooks



முடித்து விடுவதும் மீறிப்போனால் திருடுவதும் அவள் கைக்கொண்ட ஆயுதங்கள். அதனாலேயே பருவம் வந்து ஐந்தாறு ஆண்டுகள் வரைக் கும் வயது வந்த பையன்களின் பெற்றோர்கள் அந்த வீதி வழியே வரவே பயப்பட்டார்கள். கடைசியில், எப்படியோ சின்னப்பபிள்ளையின் தலையைத் தடவி, தன் மகளை அவர் தலையில் கட்டினார் சேக்கப்பபிள்ளை. சேக்கப்பபிள்ளை வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர்கள் அந்த நாளை சின் னப்பபிள்ளையின் துக்க நாளாகக் கொண்டாடினார்கள். அவ்வளவு அவ திப்பட்டிருந்தார்கள் மங்கையர்க்கரசியின் திருவாய் மொழியில். யாரா வது ஓர் ஆடவன் தற்செயலாக அவளைப் பார்த்தாலும் பொழிந்து தள்ளுவாள், “முழியைப் பார் முழியை! அந்த முழியிலே நெருப்பை அள்ளிக் கொட்ட” என்று இடைவிடாமல் பாடுவாள். சில சமயங்களில் அந்தப் பாட்டின் தாளம் துரித காலத்திலும் போவதுண்டு. இதில் அடிக்கடி அவதிப்பட்டவர்கள் அடுத்த வீட்டுக்காரர்கள்தான். அதனால் தான் சின்னப்பபிள்ளைக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் துக்க நாள் கொண்டாடினார்கள்—தங்கள் வரைக்கும் விடுதலை நாள் கொண் டாடினார்கள்.

மங்கையர்க்கரசியை மணமுடிக்கும்போது, சின்னப்பபிள்ளையின் தலை அரைக்கீரை விதைத் தைலம் விட்டு, அருமையாக வளர்க்கப்பட்ட கிராப்புத் தலையாக இருந்தது. நாளாக, நாளாக அந்தத் தலையிலே பல “பொட்டல்கள்” தோன்ற ஆரம்பித்தன. நாளடைவில் அந்தப் “பொட் டல்கள்” ஒரு பக்கம் “புட்பாலும்”. ஒரு பக்கம் “பாட்மிட்டனும்”, விளையாடக்கூடிய அளவில் வளமாக வளர்ந்தன.

விடுதலைபெற்ற புதுக்கோட்டை போல் வெறிச்சிட்டுப் போன அந் தத் தலைக்குக் காரணம், மங்கையர்க்கரசியின் கை பலம் தானென்று அந்த ஊரிலுள்ளவர்கள் பேசிக் கொண்டார்கள். இதற்கிடையிலும் அவர்கள் கணவன் மனைவியாகக் காதல் வாழ்க்கை வாழ்ந்து, மூன்று குழந்தைகளை ஈன்றெடுத்தார்கள். மத்தியானம் சண்டை போடுவது போலத்தான் இரவிலும் சண்டை போடுவார்கள் என்று ஊரிலே இருந்த அபிப்பிராயத்தை அவர்களுடைய “ஜனன மகாத்மியம்” மாற்றியமைத்தது.

மூத்தது ஆண் குழந்தை; பெயர் சுந்தரம். இரண்டாவது பெண் குழந்தை; பெயர் இந்திரா. மூன்றாவது பெண் குழந்தை; பெயர் கமலம்.

சுந்தரம், மேலைச்சிவபுரி தமிழ்க் கல்லூரியில் படித்துக் கொண்டி ருந்தான். இந்திரா சின்ன வயதிலே பள்ளிக்கூடம் போய் வாத்தியார் திட்டுகிறார் என்று திரும்பி வந்துவிட்டாள். கமலம், புதுக்கோட்டை யிலேயே எஸ். எஸ். எல். சி.வரை படித்து, அதிகம் படிக்கக் கூடாது என்ற தாய்வழிப்பாட்டனின் தத்துவப்படி வீட்டிற்கு வந்துவிட்டாள்.

இருவரும் ருதுவாகியிருந்தனர். மாப்பிள்ளை வேட்டையில் ஈடுபட் டார் சின்னப்பபிள்ளை, மங்கையர்க்கரசி வீரதீரம் படைத்தவள் என்று

https://t.me/tamilpdfebooks



கேள்விப்பட்டிருந்ததாலும் இந்திரா அட்டைக்கரி போன்ற கருப்பு, அதிலும் படிக்காதவள் என்று தெரிந்திருந்ததாலும், சின்னப்பபிள்ளையின் மாப்பிள்ளை வேட்டை காட்டைக் கலைத்ததுடன் நின்றுவிட்டது.

இந்த நிலையில் மேலைச்சிவபுரியிலிருந்த சுந்தரம், ஒரு மாப்பிள்ளையைப் பற்றி சின்னப்பபிள்ளைக்குக் கடிதம் எழுதினான். பாலநாயகம் என்ற அந்த மாப்பிள்ளையின் பெயரை பாலன் என்று சுருக்கமாக அழைப்பார்கள் அவனுடைய பெற்றோர்களான சொக்கப்பபிள்ளையும், மீனாட்சியும்.

பாலன் ஒரு பெரிய எழுத்தாளன். ("பெரிய" என்பது அவனே சொல்லிக் கொள்வது.) சென்னையில் நடந்த இலக்கியப் பத்திரிகையொன்றில் அவன் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். சொக்கப்பபிள்ளையும், மீனாட்சியும் அபூர்வமாக வாய்த்த தம்பதிகள். அடக்கம், ஒடுக்கம், தர்ம குணம் என்று எத்தனை அடுக்கினாலும் அத்தனைக்குள்ளும் அவர்கள் அடங்குவார்கள்.

சுந்தரம் அங்கே அடிக்கடி போய் வருவான். அவர்களைத் தாய் தந்தையராகவே பாவிப்பான். அடிக்கடி சென்னையிலிருந்து வீட்டிற்கு வரும் பாலனையும் அறிமுகப்படுத்தி அவன் பழகிக் கொண்டான். பாலனை அவனுக்கு மிகவும் பிடித்தது. அதோடு, அவன் கொஞ்சம் தற்பெருமைக்காரன் என்பதையும் அவனால் உணர முடிந்தது. எப்படியாவது தன் தங்கை இந்திராவை பாலனுக்குக் கட்டி வைக்க வேண்டும்; அந்த உறவை முடிவற்றதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பது அவனது தீராத ஆசை.

சுந்தரம் தன் குடும்ப வரலாறு முழுவதையும் சொக்கப்பபிள்ளைக்கும், மீனாட்சிக்கும் சொல்லியிருந்தான். அதிலே, அந்தக் குடும்பத்தின் மீது அவர்களும் அனுதாபப்பட்டவர்களாயிருந்தார்கள். அந்த வரலாற்றைச் சொல்லி முடித்ததும், "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்று முத்தாய்ப்பு வைத்திருந்தாள், மீனாட்சி. அதை நினைவுகொண்ட சுந்தரம், இந்திராவின் திருமணம் சம்பந்தமாகப் பாலனிடம் பேசுவதைக் காட்டிலும் பெற்றோரிடம் பேசுவது பலன் தரும் என்று கருதி, மெதுவாகச் சொக்கப்பரிடம், பேச்சைத் துவக்கினான். அவரும் அதை எதிர்பார்த்தவர் போல ஆமோதித்துக் கொண்டு வந்தார். பெண் கருப்பு என்பதையும், படிக்கவில்லை என்பதையும் சுந்தரம் முன்கூட்டிச் சொல்லியிருந்தான். ஆகையால், சொக்கப்பர் சற்று யோசிக்க ஆரம்பித்தார். அந்த யோசனை, அவருக்கு விருப்பமில்லாமையால் ஏற்பட்ட யோசனையல்ல, பாலன் என்ன சொல்வானோ என்ற பயம். கடைசியில் அவர் தன் மனைவி மீனாட்சியைக் கலந்து, தீவிரமான ஒரு முடிவுக்கு வந்தார். எப்படியும் சின்னப்பபிள்ளையின் குடும்பத்தோடு சம்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்று துணிந்தார். சுந்தரத்தைக் கூப்பிட்டு ஒரு மணிநேரம் தனியாகப் பேசினார்; உடனே தன் மகன் பாலனுக்கு, புறப்பட்டு வரும்படி கடிதம் எழுதினார். சுந்தரம் தன் பெற்

https://t.me/tamilpdfebooks



ரேருக்கு "வெள்ளிக்கிழமையன்று பெண் பார்க்க வருகிருர்கள்; நானும் வருகிறேன்" என்று கடிதம் எழுதினுன். தன் தங்கைக்கு மணமுடியப் போவதிலே அவனுக்குத் தாளாத மகிழ்ச்சி. அப்போது அவன் இதயத் திலே ஒரு மூலேயில் ஏற்பட்ட பயம், சொக்கப்பபிள்ளேயையும், மீனுட் சியையும் நினேத்துக் கொண்டதால் தணிந்தது.

பாலனும் புறப்பட்டு, மேலேச்சிவபுரி வந்து சேர்ந்தான்; எல்லோ ரும் புதுக்கோட்டைக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் வரப்போகிருர் கள் என்ற அவசரத்திலேதான் சின்னப்பபிள்ளேயிருந்தார்: அதற்குத்தான் சட்டசபைக் கணக்கில் பதில் சொன்னுள், அவர் மனேவி.

வாசலிலே கார் வந்து நின்றது. எல்லோரும் இறங்கினுர்கள். "வாருங்கள், வாருங்கள்" என்றபடி சின்னப்பபிள்ளே முன்னும் பின்னும் வேகமாக ஓடினுர்; மங்கையர்க்கரசி தன்னுல் முடிந்த அளவு வேகமாக ஓடி, சமுக்காளத்தை விரித்தாள்; வெற்றிலேத் தட்டை எடுத்து வைத் தாள். "டேய் மூக்கையா, மூக்கையா" என்று குரல் கொடுத்தாள். "காபி பலகாரம் தயாராகி விட்டதா?" என்று பொதுவிலே கேட் டாள். சம்பந்தியார் உள்ளே வரப் பார்த்து, மேலாடையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, பின்கட்டுக்கு ஓடினுள். உள்ளே வந்த சொக்கப் பர் மீனுட்சி பாலன் ஆகியோர் விரிப்பில் அமர்ந்தனர். சுந்தரம் பின் கட்டுக்குச் சென்ருன். "அண்ணு!" என்று ஆவலாக வந்தாள் இந்திரா. அவள் முகம் களேயில்லாமலிருந்தது. மெதுவாக அவளிடம் பேசினுன் சுந்தரம். பிறகு தாயிடமும் போய் ரகசியம் பேசினுன். அவள் கைகால் களே ஆட்டி, சப்தமில்லாமல், கற்கால மனிதர்களேப் போல் சைகை காட்டினுள். "சரி, சரி! அலங்காரம் சீக்கிரம் ஆகட்டும்" என்று கூறி விட்டு, முன்பக்கம் வருவதற்காக நடந்தான். அப்போது எதிரே வந்த தந்தை சின்னப்பபிள்ளேயோடும் சைகையில் பேசினுன். உள்ளே எழுந்து வந்தாள் மீனுட்சி. அவளும் சைகையில் பேசினுள். ஏதோ உலக மகா யுத்தத்திற்குத் தயார் செய்வது போல, பேச்சு நடந்தது. கடைசியில் எல்லோரும் சிரித்த முகத்தோடு வெளியில் வந்து உட்கார்ந்தார்கள். உள்ளேயே நின்ற மீனுட்சி, பெண்ணே அலங்கரித்து, மெதுவாக வெளி யிலே அழைத்துக் கொண்டு வந்தாள். தலேகுனிந்து நின்ற அந்தப் பெண் ஒரு குடும்பப் பெண்ணின் முழு இலக்கணத்தையும் நினேவுபடுத்தினுள். அந்த நாணத்திலுைம், அளவு மீறிய அலங்காரத்திலுைம் ஒரு புதிய அழகு அவள் முகத்தில் காணப்பட்டது. கூந்தலில் வைக்கப்பட்டிருந்த மலர், அதை மிகைப்படுத்தி எடுத்துக் காட்டியது. அந்தப் பூவின் வாடையும், ஊதுபத்தியின் வாடையும் மனேதத்துவ முறையிலே பாலனேக் கவர்ந்தன. பெண்ணே இரண்டு முறை, முன் பின்னுக நடக்க வைத்து, சிரித்தபடி உள்ளே அழைத்துச் சென்ருள் மீனுட்சி. கையி லிருந்த வெற்றிலேயை இரண்டு கைகளாலும் மாறி மாறித் தொட்டபடி, அவளேக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த பாலன், அவள்

https://t.me/tamilpdfebooks

உள்ளே சென்ற பிறகும் தன் நினைவு கொள்ளவில்லை. உள்ளே காட்சிக்கு வைக்கப்பட்டுத் திரும்பிய மாடப் புறாவைப் பார்த்துப் பூரித்த மங்கையர்க்கரசி, திருஷ்டி கழிப்பதன் மூலம் திருப்திப் பட்டுக் கொண்டாள். மீனாட்சி, மங்கையர்க்கரசியிடம் கண்ணடித்து, "எல்லாம் நல்லா முடியும்" என்று கூறிவிட்டு, பின்கட்டுக்குள் ஒருமுறை பார்த்துவிட்டுத் திரும்பினாள்.

வெளியிலே, சுந்தரம் பாலனிடம், "எப்படி?" என்று மெதுவாகக் கேட்டான். அப்போது சின்னப்பரும் சொக்கப்பரும் வாசற்புறத்திற்குப் போய் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சுந்தரம், "எப்படி?" என்று கேட்டதும், பாலன்,

**"வானத்து நிலவுதான் பூமிக்கு வந்ததுவோ**
**வண்ண மலர்தான் கொடி மாறிச் சேர்ந்ததுவோ**
**மோனத் துயிலிருக்கும் முழுமதிக்கு போட்டியதோ"**

என்று பாடத் தொடங்கினான். "அப்பா, கம்பநாடா, நிறுத்து!" என்று அவனைத் தடுத்த சுந்தரம், அவன் முதுகில் தட்டி, தோளில் கைபோட்டவாறு சிரித்தான். "எப்படியானாலும் இந்த உறவு நீடிக்க வேண்டும்" என்று அர்த்தமில்லாமல் கேட்டதற்கு "நிச்சயம் நீடிக்கும்" என்று உறுதியாகப் பதிலளித்தான் பாலன். பிறகு, எல்லோரும் பலகாரம் சாப்பிட்டுவிட்டு, சரியாகப் பதினாறாவது நாள் திருமணம் நடத்துவதென்று உறுதிப்பாடும் செய்து கொண்டு புறப்பட்டார்கள். தான் மறுநாள் வருவதாகவும், தான் வந்த பிறகு பாலன் சென்னைக்குப் புறப்படலாமென்றும் கூறி அவர்களை வழியனுப்பி வைத்தான் சுந்தரம்.

எல்லோரும் சென்ற பின், உள்ளே வந்த சுந்தரத்தை, "அண்ணா" என்ற குரல் எதிர்கொண்டழைத்தது. ஓடிவந்து அவன் கால்களில் விழுந்தாள் இந்திரா. "என் வாழ்வை வளப்படுத்தியவர்கள் நீங்கள் தான் அண்ணா" என்று அவள் வாய் முணுமுணுத்தது. அவளை மெதுவாக எழச் செய்த சுந்தரத்தின் கண்களில் நீர் மல்கியது. கண்டிருந்த சின்னப்பபிள்ளையின் கண்களும் இன்ப வேதனையால் குளமாயின.

"அக்கா!" என்று இந்திராவைக் கட்டிக் கொண்டாள் கமலம். அன்று அதிசயமாக மங்கையர்க்கரசியின் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

சுந்தரம் பையிலிருந்து ஒரு கத்தைக் கடிதங்களை எடுத்து, இந்திராவிடம் கொடுத்து, "இந்தாம்மா! "எனக்கு வாழ்வில்லையா? வாழாவெட்டியாகத்தான் போக வேண்டுமா?" என்று கமலத்தை எழுதச் சொல்லி அனுப்பியிருந்தாயே, அந்தக் கடிதங்கள். உனக்கு வாழ்வு கிடைத்து விட்டது. அது வளமாகவுமிருக்கும் கவலைப்படாதே" என்று அவளைத் தேற்றினான்.

"இன்று திருமண நாள். இந்திராவின் வாழ்விலே மலர்ச்சியை உண்டாக்கும் நாள்" என்று தாளம் போட்டுப் பாடியது சுந்தரத்தின்

https://t.me/tamilpdfebooks



மனம். ஆனாலும், அடிக்கடி ஏதோ ஒரு பயம் அவன் மனதில் வந்து வந்து போய்க் கொண்டிருந்தது. அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தான். உடம்பு அசைந்து கொண்டிருந்ததே தவிர, மனம் ஒரு நிலையில் இல்லை. வருபவர்களை வரவேற்பதற்குப் பதிலாக வீட்டிலுள்ளவர்களையே வரவேற்றான். தேங்காய் கேட்டால், தேன் குழல் கொடுத்தான். விளக் கேற்றச் சொன்னால், என்ன வேண்டுமென்று கேட்டான். "ஏன் மேளம் வாசிக்கவில்லை?" என்று சமையல்காரனை அதட்டினான். "ஏன் சமைக்க வில்லை?" என்று மேளம் வாசிப்பவனை விரட்டினான்.

இந்திரா அங்கு மிங்கும் பார்த்தபடி அலங்காரம் செய்து கொண் டிருந்தாள். அவள் முகம் முன்பிருந்ததைவிட அதிகம் கருப்பாகியிருந் தது. குழந்தைகள் அங்குமிங்கும் ஓடுவதும், பலூனை வெடிக்க வைப் பதும், தோரணங் கட்டுவோர் சுறுசுறுப்பாக நடப்பதும், மணமேடை அமைப்போர் பளிங்கு மணமேடையைத் தூக்கி வருவதும், "பை எங்கே" என்ற சப்தமும், "வெள்ளித் தட்டெங்கே" என்ற சப்தமும் மாறிமாறிப் பிறப்பதும் காணவும் கேட்கவும் இனிமை தருவதாக இருந் தன. மண வீட்டுக்கு இயற்கையாக உள்ள சகல ராகங்களும் அங்கே எழுந்தன.

பெண்கள் ஓரிடத்தில் கூடியிருந்து பேசிய பேச்சு, மண வீட்டைச் சட்டசபையாக்கியது. "மாப்பிள்ளை அழைக்கணும், புறப்படுங்க புறப் படுங்க" என்று அவசரப்படுத்தினார் ஒரு பெரியவர். மேளக் கோஷ்டி யினர் ராகம் வாசிப்பதை நிறுத்தி, "எப்படி வாழ்வேன் இனிமேல்" என்ற பாட்டையே வாசிக்க ஆரம்பித்தனர். எல்லோருமே புறப்பட் டார்கள்.

மாப்பிள்ளை ஒரு சத்திரத்துத் திண்ணையிலே வந்து இறங்கியிருந் தார். எல்லோரும் அங்கு போய்ச் சேர்ந்தார்கள். சின்னப்பபிள்ளை மாப்பிள்ளைக்கு எதிரே போய் உட்கார்ந்து வழக்கமான சடங்குகளைச் செய்து முடித்தார். மாப்பிள்ளை எழுந்தார், வலது காலை முன்னால் வைத்து நடந்தார்; எல்லோரும் மலர் தூவ, பெண் வீட்டை அடைந் தார்.

திருமண நேரம் வந்தது. மணமகளைக் கொண்டு வந்து மணவறை யில் அமரச் செய்தார்கள். எதிரே உட்கார்ந்திருந்த அய்யர் குடுமியை அவிழ்த்துக் கட்டிக்கொண்டு, வயிற்றுவலிக்காரனைப் போல் முணு முணுக்க ஆரம்பித்தார். அங்கு வந்திருந்த ஒரு அம்மாள், "கறுப்பிக்கு எவ்வளவு அழகான மாப்பிள்ளை பாரேன்" என்று வயிற்றெரிச்சலைக் கொட்டினாள். ஒன்பது ஆண்டாகத் தன் மகளுக்கு மாப்பிள்ளை தேடி அலுத்துப்போன தாய் அவள். "பெண்ணெங்கே? பெண்ணெங்கே?" என்று எல்லோரும் குரல் கொடுத்தார்கள். பெண்ணை மெதுவாக அழைத்து வந்தாள் பெண்ணுக்கு உறவு முறையான ஒரு கிழவி. பெண்ணை உட்கார வைத்தார்கள். தலைகுனிந்தபடி முகம் தெரியா மல் உட்கார்ந்திருந்தாள். அய்யர் தன் கடனைத் தீர்த்தார்.

https://t.me/tamilpdfebooks



தாலியை எடுத்து மாப்பிள்ளையின் கையில் கொடுத்தார். "கெட்டி மேளம், கெட்டி மேளம்" என்று அவர் குரல் கொடுக்க, எல்லோரும் எதிரொலித்தார்கள். "கட்டுங்கள் தாலியை!" என்றார் அய்யர். சுந்தரம், சின்னப்பபிள்ளை, மங்கையர்க்கரசி எல்லோரும் வெளிறிய முகத்தோடு, பயந்தபடியே நின்று கொண்டிருந்தார்கள்.

மாப்பிள்ளை பாலன், தாலியைப் பெண்ணின் கழுத்தில் கட்டப் போனான். பெண்ணை நன்றாகக் கூர்ந்து பார்த்தான். திடுக்கிட்டான். "இல்லை, ஏமாற்றி விட்டார்கள், ஏமாற்றி விட்டார்கள். இந்தப் பெண் அல்ல நான் பார்த்தது!" என்று கத்தினான். எல்லோரும் திடுக்கிட்டார்கள். மேள வாசிப்பும் நின்றது.

இந்திரா ஒருமுறை செத்துப் பிழைத்தாள். அவள் மேனி சிலிர்த்தது—சில்லிட்டது. சின்னப்பபிள்ளை கண்களை அழுத்தமாக மூடித் திறந்தார். நின்ற இடத்திலேயே விழுந்துவிடப் போவது போல அவருக்கு ஒரு மயக்கம். யாருக்கும் ஏதும் தோன்றவில்லை. சுந்தரம் அப்படியே சிலையாகி உட்கார்ந்தான். பேச்சு மூச்சற்ற நிலையில் அந்தப் பெருங் கூட்டம் நின்றது. திடீரென்று அந்த அமைதியைக் கலைத்தார் சொக்கப்ப பிள்ளை. பாலன் அருகில் வந்தார். "பிறகு சொல்கிறேன்; முதலில் தாலியைக் கட்டு" என்று தழுதழுத்த குரலில் கூறினார். பாலன், அவரை ஒரு மாதிரியாகத் திரும்பிப் பார்த்தான். "கட்டு தாலியை" என்று அவசரப்படுத்திய சொக்கப்பர், அவன் அனுமதியில்லாமலே, "கெட்டி மேளம், கெட்டி மேளம்" என்று குரல் கொடுத்து விட்டு அவன் தோளில் தன் வலது கையை வைத்தபடி உட்கார வைத்து, "உம்: கட்டு" என்று அவசரப்படுத்தினார். தன் நினைவற்ற நிலையில், என்ன செய்வதென்று புரியாமல், இந்திராவின் கழுத்தில் தாலியைக் கட்டினான் பாலன். பிறகு, சடங்குகள் பலவற்றிலும் கலந்து கொண்டான். மண வறையிலிருந்து பெண்ணை உள்ளே அழைத்துச் சென்றார்கள். பாலன் உட்புறத்திண்ணையில் வந்து உட்கார்ந்தான். இரண்டு வேலைக்காரர்கள் விசிறி கொண்டு வந்து வீசினார்கள். சொக்கப்பர், தானே வந்து பாலனின் சட்டைப் பொத்தான்களைக் கழற்றி விட்டார். வியர்த்திருந்த மேனிக்கும் குழம்பியிருந்த உள்ளத்திற்கும், இந்த உபசாரமும் குளிர்ந்த காற்றும் ஓரளவு ஆறுதலளித்தன.

மழை பொழிந்து ஓய்ந்தது போல் மேளச் சத்தம் நின்றது. அந்தச் சத்தத்தினால் ஒய்ந்து போயிருந்த பெண்களின் வம்பளப்பு பரந்த அளவில் கேட்க ஆரம்பித்தது.

"இப்படி ஒரு கல்யாணமா பண்ணனும்! இதுக்கு பொண்ணை மூலையிலே உட்கார வைச்சிருக்கலாமே."

"பார்த்துக்கிட்டே இருங்க. ரெண்டு பேரும் வாழவே மாட்டாங்க."

"எனக்கு முன்னாலே தெரியும்! இல்லையின்னா இந்தக் கறுப்பிக்கு

https://t.me/tamilpdfebooks



இவ்வளவு அலங்காரமான மாப்பிள்ளை எங்கேயிருந்து கிடைக்கப் போகுது?"

"அம்மாடீ யம்மா! கல்யாணத்துக்குத் தேதி வச்சதும் போதும், மங்கை ஆடின ஆட்டமும் பாட்டும்...எல்லா வண்டவாளமும் இப்ப வுல்ல தெரியுது!"

—இப்படிப் பலவகையான பேச்சுக்கள். எதிரியின் மீது ஏற்படுகிற பொருமை, அவன் வீழ்ச்சியுறும் போது கேலியும் கிண்டலுமாக மாறு வது உலக இயற்கை. இந்திரா தனியறைக்குள் கூனிக் குறுகிப் போய் உட்கார்ந்திருந்தாள். கமலம் அந்தப் பக்கம் தலை காட்டவேயில்லை. மங்கையர்க்கரசியைத் தேடிப் பிடிக்க வேண்டியிருந்தது. சின்னப்ப பிள்ளையும் அவ்வாறே. பாலனின் நண்பர்கள் ஒரு மூலையில் உட்கார்ந்த படி அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிக்கடி ஓரக் கண்ணுல் பார்ப்பதை பாலன் கவனித்தான். தாளமுடியாத வேதனை அவன் நெஞ்சை அழுத்தியது. பொதுவில் மணவீடு மணமிழந்து காட்சி யளித்தது.

துன்பமாயினும் இன்பமாயினும் சிறிது நேரத்திற்கு முன் முடிவ டைந்து விடுவது போல, நேரம் ஆக ஆக, திருமணத்தைப் பற்றிய வம்புப் பேச்சு முடிவடைய ஆரம்பித்தது. சிலர் மட்டும், அந்தத் திரு மணத்துக் கலவரத்திலே துவங்கி, நாட்டிலே அதுபோல நடந்திருந்த வேறு பல சம்பவங்களுக்குத் தாவிப் பேசிக் கொண்டிருந்தார்கள். நேரம் ஆக ஆக, ஒவ்வொருவராக விடைபெற்றுச் செல்ல ஆரம்பித் தார்கள். அந்திபடுகிற நேரத்தில், சொக்கப்பர் சின்னப்பபிள்ளையிடம் வந்து, "இன்றைக்கே சாந்தி முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாம். நீங் கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள்" என்று ஆறுதல் கூறினர். வாய் விட்டு அழுது கொண்டிருந்த மங்கையர்க்கரசியை, சமாதானம் செய் தாள் மீனுட்சி. ஆனல், உடைந்திருந்த இந்திராவின் உள்ளத்திற்கு ஆறுதல் சொல்ல யாராலும் முடியவில்லை.

முன் முகப்பில் ஒருவரும் இல்லாத நேரம் பார்த்து, இந்திராவைத் தேடியபடி தனியறைக்குள் நுழைந்தாள் கமலம். பாசமும் பரிவும் கலந்த குரலில் "அக்கா அக்கா" என்று அழைத்தாள். அவளது குரலே எதி ரொலித்ததே தவிர இந்திராவைக் காணேம். "அக்கா எங்கே" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு, வெளியிலிருந்த கிழவியையும் கேட் டாள். வெற்றிலை இடித்துக் கொண்டிருந்த அந்தக் கிழவி, சுட்ட கத் திரிக்காயைப் போல சுருங்கிப்போன தன் இடது கையால் அடுத்த அறையைக் காட்டிஞள். சிட்டுப் போல் பறந்து அங்கே சென்ருள் கமலம். அந்த அறையின் வெளிக் கதவு திறந்திருந்தது. உட்கதவு, உட் புறம் தாளிடப்பட்டிருந்தது. குழம்பியபடி நின்று கொண்டிருந்த கமலத் திற்கு உள்ளிருந்து வரும் விம்மல் சப்தம் நன்ருகக் கேட்டது. "அக்கா, அக்கா" என்று பலமாக அழைத்தாள். பதில் இல்லை. அதிகமான விம் மல் சப்தம் இப்போது வர ஆரம்பித்தது. துடிதுடிக்கும் நெஞ்சத்

தோடு, கதவுகளின் விளிம்பின் மீது கண் வைத்துப் பார்த்தாள் கமலம். உடனே, அவள் மேனி சிலிர்த்தது. பயங்கரமான குரலில் "அக்கா" என்று கத்தினாள். படபடவென்று கதவை இடித்தாள். அவள் உடம்பு உச்சி முதல் உள்ளங்கால் வரை நடுங்கிற்று. வெற்றிலே இடித்துக் கொண்டிருந்த கிழவி, தன் முதுமையையும் மறந்து எழுந்து ஓடி வந்தாள். ஒருவர் பின் ஒருவராக ஓடிவந்தார்கள். "அக்கா அக்கா" என்று கதவின் மீது தலையை மோதியபடி அழுதாள் கமலம். ஒருவருக்கும், எட்டிப் பார்க்கவும் துணிவு வரவில்லை; என்னவென்று கேட்கவும் நாவெழவில்லை. எல்லோரும் கதவை இழுத்தார்கள். "ஐயோ மகளே" என்று கதறி அழுதாள், மங்கையர்க்கரசி. ஒன்றும் புரியாமலே, "கதவைக் கழற்றுங்கள், கதவைக் கழற்றுங்கள்" என்று கூக்குரலிட்டார் சொக்கப்பபிள்ளை. சின்னப்பபிள்ளையும், "ஓ" வென்று அலறிவிட்டார். அனைவரும் பதறினர். சுந்தரம் எல்லோரையும் நெட்டித் தள்ளிக் கொண்டு ஓடிவந்து, கதவிலே மோதிக் கொண்டான். "இந்திரா, கண்ணு" என்று சத்தம் கொடுத்தான். தூரத்திலிருந்த பாலன், நடுக்கத்தோடு இதைக் கவனித்துக் கொண்டிருந்தான். எல்லோருமாகச் சேர்ந்து கதவைத் தூக்கினார்கள். உள்ளே, அவர்கள் கண்ட காட்சி, குலையை நடுங்க வைத்தது. உத்தரத்திலே கயிற்றைக் கட்டி, கயிற்று வளையத்திற்குள் கழுத்தை நுழைத்து, சுருக்கிட்டுக் கொள்வதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தாள், இந்திரா. ஓடிப் போய் அவளைத் தாங்கிக் கொண்டாள், ஒரு பெண். சுந்தரம் அவளது கழுத்துச் சுருக்கை அவிழ்த்தான். ஏளனப் பேச்சுப் பேசிய பெண்களின் இதயங்கள்கூட இளகிக் கொடுத்தன. இந்திராவை அப்படியே நடத்திக் கொண்டு வந்து உட்கார வைத்தான் சுந்தரம். காப்பாற்றிய பிறகும் அவள் இதயத்திலே ஆறுதல் கலந்த துன்பம் ஒன்று இழையோடிக் கொண்டிருந்தது. கட்டுப்படுத்த முடியாமல் அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. "ஏண்டா, கண்ணு, எதுக்குடா. இந்த நினைவு? எங்கள் உயிர் இருக்கிறவரை உனக்கு ஒரு குறையும் வராது. எங்களை விட்டுட்டுப் போக நினைச்சியே!" என்று தழுதழுத்த குரலில் கூறிய வண்ணம் அவள் தலையைக் கோதிக் கொடுத்தான் சுந்தரம். ஒரு வார்த்தைகூடக் கூறாமல் விம்மி, விம்மி அழுது கொண்டிருந்தாள் இந்திரா. அவள் தோள்களிலே கை வைத்து, அவளது மார்பிலே முகத்தைப் புதைத்துக் கண்ணீரால் சேலையை நனைத்துக் கொண்டிருந்தாள் கமலம். முந்தானையால் வாயை மூடியவாறு எல்லாப் பெண்களும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர். "நான் பெத்த மகளே, நான் பெத்த மகளே" என்று அழுதபடி இந்திராவின் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டிருந்தாள் மங்கையர்க்கரசி. சின்னப்பபிள்ளை மென்று விழுங்கியபடி, "கல்யாணமே செஞ்சிருக்க வேண்டாம்; பெரிய தப்புப் பண்ணிட்டோம்; நாங்களே. எங்க பொண்ணைக் குழியிலே தள்ளிட்டோம்!" என்று அழுதார். சொக்கப்பர் அமைதியோடு அவர் தோளில்

https://t.me/tamilpdfebooks



தட்டிக் கொடுத்தார்.

கவனித்துக் கொண்டிருந்த பாலனின் இதயம் அவனைப் பிழிந்து எடுத்தது. நிலைமையை ஓரளவு அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. மணம் முடிக்க முடியாத நிலையிலிருந்த ஒரு பெண், இப்படியாவது மணம் முடித்து, எப்படியோ சமாதானப்படுத்தி வாழ வைத்துவிடலாம் என்று கருதிய பெற்றோர், அதற்குத் துணைவந்த சம்மந்திமார், அதைப் புரிந்து கொள்ள முடியாத தான்—இப்படி ஒரு சுழற்சி அவன் மனத்திலே எழுந்தது. இறுமாப்படைந்திருந்த அவன் மனம் கரைந்தது. இந்திராவின் மீது அனுதாபம் பிறந்தது. "கறுப்பாயிருந்தால் என்ன; வாழ்க்கை இன்பத்திற்கு வர்ணம் கூடவா உண்டு!" என்று ஒரு தத்துவப் பாதையைத் தானாகத் திறந்து கொண்டான் "கறுப்ப சிவப்பா? பணமிருக்கிறதா, இல்லையா? சீதனம் எவ்வளவு வரும்? தீபாவளிக்கு என்ன கொடுப்பார்கள்? பொங்கற் பரிசு என்ன தருவார்கள்?" என்றெல்லாம் வட்டிக் கணக்குப் போட்டு, பெண்ணைத் தேர்ந்தெடுப்பது, சராசரி மனிதர்களுக்கு நியாயமாக இருக்கலாம்; ஆனால், எழுத்தாளன். கறுப்புப் பெண்களின் கஷ்ட நஷ்டங்களைச் சித்தரிக்கிற கற்பனையாளன், வாழ்விழந்த பெண்களின் கண்ணீரை, மையாக்கி வடிக்கிற சொல்லாளன். இதையெல்லாம் பார்க்கலாமா" என்று எவரோ ஒரு எழுத்தாளனுக்குப் புத்தி சொல்லுகிற பாவனையில் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். தான் விரும்பும் ஒருத்தியைக் காட்டிலும், தன்னை விரும்பும் ஒருத்திதான் வாழ்க்கைக்கு ஏற்றவள் என்ற பழமொழியை நினைவுபடுத்திக் கொண்டான். அழகில்லாத பெண்கள் கணவனிடத்தில் உயிரையே வைப்பார்கள் என்று ஒருமுறை சொல்லிக் கொண்டான். அப்போது, தன்னைப்பற்றிய உயர்ந்த மனப்பான்மையும், தெம்பும் அவனுக்கு ஏற்பட்டன.

இந்திரா, தூக்கிட்டுக் கொள்ளப் போனதன் மூலம், எல்லோர் உள்ளத்திலும் ஒரு மாறுபாட்டை ஏற்படுத்தியிருந்தாள். அதிலே அவளுக்குத் தேவையான மாறுதல் ஏற்பட்டது, பாலன் உள்ளத்தில்தான். இந்த மாறுதலை அறிந்து கொள்ளாத இந்திரா, பெருத்த வேதனைக்குப் பிறகு ஏற்படும் அமைதியில் கண்களை மூடிக் கொண்டிருந்தாள்.

பாலன் மெதுவாக "அப்பா. அப்பா" என்றழைத்து, சொக்கப்ப பிள்ளையின் காதில், ஒரு ரகசியத்தைச் செலுத்தினான். கேட்கக் கேட்க முகமலர்ந்த அவர், சின்னப்பபிள்ளையை மெதுவாக அழைத்து, அதே ரகசியத்தை அவர் காதில் ஓதினார். அதைக் கேட்ட சின்னப்பபிள்ளை மெதுவாக மனைவி மங்கையர்க்கரசியை அழைத்து, அவள் காதைக் கடித்தார். மகிழ்ச்சிப் பெருக்கில் மங்கையர்க்கரசி வாயைத் திறக்க அவளது வாயின் சுற்றளவை அறிந்திருந்த சின்னப்பபிள்ளை "படக்" சென்று அந்த வாயைத் தன் கைகளால் மூடினார். அப்போது அங்கே ஒரு புதுக்கலை நடமாடிக் கொண்டிருந்தது.

இரகசியத்தைக் கேட்டிருந்த கமலம், அளவு கடந்த ஆனந்தத்திலும், அமைதியிலும் துள்ளித் துள்ளி ஓடிக்கொண்டிருந்தாள். ஆம்;

https://t.me/tamilpdfebooks



அன்றிரவே, சாந்தி முகூர்த்தம் வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

இந்திராவுக்கு இந்த முடிவு சொல்லப்பட்டதே தவிர. பாலனின் மனமாற்றம் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே, பள்ளியறையில் தன்னை வசைபாடுவார் என்கிற அளவிலேயே அவள் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சாந்தி முகூர்த்தச் செய்தியைக் கேட்டதும் அங்கிருந்த பெண்கள் வம்பளக்க ஆரம்பித்தனர். ஒருத்தி, "காலையிலே, பார்த்தால் கன்னத்தில் பல் பட்டிருக்கும்" என்றாள். இன்னொருத்தி, தனது முதலிரவு அனுபவத்தை விரிவாக எடுத்துரைத்தாள். "நாம் முன்னாலே பேசக்கூடாது. ஆம்பளைகள்தான் பேச வேண்டும்" என்று இரவு நிகழ்ச்சிக்கு இலக்கணம் கொடுத்தாள் வேறொருத்தி. "எங்க வீட்டிலே இப்படித்தான்; கடைசிவரை நான் பேசவே இல்லை; அவரு வந்து கெஞ்சு, கெஞ்சுன்னு கெஞ்சினாரு" என்று தன் இலக்கியப் போக்கையும் நாணத்தையும் உரித்து வைத்தாள் மற்றொருத்தி.

"எங்க வீட்டுக்காரரு பாவம். நான் பேசாமலிருக்க, இருக்க அவரும் பேசாமலிருந்தார்" என்று தன் கணவனின் அப்பாவித் தன்மையை அளந்து வைத்தாள் ஒருத்தி. எல்லோருமே இந்திராவின் காதில் விழும்படிதான் பேசினார்கள். ஆனால், இந்தப் பேச்சில் எதுவும் அவளது இதயத்தைத் தொடவில்லை. நாணம் என்ற பெயரிலேதான் ஒதுங்கியிருப்பதை, தனக்கு லாபம் என்று கருதி தூங்கிவிடுவான் தன் கணவன். என்று மனதார நம்பினாள் அவள். "நாமும் சிகப்பாக அழகாகப் பிறந்திருந்தால்..." என்கிற எண்ணமும் அவள் மனதில் இழையோடாமல் இல்லை. அப்போது அவள் உடம்பில் ஏற்பட்ட உணர்ச்சி, "நாம் கறுப்பு" என நினைத்ததும் தானாக அடங்கிற்று.

அடுக்கடுக்காய்த் திரைகொண்ட ஒரு கிழவி, நடையிலே நாட்டியங் காண, அவளருகில் வந்தாள். இந்திராவின் கையைத் தொட்டு. "வா" என்றாள். உடனே பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெண்கள், ஒரு கத்தை மலர்களை அள்ளி இந்திராவின் மீது வீசினார்கள். கிழவி, இந்திராவைத் தனியறைக்கு அழைத்துச் சென்று அடுக்காக அலங்காரங்கள் செய்து வைத்தாள். ஒருத்தி, ஒரு மஞ்சள் கயிற்றைக் கொண்டு வந்து, இந்திராவின் கழுத்தில் கட்டினாள். எட்டுப் பிள்ளைகள் பெற்றவள் அவள். பெற்றுப் பெருகி வாழவேண்டும் என்ற ஆசீர்வாதத்திற்கு அறிகுயாகவே அதைக் கட்டினாள். பிறகு அந்த அறையிலேயே இலைபோட்டு, இந்திராவைச் சாப்பிட வைத்தார்கள். சாப்பிட்டு முடிந்ததும் மெதுவாக, அந்தக் கிழவி இந்திராவை அழைத்துக் கொண்டு போய், மாடியில் விட்டாள். உடனே கதவைச் சாத்திக் கொண்டு வராமல், பாலனைப் பார்த்து, "சந்தோசமாக இருங்கள்" என்று, இந்திரா கொண்டுவிடப்பட்ட காரணத்தை ஜாடையாகக் கூறிவிட்டு, பிறகு கதவைச் சாத்திக் கொண்டு இறங்கிப் போனாள் கிழவி.

படுக்கையில் சாய்ந்திருந்த பாலன் இப்போதுதான் அவள் முகத்தை நன்றாகப் பார்த்தான். குனிந்த தலை நிமிராத அந்தக் கோதை,

https://t.me/tamilpdfebooks



அழகான கருங்கற்சிலையாக அவன் கண்களுக்குப் பட்டாள். "நிறம்தான் கறுப்பு; வடிவம் இலக்கணத்தோடு அமைந்திருக்கிறது" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவன் உள்ளம் உணர்ச்சிக் கூத்தாடத் தொடங்கியது. அவளை அழைப்பதற்கு வாயைத் திறந்தான்; வார்த்தை வரவில்லை. நிமிர்ந்து பார்ப்பாள் என்று நினைத்தான்; ஏமாந்தான். "பூமியையே பார்த்துக் கொண்டிருக்கிறாளே அங்கே என்னதான் இருக்கிறது" என்று அவனும் பூமியைப் பார்த்தான்; அங்கேயும் ஒன்றுமில்லை. பெருமூச்சினால் விம்மித் தாழும் அவளது மார்பகம் அந்த எழுத்தாளனின் கற்பனைக்கு வேலை கொடுத்தது. அவள் கூந்தலில் சொருகியிருந்த மலரின் மணம் அவன் மனத்தை மேலும் குழைய வைத்தது. "இனி பொறுப்பதில்லை" என்று எழுந்தான். "இந்திரா" என்று மெதுவாக அழைத்தான். அந்த அழைப்பு அவள் காதுகளுக்கே எட்டவில்லை: அவ்வளவு லேசான குரல். இங்கு யார் இருக்கிறார்கள், என்று துணிந்தான்; மெதுவாக அவள் அருகில் சென்றான். இந்திரா இரண்டு கைகளையும் இறுக்க மூடி உதட்டில் வைத்து முகத்தைச் சாய்த்துக் கொண்டு கலங்கியபடி நின்று கொண்டிருந்தாள். அருகில் நெருங்கிய பாலன் இடது கையால் அவளது இடது கையைப் பிடித்து வலது கையைத் தோளில் சேர்த்தான். புதிய உலகத்தின் முதற்படியில் அவள் மேனி ஒருமுறை ஆடி ஓய்ந்தது. அவனுக்கும் அதே நிலை. அவளை அணைத்தபடி மெதுவாகப் படுக்கை அருகில் கொண்டுவந்து உட்கார வைத்தான். தானும் அருகில் உட்கார்ந்து கொண்டான். தூரத்தில் இருப்பதாகப் பட்டதோ என்னவோ நெருங்கி உட்கார்ந்தான். இந்திரா, கவலை கலந்த மயக்க நிலையில் இருந்தாள். பாலன் மெதுவாக, "இந்திரா என்னைப் பாரேன்" என்று சொன்னபடி அவள் முகத்தைத் தன் கையால் திருப்பினான். அப்பொழுதுதான் முதன் முதலாக அவன் முகத்தைப் பார்த்த இந்திரா, "குபுக்" என்று அழுதபடி கட்டிலிலிருந்து இறங்கி அவன் கால்களில் விழுந்தாள். பாலனின் கண்களிலும் நீர் பெருகியது. அதில் ஓர் ஆனந்தமும் இருந்தது. திடீரென்று ஒரு சப்தம் அவர்கள் காதை மோதியது.

வெளியிலிருந்து வந்த அந்தச் சப்தம் "லாலி சுபலாலி, காதலர் ஜாலி மிக ஜாலி" என்கிற பாட்டு உருவத்திலே அவர்களைத் தாக்கிற்று. இந்திராவின் உறவினர்களும் திருமணமானவர்களுமான சில குறும்புக்காரப் பெண்கள், அந்தப் பாட்டைப் பாடி ஆடினார்கள். பாலனுக்கும் இந்திராவுக்கும் அவர்கள் பக்கத்தில் நின்று பாடுவது போலக் கேட்டது. மாடிப்படியிலேயே அந்தப் பெண்கள் அவ்வளவு குறும்பு செய்து கொண்டிருந்தார்கள். ஒரு குறும்புக்காரி, "இந்திராவின் முதல் முழக்கம் வாழ்க" என்று சப்தம் கொடுத்தாள். எல்லாப் பெண்களும் "வாழ்க, வாழ்க" என்றார்கள். பஞ்சணையில் உட்கார்ந்திருந்த பாலன், அந்தச் சப்தத்தைக் கேட்டுச் சிரித்தபடி, காலடியில் கிடந்த இந்திராவை மெதுவாக எழுப்பித் தன்னோடு உட்கார வைத்தான், வெளியிலே பாட்டுப்பாடி கும்மாளம் அடித்த பெண்களை ஒரு

https://t.me/tamilpdfebooks



இந்திரா பாலனின் கால்களில் விழுந்தாள்.

குரல் அடக்கிற்று.

"அடி சீதா, ராஜம்! என்னடி அங்கே கூத்து? இறங்கி வாங்கடி கீழே! அதுக சின்னஞ்சிறுசுக, அப்படி இப்படி இருக்குங்க. அதை யேண்டி நீங்க போயிப் பாக்கிறீங்க? நீங்களும் கலியாணமான புதுசிலே அப்படித்தான் இருந்திருப்பீங்க; பேசாமே போய்ச் சாப்பிடுங்கடி!" என்ற அந்தக் குரல் பாலனின் தாயாரான மீனாட்சியின் குரலாக இருந்தது. குறும்புக்காரப் பெண்கள் கலகலவெனச் சிரித்தபடி கீழே இறங்கி ஓடி, பந்தியிலே உட்கார்ந்தார்கள். சாப்பிடும்போதுகூட ஒருவருக்கொருவர் இதே பேச்சாகப் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் கல்யாண வீட்டிற்கு களை உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள்.

தனியறைக்குள் பாலன் கட்டிலில் சாய்ந்தபடி இந்திராவின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அழகியல்ல என்கிற எண்ணத்தை அந்தப் பார்வையின் மூலம் முழுக்கத் திருத்தி அமைத்துவிட முயற்சித்தான்; மெதுவாக அவளது கரத்தைப் பற்றினான். இந்திரா மெய் சிலிர்த்தவாறு அவனருகில் தள்ளி உட்கார்ந்தாள்.

"இந்திரா, நீ அழகாய் இல்லையே என்பது என் குறையல்ல; அழகைக் காட்டி ஏமாற்றுகிறார்களே என்பதுதான் என் வருத்தம். ஆனாலும் நான் உன்னை விரும்புகிறேன். குயில் கூடத்தான் அழகாயில்லை. குரலை வெறுக்கிறோமா? நான் உன்னை என் குயிலாகக் கருதுகிறேன்." என்று கூறியபடி, அவள் முகத்தைப் பார்த்தான். அப்போது அதிலே ஏற்பட்ட மலர்ச்சியைக் கண்டதும் தனது கவிதாரனைமிக்க உவமை தன் மனைவியின் முகத்தை அழகுபடுத்தி விட்டதாக எண்ணி, தானும் மகிழ்ந்து கொண்டான்.

"உன் நீலப்பூ விழியும், நிழல் படிந்த கூந்தலும், செங்கனி வாயிதழும், சிங்காரப் பற்களும் என்னை இன்ப மயமான ஒரு உலகிற்குத் தூக்கிச் செல்லுகின்றன. சித்திரப்பாவையே, உன் மெய்த்திறன் கண்டு வியந்தேன்..."—பாலன் இப்படியே தொடருவான் போலிருந்தது. இந்திரா தன் கைகளால் அவன் வாயை மூடினாள். எழுத்தாளன் என் போன் பாதிப் பைத்தியம். சாப்பிடுவதையும் தூங்குவதையும் தவிர வேறு நிகழ்ச்சிகளில் சராசரி உலகத்திற்கும் தனக்கும் சம்பந்தமில்லை யென்று அவன் கருதுகிறான். பாலனும் அதுமாதிரிப் பைத்தியம்தான் என்று இந்திரா நினைக்கவில்லை. தன்மீது அவனுக்கு ஏற்பட்டுவிட்ட மயக்கத்தினால்தான் அவ்வாறு பேசுகிறான் என்று கருதினாள். பாலன் தன் உதட்டிலிருந்த அவளது கைகளை எடுத்துவிட்டு முத்தமிட்டான்.

## 2

பெற்று வளர்த்து, பெயர் சூட்டி, கண்போலக் காத்த மகளை, கணவன் வீட்டுக்கு அனுப்பப் போகிற நிலையில், கவலையோடு அங்கு மிங்கும் திரிந்து கொண்டிருந்தாள் [illegible] சின்னப்ப

https://t.me/tamilpdfebooks



பிள்ளையோ, சடங்காகி நான்கைந்து ஆண்டுகள் வரை தன் வீட்டிலேயே இருந்த மகள் கணவன் வீடு செல்லப் போகிற பெருமையை எண்ணி, பூரித்துப் போயிருந்தார். சுந்தரத்திற்கும் அது மகிழ்ச்சியாகத்தானிருந்தது. அன்றைக்கு அதிகாலையிலேயே எழுந்து விட்டான். புதிதாகத் தைத்து வைத்திருந்த சட்டையையும், வேட்டியையும் பிரித்துப் பிரித்து அணிந்து கொண்டான். கமலம் மிக அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு, அக்காளை வழியனுப்புகிற வேகத்தில் குதித்துக் கொண்டிருந்தாள் என்றாலும், இவ்வளவு நாளும் ஒரே வட்டிலில் உண்டு, ஒரே படுக்கையில் உறங்கி ஒன்றாக வளர்ந்த தன் சகோதரி போகப் போகிறாளே என்ற கவலை நெஞ்சைக் குத்திக் கொண்டிருந்தது. எப்பொழுதுமே இந்திரா தன் தங்கையின் அருகிலேயே தூங்குபவள். இரவில் கமலம் கனவு கண்டு வாய் பிதற்றும்போதும்கூட, இந்திராதான் அவளைத் தட்டியெழுப்பி பழையபடியும் தூங்க வைப்பாள். தலையணையில் தலையை வைத்துப் படுக்கச் சொல்லுகிற அளவுக்கு, தாய் குழந்தையைப் பார்ப்பதுபோல் இந்திரா கமலத்தைப் பார்த்துக் கொள்வாள். காலையில் முன் கூட்டியே எழுந்து நீராகாரத்தில் உப்புப்போட்டு அதைக் கையில் வைத்தபடியே தட்டியெழுப்பிக் கொடுப்பாள் இந்திரா. தன்னைக் காட்டிலும் தங்கை அழகாயிருப்பதிலே மூத்தவளுக்கு நியாயமாக எழக்கூடிய பொறாமை இன்றி பெருமை கொள்பவள் இந்திரா. அடிக்கடி கமலத்தை சீவிச் சிங்காரித்து விட்டு திருஷ்டி கழிப்பாள். தங்கை, தன்னைப் போல் அழகற்றவளாயிராமல் ரத்தினக் கிரீடம்போல் ஒளிவீசுவதிலே அவளுக்கு அலாதி மகிழ்ச்சி. அந்த அன்பு இதயத்தின் திறந்த கதவுகளுக்கிடையே, பலகாலம் வாழ்ந்தவளாகையால், தான் குடியிருந்த மாளிகை வெளியேறப் போகிறதே என்கிற கவலை கமலத்தின் நெஞ்சைத்தை அழுத்தியது. அடிக்கடி இந்திராவின் அருகிலே வருவதும், அவளது கூந்தலைச் சரிப்படுத்தி விடுவதும், பொட்டு வைப்பதும் கண்ணாடியைக் கொண்டுவந்து காட்டுவதுமாக, அன்று தன் மாறாத அன்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள் கமலம்.

"அக்கா, உங்க மாமியார் வீடு பெரிய வீடாமா? கேட்டியா?"

"அத்தான் அங்கே போனதும் பட்டணத்துக்குப் போயிடுவாரா? ரெண்டு மூணு மாசம் லீவு எடுத்திருக்கிறதாக அத்தை சொன்னாங்களே?"

"அந்தக் கொரநாட்டுப் புடவையையும், காஞ்சிபுரம் கண்டாங்கியையும் உன் பெட்டிக்குள்ளே எடுத்து வச்சிருக்கேன். ரேடியோ வளையலையும் நீ எடுத்துக்கிட்டுப் போ!" என்று ஒவ்வொன்றாக நினைவுபடுத்திக் கொண்டு ஓடி ஓடி வந்து சொல்லுவாள். போகப் போகிறாள் சகோதரி, போவதற்குள்ளே எல்லாவற்றையும் பேசி முடித்துவிட வேண்டும் என்பதுபோலக் காணப்பட்டது அவள் நடந்து கொண்ட

https://t.me/tamilpdfebooks



விதம்.

பக்கத்து வீட்டுப் பஞ்சாமிர்தத்தம்மாள் அடிக்கடி தங்கள் வீட்டுக்குள் வந்து போய்க் கொண்டிருந்தது கமலத்தின் கோபத்தைக் கிளறி விட்டது. ஊரிலே பஞ்சாமிர்தத்தம்மாளைத் தோசி என்றழைப்பார்கள். அந்தத் தோசி, தன் அக்காள் புறப்படும் போதும் எதிரே வந்து தொலைக்குமோ என்ற எண்ணத்தில், கமலம் தன் சலிப்பை வெளிப்படையாகவே காட்டிக் கொண்டாள். இந்திரா, "பஞ்சாமிர்தம் அந்தப் பக்கம் இல்லாத நேரம் பார்த்துப் போனால் போகிறதடி, பிரியப்பட்டுத் தானே வருகிறாள்? அவள் முகத்திற்கு எதிரே ஒன்றும் சொல்லி விடாதே" என்றாள். அந்த இளகிய இதயம் கமலத்தின் கோபத்தைக் குறைத்தது.

"தங்கச்சி, அம்மாவை நல்லா பாத்துக்க. வெடுக்கு வெடுக்கினு அம்மா ஏதாவது சொன்னாலும்கூட பொறுத்துப் போய்க்க. அப்பா கூட அம்மா சண்டை போட்டான்னா, சாப்பிடாமக்கூடப் படுத்துக்குவா. அதெல்லாம் இல்லாமெ பார்த்துக்க" என்று கமலத்தைப் பார்த்து இந்திரா சொன்னதும், கமலம் தன்னையும் அறியாமல் கண்ணீர் சிந்தினாள். "குடு, குடு"வென்று ஓடிவந்த மங்கையர்க்கரசி, இந்திராவைப் பார்த்துப் பரிவோடு, "காபி சாப்பிடு கண்ணு" என்று கூறி விட்டு, அறைக்குள்ளே போய் குத்து விளக்கிலே நிறைய எண்ணெயை ஊற்றிவிட்டு வெளியிலே வந்தாள். வந்ததும் அவள் கண்களிலே பட்டவள், பக்கத்து வீட்டுப் பஞ்சாமிர்தம். அவளைப் பார்த்ததும் மங்கையர்க்கரசி முகத்தைச் சுளித்துக் கொண்டு, "பஞ்சாமிர்தம், நீ நாளைக்கு வா! பொண்ணை வழியனுப்பப் போகிறோம்" என்றாள்.

பஞ்சாமிர்தத்திற்கு "சுருக்"கென்றது. "போகிறேன்" என்று கூடச் சொல்லாமல் திரும்பிப் போய்விட்டாள். இந்திராவுக்கு அந்தக் காட்சி சங்கடமாயிருந்தது.

"ஏம்மா நேரேயே சொல்றே?"

"போடி, உனக்கு ஒன்றும் தெரியாது. அவ கண்ணுபட்டா தங்கம் கூடக் கரியாகிவிடும். அப்பவே புடிச்சு, எதுக்கே எதுக்கே வந்துக்கிட்டிருக்கா" என்று கூறிவிட்டு, மங்கையர்க்கரசி வேறு பகுதிக்குப் பறந்தாள்.

சொக்கப்பர், சின்னப்பரை அருகில் வைத்துக் கொண்டு, தாங்கள் மருமகளை வைத்துக் கொள்ளப் போகிற விதம் பற்றியும், தங்கள் வீட்டிலிருக்கிற வசதிகள் பற்றியும், தெலுங்குப் படத்திற்குத் தமிழ் விளக்கம் கொடுப்பதுபோல் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர்கள் வீட்டிலே ஒரு பசு இருக்கிறதாம், அது காங்கேயம் ஜாதியாம். வேளை ஒன்றுக்கு பக்காப்படிக்கு இரண்டு படி பால் கறக்கிறதாம். பருத்திக் கொட்டை, புண்ணாக்கெல்லாம் அவர் தன் கையாலேயே அந்தப் பசுவுக்கு வைப்பாராம். பால், தாயி, மோர், நெய் எதற்கும் எப்போதும் குறைச்சலே இருக்காதாம். இரண்டு தோட்டக்காரர்கள், மூன்று

https://t.me/tamilpdfebooks



வேலைக்காரர்கள், ஒரு சமையல்காரன், வேலைக்காரப் பெண்பிள்ளை; இப்படி எடுபிடி வேலைக்கும் ஏராளமான ஆட்கள் இருக்கிறார்களாம். இரண்டு வேலைக்காரர்களுக்குக்கூட, அவர்தான் திருமணம் செய்து வைத்தாராம்.

"இத்தனைக்கும் அவர்களுக்குப் பத்து ரூபாதான் சம்பளம். கல்யாணத்திற்கு ஐநூறு, ஐநூறு ரூபா கொடுத்தேன். போறுங்க, பொழைச்சுப் போகட்டுமே" என்று அவர் பெருமையாகச் சொன்ன போது, சின்னப்பர் கண்களை அகல விரித்து, ஒரு சங்கீதச் சிரிப்புச் சிரித்து, "ஏதோ எம் பொண்ணு அதிர்ஷ்டக்காரி" என்றதன் மூலம், அவரது விளக்கத்தின் பின்பகுதியைத் தான் தொடர ஆரம்பித்தார். "இவ்வளவு நாளைக்கப்புறம் என் பொண்ணுக்கு நல்ல எடம் கெடச்சுப் போச்சு. இதுக்கு மேலே பெத்தவனுக்கு என்னங்க வேணும்! என்னவோ, இவ்வளவு நாளா எங்க வீட்டிலேயே இருந்தது. அதுதான் சமைக்கும். "அப்பா, அப்பான்னு" கூப்பிட்டு அதுதான் சோறுபோடும். அது வெண்டக்கா பச்சடி வைச்சதுன்னு, அதுக்காகவே நான் கொஞ்சம் கூடச் சாப்பிடுவேன். இப்பவே வீடு வெறிச்சின்னு ஆகிப்போயிட்டது போல காணுது எனக்கு" என்று கூறிவிட்டு, குழந்தைபோலத் தேம்பியழ ஆரம்பித்தார். சொக்கப்பரும் மேல்துண்டை எடுத்து அவர் கண்களைத் துடைத்தவாறு, "நீங்க ஒண்ணுக்கும் கவலைப்படாதீங்க. உங்க வீடு வேறே, நம்ம வீடு வேறையா? எங்க பொண்ணு மாதிரி கவனிச்சுக்கிறோம். நீங்க, வாங்க, இருங்க, வருஷக் கணக்கா நம்ம வீட்டிலேயே தங்குங்க. நமக்குள்ளே என்ன?" என்று கூறிய ஆறுதல் மொழி, சின்னப்பபிள்ளையை அமைதிப்படுத்திற்று. ஒரு பெருமூச்சு விட்டு நிம்மதியடைந்தார்.

உள்கட்டிலிருந்து, மங்கையர்க்கரசி கையில் ஒரு வெள்ளிக் குவளை நிறைய காப்பியைக் கொண்டு வந்து இந்திராவின் கையிலே கொடுத்து, "கொண்டுபோய் உன் கணவனுக்குக் குடும்மா!" என்றாள். அதை வாங்கிக் கொண்டு திண்ணைக்கு வந்தாள் இந்திரா. அங்கே பாலன் ஒரு பெரிய தோல்ப் பெட்டியோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தான். "என்ன?" என்று கேட்டாள் இந்திரா. "பெட்டி திறக்க வரல்லே. உள்பூட்டு விழுந்துக்கிடுச்சுன்னு நெனைக்கிறேன்" என்றான் பாலன். இந்திரா காபியைக் கீழே வைத்துவிட்டு, பாலனுக்கு ஒத்தாசை செய்ய ஆரம்பித்தாள். இருவரும் பக்கம் பக்கமாயிருந்து பெட்டியோடு சண்டை போடுவதைக் கண்ட சுந்தரம் கிண்டலாக, "பெட்டி பத்திரம்" என்று சத்தம் கொடுத்தான். அது கேட்ட இந்திரா, நாணத்தால் முகம் சிவக்க, பெட்டியைவிட்டு எழுந்து உள்ளே ஓடினாள்.

அவர்கள் புறப்படுவதற்காக நினைத்திருந்த நேரம் வந்தது. முறைப்படி, சின்னப்பபிள்ளையும் குடும்பத்தினரும் பெண்ணோடு வந்து தங்கள் வீட்டில் இரண்டு நாட்கள் தங்க வேண்டுமென்று சொக்கப்பர் அழைத்தார். அதை மறுத்துரைத்தபடியே சின்னப்பபிள்ளை அங்கு வந்த

https://t.me/tamilpdfebooks



மங்கையர்க்கரசியைப் பார்த்தார். மங்கையர்க்கரசி முந்தானையைச் சரிப்படுத்திக் கொண்டு, சொக்கப்பபிள்ளையைப் பார்த்து. "இல்லே யண்ணு. அதுக்காகப் பரவாயில்லே. கூப்பிட்டவரைக்கி சந்தோசம். பொண்ணே அழைச்சுக்கிட்டுப் போங்க; நாங்க இன்னெரு நாளைக்கு வர்ஞேம்" என்ருள். வேகமாக வந்த மீனுட்சி, "நல்லாயிருக்குது ஞாயம்! பொண்ணழைச்ச வீட்டுக்கு நீங்க வரவில்லேயின்னு என்ன யிருக்குது" என்ருள். மங்கையர்க்கரசி வாய் திறப்பதற்கு முன்னுலே சுந்தரம் சிபாரிசுக்கு வந்தான். "ஆமாம்மா! நாமும் ரெண்டு நாளைக்கு அங்கே போயிட்டுத்தான் வரணும். பொண்ணழைச்ச வீட்டுக்குப் போறது முறைதானே" என்று சட்டப்பூர்வமாக விளக்கம் கொடுத்தான்.

"சரிதாண்டா! விருந்துக்குப் போறதுக்கு நீயும் அவுங்களோட சேர்ந்துக்குறே" என்று மகிழ்ச்சிப் பெருக்கிலே மகனைக் கேலி செய்தாள் மங்கையர்க்கரசி.

"இனி அவன் உங்க புள்ளேயில்லே! எங்கபுள்ளே! அதனுல்தான் கூப்பிடுருன்." என்று உரிமையோடும் பெருமையோடும் சொன்னுர் சொக்கப்பர்.

"வச்சுகிங்க. உங்களுக்கில்லாமையா?" என்று சிரித்தபடி அந்த வார்த்தைக்கு வரவேற்பு நிகழ்த்திஞர் சின்னப்பர். இந்த நேரத்தில் பாலன் அந்தப் பக்கம் வரவும், மாப்பிள்ளைக்கு முன்னுலே மாமியார் நிற்கக் கூடாதென்ற முறைப்படி, மங்கையர்க்கரசி திரும்பி உட்கட்டுக் குச் சென்று விட்டாள். தானே தனியாக ஒரு முடிவுக்கு வரவேண்டு மென்று ஆசைப்படும் சின்னப்பபிள்ளை, தன் ஆயுட்காலத்திலேயே முதன் முறையாக அந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பயன்படுத்திக் கொண்டார். அதாவது, தாங்களும் பெண்ணழைத்த வீட்டிற்கு வருவதாகச் சம்மதம் கொடுத்தார்.

கமலம் "விடு விடு"வென்று உள்ளே ஓடி, "அம்மா அம்மா நாமும் பெண்ணழைச்ச வீட்டுக்குப் போறமாம்." என்ருள் உற்சாகமாக.

"சரிடீ. அதுக்காக நீ ஏன் குதிக்கிறே; சும்மாயிரு" என்று அவளை அடக்கிவிட்டு, பொண்ணழைத்த வீட்டிற்குப் புறப்படுவதற்காகத் தயார் செய்தபடி வேலைக்காரர்களுக்கு உத்தரவுபோட ஆரம்பித்தாள் மங்கையர்க்கரசி.

பிறகு, பாலனையும் இந்திராவையும் சொக்கப்பரின் பழைய மாடல் ஆஸ்டின் காரில் உட்கார வைத்து, ஒருசிறுமியையும் துணைக்கு வைத்தார்கள். தாங்களும் மூன்று வாடகைக் கார்கள் வைத்துக் கொண்டு, அவற்றில் ஏறிக்கொண்டார்கள். கார்கள் புறப்பட்டன.

காரிலேயே, எழுத்தாளனுக்குள்ள இயற்கையான குணத்தின்படி, பாலன் இந்திராவிடம் சேட்டை செய்து கொண்டே வந்தான். அவளும் ஒவ்வொரு முறையும் பக்கத்தில் ஒரு சிறுமி உட்கார்ந்திருப்பதை நினைவுபடுத்திக் கொண்டே வந்தாள்.

https://t.me/tamilpdfebooks



சுந்தரமும் நண்பர்களும் உட்கார்ந்திருந்த கார், முன்னாலே போய்க் கொண்டிருந்தது. நல்ல வேகத்தில் போய்க் கொண்டிருந்த அந்தக் கார் "சடக்"கென பிரேக் போட்டு நிறுத்தப்பட்டது. எதிர்பாராத விதமாக நிறுத்தப்பட்டதால் பின்னால் வந்து கொண்டிருந்த—பாலன் இந்திரா உட்கார்ந்திருந்த கார், அதிலே லேசாக மோதி ஒரு ஆட்டத்தோடு நின்றது. அந்த அதிர்ச்சியில் கூச்சலிட்ட இந்திரா, பாலனின் தோள் மீது சாய்ந்தாள். முன் காரிலிருந்த சுந்தரம் பளிச்சென இறங்கி முன்னால் ஓடிப்போய் பார்த்தான். அங்கே அழகு வடியும் இளம் பாவையொருத்தி காருக்கு முன்னாலே விழுந்து கிடந்தாள்.

"தற்கொலை முயற்சி" என, சுந்தரத்தின் வாய் முணுமுணுத்தது.

சுந்தரமும் மற்றவர்களும் இறங்கி ஓடியதைக் கவனித்த பாலன் தானும் கீழே இறங்கிச் சென்றான். சுந்தரம் மற்றவர்களிடம் "தூக்குங்க, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவோம்" என்றான். எல்லோரும் அந்தப் பெண்ணைத் தூக்கினார்கள். பாலன் அந்தப் பெண்ணின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். மின்சாரம் பாய்ந்தது போன்ற அதிர்ச்சி. அவன் மேனி ஆடி ஓய்ந்தது. தலையில் பலமான அடி விழுந்ததுபோல் ஒரு வார்த்தைகூடப் பேச முடியாமல் அந்தப் பெண்ணைத் தூக்குவதில் ஒத்தாசை புரிந்தான். அந்தப் பெண்ணைக் காரில் ஏற்றி படுக்க வைத்தவாறு எல்லோரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

வீட்டிற்கு வந்ததும் சொக்கப்பர் "விடு விடு" என்று ஓடி ஒரு பாயைக் கொண்டு வந்து திண்ணையில் விரித்தார், அந்தப் பெண்ணை அதில் படுக்க வைத்தார்கள். வெகுநேரம்வரை தன் நினைவு இல்லாமலேயே அவள் கிடந்தாள். சுந்தரம் அவளுக்குப் பக்கத்தில் நின்று மூச்சு வருகிறதா என்று அடிக்கடி கவனித்துக் கொண்டிருந்தான். பாலன் நிம்மதியில்லாமல் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான். வெகு நேத்திற்குப் பிறகு அந்தப் பெண் கண்விழித்தாள். மூர்ச்சை தெளிந்ததும், யாருமே வழக்கமாகக் கேட்கிற, "நான் எங்கே இருக்கிறேன்?" என்னும் கேள்வியையே அந்தப் பெண்ணும் கேட்டாள். சுந்தரம், அவள் கண்விழித்த மகிழ்ச்சியில் மிகவும் பழக்கப்பட்டவன் போல. "இங்குதான்" என்றான்! "இங்குதான் என்றால் இது என்ன இடம்!"—பேந்தப் பேந்த விழித்தவாறு அந்தப் பெண் கேட்ட அடுத்த கேள்வி இது.

"இது மேலைச் சிவபுரி! சொக்கப்பபிள்ளை வீடு. அம்மா, நீ வழியில் காரின் முன் வந்து விழுந்தாய். அதிர்ச்சியோடு தப்பித்துக் கொண்டாய்..."—சுந்தரம் மேலும் தொடரவிருந்தான்.

அதற்குள் அந்தப் பெண் இடைமறித்து. "அப்படியானால் நான் இன்னும் சாகவில்லையா?" என்று, கேட்டாள். "இதென்னம்மா கேள்வி!" என்று சொல்ல வந்த சுந்தரம். "இல்லை. நீ உயிருடன்தான் இருக்கிறாய்!" என்று உள்ளதை உள்ளபடி சொல்லி வைத்தான். உடனே

https://t.me/tamilpdfebooks



அந்தப் பெண்ணின் முகம் விகாரமடைந்தது. "ஓ!" என்று அழ ஆரம்பித்தாள். பாலன் அந்தப் பக்கம் தலையே காட்டவில்லை. இந்திரா ஒரு கோப்பையில் காபி கொண்டுவந்து- அந்தப் பெண்ணிடம் கொடுத்தாள்.

"எனக்குக் காப்பி வேண்டாம்! விஷம் கொடுங்கள்! விஷம் கொடுங்கள்!"—என்று கோப்பையைத் தள்ளியபடியே கத்தினுள், அந்தப் பெண். மீனுட்சியும் மங்கையர்க்கரசியும் அவளுக்கு எவ்வளவோ சமாதானம் சொன்னுர்கள். கடைசியில் தலையணையில் முகத்தைப் புதைத்தவாறு அழுது கொண்டிருந்த அவளை கமலம்தான் ஆறுதலடையச் செய்தாள். வீங்கியிருந்த கண்கள் பெய்து கொண்டிருந்த கண்ணீர் மழையைத் துடைத்துக் கொண்டு, சூடான காப்பியை வயிற்றுக்குள் செலுத்திக் கொண்டதன் மூலம் இதயச் சூட்டைத் தணித்துக் கொண்டாள், அந்தப் பெண்.

பாலன், தோட்டப்புறத்திலேயே சுற்றிக் கொண்டிருந்தான். நன்ருக இருட்டிவிட்டது. அப்போதும் அவன் வீடு திரும்பவில்லை.

"இவள் எப்படி இங்கு வந்தாள்? அட பரிதாபத்திற்குரியவளே! ..."—பாலனின் மனம் பல கதைகளைப் பின்னிக் கொண்டது. இதயத்தை தொட்டுத் தொட்டுப் போய்க் கொண்டிருந்தது. நடந்த விபத்திலிருந்து அவன் மனம் பல கற்பனைகளை அடுக்கிக் கொண்டு அவற்றின் உச்சியில் ஏறி நின்று திணறிற்று. இந்திராவுக்கு, அவள் அனைத்தையும் சொல்வது போலவும், அவள் அதைக் கேட்டுத் தன்னைப் பற்றிய உயர்ந்த எண்ணத்தை மாற்றிக்கொள்வது போலவும், கமலமும் அதைக் கேள்விப்பட்டு, தன்னை இதயமில்லாதவன் என்று ஏசுவது போலவும், தான் அவர்களை வசைபாடி, தன் பெருமையை வெளிப்படுத்திக் கொள்வது போலவும், அதிலே அவர்கள் பயந்து அடங்கிவிடுவது போலவும் கற்பனை செய்து, அதற்கு "முற்றிற்று"ம் போட்டுக் கொண்டான். எழுத்தாளனல்லவா? இயற்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் இதயத்துக்குள் நாடகமாக்கி முடித்து விடுவதுதானே, எழுத்தாளனுக்குள்ள தனிச்சிறப்பு!

சிந்தனையிலேயே நின்ற அவனை, பின்னின்று ஒரு குரல் அழைத்தது; திரும்பினுன்; இந்திரா நின்ருள்.

"ஏன் இங்கேயே நிற்கிறீர்கள்?"

பாலன் பதில் பேசவில்லை.

"இருட்டிவிட்டது தெரியவில்லையா?"

பாலன் அசட்டுச் சிரிப்பை வடித்து வைத்தான்.

"வாருங்கள், நேரமாகிவிட்டது."

அவன் மவுனமாக முன் நடந்தான்.

இந்திரா சொன்னுள்: "அவளுக்குச் சொந்த ஊர் பட்டணத்துப் பக்கம்தானும். பெயர், அம்பிகாவாம். பாவம்! அழுது கொண்டே இருக்கிருள்."

https://t.me/tamilpdfebooks



பாலன் தன்னையும் அறியாமல் "ஆமாம்" என்றான்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"—இந்திரா, ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"உம்...தெரியாது...இல்லை. சொன்னார்கள்..." பாலன் திணறினான்.

"சரி! ஏதோ குழப்பத்திலிருக்கிறார்" என்று நினைத்த இந்திரா, கேள்விகளை முடித்துக் கொண்டாள். இருவரும் வீட்டினுள் வந்து சேர்ந்தார்கள். எதிர்கொண்ட கமலம், இந்திராவிடம் சொல்லும் பாவனையாக, "வெளித்திண்ணையில் பத்துப் பதினைந்து பேர் வந்து உட்கார்ந்திருக்கிறார்கள்" என்று பாலனிடம் கூறினாள். அங்கே செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் பாலனுக்கு வாழ்த்துக் கூறுவதற்காக வந்திருந்தார்கள். பாலன் எல்லோருக்கும் வணக்கம் கூறி வரவேற்றான். அந்த மாணவர்களுடனேயே சுந்தரமும் உட்கார்ந்திருந்தான். அழகிய தமிழிலே அந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பாலனை வாழ்த்தினார்கள். ஒரு மாணவன் பாலனின் தோளில் கைபோட்டு, "ஒரு மனதாயினர் தோழி! திருமண மக்கள் என்றென்றும் வாழி!" என்று மெல்லிய குரலில் பாடினான். எல்லா மாணவர்களும் தாங்கள் புதுக்கோட்டைக்குத் திருமணத்திற்கு வரமுடியாது போனதுபற்றி பாலனிடம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். பாலன் எல்லாவற்றிற்கும் உயிரற்ற சிரிப்பையே பதிலாகத் தந்தான். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் பதில் சொன்னான். பதில் சொல்லிவிட்டுப் பிறகு "என்ன கேட்டீர்கள்?" என்று கேள்வியையும் தொடுத்தான். அவனது குழப்பத்தின் அடிப்படையை அறியாத மாணவர்கள், அவன் காதற்களி மயக்கத்தில் இருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். கடைசியாக எல்லோரும் தாங்கள் கொண்டு வந்திருந்த பரிசுகளைப் பாலனிடம் கொடுத்து விட்டு விடைபெற்றுக் கொண்டார்கள்.

பாலன் கூடுமானவரை அம்பிகாவின் கண்களிலே தட்டுப்படாமலிருக்கவே ஆசைப்பட்டான்.

"சாப்பிட வாருங்கள்" என்று இந்திரா வந்து அழைத்தபோது கூட, "சாப்பாட்டைத் திண்ணைக்கே கொண்டு வந்துவிடு" என்றான். இந்திராவுக்கு ஒன்றும் புரியவில்லை. "பந்தியில் இலையெல்லாம் போட்டிருக்கிறது. நீங்களும் அண்ணாவும் அங்கேயே வந்து சாப்பிடுங்கள்" என்று பரிவோடு மீண்டும் அழைத்தாள் இந்திரா. சுந்தரம் பாலனின் தோளில் தட்டி, "அங்கேயே சாப்பிட்டு விடலாம் வா"—என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனான். அங்கு மிங்கும் பார்த்தபடியே பாலன் உள்ளே சென்று பந்தியில் அமர்ந்தான். பக்கத்து அறையில் அம்பிகாவும் கமலமும் பேசிக் கொண்டிருக்கும் சப்தம் அவனுக்குக் கேட்டது. உணவை முடித்துக் கொண்டு எழுந்தான். கைகழுவும்போது திரும்பிப் பார்த்தான். கமலமும் அம்பிகாவும் அப்போதுதான் எழுந்து அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தார்கள். பாலனைப் பார்த்த அம்பிகா

https://t.me/tamilpdfebooks



திடுக்கிட்டாள். அத்தானுக்கு முன்னால் நிற்க வெட்கப்பட்ட கமலம் உள்ளே ஓடிப்போய் ஒளிந்து கொண்டாள். ஆச்சரியத்தால், "ஆ! பாலன்!" என்று அரைகுறைக் குரலில் சப்தமிட்ட அம்பிகாவை யாருக்கும் தெரியாமல் கையைப் பிடித்து ஒரு தனியறைக்குள் இழுத்துக் கொண்டு போனான் பாலன்.

"யாரிடமும் ஒன்றும் சொல்லாதே! பனிரெண்டு மணிக்கு என் அறைக்கு வா! என் அறை மாடியில் இருக்கிறது." என்று சொல்லிவிட்டு உடனே வெளியிலே போய் விட்டான். அம்பிகா திகைத்தபடி அங்கேயே நின்று கொண்டிருந்தாள். அடுத்த அறையிலிருந்த கமலம் ஒன்றுமறியாதவள் போல் வெளியில் வந்து அம்பிகா இருந்த அறைக்குள் நுழைந்து அவளைச் சாப்பிட அழைத்தாள். அம்பிகா குழப்பத்தோடு கமலத்தைப் பின் தொடர்ந்தாள்.

நள்ளிரவு! எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். மாடி அறையில் பாலனும், கீழ் வளைவில் அம்பிகாவும் கமலமும் மட்டுமே தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தார்கள். அம்பிகா எப்போது எழுந்து போவாள் என்பதைக் கவனிப்பதிலேயே இருந்தாள் கமலம். அம்பிகா மெதுவாக எழுந்தாள். உறங்குபவர்கள் மீது கால் பட்டு விடாமல் மெதுவாக நடந்தாள். மாடிக்கு வந்து சேர்ந்தாள். அவளை எதிர்பார்த்துக் கொண்டே இருந்த பாலன், அவள் உள்ளே வந்ததும் மெதுவாகக் கதவைச் சாத்தினான்.

"அம்பிகா, நீ ஏன் இங்கே வந்தாய்? நான்தான் உனக்கு எவ்வளவோ சொல்லிவிட்டு வந்தேனே!" என்று கேட்டான். அம்பிகா கண்ணீர் சிந்தியவாறு நின்றாள்.

"அம்பிகா, உன்னை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நீ இன்றிரவே இந்த இடத்தைவிட்டுப் போய்விடு. எப்போதுமே என் நன்மையை நாடுபவள் நீ. இப்போதும் நீ அந்த உதவியை எனக்குச் செய்யமுடியும். நீ என்னிடத்தில் கொண்ட பற்றும் பாசமும்தான் உன்னை இங்கு கொண்டு வந்து சேர்த்தன என்பது எனக்குத் தெரியும். தயவு செய்து, இன்றிரவே நீ போய்விடு. இன்னும் இரண்டு நாளில் நான் சென்னை வந்துவிடுவேன். எல்லாம் அங்கே பேசிக் கொள்ளலாம்" —என்று கூறி இருபது ரூபாய்களையும் எடுத்துக் கொடுத்தான். அதைக் கையில் வாங்கிக் கொண்ட அம்பிகா, அவன் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டு அம்பிகா, அவன் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டு தன் ரவிக்கைக்குள் வைத்திருந்த கடிதத்தை எடுத்து அவன் கையில் கொடுத்துவிட்டு ஒரு வார்த்தைகூடப் பேசாமல் அதிசயிக்கத்தக்க விதமாகக் கீழே இறங்கி நடந்தாள். எதற்காக அவள் அவனைத் தேடி வந்தாள்? அவனிடம் எதை எதிர்பார்த்தாள்? எந்த நிலைமையைப் புரிந்து கொண்டு பதில்கூடப் பேசாமல் வெளியேறினாள்? என்கிற கேள்விகளுக்கு விளக்கமே இல்லாமல் அம்பிகா நள்ளிரவில் அந்த இடத்தை

https://t.me/tamilpdfebooks



விட்டு வெளியேறினாள். வெளியில் நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த கமலத்திற்கு இது பெரிய புதிராக இருந்தது. "பாலனுக்கும் அவளுக்கும் என்ன உறவு? அவள் அவனிடம் கொடுத்த கடிதம் எதைப் பற்றியது? பாலனால் கெடுக்கப்பட்டவளா அவள்? அப்படி இருந்தால் அவன் "போ" என்று சொன்னதும் சுலபத்தில் போயிருக்கமாட்டாளே" என்றெல்லாம் கமலம் குழம்பினாள். அம்பிகாவைப் பின் தொடர முடியாதவளாய்க் கீழ் வளைவுக்கு வந்து படுத்துக் கொண்டாள். அம்பிகாவை அனுப்பிய பாலன் அவள் போய்விட்டாளா என்பதைக் கவனிக்க, பூனைபோல் மெதுவாகக் கீழே இறங்கி வந்தான். கதவைத் திறந்துகொண்டு, தானும் வெளியேறினான். இதைக் கவனித்துக் கொண்டிருந்த கமலம் ஒரு யோசனை செய்தாள். பாலனிடம் அம்பிகா கொடுத்த கடிதத்தை அவன் தன் தலையணைக்கு அருகிலேதான் வைத்திருப்பான். அதை எடுத்துக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று நினைத்து எழுந்து மாடிக்குச் சென்றாள். தலையணையைப் புரட்டிப் பார்த்தாள். அவள் நினைத்தபடியே அந்தக் கடிதம் அங்கே இருந்தது. உடனே அதை எடுத்துக் கொண்டு வந்துவிடாமல் பெண் மனதிற்கு இயற்கையாக உள்ள பலவீனத்தின்படி அதைப் பிரித்து அங்கேயே படிக்க ஆரம்பித்தாள். அவள் நெஞ்சு மட்டும் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது. படித்து முடித்து அதைத் தன் ரவிக்கைக்குள் வைத்துக் கொண்டாள். திடீரென்று மாடியறையின் விளக்கு அணைந்தது. கமலம் திடுக்கிட்டு, கூச்சலிடப் போனாள். ஒரு கை அவளது வாயைப் பொத்தியது. இன்னொரு கை அவளது ரவிக்கையின் மீது படிந்தது.

# 3

சொக்கப்பர் வீட்டிலிருந்து வெளியேறிய அம்பிகா கால்போன போக்கில் போய்க் கொண்டிருந்தாள். உலகத்திலுள்ள சகல உயிர்களும் தன்னை வெறுத்தொதுக்குவது போலவும், ஏளனம் செய்வது போலவும் எண்ணி எண்ணி அவள் மனம் படாதபாடுபட்டது. எங்கே போகிறோம் என்று தெரியாமலேயே நடந்த அவள், பொழுது விடிகிற நேரத்தில் வளையபட்டிக்கு வந்து சேர்ந்தாள். அப்போதுதான் சில காபி கிளப்புகள் திறக்கப்பட்டு, அதிகாலை நேரத்திற்கு இயற்கையான சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்தன. அம்பிகா ஒரு ஓட்டலுக்குள் நுழைந்து காபி கேட்டாள். அவள் தோற்றத்தைப் பார்த்த ஓட்டல்காரர் முதற் கேள்வியாக, "காசு இருக்கிறதா?" என்கிற கேள்வியைக் கேட்டார். அம்பிகா, உயிரற்ற நிலையில், "இருக்கிறது" என்று தலையாட்டினாள். ஓட்டல்காரன் காபி கொடுக்க குடித்து முடித்தாள். அப்பொழுது புதுக்கோட்டைக்குப் புறப்பட்ட பஸ் ஒன்று அந்த ஓட்டல்

https://t.me/tamilpdfebooks



அருகில் வந்து நின்றது. பிரயாணிகளும் டிரைவரும் இறங்கி காபி சாப்பிட்டார்கள். அம்பிகா யோசனை செய்தாள். அந்த பஸ்ஸிலேயே புதுக்கோட்டை போய், அங்கிருந்து சென்னை சென்றுவிட முடிவு கொண்டாள்; பிரயாணிகளோடு பஸ்ஸில் ஏறி அமர்ந்தாள். சுமார் ஒன்பது மணிக்கு நமன சமுத்திரத்தைக் கடந்து புதுக்கோட்டைக்கு ஐந்தாவது கல்லில் வந்து கொண்டிருந்தது, அவள் சென்று கொண்டிருந்த பஸ். அம்பிகா—அதன் பின் சீட்டில் உட்கார்ந்திருந்த அவள், பின்னல் ஒரு கார் ஒலி எழுப்பும் சப்தம் கேட்டதும் கண்ணுடி வழியாகத் திரும்பிப் பார்த்தாள். அங்கே பழைய மாடல் ஆஸ்டின் கார் ஒன்று வந்து கொண்டிருந்தது. அம்பிகா கூர்ந்து கவனித்தாள். அந்தக் காரில் மங்கையர்க்கரசி, சின்னப்பபிள்ளை, சுந்தரம், கமலம் நால்வரும் உட்கார்ந்திருந்தனர். அம்பிகா திடுக்கிட்டாள். அவள் உடம்பு நடுங்கிற்று. காரணம், கமலம் விம்மி, விம்மி அழுதபடி மங்கையர்க்கரசியின் தோளில் சாய்ந்து கொண்டிருந்தாள். சுந்தரமும் சின்னப்பபிள்ளையும் சோகமாக உட்கார்ந்திருந்தனர். அம்பிகா பஸ்ஸை நிறுத்துவோமா என்று துடித்தாள். அதற்குள் சின்னப்பபிள்ளையின் கார் பஸ்ஸை முந்திக் கொண்டு முன்னல் சென்றுவிட்டது.

பஸ் புதுக்கோட்டைக்கு வந்து சேர்ந்தது. கீழே இறங்கிய அம்பிகா, கமலத்தின் பெற்ருேர் பெயர் தெரியாததால் அவர்கள் வீட்டை எப்படி விசாரிப்பதென்று தெரியாமல் திகைத்தாள். ஊர் முழுக்கச் சுற்றிக் கொண்டே வந்தாள். கடைசியில் மேல் ராஜ வீதியில் அந்தக் கார் நிற்பதைக் கண்டாள். வீட்டிற்குள்ளே எட்டிப் பார்த்தாள். அங்கே மங்கையர்க்கரசி கமலத்தை வசைபாடிக் கொண்டிருந்தாள். "எங்க மான மரியாதையைக் கெடுத்தியேடி நாசமாப் போறவளே!" என்று மங்கையர்க்கரசி திட்டும்போது அம்பிகா ஒன்றும் புரியாமல் விழித்தாள். கமலத்தின் முகம் சிவந்து வீங்கியிருந்தது. அம்பிகா மனதைத் திடப்படுத்திக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

எதிர்பாராதவிதமாக அம்பிகாவைக் கண்ட மங்கையர்க்கரசி கமலத்தை ஓரக் கண்ணல் பார்த்தபடி அவளை வரவேற்ருள். கமலம் முந்தானையால் கண்ணீரைத் துடைத்தவாறு எழுந்து உள்ளே சென்ருள். "உட்காரு" என்று அம்பிகாவைப்பார்த்து அலுப்போடு சொன்ன மங்கையர்க்கரசி, அந்த அலுப்பிலேயே அம்பிகாவைப் பற்றிய தனது கருத்தைப் பிரதிபலித்தாள். "நம்மீது இவர்களுக்கென்ன கோபம்?" என்று குழம்பிய அம்பிகா, அந்தக் குழப்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக மங்கையர்க்கரசியோடு ஏதேனும் பேச விரும்பினள். என்ன பேசுவது? எதை ஆரம்பிப்பது? என்று சிந்தித்தாள். அதற்குள் மங்கையர்க்கரசியே, "நீ என்னடியம்மா திடீர்னு புறப்பட்டுட்டே மேலைச் சிவபுரியிலிருந்து?"—என்று கேள்வியைத் தொடங்கினள். அம்பிகா குழப்பத்திலிருந்து விடுபட்டு பதில் சொல்லப் போகும்போது, அவள்

https://t.me/tamilpdfebooks



மனம் மற்ருெரு புதுக் குழப்பத்தை ஏற்படுத்தியது. "ஒருவேளை அன்றிரவிலே நடந்த சம்பவங்கள் இவர்களுக்குத் தெரியுமோ? அப்படியே இருந்தாலும் அதற்கும் கமலத்தின் கவலைக்கும் என்ன தொடர்பிருக்க முடியும்?" என்பதுதான் அம்பிகாவுக்கு ஏற்பட்ட புதுக் குழப்பம். ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "ஒன்றுமில்லை. வேற்று மனிதர் வீட்டில் ஏன் இருக்க வேண்டும் என்றுதான் புறப்பட்டு விட்டேன்" என்று ஒரு பொய்யைச் சொன்னுள்.

"அதென்னவோ நீ வந்ததும் போனதும்...நல்லா இருக்க வேண்டிய வீடு சங்கடத்தில் முடிந்தது" என்று சொல்லிக் கொண்டே ஒரு வாளியைத் தூக்கிக் கொண்டு உட்புறம் நுழைந்தாள் மங்கையர்க்கரசி. பதில் சொல்ல விரும்பிய அம்பிகா, மங்கையர்க்கரசி உள்ளே சென்று விட்டதாலே ஏமாற்றமடைந்தாள். கட்டிலில் உட்கார்ந்தபடியே சுற்றுமுற்றும் பார்த்தாள். அடுத்த அறையில் நின்று கொண்டு சன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டு நின்ற கமலத்தை அம்பிகா கண்டாள். கமலம் ஓசையில்லாமல் அவளை உள்ளே அழைத்தாள். உள்ளே சென்று அமர்ந்தாள் அம்பிகா. கமலமும் அவள் அருலேயே உட்கார்ந்தாள்.

"என்ன நடந்தது கமலம்?"—அம்பிகா அவசரமாகக் கேட்டாள்

"நேற்றைக்கு இரவில் அத்தானைப் பார்க்க நீ மாடிக்குப் போனதையும், அங்கு நடந்ததையும், திரும்பி நீ சென்றதையும் நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்"—கமலம் நிறுத்தவில்லை- அதற்குள் அம்பிகா திடுக்கிட்டாள். "ஆ!" என்ருள். கமலம் தொடர்ந்தாள்:

"நீ கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றதும் அதுவரை மாடிப் படியிலேயே நின்று கவனித்துக் கொண்டிருந்த நான், கீழே இறங்கி வந்து படுத்துக் கொண்டுவிட்டேன். ஏனே, எனக்கு அந்தக் கடிதம் என்னவென்று தெரிந்து கொள்ளும் ஆசை பிறந்தது. அதற்குள் என் அத்தான் மாடியிலிருந்து இறங்கி, வெளியிலே போவதைக் கண்டேன். அதுதான் சரியான சமயமென்று மாடிக்குச் சென்று அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தேன். பிறகு ஒன்றும் புரியாமல் அந்தக் கடிதத்தை என் ரவிக்கைக்குள் வைத்துக் கொண்டேன். அம்பிகா, நீ திகைக்கிருய். அந்தக் கடிதத்தின் சாரத்தை அறிந்து கொண்டுவிட்டேனே என்று கலங்குகிருய். மேலும் அதை ஒளித்துக் கொள்ள முயன்ற என்னை மோசமானவளாகக் கருதவும் கூடும். என்ருல் ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது, உன் நிலையை. நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன்? கன்னிகழியாத நிலையில் அத்தகைய துணிச்சல் எனக்கு வந்திருக்கிறதென்ருல் அதற்குக் காரணம் என்ன என்பதெல்லாம் உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஒரு பெண் ஒரு ஆடவரை கண்ணீரோடு சந்திக்கிருள்; காலைப்பிடிக்கிருள்; கலங்கித் திகைக்கிருள் என்ருல் அதற்கு உள்ளார்ந்த காரணம், ஏதேனும் ஒரு வகையில் நடத்தைத் தவருகத்தானிருக்க முடியும் என்று நான் படித்திருக்கிறேன். உங்களிருவரிலே

https://t.me/tamilpdfebooks

யார் நடத்தை தவறியவர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. தவறு உன் பக்கத்தில் இருந்தால் எங்கள் குடும்பத்திலே ஒருத்தியாக உன்னை வைத்துக் கொள்ளக்கூட முடியும். ஆனால், அவர் தவறு செய்கிறவர், அதே குணம் படைத்தவர், புதிது புதிதாக நாடும் எண்ணங் கொண்டவர் என்றால் என் தமக்கையின் வாழ்வு என்ன ஆகுமோ? என்கிற பீதி என்னை ஆட்டிப் படைத்தது. அதுதான் அந்தக் கடிதத்தைப் படிக்க என்னைத் தூண்டியது. அம்பிகா! அவர் என் தமக்கையைக் காதலித்து மணம் முடிக்கவில்லை. ஏமாற்றித்தான் ஒப்படைத்தோம். அவரும், போனால் போகிறது என்று பரிதாபத்திற்கு இரங்கித்தான் சேர்ந்து வாழ முடிவு கொண்டார். அது நீடிக்க வேண்டுமே என்று நாங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். அவர் மிகவும் ஒழுங்கானவர். ஆகவே, கைவிட்டுவிட மாட்டார் என்று எங்கள் கவலைக்கு நாங்களே சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் இப்படி ஒரு வெடி என்றால் அடுத்த நிகழ்ச்சிகளை மனம் பயங்கரமாகக் கற்பனை செய்யாமலா இருக்கும்! அந்த நேரத்தில் இப்படித்தான் என் மனம் துடிதுடித்துக் கொண்டிருந்தது. உனக்கும் அவருக்குமுள்ள காதல் பற்றியோ, உங்கள் தொடர்பைப் பற்றியோ நான் கவலைப்படவில்லை. இப்படியே மூன்று, நான்கு, ஐந்து என்று போய்க் கொண்டிருந்தால்...? என்பதுதான் என் பயம்.

"நான் கடிதத்தை ரவிக்கைக்குள் வைத்துக் கொண்டதும் திடீரென்று விளக்கு அணைந்தது. யார் அணைத்தது என்று பார்ப்பதற்கு முன்னாலேயே விளக்கை அணைத்த உருவம் என் வாயைப் பொத்தியது. ஆடவர் கை! என் மேனி சிலிர்த்தது. கூத்த முயன்றேன், குரல் எழவில்லை. அதற்குள் மற்றொரு கை என் மார்பின் மீது விழுந்தது. ஐயோ! என்ன சொல்வேன் அம்பிகா? நான் ஏன் அந்தக் கடிதத்தை ரவிக்கைக்குள் வைத்துக் கொண்டேன்? கையிலேயே வைத்திருக்கக்கூடாதா? மார்பின் மீது கைவிழுந்ததும் என் மேனி வியர்த்து விருவிருத்தது- என் வாழ்வே பாழாகிவிடுமோ என்கின்ற அர்த்தமில்லாத பயம் என் மனத்தைக் கவ்வியது. பளிச்சென்று என் கைகளால் மார்பகத்தை மூடிக் கொண்டேன்; ஆனால், அந்தக் கை என்னைக் கெடுக்க நினைத்து விழுந்த கையல்ல, கடிதத்தை எடுக்கவந்த கைதான் என்பதைப் பின்னால்தான் உணர்ந்து கொண்டேன். நான் மானம் காக்கக் கைகளால் போர்த்தினேன், ஆனால் நான்...கடிதத்தை மறைப்பதாக எண்ணி, பலவந்தப்படுத்திய அந்த உருவம் என் ரவிக்கையையே கிழித்துவிட்டது. கூவினால் மானம் போகும், கூவாவிட்டால் உயிர் போகும் என்ற நிலையில் நான் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தேன். அதற்குள் அந்தக் கடிதம் கீழே விழுந்தது. இருட்டிலே அதைத் தேட முடியாது என்று எண்ணியோ என்னவோ அந்த உருவம் விளக்கை ஏற்றிற்று. அதுவரைக்கும் கூவாமலேயே இருந்த நான் என்னை[illegible]ம் அறி[illegible]மலேயே கூவிவிட்டேன். அத்தான் அங்கே நின்றார். பருவப் பெண் [illegible] எனது அவயவத்தை

https://t.me/tamilpdfebooks



அவர் காண நேர்ந்ததே என்பதுதான் என் கூச்சலுக்கு ஒரு காரண மாகும். நான் கூனிக் குறுகித் திரும்பி நின்றேன். அவர் அந்தக் கடிதத் தைக் கையிலெடுத்துக் கொண்டார். அம்பிகா! ஒருநாள் பழகிய ஒருத் தியிடம் வெட்கத்தைவிட்டு இவ்வளவு சொல்லுகிறாளே என்று நீ நினைப்பாய். அந்த ஒரு நாளிலேயே உன் நல்ல இதயத்தை நான் தெரிந்து கொண்டேன். அதோடு அந்தக் கடிதமும் உன் இதயத்தை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தது..."

—இந்த இடத்தில் அம்பிகாவின் கண்களில் கண்ணீர் ததும்பியது. கமலம் மேலும் தொடர்ந்தாள்: "நள்ளிரவு! நானும் அவரும் மட்டுமே இருக்கிறோம். இன்னும் கொஞ்ச நேரம் தாமதித்தால் உணர்ச்சி வெறி யில் நான் அலைக்கழிக்கப் படலாம் என்று பயந்து நான் வெளியேறி னேன். வெளியில் வந்த அவசரத்தில் மாடிப் படியில் கால் சறுக்கி உருண்டு விழுந்தேன். அதுவரைக்கும் யாரும் அறியாமலிருந்த இந்த நாடகம், அப்போது எல்லோரையும் எழுப்பிவிட்டது. விளக்குகள் ஏற்றப்பட்டன. இந்திரா—அக்காள் எழுந்து ஓடிவந்தாள். எல்லோரும் என்னை வெறித்துப் பார்த்தார்கள், ஏன் இவள் மாடிக்குப் போனாள் என்கிற கேள்விக்கு எல்லோரும் தவறான ஒரு பதிலையே கண்டுபிடித்த வர்கள் போல் என்னைப் பார்த்தார்கள். சந்தேகத்திற்கு இடமில்லாத தங்கை என்று என்னைக் கருதுகிற தமக்கைகூட தன் ஆத்திரப் பார்வை மூலம் என் சஞ்சலத்தை வளர்த்தாள். எதையும் நிதானித்துப் பார்க்கிற என் அண்ணாவும் என்னைச் சந்தேகப்பட்டார். யாருக்கு என்ன பதில் சொல்வேன்? அந்தப் பதில் என்ன? அந்த அவசரத்திலே, அவ்வளவு சுலபத்திலே சுருக்கமாகச் சொல்லிவிடக் கூடியதா? மேலும், கிழிந் திருந்த என் ரவிக்கைக்கு நான் சொல்லும் காரணத்தை அவர்கள் ஏற் பார்களா? நான் திகைத்தேன்; திணறினேன்; வாய்விட்டு அழுதேன். அந்த அழுகை எவர் மனத்தையும் கரைக்கவில்லை. கரைக்காதென்பதும் எனக்குத் தெரியும். "நாடகமாடுகிறாள் பார்; நீலிக் கண்ணீர் வடிக் கிறாள் பார்" என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். அவர்கள் நினைத் தது தவறென்று நான் சொல்லமாட்டேன். ஏற்கனவே என்னைக் காட் டித்தானே என் தமக்கையை அவருக்கு மணம் முடித்தார்கள்..."

—கமலம் நிறுத்தவில்லை. அதற்குள் அம்பிகாவின் முகம் கறுத்தது. இதுவரை அவள் நம்பிய வார்த்தைகளைக்கூட இனி நம்ப முடியாத வளாகி விட்டதுபோல் அவள் முகத் தோற்றம் எடுத்துக் காட்டியது. கமலம் அதைக் கவனித்தாள். அதற்குச் சமாதானம் கூற முடியாமல் மேலும் தொடர்ந்தாள்:

"...எனக்கும் அத்தான் மீது ஏதோ மயக்கமிருந்தது போல் அவர் கள் கருதிக் கொண்டார்கள். ஒரு வார்த்தைகூடப் பேசாமல் என் தாய் "பளார்" என்று என் கன்னத்தில் அறைந்தாள். கண்விழித்து என்னைக் காப்பாற்றுகிற தமக்கை அப்போது என்னைக் காக்க முன்வரவில்லை. எல்லோரும் என்னை ஏசினார்கள். நடந்தது யாருக்குத் தெரியும்? எனக்

https://t.me/tamilpdfebooks



குத் தெரியும். அத்தான் அறிவார். நான் சொன்னால் நம்பமாட்டார்கள். அவர் சொல்ல வரமாட்டார். இந்த நிலையில் நான் எல்லா ஏச்சுக்களை யும் தாங்கிக் கொண்டேன். ஐயோ, அம்பிகா! இன்னும், இந்த விநாடிவரை நான் அவர் மீது ஆசை கொண்டு சென்றதாகவே அனை வரும் கருதுகிறார்கள். என் மானம் மரியாதையையே சந்தேகிக்கிறார்கள். அப்போதே என் தமக்கை மாடிக்குச் சென்று அவர் காலில் விழுந் தாளாம். பின் என்ன? கோபிக்கவா முடியும்? கோபிக்கக் கூடிய உரிமையுடனா அவள் மணமுடிக்கப்பட்டாள்? அத்தான் என்ன சொன் னாரோ தெரியாது. இருவரும் கீழே இறங்கி வந்தார்கள். இந்திரா என் அம்மாவைப் பார்த்து, “இப்பொழுதே இவளைக் கூட்டிக்கொண்டு புறப்படுங்கள்” என்றாள். மீனாட்சி அத்தையும் மாமாவும் எவ்வளவோ தடுத்தார்கள். “எது எப்படி ஆகியிருந்தாலும் கவலை இல்லை. அதற்காக நீங்கள் புறப்பட வேண்டாம்” என்று, வேண்டியமட்டும் சொன்னார்கள். ஆனால், எதற்கும் என் குடும்பத்தார் இணங்கவில்லை. உடனே புறப்பட ஆயத்தம் செய்தார்கள். மூட்டைகளைக் கட்டிக் கொண்டிருக்கும்போதே அவசரம் பொறுக்காமல் என் தாய் என்னைத் தனியே இழுத்துக் கொண்டு போய், “ஏண்டி, ஏன் ரவிக்கை கிழிந்திருக்கிறது? எதற்காக மேலே போனாய்? உன்னைத் தொட்டாரா? கெட்டாயா? தப்புத் தவறு நடந்ததா? சொல்லடி குடி கெடுக்க வந்தவளே” என்று தலையில் ஓங்கி ஓங்கி அடித்தாள். அந்த அடி எனக்கு வலிக்கவில்லை; ஆனால், அந்தச் சொல்லைத்தான் என்னால் பொறுக்க முடியவில்லை. இவ்வளவு சங்கட மான சந்தர்ப்பத்தை என் வாழ்வில் நான் சந்திக்க நேருமென்று ஒரு போதும் கருதியதில்லை அம்பிகா! இனி நான் வாழ்வது எப்படி? என் வாழ்க்கை வளமாவது எப்படி? இந்தச் சந்தேகம் தெளிவது எப் போது?”

கமலம் விக்கி விக்கி அழுதாள். அம்பிகா அவள் கண்ணீரைத் துடைத்தாள். அவள்கூட கமலத்தின் பேச்சில் முழுத் தெளிவு பெற்ற வளாயில்லை. ஆயினும் பெண்மைக்குள்ள இயற்கையான இளகிய மன தின்படி அவள் கமலத்தைப் பார்த்து “கவலைப்படாதே! நானே உன் பெற்றோர்களுக்குச் சொல்கிறேன்” என்று எழுந்தாள். கமலம் அரை மனதோடு அதற்குச் சம்மதித்தவள் போல மவுனமாக இருந்தாள். எழுந்து மறு கட்டுக்கு வந்த அம்பிகா, மங்கையர்க்கரசி காய்கறி வாங்க சந்தைக்குப் போயிருப்பதாக அறிந்தாள். சின்னப்பபிள்ளை “மோல்மேன்” நாற்காலியில் சாய்ந்து நிம்மதியாகத் தூங்கிக் கொண் டிருந்தார். ஆகவே, மங்கையர்க்கரசி வரட்டும் என்று எண்ணித் திரும் பிய அம்பிகாவின் கண்கள் மூலையறையில் சுந்தரம் உட்கார்ந்திருப்பதைக் கண்டன. அவன் ஏதோ படித்துக் கொண்டிருந்தான்; அந்த அறை வாசலில் போய் நின்ற அம்பிகா “அய்யா, அய்யா” என்று குரல் கொடுத்தாள். சத்தம் கேட்ட சுந்தரம், “வாருங்கள்” என்று அழைத் தான். அம்பிகா உள்ளே சென்றாள். அவளைப் பார்த்துச் சுந்தரம் திடுக்

https://t.me/tamilpdfebooks



கிட்டான். அந்த வீட்டிற்கு அவள் வந்து வெகு நேரமாகியும் அவன் அப்போதுதான் அவளைச் சந்தித்தான். ஏதோ கேட்க வந்தவன் முதலில் உட்காரும்படி கை காட்டினான். அம்பிகா உட்கார்ந்தாள்.

"உங்களிடம் மனம் விட்டுப் பேச ஆசைப்படுகிறேன்" என்று தொடங்கி முழுவதையும் விளக்கமாகக் கூறினாள் அம்பிகா. தங்கையைப் பற்றி நன்றாகத் தெரிந்தவனாகையால் அப்படித்தான் ஏதாவது இருக்க முடியுமென்று அவன் எண்ணியிருந்தான். ஆகவே, அம்பிகாவின் விளக்கத்தில் சுந்தரம் தெளிவுபெற்றான். இப்படி இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது மங்கையர்க்கரசி "தடதட"வென அங்கே வந்தாள். அம்பிகாவைப்பற்றி ஏதோ ஒரு சந்தேகத்தை மனதில் வைத்திருந்தவள் போல், "அடியம்மா, நீ உடனே வெளியிலே போ! உன்னைப் பாத்தா நல்லவளாத் தெரியல்லே! போ வெளியிலே!" என்று அதட்டினாள். சுந்தரம் தடுக்க முயன்று தோற்றான். கமலம் பேச முடியாதவளாய் நின்றாள். சின்னப்பபிள்ளை தூக்கம் கலைந்தும் பயந்தபடியே நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அம்பிகா கண்ணீரோடு வெளியேறினாள்.

சுந்தரத்தின் மனம் நிலைகொள்ளவில்லை. முன்னும் பின்னுமாக உலவிக் கொண்டிருந்தான். கமலம் சிவந்த முகத்தோடு அங்கே வந்தாள். அவளைப் பார்த்ததும் விம்மி, விம்மி அழுதுவிட்டான் சுந்தரம்; "அழாதீர்கள்" என்று சொல்ல வந்து, "அண்ணா" என்ற கமலம் தானும் அழ ஆரம்பித்தாள். களங்கமற்ற இரண்டு இதயங்கள் பரிமாறிக் கொள்ளும் ஒன்று, கண்ணீர்தானே! சுந்தரம் அவளை அமைதிப்படுத்திவிட்டு ஏதோ நினைத்தவன் போல், தன் தாய் அங்கிருந்து நீங்கிய நேரம் பார்த்து மெதுவாக வெளியேறினான்.

தெருத் தெருவாகச் சுற்றிக்கொண்டு வந்தாள் அம்பிகா. சுந்தரமும் அவளைத் தேடிக் கொண்டு சுற்றிவந்தான். கடைசியில் திருச்சி ரோட்டுக்குப் பக்கத்திலுள்ள சினிமா கொட்டகை அருகில் அவளைக் கண்டுபிடித்தான். அவனைக் கண்ட அம்பிகாவும் தன்னைச் சமாதானப்படுத்தத்தான் அவன் வந்திருப்பான் என்பதைப் புரிந்து கொண்டாள். சுந்தரம் அவள், அருகில் வந்து, "என்னோடு வா, ஒன்றும் பேசாதே! வீதியில் எல்லோரும் பார்க்கிறார்கள்" என்று சொன்னபடி முன்னால் நடந்தான். அம்பிகாவும் அவனைப் பின் தொடர்ந்தாள். கொஞ்ச தூரம்தான் போயிருப்பார்கள். ஒரு நீல வாகனம் (போலீஸ் வண்டி) அவர்கள் எதிரே வந்தது. அருகில் வந்ததும் நின்றது. அதிலிருந்து ஒரு போலீஸ் அதிகாரி கீழே இறங்கி தன் பையிலிருந்து ஒரு படத்தை எடுத்து அதையும் அம்பிகாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தார். அம்பிகாவும் சுந்தரமும் திகைத்து நின்றார்கள். அதிகாரி அம்பிகாவை வண்டியில் ஏறுமாறு [illegible] ார். அம்பிகா [illegible] ாள். சுந்தரம் இடைமறித்து. "ஐயா, என்னோடு வந்திருக்கிறாள்; விட்டு [illegible] டுங்கள்" என்றான். அதிகாரி

https://t.me/tamilpdfebooks



அவனை மேலும் கீழும் முறைத்துப் பார்த்துவிட்டு, "நீ தான் அந்த ஆளா? நீயும் ஏறு வண்டியிலே!" என்று ஆணையிட்டார். சுந்தரம் குழம்பினான். பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு இருவரும் வண்டியில் ஏறினார்கள்.

அம்பிகாவை ஒரு ஓட்டலுக்கு அழைத்துக் கொண்டு போய்த் தங்கவைத்து, விபரமாகப் பேச வேண்டுமென்றுதான் சுந்தரம் அவளைத் தேடிச் சென்றான். ஆனால், ஒரு புதிய பாதை அவனை வரவேற்று போலீஸ் நிலையத்தில் கொண்டு போய்ச் சேர்த்தது. அவன் இது போன்று விவகாரங்களுக்குப் புதியவன். அம்பிகாவின் போட்டோவை வைத்துக் கொண்டு போலீசார் தேடியது, நினைக்க நினைக்க ஒரு புதிராகவே இருந்தது, அவனுக்கு. அம்பிகாவைப் பற்றி மோசமான கணக்குப் போட அவன் மனது இடம் தரவில்லை. எதற்கும் அம்பிகாவிடமே கேட்டுவிடலாம் என்கிற எண்ணத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டிருந்தான்.

போலீஸ் நிலையத்தில் சப்—இன்ஸ்பெக்டர், அவர்கள் இருவரையும் இரண்டு நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு, ரிக்கார்டுகளைப் புரட்டிக் கொண்டிருந்தார். சுந்தரமும் அம்பிகாவும் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தனர். திடீரென்று சப்—இன்ஸ்பெக்டர் அம்பிகாவைப் பார்த்து, "ஏம்மா, அர்த்தமில்லாமே இதுமாதிரி ஆசாமிகளோடு ஓடி வந்திடுறீங்க? உங்க காதல்னாலே எங்க உயிருல்ல போகுது?" என்றார். சுந்தரம் அம்பிகாவைப் பார்த்தான். அவன் மனத்திலே ஏதோ ஒரு புதிய உணர்ச்சி புகுந்து கொண்டது. அதே உணர்ச்சியைக் குழப்பத்தோடு பெற்ற அம்பிகாவும் சப்—இன்ஸ்பெக்டருக்குப் பதில் சொல்லாமல் பேசாமலிருந்தாள். ஒரு உறவுமில்லாத இருவருக்கும் ஊர் வதந்தி தொடர்பு ஏற்படுத்தி விடுவதுபோல், சப்—இன்ஸ்பெக்டரின் வார்த்தை அம்பிகாவுக்கும் சுந்தரத்திற்குமிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்திக் காட்டியது. அம்பிகா சற்று நிதானித்துக் கொண்டு, சப்—இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "நாங்கள் காதலர்கள் அல்ல" என்றாள். சப்—இன்ஸ்பெக்டர் சிரித்து, "ஏன்? அதுக்குள்ளே கசந்து போச்சா?" என்று கேட்டுவிட்டு இரண்டு காகிதங்களை அவர்களிடம் நீட்டி, கையெழுத்துப் போடச் சொன்னார். அம்பிகா கையெழுத்திட்டாள். சுந்தரமும் குழப்பத்தோடு கையெழுத்திட்டான். காகிதத்தை வாங்கி மாறி மாறிப் பார்த்த சப்—இன்ஸ்பெக்டர், "ஏய்! என்ன பொய்க் கையெழுத்துப் போடுறே? உன் பெயர் பாலன் இல்லே!" என்று சுந்தரத்தை அதட்டினார். அம்பிகாவுக்கு சப்—இன்ஸ்பெக்டரின் வார்த்தை புரிந்தது. தன்மீதும் பாலன் மீதும் தன் தாய் போலீசில் புகார் கொடுத்திருக்கிறாள் என்பதைப் புரிந்துகொள்ள அம்பிகாவுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. சுந்தரம் குழம்பினான். பிறகு, தன் வீட்டில் அம்பிகா தன்னிடம் சொன்னதை

https://t.me/tamilpdfebooks



வைத்து சப்-இன்ஸ்பெக்டரின் கேள்வியை ஒப்பிட்டுப் பார்த்தான். அம்பிகா, பாலன்—இருவரைப் பற்றியும் ஓரளவு புரிந்து கொள்ள இது அவனுக்கு உதவிற்று, சப்-இன்ஸ்பெக்டர் கடுகடுப்பாக—"மரியாதையா சொந்தக் கையெழுத்தைப் போடு!" என்றார். சுந்தரம் இப்போது ஒரு முடிவுக்கு வந்தான். நானல்ல பாலன் என்பதை வெளிப்படுத்தினல் போலீசார் பாலனைத் தேடுவார்கள். பாலன் கைது செய்யப்பட்டால் தன் தங்கை மனமுடைந்து தற்கொலை செய்து கொள்ளவும் துணிந்து விடுவாள். ஆகவே, தானே பாலன் என்று காட்டிக் கொள்வது என முடிவு கொண்டான். சிறிதுகூடத் தயக்கமின்றி ஒரு புதிய காகிதத்தை வாங்கி அதில் பாலன் என்று காட்டிக் கொள்வது என முடிவு கொண்டான். சிறிதுகூடத் தயக்கமின்றி ஒரு புதிய காகிதத்தை வாங்கி அதில் பாலன் என்று கையெழுத்துப் போட்டான். அம்பிகா தடுத்துப் பேச வந்தவள், வாய்மூடி மவுனியானள். சப்-இன்ஸ்பெக்டர் ஹெட் கான்ஸ்டபிளைப் பார்த்து, "இராத்திரி வண்டியிலே இவுங்களே மெட்ராசுக்குக் கொண்டு போகணும்; இப்ப லாக்கப்பிலே வச்சுரு" என்றார். சுந்தரமும் அம்பிகாவும் லாக்கப்புக்குக் கொண்டு போகப்பட்டார்கள். சுந்தரம் இந்தச் செய்தி தன் பெற்றோர்களுக்குத் தெரியாமலிருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். தெரிந்தால் தன்னைப் பற்றிய உண்மை புலனாகி பழையபடியும் போலீசார் பாலனைத் தேட ஆரம்பிக்கலாம். அதோடு அம்பிகா தனிமையிலே லாக்கப்பில் இருக்கவும் நேரிடலாம்—என்று சிந்தித்துக் கொண்டே லாக்கப்புக்குள் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தான். அம்பிகா சுந்தரத்திடம் அவனது பெற்றோர்களுக்குச் செய்தி அனுப்புவதைப் பற்றிக் கேட்டாள். சுந்தரம் மறுத்துவிட்டான். எப்படியும் கோர்ட்டில் உண்மை புலனாகத்தானே வேண்டும் என்று கருதிய அம்பிகா, சுந்தரத்திடம் கண்டிப்பாகப் பெற்றோர்களுக்குச் செய்தி அனுப்பி விடுதலை பெற முயற்சிக்கும்படி வற்புறுத்தினாள்.

சுந்தரம் ஒரே அடியாக, "நடப்பது நடக்கட்டும் பேசாமலிரு" என்று கூறிவிட்டான். அதற்குள் போலீசார் சென்னைக்கு "டிரங்கால்" போட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேசி முடித்ததும் சப்-இன்ஸ்பெக்டர் இரண்டு பேருக்கு முதல் வகுப்பு ரெயில் வாரண்ட் எழுதினார். மாலை 7 மணிக்கு இந்தோ—சிலோன் எக்ஸ்பிரசில் இருவரையும் ஏற்றி இரண்டு போலீசார் துணைக்கு அமர்ந்தார்கள். சுந்தரம் புதுக்கோட்டை வாசியானாலும் வெகுநாட்கள் தமிழ்ப் படிப்புக்கென வெளியூர்களில் இருந்ததால் அதிகம் பேரைப் புதுக்கோட்டையில் பழகிக் கொள்ளாமலிருந்தான். அதோடு. கூடவந்த போலீசார், அவனையும் அம்பிகாவையும் கைதிகள்போல் நடத்தாததால் யாரும் அவர்களை அதிகம் கவனிக்கவில்லை. ஆகவே, சின்னப்பபிள்ளைக்கும் மங்கையர்க்கரசிக்கும் விஷயத்தைக் கண்டு சொல்வோர் இல்லாமற் போய்விட்டார்கள்.

ரெயிலில் முதல்வகுப்பு அறை இரண்டே படுக்கைகள் கொண்ட

https://t.me/tamilpdfebooks



தாக இருந்தது. ஒன்றில் சுந்தரத்தையும் அம்பிகாவையும் உட்கார வைத்துவிட்டு, மற்றொன்றில் போலீசார் இருவரும் அமர்ந்தார்கள். தாங்கள் கைதிகளாக இருந்தும் தங்களை முதல் வகுப்பில் அழைத்துக் கொண்டு போவது வியப்பாக இருந்தது சுந்தரத்திற்கு. மெதுவாகப் போலீசாரிடம் அதுபற்றி வினவினான். அவர்கள் சொன்ன தகவலி லிருந்து மூன்றும் வகுப்புப்படிதான் சர்க்கார் கொடுப்பதாகவும், பாக் கியை அம்பிகாவின் தாயோ வேறு யாரோ கவுரவத்தை முன்னிட்டுக் கட்டியிருப்பதாகவும், சப்—இன்ஸ்பெக்டர் டெலிபோனில் பேசியது அது விஷயமாகத்தான் என்றும் தெரிய வந்தது.

போலீசார் அவர்களிடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டார் கள். அந்த அன்புக்குக் காரணம், அவர்கள் முதல் வகுப்புக்குத் தகுதி யுடையவர்கள் என்பது மட்டுமல்ல, வாழ்வின் மேடு பள்ளங்களைத் தாங்களும் அறிந்திருந்தது ஒரு காரணமாகும். சுந்தரம், அவர்களிடம் கூட, தான் பாலன் என்றே சொல்லி வந்தான். அவனது அந்தத் தியாக உணர்ச்சி அம்பிகாவின் இதயத்தைத் தொட்டது. திடீரென்று ஒரு போலீஸ்காரர் சுந்தரத்தைப் பார்த்து, "ஏன் சார், இந்த அம்மாவும் நீங்களும் ஓடிவந்து எட்டு நாளைக்கு மேலே ஆச்சு என்கிறுங்க, இன் னும் இந்தச் செய்தி "தினக் கலை"யில் வரல்லியே! ஓடிப்போற செய்தி யெல்லாம் அதிலே உடனுக்குடனே வந்திருமே!" என்று கேட்டார். சுந்தரம் சிரித்துக் கொண்டே, "நாளை வரலாம்" என்று பதில் அளித்தான்.

ரெயில் திருச்சி சந்திப்பில் வந்து நின்றது. போலீசார் இறங்கி, அவர்களுக்குச் சாப்பாடு வாங்கிவந்து கொடுத்தார்கள். அந்த அன்பு, சுந்தரத்திற்கு அளவு கடந்த மகிழ்ச்சியைத் தந்தது. "பயங்கரமானவர் கள் என்று கருதப்படுகிற போலீசாரில் சிலருக்கு எவ்வளவு நல்ல இதய மிருக்கிறது. அரசாங்கத்தின் கொடுமைகள் அதிகரிக்க அதிகரிக்க, சாதா ரண மக்களிடத்திலே போலீசாருக்குப் பெருந்துணையாக அமைந்து விடுகிறது."—இவ்வாறு சுந்தரம் எண்ணமிட்டுக் கொண்டே சாப்பிட் டான். அம்பிகா அவனுக்குப் பரிமாறிக் கொண்டே தானும் சாப்பிட்டு முடித்தாள். சிகரெட்டு வேண்டுமா என்று ஒரு போலீஸ்காரர் கேட்ட தற்கு, சுந்தரம், "நன்றி—பழக்கமில்லை" என்று இரண்டு வார்த்தை களில் பதில் அளித்தான். இருபதாம் நூற்றாண்டில் ஒரு அதிசய மனி தனைப் பார்த்துவிட்டது போல் போலீசார் சிரித்துக் கொண்டார்கள். பிளாட்பாரம் அல்லோல கல்லோலப்பட்டது. முதல் மணி அடித்தது. பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த பலரும் வண்டியில் ஏறினார்கள். ஏராளமான போலீசார் பிளாட்பாரத்தில் பிளாட்பாரத்தில் நடைபோட ஆரம்பித்தார்கள். சுந்தரம் ஆச்சரியத் தோடு என்ன நடக்கிறதென்று எட்டிப் பார்த்தான். ஒருவரைக் கூப் பிட்டு என்ன விசேஷம் என்று விசாரித்தான். யாரோ ஒரு மந்திரி உறையூரில் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு குப்பைத் தொட்டியைத்

https://t.me/tamilpdfebooks



திறந்து வைத்துவிட்டு சென்னைக்குத் திரும்புவதாகத் தெரிந்து கொண்டான். மந்திரி வந்தார். தனிப் பெட்டியில் ஏறிக்கொண்டார். இரண்டாவது மணி அடித்தது. வண்டி புறப்பட்டது. சுந்தரத்திற்கும் அம்பிகாவிற்கும் காவலாக வந்த போலீஸ்காரர்கள் தாங்கள் வெளி நடைபாதையில் படுத்துக் கொள்வதாகச் சொல்லி அவர்களைக் கதவைச் சாத்திக் கொள்ளச் சொன்னார்கள்.

சுந்தரம், "ஏன் நீங்களும் உள்ளேயே படுத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

"இல்லை. வெளியிலேயே படுத்துக் கொள்கிறோம். நீங்க ஏதுக்கும் கவலைப்படாதீங்க சார். உலகத்திலே ஆயிரம் நடக்கும், ஒவ்வொன்றுக்கும் கவலைப்பட ஆரம்பிச்சா தினம் செத்துச் செத்துப் பிழைக்க வேண்டியதிருக்கும். ஆறிலும் சாவு நூறிலும் சாவுன்னு துணிச்சல் வந்திடுச்சுன்னு சஞ்சலமே இல்லை, நீங்க பாட்டுக்கு ஜாலியா பேசிக்கிட்டே வாங்க. ரெயில் செஞ்ச புண்ணியவான் முதல் வகுப்பையாவது வீடு மாதிரி கட்டி வச்சிருக்கிறான். நாங்க ஏன் தொல்லை கொடுக்கணும்? நீங்க குஷியா இருங்க!" என்று கூறிவிட்டு ஒரு போலீஸ்காரர் சுந்தரத்தின் பதிலை எதிர்பார்க்காமலேயே கதவைச் சாத்திக் கொண்டார். தவறான முடிச்சை அன்போடு போட்டு வைத்துவிட்டு விடைபெற்றுக் கொண்ட அந்தப் போலீஸ்காரரை நினைக்கும்போது சுந்தரத்திற்குச் சிரிப்பாக வந்தது, சிரித்துக் கொண்டே ஒரு படுக்கையில் அமர்ந்தான். அம்பிகா மவுனமாக அந்த முகத்தைப் பார்த்தாள். அந்தப் பார்வை என் வரலாற்றைச் சொல்லட்டுமா என்று கேட்பதுபோல இருந்தது.

"வேடிக்கையான உலகம்! எவ்வளவு பெரிய பெரிய விஷயங்கள் எல்லாம் திடீர் திடீரென்று அர்த்தமில்லாமல் நடந்து விடுகின்றன? ஒவ்வொரு மனிதனும் மற்றவனைப் பற்றித் தப்புக் கணக்கே போட்டுவிடுகிறான். யாரும் யாரையும் முழுக்கப் புரிந்து கொள்ளாமலே உலகம் நடந்து கொண்டிருக்கிறது. நல்லவர், கெட்டவர் எல்லாருடைய வாழ்க்கையும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் சொல்வது?"

சுந்தரம் அன்றையச் சம்பவத்திலிருந்து இவ்வாறு தத்துவப் பாதைக்கு நழுவினான். அம்பிகாவும் அந்தத் தத்துவங்களை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டே வந்தாள். அந்தத் தத்துவத்தின் ஏதாவதொரு மூலையைப் பிடித்துக் கொண்டு, தன் வரலாற்றைத் தொடங்கலாம் என்பதே அவள் கவனித்துக் கேட்க ஆரம்பித்ததற்குக் காரணம்.

சுந்தரம் தொடர்ந்தான்: "மனித வாழ்க்கையின் அடிப்படையையே மாற்றியமைக்க வேண்டும். பிரதி ஒரு மனிதனின் இதயத்திலும் இரண்டு அறைகள் இருக்கின்றன. ஒன்று ரகசிய அறை, மற்றொன்று பகிரங்க அறை; சிலர் பகிரங்க அறையில் வைக்கக் கூடியதை ரகசிய அறையில் வைத்துக் கொண்டு தடுமாறுகிறார்கள்; சிலர் ரகசிய அறை

https://t.me/tamilpdfebooks



யில் வைக்கப்பட வேண்டியதை பகிரங்க அறையில் போட்டுப் பல பேருக்கும் காட்சிக்கு வைத்து விடுகிறார்கள். முன்னவனை, "ஊமை ஊரைக் கெடுக்கும்" என்கிறார்கள். பின்னவனை "ஓட்டை வாயன்" என்கிறார்கள். ஆக, எப்படி வாழ்ந்தாலும் தப்பாகத்தானிருக்கிறது. இதற்கு என்ன செய்வது? ஒன்றுக்கு அடுத்து இரண்டு என்பதிலே உலகம் நம்பிக்கை இழந்துகொண்டு வருகிறது. ஒன்றுக்கு அடுத்து மூன்று என்றுதாவினால் பொறுமைப்படுகிறது. வாழ்ந்தவன் கெட்டால் வாய் உபச்சாரமாக வருத்தம் தெரிவிக்கிறது. கெட்டவன் வாழ ஆரம்பித்தால் "இவர் இருந்த இருப்பு எனக்குத் தெரியாதா?" என பூர்வ புராணம் பேச ஆரம்பிக்கிறது. எல்லாவற்றிற்கும் காரணம் ஒன்றுதான். எல்லாம் "தனக்கு வேண்டும், தனக்கு வேண்டும்" என்று மனிதன் அல்லாடு அதன் காரணமாக நண்பர்களைக்கூட பகைவர்களாக்கத் துணிந்து விடுகிறான். நான் மட்டும் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். எது வந்தாலும் சரி, எது போனாலும் சரி, எப்போதும் ஒரே மாதிரி இருந்து விடுவோம் என்பதுதான் அது. பார்ப்போமே, நம்மை எதிர்க்கச் சிலருக்குத் தைரியம் வரும்போது அவர்களைச் சமாளிக்க நமக்குத் துணிச்சல் இல்லாமலா போய் விடும்? அம்பிகா! எது எப்படி இருந்தாலும் சரி, மனதை எப்போதும் கவலையின்றி வைத்துக்கொள்."

சுந்தரத்திற்குச் சிரிப்பு வந்தது. "நான் எங்கேயோ போகிறேன். என்றால், சிறிது நேரத்திற்குமுன் ஒரு போலீஸ்காரர் சொன்னாரே அது மாதிரி உலகத்திலே ஆயிரம் நடக்கும். அது ஆயிரம் பேர் வாழ்விலும் நடக்கும். அந்த ஆயிரம் பேர்களில் ஒவ்வொருவனும் தன்னைத் தவிரப் பாக்கி தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பது பேர்களின் வாழ்விலும்தான் நடப்பதாகக் கருதிக்கொள்கிறான். ஒரு கதை: ஒரு கல்யாண வீட்டில் ஐந்து பேர் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஒருவன் அந்த ஐந்து பேர் நெற்றியிலும் நாமத்தைப் போட்டுவிட்டு தன்னைத் தவிர நாலு பேருக்கும் போட்டிருக்கிறேன். அவர்களிடம் சொல்லிவிடாதே— என்று ஒவ்வொருவராக எழுப்பி, தனியே கூட்டிப் போய்ச் சொல்லி விட்டான். பிறகு அந்த ஐந்து பேரும் ஒருவனைப் பார்த்து ஒருவன் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஏன் தெரியுமா? தனக்கு மட்டுமில்லையாம், மற்ற நான்கு பேருக்கும் இருக்கிறதாம். இதுதான் உலகம். ஆகவே, தைரியமாயிரு. உன் வாழ்விலே ஏதோ ஒரு சோகமயமான அடிப்படை இருக்கிறது என்பது எனக்குத் தெரிகிறது. அதை எண்ணி எண்ணி உன் மனம் வெந்து கொண்டிருப்பதையும் நான் அறிகிறேன். அதைக் கேட்க வேண்டுமென்கிற ஆசை வெகு நேரமாக என்னைத் தூண்டிக் கொண்டிருக்கிறது. அதிலே நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டுமோ அவ்வளவு செய்யத் தயாராயிருக்கிறேன்." என்றான் சுந்தரம்.

அம்பிகாவின் கண்களிலே கண்ணீர் மல்கியது.

சுந்தரம் அவளைப் பார்த்து, "முதலில் ஒரு சந்தேகம். கேட்கக்

https://t.me/tamilpdfebooks



கூடாது என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால், என் மனம் என்னவோ அதைத் தெரிந்து கொள்ளத் துடிக்கிறது... உனக்கும் பாலனுக்கும்... ஏதாவது நெறிதவறிய உறவு..."

அம்பிகா இடைமறித்தாள்.

"இல்லை. நிச்சயமாக இல்லை. அவர் தொடவுமில்லை; நான் கெடவுமில்லை. என்னைத் தொட முயன்றவர்கள் பலர்; கெடுக்க முயன்றவர்கள் பலர். உண்மையைச் சொல்லுகிறேன். நான் நெறிதவறிய ஒருத்தியின் மகள் என்பதைத் தவிர வேறு எந்தக் களங்கமும் இல்லாதவள்."

சுந்தரம் திடுக்கிட்டான். பளிச்சென்று ரெயில்வண்டி நின்றது. அந்த அதிர்ச்சியில் அம்பிகா கீழே விழுந்தாள். சுந்தரம் அவளைத் தூக்கி உட்கார வைத்தான். அவன் மேனி புல்லரித்தது. அவளுக்கும் அப்படியே. சுந்தரம் வெளியிலே எட்டிப் பார்த்தான். ரெயிலின் முன் விளக்கு வெளிச்சத்தில் ஒரு எருமை தண்டவாளத்தில் கிடப்பதையும் எஞ்சின் டிரைவரும், சிலரும் அதைக் கிளப்பிக் கொண்டிருப்பதையும் கண்டான். அப்போது சுந்தரத்தின்கூட வந்த போலீஸ்காரர்கள் கீழே இறங்கினார்கள். அதுபோலவே அடுத்த மூன்றாம் வகுப்புப் பெட்டியிலிருந்தும் இரண்டு போலீஸ்காரர்கள் இறங்கினார்கள். சுந்தரத்தின்கூட வந்திருந்தவர்கள் அந்தப் போலீஸ்காரர்களைக் கண்டதும், "ஏய் வடிவேலு, என்னடா, எங்கே எஸ்காடு?" என்றார்கள்.

"மெட்ராசுக்குத் தாண்டா"

"என்ன கேசு? யாரு ஆளு?"

"பொம்பளை கடத்தல் கேஸ்!"

"உங்க ஊர் ஆள்தானா?"

"ஆமாப்பா! பெரிய இடத்துப் பையன்."

இந்த உரையாடலைக் கேட்ட சுந்தரத்தின் இதயம் நின்று விடும் போலிருந்தது. ஒரு வேளை பாலன்...?

# 4

சுந்தரம் அந்தக் கைதியின் பெயரை அறிந்து கொள்ளத் துடித்தான். வாய்திறந்து கேட்கப்போகும் சமயம் புகைவண்டி ஊதிற்று. போலீசார் வண்டியிலேறினார்கள். சுந்தரம் தலையை உள்ளே இழுத்துக் கொண்டான், வண்டி நகர்ந்தது. அம்பிகா தலைகுனிந்தபடி உட்கார்ந்திருந்தாள். குமுறும் எண்ணக் குவியல்கள் வெளியில் வந்து விழட்டுமா என்று அவளைக் கேட்டுக் கொண்டிருந்தன. சுந்தரம் அவளைப் பார்த்து, "பாலனுக்கும் உனக்கும் தவறான உறவு இல்லை என்னும் போது சமீப நிகழ்ச்சிகள் எல்லாம் நாடக பாணியில் நடந்தது ஏன்? என்ன இப்படிக் கேட்கிறேனே என்று வருந்தாதே! உன் வாழ்வை வளப்படுத்த

https://t.me/tamilpdfebooks



நான் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராகயிருக்கிறேன். அதை எந்த முறையில் நிறைவேற்றவும் சித்தமாயிருக்கிறேன். ஆனால், அதற்கு முன்பு, உன் இன்றைய வாழ்வு தண்ணீர் காணுது சாய்ந்து கிடக்கும் கொடியா? தணல் பட்டுக் கருகிப் போன மலரா? என்பதைத் தெரிந்து கொள்ள நான் ஆசைப்படுகிறேன். சாய்ந்த கொடியைத் தலை நிமிர்த்தி வைக்க முடியும். கருகிப்போன மலரை என்னம்மா செய்ய முடியும்? அதற்காகத்தான் இவ்வளவு கேட்கிறேன்" என்றான். அவனது இந்தக் கேள்வி அம்பிகாவுக்குப் பல்வேறு உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டது. "தியாகம் செய்கிறேன் என்கிறாரே, நாம் நெறிதவறாதவள் என்றால் ஒருவேளை"...இந்த சந்தேகம் அவளுக்கு மகிழ்ச்சி கலந்த உணர்ச்சியை எழுப்பிற்று. நல்லவேளை! பலமுறை வந்த ஆபத்துக்களில் நமது கற்பு அழிந்திருந்தால்...! இந்த உணர்ச்சி அவளை ஒரு விநாடி தொட்டு விட்டு ஓடிற்று. சுந்தரம் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அம்பிகா துவங்கினாள்:

"சொல்லுகிறேன். என் கதை முழுவதையும் சொல்லுகிறேன். நீங்கள் சினிமாப் பார்த்திருப்பீர்கள். அதிலே அடிக்கடி ஒரு பெயரைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பழைய கோவலன் படத்திலிருந்து சமீப காலம்வரை தொடர்ந்து நடித்துக் கொண்டு வந்தாள் நடிகை ஒருத்தி. பெயர் ரெங்க லெட்சுமி. அவள்தான் என் தாய்."

சுந்தரம் திடுக்கிட்டான். ரெங்கலெட்சுமி! திரையில் தோன்றியதுமே ரசிகர்களின் கைதட்டல்களைப் பெறும் நடிகை. பல ரசிகர்களுக்குப் பைத்தியம் பிடிக்கவைத்தவள். சோப்பு விளம்பரம் முதல் சுவரொட்டிகள் வரையிலே வெளிச்சம் போட்டுக் கொண்டிருந்த நடிகை. அவள் அம்பிகாவின் தாய். சுந்தரத்தின் கண்கள் அகல விரிந்தன. இப்போது அவளைப் புதுமாதிரியாகப் பார்க்க ஆரம்பித்தான். நடிகையின் மகளாதலால் சுவைமிக்க நாடகங்கள் பல அவளது வரலாற்றின் இடையில் வரும்—என்று தீர்மானித்துக் கொண்டான். கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான். அம்பிகா தொடர்ந்தாள்.

"என் தாய் நல்ல குடும்பத்தில் பிறந்தவள்தான். என் தாயைப் பெற்ற பாட்டனார், சிங்கப்பூரிலே பெரிய வியாபாரியாக இருந்தவர். அவர்களுக்குச் சொந்த ஊரே சென்னையல்ல; கோட்டையூரை அடுத்த வேலங்குடிதான்."

சுந்தரம் ஆச்சரியப்பட்டான். "நம் பகுதிக் குடும்பம்தானா" என்று மனத்துக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

"என் தாயைப் பாட்டனும் பாட்டியும் நன்றாகவே வளர்த்தார்களாம். சிங்கப்பூரிலேயே கொண்டு போய் வைத்திருந்தார்களாம். என் தாயும் அங்கேதான் படித்தாளாம். பதினேழு வயதாகும்போது—என் தாய் பருவப் பெண்ணாயிருந்தபோது கட்டுக்கடங்காமல் நடக்க ஆரம்பித்தாளாம். ஆதாவது, என் பாட்டன் சொல்லைக் கேளாமல் ஊர்

https://t.me/tamilpdfebooks



சுற்றுவதும், சினிமாவுக்குப் போவதும, ஊதாரிச் செலவு செய்வதுமாக இருந்தாளாம். அது அன்றி, சிங்கப்பூர் வாழ்வில் நெறிதவறி நடந்த தில்லையாம் என் தாய். வேறுவிதமான பொழுதுபோக்குகளில்தான் அதிகக் காலத்தையும் பணத்தையும் செலவழித்தாளாம். அதையே பொறுக்க முடியாத பாட்டஞர் என் தாயையும் பாட்டியையும் வேலங் குடிக்கே அனுப்பிவிட்டாராம். வேலங்குடியில் வாழ்ந்தபோதுதான் என் தாயின் காதல் நாடகம் ஆரம்பமாயிற்ரும். அது படிப்படியாக வளர்ந்து, என் தாயின் வாழ்க்கைப் பாதையையே திசை திருப்பிவிட்ட தாம். ஊரிலேயே நல்லவர்கள் கெட்டவர்கள் எல்லோருக்கும் ரெங்க லெட்சுமி என்ருல் தெரியுமாம். அவ்வளவு மோசமான வாழ்க்கையில் உழன்ற என் தாயைத் திடீரென்று சில சினிமாக்காரர்கள் சந்தித்தார் களாம். வேலங்குடித் திருவிழாவைப் படம்பிடிக்க வந்த சினிமாக்காரர் கள் என் தாயை அங்கு சந்தித்து அவளைச் சென்னைக்கு அழைத்துக் கொண்டு போனூர்களாம். அங்கே தோழி வேடத்தில் துவங்கி, தொடர்புகளை வளர்த்துக் கொண்டு, கதாநாயகி வேடத்தில் மின்ன ஆரம்பித்தாள் என் தாய். இதற்கிடையில் என் தாய் சென்னைக்கு வந்த துமே ஒரு படமுதலாளியோடு கொண்ட தொடர்பில்தான் பரிதாபத் திற்குரிய நான் உருவானேன். அதற்கு மேல் என் தாயின் வரலாற்றை எடுத்துரைக்க நான் விரும்பவில்லை. வயது ஏற ஏற, பொலிவேறி விளங் கியதால், என் தாய் பலகாலம் கதாநாயகியாக நடித்துவர முடிந்தது, சமீப காலத்தில்தான் தாய்வேடம் போட்டு நடிக்க ஆரம்பித்தாள். எனக்குப் பருவம் வந்ததும் எப்படியாவது என்னையும் சினிமாவில் சேர்த்து சினிமா உலகில் தனக்கிருந்த செல்வாக்கை. தலைமுறை தலை முறையாக நிலைநாட்டிக் கொள்ள என் தாய் விரும்பினுள். அதற்காகச் சினிமாவில் அவள் அறிந்திருந்த வழிகளையெல்லாம் கடைப்பிடிக்க ஆரம் பித்தாள். திடீரென்று ஒரு பட முதலாளியைக் கூட்டி வருவாள், என் னைச் சிங்காரித்துக் கொள்ளச் சொல்வாள். தானே மலர் சூடி விடு வாள். கொஞ்ச தூரத்தில் போய் உட்கார்ந்தாலும் பட முதலாளியின் பக்கத்தில் போய் உட்காரும்படி கட்டாயப்படுத்துவாள்.

"நடிப்புத் திறமையைக் காட்டிலும் அது போன்ற வளைவு, குழைவு கள்தான் ஒருத்தியை உச்சாணிக் கொம்பிலே தூக்கிவைக்க முடியும் என்று அடிக்கடி போதிப்பாள். ஒரு நட்டுவஞரை வைத்து நாட்டியம் சொல்லிக் கொடுத்தாள். ஆடை அணிமணி பலவிதங்களிலும் வாங்கிக் கொடுத்தாள். என் இளமையின் பொலிவு எப்படிச் சிங்காரிக்கப்பட்டால் பிறரைக் கவருமோ அப்படிச் சிங்காரிப்பாள். என் நாட்டிய அரங்கேற் றத்தை ஒருநாள் நடத்திவிடத் தீர்மானித்தாள். ஊரிலே நாட்டிய அரங்கேற்றம் என்ருல் பெரிய மனிதர்கள், படித்தவர்கள் தலைமையில் நடத்தப்படுவது வழக்கம். என் தாய் என் நாட்டிய அரங்கேற்றத்தை ஒரு பட முதலாளியின் தலைமையில் நடக்கத் தீர்மானித்தாள். அந்த முத லாளி நன்ருகக் குடிக்கக் கூடியவர். ஒரு வெள்ளிக்கிழமையில் என்

https://t.me/tamilpdfebooks



நாட்டிய அரங்கேற்றம் அவர் தலைமையில் நடந்தது. நன்ருகவே ஆடினேன்; பாராட்டப் பெற்றேன்; பலரது கண்களிலும் பட்டேன். அரங்கேற்றம் முடிந்தது. முதலாளி தலைமை வகித்துப் பேசும்போது என்னுடைய ஆட்டம் அவரை மிகவும் கவர்ந்ததாகவும் இப்பொழுதே தூக்கிக் கொண்டு ஓடிவிடலாமென்று தோன்றுவதாகவும் குடிவெறியில் குறிப்பிட்டார். அது போக, என்னை அவர் வர்ணித்துக் கொண்டு போனமுறை, சபையினரில் பலரைத் தலை குனிய வைத்ததோடு, என்னையும் அவமானத்தில் ஆழ்த்திற்று. பிறகு தியேட்டரிலிருந்து நான், என் தாய், நட்டுவனுர் மூவரும் ஒரு காரில் வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். அரங்கேற்றத்திற்குத் தலைமை வகித்த முதலாளி அதோடு போய் விடுவார் என்று இருந்தேன். இல்லை. நேரே எங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். என் தாய் எனக்குச் சாடையாக உபதேசிக்க ஆரம்பித்தாள். ஏதோ எதிர்காலம் என்று ஒன்று எனக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகவும் அதிலே மாட மாளிகையும், கூட கோபுரமும், பேரும் புகழும். பெருவாழ்வும், சீரும் சிறப்பும் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் போதிக்க ஆரம்பித்தாள். "அந்த உலகத்திற்கு முதற்படி இன்றுதான் ஆரம்பமாகப் போகிறது; உன் முட்டாள் தனத்தினுல் அதைத் தவற விட்டுவிடாதே" என்ருள். எனக்குப் புரிந்தது. நான் திகைத்தேன். செத்தாலும் சரி, அதற்கு ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று அதற்கு மறுத்தேன். நட்டுவனுரை அனுப்பிச் சரிக்கட்ட முயன்ருள். அவரிடத்திலும் நான் கண்டிப்பாகச் சொல்லிவிடவே, வேறு வழியில்லை என்ற நிலையில் பயமுறுத்த ஆரம்பித்தாள். நான் தற்கொலை செய்து கொள்வேன் என்ருள். கிணற்றுக்கு ஓடினுள். குதிக்கப் போவது போல் அபிநயித்தாள். நான் என்ன செய்ய முடியும்? சம்மதித்தேன். ஆனுலும் பட முதலாளி குடிகாரன், கிழவனுகையால் என்னைக் காத்துக் கொள்ள முடியும் என்று நம்பினேன். என் சம்மதத்தை என் தாய் முதலாளிக்குத் தெரிவித்தாள். உடனே இரண்டாயிரம் ரூபாய்க்கு முதலாளி ஒரு "செக்"குக் கொடுத்தார். என்னைப் பார்த்துச் சிரித்தபடி, அப்போதே தொட முயற்சித்தார். உலகத்தில் மனிதன், மிருகம் என்ற இருவேறு கூறுகள் அந்த நேரத்தில் மட்டும் பேதம் தெரியாமல் காட்சி அளிக்கின்றன. ஆம்; குடிவெறியில் அந்த முதலாளி அப்போதே மிருகமாக முயற்சித்தார்.

"என் தாய் உடனே படுக்கையறைக்குச் சென்று அதை அலங்கரிக்க ஆரம்பித்தாள். படுக்கையில் மலர் தூவினுள். அறையில் ஊதுவத்தி ஏற்றி வைத்தாள். அதைக் கவனித்த நான், மெதுவாக முதலாளியின் அருகில் போய் உட்கார்ந்து, இங்கே வேண்டாம், உங்கள் வீட்டுக்கே போவோம் என்றேன். அவர், வீட்டில் தனியாகத் தானிருந்தார். அவர் மனைவி இறந்து பல காலமாகிவிட்டது என்று எனக்குத் தெரியும்—என் தாய் சொல்லியிருந்தாள். முதலாளியும் சம்மதித்தார். "ஒரு வாரத்திற்கு உன்னை என் வீட்டை விட்டு வெளியில் விடமாட்டேன்"

https://t.me/tamilpdfebooks



என்றார். நான் சம்மதித்தேன். பிறகு என் தாயிடம் சொல்லிவிட்டு என்னை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அவர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம்; போனதும் போகாததுமாக என்னைப் பள்ளி யறைக்கு இட்டுச் சென்றார். பக்கத்தில் உட்காரச் சொன்னார். நான் அங்கிருந்த மதுவை எடுத்து கோப்பையில் ஊற்றினேன். சோடாவை உடைத்து ஊற்றப் போவதுபோல் பாவனை காட்டிவிட்டு, முழுக்க கலப்பில்லாத மதுவையே ஊற்றினேன். உன் கையாலேயே கொடு" என்றார். கொடுத்தேன், குடித்தார். "அடுத்து என்ன" என்றார். "ஆடு கிறேன்" என்றேன். அவருக்குப் போதையேறும்வரை அருகில் போகக் கூடாது என்று முடிவு கொண்டேன். தாளம் தப்பியே ஆடினேன். சஞ் சலப்பட்ட மனதுக்கு சங்கீதமா பிடிபடும்? பலவந்தமாகப் புன்ன கையை வரவழைத்துக் கொண்டு நான் ஆடினேன். அவர் ஓங்கிச் சிரித்து ரசித்துக் கொண்டிருந்தார்- நேரம் ஆக ஆக, அவர் தலை சுற்ற ஆரம்பித்தது. நா குழறத் தொடங்கிற்று. நான் உடனே அடுப்பங்கரை யைத் தேடி உணவு எடுத்துக் கொண்டு வர ஓடினேன். எடுத்துக் கொண்டு வந்து அவர் எதிரில் வைத்தேன். நிறையச் சாப்பிட்டார். கிழவயது; அதிகமான குடி; அளவுக்கு மீறிய உணவு; என்ன ஆகும்? மயங்கித் தூங்க ஆரம்பித்தார். பலமான குறட்டை—அதைச் சோக இசையாக்கிக் கொண்டு இருள் கப்பிய எனது நெஞ்சம் எண்ணங்களைப் பின்ன ஆரம்பித்தது. தவறான ஒருத்திக்குப் பிறந்த காரணத்தால், குல முறை மாதாக மற்றவர்கள் கண்ணில் படமுடியாமல் போன என் வாழ்வு, உலகம் என்னைப்பற்றிப் போடுகிற கணக்கிற்கே என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுமோ, என்று அஞ்சினேன். நாற்காலியில் சாய்ந்தபடியே பயங்கரச் சுழல்களின் நாலாயிரம் பகுதிகளுக்கும் பறந்து சென்றேன். நாளுக்கொரு கணவன், வேளைக்கொரு விருந்து, ஆளுக்கொரு மாதிரி அபிநயம், தோளுக்குத் தோள் தாவித் தொத்தி... ஐயோ, இன்றைக்கு நினைத்தாலும் அன்றைய நினைவின் பயங்கர எதி ரொலி என்னை வாட்டுகிறது. அவ்வளவு எண்ணினேன். அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியறையில் நடக்க ஆரம்பித்தேன். ஏதோ சிந் தனையில் மாடிப்படிகளில் ஏறினேன். மொட்டை மாடியில் வந்து நின் றேன். வானத்து நிலவும், தாரகையும், ஆடிவந்த இளங்காற்றும் கொதித்திருந்த என் இதயத்தைக் குளிரவைத்தன. கொஞ்ச நேரம் அப் படியே அந்த மாடியில் நின்று கொண்டிருந்தேன். ஒரு சுதந்திரப் பறவையாக, கட்டுப்பாடில்லாத காரிகையாக என் அனுமதியின்றி என்னை யாரும் தொடமுடியாத அளவுக்கு சுயேச்சை உள்ளவளாக, என்னை என் நெஞ்சம் கற்பித்துக் காட்டியது.

ஓரளவுக்கு மனத் தெளிவு பெற்று, மொட்டை மாடியின் கைப் பிடிச் சுவரில் நான் சாய்ந்து கொண்டு நிற்கும்போது, எதிர் மொட்டை மாடியில், யாரோ நடக்கும் சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். பாலன் அங்கே நின்று கொண்டிருந்தார். அவர் எனக்கு அறிமுகமான

https://t.me/tamilpdfebooks



வர் அல்ல. அதனால் நான் பேசாமலிருந்தேன். அந்த நிலவொளியில் என்னை ஊன்றிக் கவனித்தார் அவர். நான் நின்ற இடத்திற்கும் அவர் நின்ற இடத்திற்கும் பத்தடி தூரம் தானிருக்கும். வைத்த கண் வாங்காமல் அவர் என்னைப் பார்த்தார். கடைசியில் "நீங்கள்தானே இன்றைக்கு நாட்டிய அரங்கேற்றம் நடத்தியது" என்று கேட்டார். பத்திரிகைப் பிரதிநிதி என்ற முறையில் அவரும் அரங்கேற்றத்திற்கு வந்திருந்தாராம். நான் "ஆமாம்" என்றேன். "ஆட்டம் நன்றாக இருக்கிறது" என்றார்.அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன். "இங்கேதான் இருக்கிறீர்களா?" என்றார். "இல்லை" என்றேன். "எதற்கு வந்தீர்கள்?" என்றார். "சும்மா" என்றேன். "இது பயங்கரமான இடமாயிற்றே" என்றார். தலையை ஆட்டினேன். "ஐயோ பாவம்" என்றார். "அப்படி ஒன்றும் இல்லை" என்றேன். "இந்த வயதில்கூட அவருக்கு எவ்வளவு ஆசை?" என்றார். நான் பேசாமல் நின்றேன். "நான் அப்பொழுதே நினைத்தேன்" என்றார். அவரென்ன தலைமை தாங்குகிறார் முதலாளி என்றதும் சமுதாயம் முழுவதும் அப்படித்தானே கருதும். களியாட்டத்தில் அவ்வளவு பிரபலமானவராயிற்றே அவர். "நான் அவ்வளவு சுலபமாக ஏமாறமாட்டேன்" என்றேன். அதை நம்பாதவர் போல் அவர் சிரித்தார். எப்படி நம்புவார்? புலிக் கூண்டுக்குள் கறி கிடக்கிறதென்றால் புலி அதை பார்க்கக்கொண்டு வந்திருக்கிறதென்று யார் நம்புவார்? "சரி வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். நானும் நாம் உத்தமி என்பதை நம்மைத் தவிர இனி யாரும் நம்பமாட்டார்கள் என்ற முடிவோடு கீழே இறங்கி வந்தேன். எப்படி நம்புவார்கள்? நம்ப வேண்டுமென்று நாம்தான் எதிர்பார்க்க முடியுமா? உண்டது காபிதான் என்றாலும். உட்கார்ந்திருக்கும் இடம் மதுக்கடை என்றால். ஊதிக் காட்டினால்கூட ஒப்புக்கொள்ள மாட்டார்களே கண்டவர்கள்! நான் மெதுவாக அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தேன். முதலாளி அப்போதுதான் விழித்துத் திரும்பிப் படுத்தார். ஏதோ நினைவுக்கு வந்தவர்போல் திடீரென்று எழுந்தார். கதவைத் தாளிட்டார். "நேரம் பாழாய்ப் போச்சு! வா! வா!" என்றார். எட்டிப் பிடித்தார். என்ன சொல்வேன்! அதுவரை சமாளித்தேன். அதற்குமேல் சாமர்த்தியமாகச் சமாளிக்கக்கூடிய நிலையில் நான் இல்லை. ஆகவே, முதலாளியை விரோதித்துக் கொண்டாலும் கவலையில்லை என்று தீர்மானித்து, அருகிலிருந்த மலர் வைக்கும்—பித்தளைச் சிலையை எடுத்து அவர் தலையில் ஓங்கி அடித்துவிட்டேன். அவர் மூளை குழம்பி, மூச்சையானார். கதவைத் திறந்துகொண்டு நான் வெளியில் ஓடினேன். ஒரு சந்து திரும்பியதும், அடுத்த தெருவில் வாடகைக் கார் ஒன்று நிற்கக் கண்டேன். காரோட்டி, உள்ளே நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். "ஐயா! ஐயா" என்று நான் அவனை எழுப்பினேன். எழுந்த அவன் "புறப்படலாமா?" என்றான். "உம்" என்று, நான் சடாரெனக் காரினுள் ஏறிக்கொண்டேன். அவன் முகத்தைத் துடைத்துக்கொண்டான். சோம்பல்

https://t.me/tamilpdfebooks



முறித்தான்.

"ஆச்சுதா?" என்றுன். நான், "உம்" என்றேன். "நல்லா நடந்து கிட்டாரா?" என்றுன். நான் திகைத்தேன். கார் புறப்பட்டது. போகும் வழியிலே அவன், "வரும்போது கையிலே ஏதாச்சும் பணம் குடுத் தாரா?" என்றுன். எனக்கு ஒன்றும் புரியவில்லே. வாடகைப் பணம் காட்டும் மீட்டரைப் பார்த்தேன். பதினெட்டு ரூபாய்கள் காட்டிக் கொண்டிருந்தது- நான் "நிறுத்து, நிறுத்து" என்றேன். • காரை நிறுத்தினுன். "என்ன இது! பதினெட்டு ரூபாய் காட்டுகிறது?" என் றேன். அவன் திரும்பி என் முகத்தைப் பார்த்துவிட்டு, "சரியாப் போச்சு போ! நீ யாரம்மா எழவு?" என்றுன். அவன் ஏதோ ஒரு பெண்ணேக் கொண்டு வந்து விட்டுவிட்டு, திருப்பிக் கொண்டுபோகக் காத்திருந்தாலும், நான் வந்ததும், அவள்தான் வந்துவிட்டாளென்று காரை எடுத்தாலும்!

"அடடா! அந்தப் பொண்ணு காத்துக்கிட்டிருக்குமே!" என்று கூறியபடி காரைத் திருப்பினுன். பழைய தெருவுக்கு வந்து சேர்ந் தோம். அங்கே அவன் குறிப்பிட்ட பெண்ணும், அவளேக் குத்தகை எடுத்திருந்த ஐயாவும் நின்றபடி காரை எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்கள். அங்கு வந்து, கார் நின்றதும், நான் இறங்கினேன். காரோட்டி யைப் பார்த்து "ஏய்யா! நடுவிலே நீ "டிரிப்" அடிக்கிறியா! இதுக்கும் நாங்கள்தான் பணம் தரணுமா! முடியாது. நான் பதினேந்து ரூபாய் தான் தருவேன்" என்றுர். காரோட்டி, நடந்ததைக் சொல்லிக் கெஞ்சி னுன். அவனிடம் விடைபெற்றுப் போக நான் நின்றுகொண்டிருந்தேன். திடீரென்று என்னேப் பார்த்த அந்த "விஷக்கலே மன்னர்" மெதுவாகக் காரோட்டியிடம் ஏதோ சொன்னுர். அவன் வேகமாக என்னிடம் வந்து. "ஏம்மா! ஐயா பணங் குடுப்பாரு போறியா!" என்றுன்.

"சீச்சீ! நீங்களும் மனிதர்களா! மிருகங்கள்!" என்று கூறிவிட்டு, நான் வேகமாக நடக்க ஆரம்பித்தேன். ஒரு கல் தூரம் வந்திருப் பேன். பின்னுல் கார் வரும் சப்தம் கேட்டது; திரும்பிப் பார்த்தேன். அதே வாடகைக் கார்! நான் சட்டை செய்யாமல் நடந்தேன். அந்தக் காரோட்டி, காரை என் அருகில் கொண்டுவந்து நிறுத்தி, "ஏறும்மா! கொண்டுபோய் விட்டுடறேன்!" என்றுன்.

"ஒன்றும் வேண்டாம். நீ பேசாமற் போ!" என்று அலட்சிய மாகக் கூறிவிட்டு, நடந்தேன். காரிலிருந்த அந்தப் பெண் இறங்கி வந்து, "சும்மா வாம்மா! நமக்குள்ளே என்ன! வா!" என்றுள். நான் கண்டிப்பாக மறுத்துவிட்டேன். அவள் காரில் ஏறிச் சென்றுவிட்டாள். சென்னே நகரில் இந்த வேதனேகள் அதிகம். மனிதன் காதலுக்குக் கொடுக்கும் விளக்கத்தைக் கேட்டுவிட்டு. ஒரு பெண் அவனேத் தனியே சந்தித்தால், அவனது விளக்கமெல்லாம் வெறும் வாயலங்காரம் என்பது தெளிவாகும். இதை அறிந்தே சில பெண்கள் "தொழில்" புரியத் துவங்கிவிடுகிறுர்கள். அந்தப் பெண்களேப் பார்த்துவிட்டு, ஆடவர்கள்,

https://t.me/tamilpdfebooks



எல்லாப் பெண்களுமே அப்படித்தான் என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். அதனால், ஆடவர்களின் பார்வையே முழுக்க உருமாறிக் கிடக்கிறது. நல்ல பெண்கள், அந்த நாகங்களைக் கண்டு நடுங்குகிறார்கள். நான் ஒன்று ஒன்று சொல்வேன். பொதுவாக எல்லாப் பெண்களுக்குமே "ரிவால்வர்" வைத்துக் கொள்ளும் உரிமை கொடுத்துவிட வேண்டும். அவர்கள், எந்த ஆடவரைச் சுட்டாலும் தண்டனை கிடையாது என்று சட்டம் செய்துவிட வேண்டும். "கண்ணடித்தால் காலில் சுடு; கையைப் பிடித்தால் தொடையில் சுடு; கட்டிப் பிடித்தால் மார்பில் சுடு" என்று பாடம் சொல்லித் தரவேண்டும். ஒரு பத்துப்பேர் இப்படிச் சுடப்பட்டால் போதும். பிறகு பெண்கள் பயமின்றித் தெருவில் நடக்கலாம்."

இப்படி அவள் நிறுத்தியதும், சுந்தரம், "அதுவும் நியாயந்தான். உயிருக்கு ஆபத்து என்றால்தான், மனிதன் சில விஷயங்களில் துணியப் பயப்படுகிறான்!" என்றான்.

அம்பிகா தொடர்ந்தாள்:

"வேகமாக நடந்துகொண்டிருந்த நான் அந்த வேகத்திலேயே வீடு போய்ச் சேர்ந்துவிடலாமென்று தொடர்ந்து நடக்க ஆரம்பித்தேன்.

"கொஞ்சதூரம் சென்றதும் ஒரு பயம் என் நெஞ்சைக் கவ்வியது. வீட்டுக்குப் போனதும் தாய்க்கு என்ன பதில் சொல்லுவது? கற்பைக் காத்துக்கொண்டேன் என்று சொல்லுவதா? நான் கண்ணகியின் வம்சா வழியென்று வீர வசனம் பேசுவதா? தகராறு செய்துகொண்டு வீட்டைவிட்டு வெளியேறுவதா? என்றெல்லாம் என் மனம் இருள் அலைகளை எழுப்ப ஆரம்பித்தது. எப்போது ஒரு தாய் தானே மனப்பூர்வமாகத் தன் மகளைப் பலியிடத் துணிந்தாளோ அப்போதே அவளுக்கும் அவள் மகளுக்குமுள்ள பந்தும் அறுந்துவிட்டது. மகள் என்பது, உயிரும் பகுத்தறிவும் உள்ள உருவம் என்பது மறைந்து, விற்கப்படவும், வாங்கப்படவும் கூடிய ஒரு பொருள் என்கிற எண்ணம் ஒரு தாய்க்கு வந்தபிறகு அவளை "அம்மா" என்று அழைப்பதுகூட வெட்கங்கெட்ட செயல். அதற்குமேல் வாதாடுவதும் பாச உணர்ச்சி காட்டுவதும் முழுக்க முழுக்க வீண் வேலை—இப்படிச் சிந்தித்த நான் ஒரு விளக்கின் அடியில் நின்றேன்.

"என் மூளை குழம்பியது. ஊரிலே அனாதைகள், ஆதரவற்றவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள்கூட தங்களுக்கென ஒரு ஒதுக்கிடத்தைத் தேடி உறங்கிக்கொண்டிருக்கும் வேளையில் சீரும் சிறப்புமாக வளர்க்கப்பட்ட நான், தெரு விளக்கினடியில் நின்றுகொண்டிருந்தேன். எதிர் தெரு மேடையில் வரிசையாகத் தொழிலாளர் குடும்பங்கள் தூங்கிக்கொண்டிருந்தன. வேறு நேரமாயிருந்தால் பாவம் இந்தத் தொழிலாளர் என்று பரிதாபப்பட்டிருப்பேன். ஆனால், அப்போது நானிருந்த நிலையைக் காட்டிலும் அந்தத் தொழிலாளர்களின்

https://t.me/tamilpdfebooks



நிலை மிக உயர்ந்ததாகத் தோன்றிற்று, எனக்கு. நிம்மதி! மனிதன் சுற்றி அலைவதும் சொத்துத் தேடுவதும் அதற்காகத்தானே! "கோடி ரூபாய் தருகிறேன். உன் நிம்மதியை எனக்குக் கொடுத்துவிடு" என்று கேட்டால் ஓடி விடுவானே மனிதன். ஆம், வாழ்க்கையின் மூலாதாரமே நிம்மதி தான். எனக்கு மட்டுமல்ல; இந்தச் சமுதாய அமைப்பில் எந்தப் பெண்ணுக்குமே அது இல்லை. இதய ஆசைகளிலிருந்து இறைச்சி ஆசைக்குத் தாவிக்கொண்டிருக்கிறது, நமது சமுதாயம். பணக்காரர் களுக்குக் கற்புத் தேவையில்லை. அனாதைகளின் கற்புக்கு மரியாதை இல்லை. அவர்கள் தெரு மேடையில்தான் இல்லற இன்பம் காண்கிறார் கள். உலக நாடுகள் எதிலேயும் இல்லாத இந்த இழிந்த தன்மை இன்று நமது நாட்டின் ஏகபோக உரிமை. "கற்புக்கரசி கண்ணகி பிறந்த நாடு, கனகவிசயன் தலையிலே கல்லேற்றிக் கொண்டு வந்த நாடு. மானம் ஒன்றே பெரிதென வாழ்ந்த மறவேந்தர் நாடு. மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்..." அடாடா நாம் சொல்லிக் கொண்டிருப்பதற்கு முன்னோர்கள் தந்துவிட்டுப் போன வார்த்தைகளைப் போல உலகத்தில் வேறு யாருக்கும் வார்த்தைகளில்லை. ஆனால், அவர்கள் எல்லோருமே நம்மைக் காட்டிலும் மானத்தோடு வாழ்கிறார்கள்—நான் எங்கேயோ போகிறேன். ஆம், அன்றைய நிகழ்ச்சியை நான் சொல்லத் துவங்கும் போது இதுபோன்ற எண்ணங்கள்தான் என் இதயத்தைத் தாக்குகின் றன. சிறிது நேரம் அங்கேயே குழம்பிக் கொண்டிருந்த நான் பழையபடி தொடர்ந்து நடக்க ஆரம்பித்தேன். சிந்தனை குழம்பும்போது நின்றும், தெளியும்போது நடந்தும் என் கால்கள் சென்றுகொண்டிருந்தன. வீட் டுக்குப் போகவில்லை. நேராக மெரினா பீச்சுக்கு வந்து சேர்ந்தேன். சென்னையிலே பலகாலம் இருந்தும் அன்றைக்குத்தான் மெரீனா பீச்சில் ஒரு வேடிக்கையைக் கண்டேன். தெரு மேடைகளில் தூங்குகிறவர் களுக்கு நாங்கள் இளைத்தவர்கள் அல்ல என்பது போல அங்கேயும் பல பேர் தூங்கிக்கொண்டிருந்தார்கள். நம்மைவிட அதிகமாகக் கஷ்டப் படுகிறவர்கள் நாலாயிரம், பதினாயிரம் என்று என்னையே நான் திருப்திப் படுத்திக்கொள்ள முயற்சித்தேன். கடற்கரையில் இருந்த சிமிண்ட் நாற்காலியில் சாய்ந்தேன். உடலுக்குக் கொஞ்சம் ஒய்வு, கண்களை மூடினேன்.

"பொழுது விடிந்தது. மனித நடமாட்டம் தொடங்கியது. ரோமா புரி வரை போய் வியாபாரம் செய்தவர்களின் பரம்பரையினர் கடற் கரைத் தூக்கத்தை முடித்துக்கொண்டு தாங்களும் நடக்க ஆரம்பித்த னர். நானும், அங்கிருப்பது சரியல்ல என்றெண்ணி எழுந்து நடந்தேன். ராணிமேரி கல்லூரி விடுதியருகில் வந்தேன். அங்கே சில பெண்கள் அப்போதுதான் எழுந்து பல் துலக்கிக் கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் ஒரு பெண் "இவள்தான் அன்று ஆடியது" என்றாள். எனக்கு என்னவோ போலிருந்தது. அன்று ஆட்டத்திற்கு அவளும் வந்திருந்தாள் போலிருக்கிறது. நான் அவளைப் பார்த்துச் சிரித்து

https://t.me/tamilpdfebooks



வணங்கினேன். அவளும் வணங்கி என்னை அழைத்தாள். அருகில் சென்றேன். விடுதிக்குள் கூட்டிக்கொண்டு போனாள். தோழிகளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். என் ஆட்டத்தைப் பாராட்டினாள். பாராட்டுதலைக் கேட்டு ரசிக்கும் மன நிலையா எனக்கிருந்தது! வேண்டாத நண்பருக்கு வணக்கம் செலுத்தும்போது சிரிக்கும் அசட்டுச் சிரிப்பை அந்த நேரம் வெளிப்படுத்தி வைத்தேன். "அதிகாலையில் இப்படி எங்கே போய் வருகிறீர்கள்?" என்று கேட்டாள். அவசரத்தில் சொல்லக்கூடிய கதையா அது! "அது ஒரு சம்பூர்ண ராமாயணம்" என்றேன். அவள் திகைத்தாள். உடனே நான் "ஏன் அந்த வார்த்தையைச் சொன்னோம்" என்று வருந்தினேன். அதன் பயனாக நான் முழுக் கதையையும் சொல்ல அவசியம் ஏற்பட்டுவிட்டது. எப்படியோ விக்கி, விம்மி, திக்கித் திணறி, சொல்லி முடித்தேன். அந்தப் பெண்கள் எல்லோருமே எனக்காகப் பரிதாபப்பட்டார்கள்.

"அதில் ஒருத்தி மிகவும் அனுதாபத்தோடு, "நீ எங்களுடனேயே இருந்துவிடு. எங்களோடு படிக்கிறவர்களில் ஒருத்தி தியாகராய நகரில் இருக்கிறாள். அவள் வீட்டிலேயே நீ தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றாள். நான் சம்மதித்தேன். பிறகு பலகாரம் கொண்டு வந்தார்கள். சாப்பிட்டேன். சாப்பிட்டு முடிந்ததும் அந்தப் பெண் ஒரு வாடகைக் கார் கொண்டு வந்தாள். இருவரும் தியாகராய நகருக்கு வந்தோம். கார் திரும்பத் திரும்ப, என் மனத்திலே பயம் அதிகரித்தது. கடைசியாக ஒரு தெருவுக்கு வந்ததும் என் உயிரே நின்றுவிடும் போலிருந்தது. ஆம்; எங்கள் தெருவேதான் அது. சரியாக எங்கள் வீட்டுக்கு மூன்றாவது வீட்டினருகில் காரை நிறுத்தினாள். நான் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே மெதுவாக இறங்கி அவள் பின்னால் உள்ளே சென்றேன், அந்த வீட்டில் அந்தப் பெண் மட்டும் தனியாக இருந்தாள். அவளிடத்தில் என்கூட வந்த பெண் என்னை அறிமுகப்படுத்தினாள். உடனே என்னைப் புரிந்துகொண்டவளைப் போல அவள் சிரித்தாள். "மூன்றாவது வீட்டுச் சினிமாக்காரி மகள். தெரியாமலா இருக்கும்?" என்றாள். பிறகு, நானும் பல விபரங்களை அவளோடு பரிமாறிக்கொண்டு எதுவும் வெளியில் தெரியக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டேன் அவளும் அதற்குச் சம்மதித்தாள். அன்று முதல் என் சிறை வாழ்க்கை தொடங்கிற்று. பிறகு அந்தப் பெண்கள் எல்லோரும் கல்லூரிக்குச் சென்றுவிட்டார்கள். கதவைத் தாளிட்டுக்கொண்டு நான் நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தேன். நிம்மதி! அது கொஞ்சநேரம் எனக்கும் கிடைத்துவிட்டது. நன்றாகத் தூங்கினேன்.

நடுப்பகலில் கண்விழித்தேன். முகத்தை அலம்பிவிட்டு தற்செயலாகச் சன்னல் வெளியே எட்டிப் பார்த்தேன். அங்கே...தெருவில் பாலன் போய்க் கொண்டிருந்தார். மெதுவாக அவரைக் கைகாட்டி அழைத்தேன். கதவைத் திறந்தேன். அவர் உள்ளே வந்தார். "எங்கிருந்து வருகிறீர்கள்" என்று விசாரித்தேன். என் வீட்டிற்குத்தான் போய்

https://t.me/tamilpdfebooks



வந்தாராம். அங்கே என் தாய்க்கும் முதலாளிக்கும் பெரிய சண்டை என்று சொன்னார். வேறு என்ன நடக்கும் கிளி பறந்து போய்விட்டால் கூண்டைப்போட்டு உடைக்கிறான் மனிதன். பாலன் என்னைப் பற்றியும் விசாரிக்க ஆரம்பித்தார். எத்தனை பேரிடம்தான் கதையைச் சொல்லிக் கொண்டிருப்பது எழுதியே கொடுத்துவிடலாமா என்றுகூடத் தோன்றிற்று எனக்கு. நான் ஒரு வழியாகச் சொல்லி முடித்தேன். நா வரண்டது. தண்ணீர் குடிக்க எழுந்து சென்றேன். நாற்காலியிலிருந்த கண்ணாடிக் கோப்பையை எடுத்தபோது குப்புறக் கவிழ்ந்து கிடந்த புகைப்படம் ஒன்று திரும்பி விழுந்தது. கவனித்தேன். என்ன ஆச்சரியம்? எந்த முதலாளி என்னை வேட்கை தணிக்கும் பாத்திரமாக மாற்ற விரும்பினாரோ, அதே முதலாளியின் படம்தான் அது! அதில் அவர் மட்டுமா இருந்தார்? அவர் மடியில் சாய்ந்தபடி, நான் தங்கியிருந்த வீட்டுப் பெண்ணும் இருந்தாள்! ஒரு மாணவி—காலம் போன கட்டையின் மடியில்! நான், கல்லூரி விடுதி மாணவிகளிடம் அந்த முதலாளியின் பெயரைச் சொல்லியிருந்தேனே தவிர, இவளிடம் சொல்லவில்லை. பொதுவாக ஒரு முதலாளி என்றே சொன்னேன்— சொல்லியிருந்தால் ஒரு வேளை அவளது கதையையும் கேட்டிருக்கலாம். அல்லது, அவருக்காகப் பரிந்து கொண்டு அவள் எனக்கு இடம் கொடுக்க மறுத்தும் இருக்கலாம். விரக்தி கலந்த சிரிப்பொன்றை வீசிவிட்டு, நான் அந்தப் படத்தை மேலாடைக்குள் வைத்துக்கொண்டு பாலனிடம் வந்தேன்.

"என்ன அது?" என்றார் பாலன். "ஒன்றுமில்லை!" என்று கூறிவிட்டு அமர்ந்தேன். எனக்காக அவர் மிகவும் வருந்தினார். ஒரு இதயத்தை இன்னொரு இதயம் விசிறிக் கொடுத்தால் சூடு தணிகிறது. காற்றாடி காற்றில்தான் பறக்கிறது என்றாலும் கயிறு அதைக் கட்டுப்படுத்துவதால்தானே பறப்பதில்கூட ஒரு அழகு ஏற்படுகிறது. பிறரது வேதனைகளைப் பரிமாறிக் கொள்ளும் பாச உள்ளம், அந்த வேதனையையே ஒரு விநோதமான ஆனந்தமாக மாற்றிவிடுகிறது. பாலன் என்னிடம் காட்டிய அன்புக்கு என் உள்ளம் இளகிக் கொடுத்தது. பேச்சின் இடையே ஒவ்வொரு சமயம் நான் கண்ணீர் விட்டு அழுதபோது "அழாதே அம்மா" என்று ஆறுதல் கூறிய அவர் ஒரு தடவை தன் கைக்குட்டையால் என் கண்ணீரைத் துடைத்தும் விட்டார். என் மேனி சிலிர்த்தது. அந்த நேரத்தில் அவர் எனக்கு எந்த யோசனை சொன்னாலும் ஏற்பதற்குத் தயாராக இருந்தேன். முழு ரகசியங்களையும் எல்லோரிடமும் பரிமாறிக்கொள்ள முடியாது. அந்த ரகசியங்களுக்குச் சரியான இடம் கொடுத்து ஆராயும் பண்புள்ளவர்களோடு மட்டுமே பரிமாறிக் கொள்ள முடியும். பாலன் அதற்கு ஏற்றவர் என்று சில விநாடிகளிலேயே என் மனம் தீர்மானித்துக் கொண்டது. கூச்சமின்றி எல்லாவற்றையும் அவரிடம் சொன்னேன். அதோடு வாழ்வில் என் ஆசையையும் சொல்லி வைத்தேன்.

"நீ என்னோடு வந்துவிடு, யாருக்கும் தெரியாத ஒரு இடமாகப்

https://t.me/tamilpdfebooks



பார்த்து தங்கிக் கொள்ளலாம். உன்னை நான் காப்பாற்றுகிறேன்" என்றார். நான் சிறிதுகூடத் தயக்கமின்றிச் சரி என்றேன் அந்தப் பெண் வந்ததும் சொல்லிவிட்டுப் போய்விடுவது என்றும் முடிவுகட்டிக் கொண்டேன். அப்போது கதவு தட்டப்பட்டது. எழுந்துபோய்த் திறந்தேன். அந்தப் பெண்தான் வந்திருந்தாள். வீட்டிற்குள் பாலன் இருப்பதையும் அவள் வந்திருந்த சமயத்தில் கதவு தாளிடப்பட்டிருந்ததையும் ஒன்று கூட்டி கணக்குப் போட்டோ என்னவோ, அவள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். நான் பளிச்சென்று பாலனை அவளுக்கு அறிமுகப் படுத்தி வைத்தேன்; எங்கள் குடும்ப நண்பர் என்றும் சொல்லி வைத்தேன். அவள் அதைச் சாதாரணமாக வாங்கிக் கொண்டாள். நம்பிக்கையில்லாதவள் போல். நான் பாலனோடு செல்லப் போவதைப்பற்றி அவளிடம் கூறினேன். அவள் சிரித்தபடியே, "எப்படியோ சந்தோசமாக இருந்தால் சரிதான்" என்றாள். ஆம், அவள் முடிவான கணக்கே போட்டுவிட்டாள்.

"நான் புறப்படுவதற்காகத் திரும்பினேன். பாலன் என்னைக் கொஞ்சம் உட்காரச் சொல்லிவிட்டு தான் கார் கொண்டு வருவதாகச் சொல்லிச் சென்றுவிட்டார். திடீரென்று நான் எதிர்பாராத விதமாக சினிமாக் கம்பெனி முதலாளி உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டதும் என் இதயம் நடுங்க ஆரம்பித்தது. அவரும் கோபத்தில் குதிக்க ஆரம்பித்தார். அந்தப் பெண் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டு நின்றாள். முதலாளி வெறிபிடித்தவர் போலக் கதவைத் தாளிட்டார். "இன்றைக்கு உன்னைக் கெடுப்பதுதான் என் வேலை" என்றார். எட்டிப்பிடித்தார்; கட்டியணைத்தார். நான் திமிறினேன். என்னைத் திமிறவிடாமல் அந்தப் பெண், முதலாளிக்கு ஒத்தாசை புரிந்தாள்! நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! உண்மை இது. அவ்வளவு கேவலமான ஒரு பெண் பிறவியையும் நான் வாழ்க்கையில் அன்று சந்தித்தேன். என்ன, ஏது என்று புரியாமலேயே என்னைக் கெடுப்பதற்கு முதலாளிக்குத் துணைபுரிய ஆரம்பித்தாள் அவள்! திடீரென்று வாசலிலே கார் வந்து நின்றது. நான் யூகமாக "போலீஸ்! போலீஸ்!" என்று கத்தினேன். முதலாளி திகைத்துப் பிடிப்பைத் தளர்த்தினார்; ஓடிப்போய்க் கதவைத் திறந்தேன். பாலன் உள்ளே நுழைந்தார். என் அலங்கோல நிலையைக் கண்டார். பளிச்சென்று முதலாளியின் சட்டையைப் பிடித்துக்கொண்டு கன்னத்தில் மாறி மாறி அறைந்தார். உதவிக்கு ஓடிவந்த அந்தப் பெண்ணை நானும் ஆத்திரம் தீர அறைந்தேன். அறைந்துவிட்டு வேகமாக ஓடிப்போய்க் காரில் ஏறிக்கொண்டேன். பாலனும் வந்து ஏறிக் கொண்டார். அங்கிருந்து புறப்பட்டு நேரே பழைய வண்ணாரப்பேட்டைக்கு வந்து சேர்ந்தோம். அங்கே ஒரு நண்பர் வீட்டில் என்னைத் தங்க வைத்தார். அந்த நண்பரின் மனைவி என்னிடம் அளவு கடந்த அன்பு காட்டினாள். அவர்கள் வீட்டு மாடியில் தனியாக ஒரு அறைமட்டுமிருந்தது. அதை எனக்கு ஒதுக்கிக் கொடுத்தார்கள். நான் அதில் தங்கிக் கொண்டேன். பாலன்

https://t.me/tamilpdfebooks



ஆபிசுக்குப் போய்விட்டு நேரே அங்கு வந்துவிடுவார். வெகு நேரம் வரை பேசிக் கொண்டிருப்போம். இப்படியே இரண்டு நாட்கள் கழிந்தன. அந்த இரண்டு நாட்களிலும் பாலன் மீது எனக்கு அளவு கடந்த அன்பு ஏற்பட்டிருந்தது. வெட்கத்தைவிட்டுச் சொல்கிறேன். அவர் பிரிந்து சென்றதும் இரவெல்லாம் அமைதி இழந்து தவிப்பேன். மூன்ரும் நாள் மாலையில் வழக்கம்போல் அவர் வந்தார். பேசிக் கொண்டிருந்தோம். என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகச் சொன்னார். நான் விரும்பியதும் அதுதானே! பூரித்து, சம்மதித்தேன். அந்த நேரத்தில் அவர் உணர்ச்சி வசப்பட்டதும் உண்மை. தனிமையில் ஒரு ஆணும் பெண்ணும் சந்தித்து அதிக நேரம் அளவளாவச் சந்தர்ப்பம் கிடைத்தால்...யார் மனதுதான் உணர்ச்சி வசப்படாது! பாலன் என்னை அருகில் இழுத்துக் கொண்டார். ஆம்...ஆம்...முத்தமிட்டார். உடனே எழுந்து போய் விட்டார்".

இந்த இடத்தில் சுந்தரம், இந்த வார்த்தைகளை எதிர்பாராதவன் போலவும், விரும்பாதவன் போலவும் முகத்தைச் சுளித்து, "அவர் தொடவுமில்லை; நான் கெடவுமில்லை என்றீர்களே!" என்று கேட்டான். "ஆம்! தொடவில்லை என்பதில் நான் குறிப்பிட்ட பொருள் வேறு!" என்று கூறிவிட்டுத் தலைகுனிந்த அம்பிகா மீண்டும் தொடர்ந்தாள்:

"இப்படி வளர்ந்தது எங்கள் அன்பு. மறுநாள் காலை, சுமார் எட்டு மணி இருக்கும். என் தாய், பாலன் இரண்டு பேரும் வந்தார்கள். முதலாளி, தாய்க்குச் சொல்லி அனுப்பியிருக்கிருர்; அதனுல்தான் பாலனைக் கூட்டிக்கொண்டு வருகிருள் என்பதை நான் உடனே தெரிந்து கொண்டேன். பாலனிடம் என் தாய் மிகவும் சமாதானமாகப் பேசிக் கெஞ்சினுளாம். பாலன் சம்மதித்து என்னை அனுப்ப வந்தாராம்! நான் தாயுடன் சென்றேன்—பாலன் விருப்பப்படி.

"எங்கள் வீட்டில் இருக்கும் போதும் பாலன் அடிக்கடி வருவார்; சந்தித்துப் பேசுவார். எப்படியும் ஒரு நாள், திருமணத்தை முடித்துவிடுவது என்று முடிவுகட்டிக் கொண்டிருந்தோம்! "நாட்டியக் கச்சேரி"களுக்கு மட்டும் என் சம்மதம் பெற்று என் தாய் ஏற்பாடு செய்து வந்தாள். "எனக்கு அவர்தான்—அவருக்கு நான்தான்" என்று பாலனைப் பற்றி, என் தாயிடமே நான் கூறிவிட்டேன். இந்த நிலையில் திடீரென்று, என்னிடம்கூடச் சொல்லாமல் பாலன், ஊருக்குப் புறப்பட்டுப் போய் விட்டார். நான் திகைத்தேன்; அழுதேன். விஷயத்தை அறிந்த தாய் போதனை செய்ய ஆரம்பித்தாள். "இதுதானடி உலகம் பேசாமல், தொழிலில் இறங்கிவிடு. உல்லாசமாக வாழலாம்" என்று ஆசைகாட்டத் துவங்கினுள். மைனர்களைக் கூட்டி வந்து, மயங்க வைக்கத் திட்டமிட்டாள். சிலரைக் கூட்டியும் வந்தாள். அவர்களில் ஒருவன், என்னைப் பல

https://t.me/tamilpdfebooks



‘‘அவர் தொடவும் இல்லே. நான் கெடவும் இல்லே.’’

வந்தமாகப் பிடித்து இழுத்து, கடித்து, ஆடையைக் கூடக் கிழித்துவிட்டான். "இனி இருந்தால் மானத்தோடு வாழமுடியாது!" என்று கருதி, நான் புறப்பட்டேன். பாலன், முன்பே தன் சொந்த ஊர்பற்றி என்னிடம் கூறியிருந்தார். ஆகவே சுலபத்தில் மேலைச்சிவபுரி வந்தேன். திருமணத்திற்குப் புதுக்கோட்டைக்குப் போயிருப்பதாகத் தெரிந்து கொண்டேன். பாலனுக்குத் திருமணம்! பின்பு எதற்காக நான் வாழவேண்டும்? அதனால்தான் தற்கொலை செய்து கொள்ளக் கார் முன்பு விழுந்தேன். வீழும்போது, அந்தக் கார் உங்கள் காராகவே இருக்குமென்று நான் கருதவே இல்லை! பிறகு நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே!"

இவ்வாறு அம்பிகா தன் வரலாற்றை முடித்தாள். சுந்தரம் பெருமூச்சிவிட்டான். பொழுது "பொபொல"வென்று விடிய ஆரம்பித்தது. அந்து மங்கிய இளங்காலை நேரம்- இருவர் மனத்திலும் புத்துணர்ச்சியை எழுப்பிற்று. புகைவண்டி, கடகடவென்று பறந்து கொண்டிருந்தது. தாம்பரத்தைத் தாண்டிவிட்டால், புகைவண்டிக்கு வெறியே பிடித்துவிடும், எழும்பூர் வரும்வரை! எழும்பூரில் வண்டி வந்து நின்றது. கைதிகளாகவே சுந்தரமும் அம்பிகாவும் இறக்கப்பட்டார்கள். சுந்தரம், துடிதுடிக்கும் மனத்தோடு, யார் இன்னொரு கைதி என்று திரும்பிப் பார்த்தான். பாலன்! பாலனேதான். சுந்தரத்திற்கு நா எழவில்லை. திணறி, "பாலன்!" என்று கத்தினான். பாலன் திரும்பிப்பார்த்தான், "சுந்தரம்" என்றான். நாக்குழற! அம்பிகா பித்துப் பிடித்தவள் போல் நின்றாள். போலீசார் பாலனை இழுத்துக்கொண்டே வெளிப்புறம் சென்று விட்டார்கள். சுந்தரம்கூட வந்த போலீஸ்காரரில் ஒருவர் ஆச்சரியமாக, "அவர் பேரும் பாலன்தானா சார்!" என்றார். சுந்தரம் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். பிறகு, சுந்தரமும் அம்பிகாவும் பஸ்சில் ஏற்றப்பட்டு, தியாகராயநகர் போலீஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். பாலனை எங்கே கொண்டு சென்றார்கள் என்பதை அறிய முடியவில்லையே எனச் சுந்தரமும் கவலையில் மூழ்கினான். அம்பிகா தேறுதல் கூறினாள்.

# 5

சிறிது நேரம் சென்றது. வாசலிலே போலீஸ் வண்டி ஒன்று வந்து நின்றது. போலீஸ் நிலையத்துக்கு சாதாரணமாகவே வண்டி வரும் போகும் என்று எண்ணி சுந்தரம் அலட்சியமாக இருந்தான். ஆனால், ஒருவேளை பாலன் அதில் வரலாமென்று அம்பிகா கூர்ந்து கவனித்தாள். அவள் எதிர்பார்த்தது போலவே பாலன் அதிலிருந்து இறக்கப்பட்டான். அம்பிகா சுந்தரத்திடம், "அதோ, பாலன்" என்றாள். பாலன் உள்ளே கொண்டுவரப்பட்டான். அவன் முகம் வாடி இருந்தது.

https://t.me/tamilpdfebooks



விரக்தியடைந்த நிலையில் காணப்பட்டான். சுந்தரம், அவன் எப்படிக் கைது செய்யப்பட்டான் என்பதை அறியத் துடித்தான். பாலனும் சுந்தரத்திடம் அதையே கேட்க விரும்பியவனுகக் காணப்பட்டான். முதலில் பாலனே துவங்கினுன்.

"உன்னை எதற்காகக் கைது செய்தார்கள்?"

சுந்தரம் சிரித்து, "நீதான் நானென்று நினைத்து" என்ருன்.

போலீஸ் இன்ஸ்பெக்டர்களும் மற்றவர்களும் ஒரே வழக்கில் இருவர் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து குழப்பத்தோடு வாதாடிக் கொண்டிருந்தார்கள். பாலன் சுந்தரத்தினருகிலேயே உட்கார வைக்கப் பட்டான். இருவரும் மெதுவாக நடந்த நிகழ்ச்சிகளைப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். அம்பிகா அதைக் கவனித்தும் கவனிக்காதவள் போலிருந்தாள். பாலன் அம்பிகாவின் முகத்தைப் பார்க்கவே வெட்கப் பட்டான். அப்போது அவர்கள் சற்றும் எதிர்பாராதவிதமாக அம்பிகா வின் தாயார் ரெங்கலெட்சுமி அங்கு கொண்டு வரப்பட்டாள். அம்பிகா அவளை எரித்துவிடுபவளைப்போலப் பார்த்தாள். ரெங்கலெட்சுமியும் பழிதீர்த்துக் கொண்ட பெருமையோடு பாலனையும் அம்பிகாவையும் மாறிமாறிப் பார்த்தாள். பாலன் சுந்தரத்திடம் மெதுவாக, "இதுதான் அம்பிகாவின் தாய்" என்ருன். சுந்தரம் அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு அம்பிகாவைப் பார்த்து மெல்லச் சிரித்தான்.

ரெங்கலெட்சுமியிடம் இன்ஸ்பெக்டர் அம்பிகாவைக் காட்டி, "இதுதானே உங்க பொண்ணு?" என்று கேட்டார். ரெங்கலெட்சுமி "ஆமாம்" என்ருள். பிறகு பாலன் சுந்தரம் இருவரையும் காட்டி, "இந்த ரெண்டுபேருலே கடத்திக்கிட்டுப்போன ஆசாமி யாரு?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர். ரெங்கலெட்சுமி பாலனைக் காட்டி, "இவன் தான்" என்ருள். இன்ஸ்பெக்டர் ஒரு பேப்பரில் ஏதோ எழுதி ரெங்க லெட்சுமியிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார். சுந்தரத்தைக் கூப் பிட்டு, "உங்கபேரும் பாலன்தானு?" என்று கேட்டார். இனிப் பொய் சொன்னுலும் பயனில்லை. பாலனுக்கு உதவ முடியாது என்று கருதிய சுந்தரம், "இல்லை, என் பெயர் சுந்தரம்" என்ருன். "பின்னே ஏய்யா பொய் சொல்றீங்க? அதனுல்தானே அனுவசியமா உங்களுக்கும் தொல்லை, எங்களுக்கும் தொல்லை! ஒருவேளை நண்பரைக் காப்பாத்து வதற்காகச் சரடு விட்டீங்களோ? இந்தச் சரடு எங்காவது நிலைக் குமா? இது கோர்ட்டு விவகாரமய்யா! இதே பொய், வழக்குக்குப் பிரதிகூலமா அமைந்திருந்தா உங்கமேலே தனியாக ஒரு கேஸ் போட வேண்டியிருக்கும். நண்பன் பாசமெல்லாம் வெளியிலே வச்சுக்கணும். கோர்ட்டு போலீசு இதிலேயெல்லாம் காட்ட ஆரம்பிச் சுட்டீங்கன்ன ரொம்ப அவஸ்தைப் படுவீங்க. சரி சரி, போங்க; உங் களை விடுதலைபண்ணியிருக்கேன்." என்ருர் இன்ஸ்பெக்டர். சுந்தரம் சிரித்தான். வேறு என்ன செய்ய முடியும்? இதயமிருந்தால் நியாயம்

https://t.me/tamilpdfebooks



வழங்க முடியாது என்பதற்காகத்தானே சட்டம் இதயத்தை மூடிவிட்டுத் துலாக்கோலை மட்டும் கையில் வைத்துக் கொண்டிருக்கிறது! பிறகு இன்ஸ்பெக்டர் அம்பிகாவை அழைத்து ஒரு காகிதத்தில் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டு அவளையும் விடுதலை செய்தார். "சமன் வரும், கோர்ட்டிலே ஆஜராகணும்" என்றும் ரத்தினச் சுருக்கமாகச் சொல்லி வைத்தார்.

பாலன் தன்னையும் விடுதலை செய்துவிட்டுச் சமன் அனுப்புவார்கள் என்று எதிர்பார்த்தான். ஆனால், இன்ஸ்பெக்டர் போலீஸ்காரர்களைப் பார்த்து, "இவரை லாக்கப்பில் போடுங்கள்" என்றார். அம்பிகா பதறினாள். "பாலன்!" என்று கதறிவிட்டாள். சுந்தரத்தின் கண்களிலே நீர் ததும்பியது. பாலன் தன்னை அறியாமலேயே அழ ஆரம்பித்தான். அந்தக் கண்ணீர் மேலும் சுந்தரத்தைப் பிழிந்தெடுத்தது. அவன் மனக் கண் முன்பு கதறி அழும் கோலத்தில் இந்திரா தோன்றினாள்- சுந்தரம் குழந்தை போல் தேம்பி அழ ஆரம்பித்தான். அம்பிகா இதயத்தைக் கைகளால் சமாதானப்படுத்துபவள் போல கைகளை மூடி மார்பில் சேர்த்தவாறு கதறினாள். இன்ஸ்பெக்டர் சுந்தரத்தைப் பார்த்து, "படிச்சவங்க இப்படி அழலாமா?" என்றார். ஏதோ நிறையப் படித்தவர்கள், இயற்கை உணர்ச்சிகளிலிருந்து தப்பித்துக் கொண்டு ஆதிமனிதத் தன்மைக்கே போய்விடுகிறார்கள் என்று சிலர் கணக்குப் போடுகிறார்கள். துன்பத்தைத் தீர்க்க வழி சொல்பவனெல்லாம் துன்பமில்லாமலா இருக்கிறான்! "சாதாரணமாக நினைத்துவிடு" என்று போதிக்கிற தத்துவ ஞானிகூட, வந்த துன்பத்தில் ஒரு கால்மணி நேரமாவது உழன்று விட்டுத்தான் மீள்கிறானே தவிர, அது வராமலே தடுத்து நிறுத்த முடியவில்லை. சுந்தரமும் சராசரி மனிதன்தான். சொல்லப் போனால் சராசரி மனிதர்களிலே படிக்காதவர்களைக் காட்டிலும் படித்தவர்கள் தான் பலவீன இதயங்கொண்டவர்களாக இருக்கிறார்கள். காரணம், துன்பம் எப்படி வருகிறது என்பதைப் படித்துவிட்டு அவர்கள் துன்பப் படுகிறார்கள். பின்பு அதை எப்படித் தீர்ப்பது என்பதைப் படித்துவிட்டுத் தீர்த்துக் கொள்கிறார்கள். காலிலே புண் வந்துவிட்டது என்றால் படித்துவிட்ட சிந்தனையாளன் அந்தப் புண்ணை மட்டும் பார்ப்பதில்லை. அதற்குமேல் கற்பனைகளையும் அடுக்குகிறான். அந்தப் புண் சீழ் பிடிப்பது போலவும், பிடித்து உடம்பு முழுவதும் பரவுவது போலவும், அதில் தான் மடிந்து விடுவது போலவும் காரண காரியங்களை உண்டாக்கிக் கொண்டு கற்பனைகளை வளர்த்து அதிர்ச்சியடைகிறான். சிந்தனையில்லாத மனிதன்தான் தன் வரைக்குச் சிரித்து வாழத் தெரிந்தவன். இன்ஸ்பெக்டரின் கேள்விக்கு சுந்தரம் பதில் சொல்லவில்லை. ஆனால், அவன் இதயம் என்னவோ "உனக்கு இதுமாதிரி நேர்ந்தால் தெரியும்" என்று சொல்லிக் கொண்டிருந்தது.

சுந்தரம் பாலனின் அருகில் சென்று, "மீண்டும் வந்து பார்க்கிறேன். கவலைப்படாதே! நானிருந்து எல்லாவற்றையும் கவனிக்

https://t.me/tamilpdfebooks



கிறேன்" என்று கூறிவிட்டுத் திரும்பினுன். அம்பிகா—கண்ணீர் அருவியாகின்ற அவள் பாலனின் காலைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு சுந்தரத்தைப் பின் தொடர்ந்தாள். இதையெல்லாம் கவனித்துக்கொண்டு அதுவரை அங்கேயே நின்று கொண்டிருந்த ரெங்கலெட்சுமி படக்கென்று அம்பிகாவின் கையைப்பற்றி இழுத்து, "வாடி வீட்டுக்கு!" என்ருள். அம்பிகா கையை உதறிக்கொண்டு "அடி சண்டாளி! நீ எனக்குத் தாயுமல்ல, நான் உனக்கு மகளுமல்ல. பேசாமல் போ!" என்ருள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் அம்பிகாவிடம் வந்து, "உன்னை உன் தாயிடம் ஒப்படைத்திருக்கிறேன். நீ மைனர்ப் பெண். போ உன் தாயோடு!" என்று கூறிவிட்டு ஒரு போலீஸ் காரரையும் துணைக்கு அனுப்பினுர். சுந்தரத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்தபடி அம்பிகா போலீஸ் வண்டியில் ஏறினுள். வண்டி புறப்படுவதற்கு முன் அம்பிகா பலமாகத் தன் வீட்டு விலாசத்தைக் கூறினுள். சுந்தரம் அதைக் கவனிக்கவில்லை. அவன் அசையாமல் நின்று கொண்டிருந்தான். அவனைப் பிழிந்தெடுத்தது இன்ஸ்பெக்டர் சொன்ன ஒரு வார்த்தை. "அம்பிகா மைனர்ப் பெண்", "கடத்தல் வழக்கு பாலன் மீது!"—இதை நினைத்ததும் அவன் ஆவி பிரிந்துவிடும் போலிருந்தது. பைத்தியம் பிடித்தவன் போல் ஓடி ஒரு வாடகைக்காரில் ஏறிக்கொண்டு ஒரு ஓட்டலில் போய் இறங்கினுன். ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். அறைக்கதவைத் தாளிட்டுவிட்டு படுக்கையில் சாய்ந்து விம்மி விம்மி அழுதான்," அப்பாடா! நிறைய அழுதுவிட்டால் எவ்வளவு நிம்மதி ஏற்படுகிறது!" சிறிது நேரத்திற்கெல்லாம் எழுந்து முகம் அலம்பிவிட்டு அங்கிருந்த டெலிபோன் மூலமாக இரண்டு தந்திகள் கொடுத்தான். ஒன்று புதுக்கோட்டைக்கு; மற்ருென்று மேலைச் சிவபுரிக்கு. அதில்தான் தங்கியிருக்கும் இடத்தையும் குறிப்பிட்டிருந்தான். நான்கு மணி நேரத்திற்குப் பிறகு மேலைச்சிவபுரியிலிருந்து பதில் தந்தி வந்தது. கரம் நடுங்கப் பிரித்துப் பார்த்தான். தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போன்ற உணர்ச்சி, அந்தத் தந்தியிலிருந்தது. அது, இது!

"இந்திரா மரணப் படுக்கையில்—உடனே புறப்படவும்—பதில்."

ஒரு வேதனைக்கு மனம் விளக்கம் தேடிக் கொண்டது. ஆனுல், அதைத் தொடர்ந்து புதிய வேதனை வளர்ந்துவிட்டது. இப்போதே செத்துத் தொலைந்து விட்டால்தான் என்ன என்கிற அளவுக்கு சுந்தரத்தின் எண்ணம் போய் நின்றது; "இந்திரா மரணப் படுக்கையில்" பரிதாபத்திற்குரிய இந்திரா! பெற முடியாததைப் பெற்றுவிட்டோம், பெற்ற செல்வம் கை நழுவாது எனத் திடமாக நம்பிய இளமனதுக்காரி. தன் வாழ்நாளில் யாருக்குமே ஒருபோதும் ஒரு தீங்கும் செய்தறியாத உத்தமி. சத்தம் போட்டுப் பேசியறியாத தங்கம்." புழுவாய்த் துடிப்பது என்று பேச்சுக்குச் சொல்வார்கள். உண்மையில் இந்திராவை நினைத்து சுந்தரம் அவ்வளவு துடித்தான். தங்கையின் மீது

https://t.me/tamilpdfebooks



கொண்ட பற்றும் பாசமும் அவனை விவரிக்க முடியாத வேதனையில் ஆழ்த்தின. அந்த நேரத்திலும் அவனது பாச உள்ளம் இந்திராவின் மீது விரோதமான ஒரு கோபம் கொண்டது. "புரியாதவள்: கணவன் கைது செய்யப்பட்டால் என்ன? எப்படியும் ஒரு நாள் விடுதலை பெறத் தானே போகிறான்! அதற்குள் ஏன் என்னென்னவோ செய்துகொண்டு மரணப் படுக்கையில் கிடக்கிறாள்"—என்று தன்னையறியாமலே வாய் விட்டுப் பேசினான். தனியறை அதை எதிரொலித்தது. "இந்திரா! இந்திரா!"—என்று இடைவிடாமல் கதறினான். ஏனென்று கேட்பாரில்லை. கதவு தட்டும் சப்தம் கேட்டது. கண்களைத் துடைத்துக்கொண்டு போய்க் கதவைத் திறந்தான். ஓட்டல் பையன் ஒரு கோப்பையைக் கொண்டு வந்து உள்ளே வைத்துவிட்டு வெளியேறினான். மீண்டும் கதவைத் தாளிட்டான் சுந்தரம். எதிரே இருந்த காபிக் கோப்பை அவன் சிந்தனையை வளர்த்தது. இந்திரா இங்கே நிற்பதுபோலவும், காபிக் கோப்பையைக் கையிலெடுப்பது போலவும், அதில் விஷத்தைப் போடுவது போலவும், குடிக்கப்போவது போலவும் அவனது எண்ணம் தொடர்ந்தது. "படார்" என்று காபிக் கோப்பையைத் தட்டினான். இந்திராவைக் காப்பாற்றிவிட்டது போல ஒரு மகிழ்ச்சி. விரக்தி கலந்த சிரிப்பு! மார்பு விம்மி விம்மித் தாழ்ந்தது. வாய்வழியே மூச்சுவிட்டான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் முகத்தைத் துடைத்தபடி கதவைப் பூட்டிக்கொண்டு ஓட்டல் மானேஜரிடம் வந்து சாவியைக் கொடுத்துவிட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டையும் நீட்டினான்.

"புறப்பட்டு விட்டீர்களா சார்?" என்று பரிவோடு கேட்டார் ஓட்டல்காரர். ஆகா, ஓட்டல்காரர்கள்தான் வருகிறவர்களிடம் எவ்வளவு பரிவு காட்டுகிறார்கள்! உலகத்திலேயே தலைசிறந்த நடிகர்கள் ஓட்டல் நிர்வாகிகள்தான். சுந்தரம் தலையசைத்துவிட்டு பாக்கி சில்லறையை வாங்கிக் கொண்டு வேகமாகப் புகை வண்டி நிலையத்தை நோக்கி நடந்தான்.

சுந்தரத்தை விட்டுப் பிரிக்கப்பட்ட அம்பிகா, துன்ப வெள்ளத்தில் ஆழ்ந்தாள். "சுந்தரம் தன்னைத்தேடி வருவானா? தான் சொன்ன விலாசத்தை நினைவில் வைத்திருப்பானா?"—இவ்வாறு எண்ணி எண்ணிக் குழம்பினாள். இரவு முழுக்கக் கண்விழித்துக் காத்திருந்தாள். எப்படியும் சந்தித்து விடுவோம் என்று மனத்தைத் தேற்றிக் கொண்டாள். பொழுது விடிந்தது. ஒரு நாள் முழுக்க உண்ணாமல் கிடந்த அம்பிகாவை உபவாசத்திலிருந்து மீட்பதற்காக அவள் தாய் உள்ளே நுழைந்தாள். "சாப்பிட வாடி" என்று அழைத்தாள். தாய்க்கும் மகளுக்கும் வாக்குவாதம் வளர்ந்தது. சற்றும் எதிர்பாராதவிதமாக அம்பிகா அவளை ஓங்கி அறைந்துவிட்டாள்.

"சண்டாளி! நீ கெட்டது போதாதென்று என்னையும் கெடுத்துத்

https://t.me/tamilpdfebooks



தான் தீருவேன் என்று நிற்கிறுயே! நீ ஏன் செத்துத் தொலைக்கக் கூடாது." என்று சினம் திரப் பேசிவிட்டு விழுந்து அழுதாள். ரெங்க லெட்சுமி அவளை முறைத்துப் பார்த்துவிட்டு வெளியேறினுள். வெகு நேரமாகியும் சுந்தரம் வரவில்லை. ஒருவேளை பாலனை மீட்பதற்காகச் சுந்தரம் முயன்று கொண்டிருக்கலாம் என்ற நினைவில் ஆறுதல் பெற முயற்சித்தாள். எதற்கும் பாலனைக் கேட்டால் விபரம் தெரிந்துவிடும் என்று கருதிக்கொண்டு ஆடைகளைச் சரிப்படுத்தியபடி புறப்பட்டாள்.

"எங்கடி போகிருய்? நில்லு!" என்று அதிகாரமாய்த் தடுத்தது ரெங்கலெட்சுமியின் குரல்.

"நீ பேசாதே! பேசினல் இந்த இடத்திலேயே உன்னைக் கொன்று விட்டு நானும் தற்கொலை செய்து கொள்வேன்" என்று தீர்மானம் தொனிக்கக் கூறிய அம்பிகா, பதிலை எதிர்பாராமலே வெளியேறினுள். இந்த மனிதர்கள் இருக்கிருகளே, அவர்கள் வாய்களில் கொலையும் தற் கொலையும்தான் எவ்வளவு சீக்கிரம் வந்துவிடுகின்றன தெரியுமா? கையிலே நச்சுக் கோப்பையை ஏந்தும்போதல்லவா தெரியும், மனித மனதின் பலவீனம்!

தியாகராயநகர் போலீஸ் நிலையத்துக்கு வந்த அம்பிகா, நேரே இன்ஸ்பெக்டரிடம் போய் "பாலன் எங்கே?" என்று கேட்டாள். இன்ஸ்பெக்டர்களுக்குள்ள இயற்கையான குணத்தின்படி தலைநிமிர்ந்து பார்க்காமலேயே, "காலையிலேயே ஜெயில்லே கொண்டு போய்ச் சேர்த் தாச்சு" என்று கூறிவிட்டு அவளைப் பார்க்காமே அப்பால் நடந்தார். அவர். நீதிபதிகளும் நிர்வாக இலாகாவினரும் உத்தியோக முறைப்படி சாதாரணமாகக் கூறிவிடுகிற பல வார்த்தைகள், அதைக் கேட்டுத் தீர வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறவர்களுக்கு எண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்தது போலிருக்கின்றன. குற்றவாளிக்கு "ஆயுள் தண் டனை" என்று கூறிவிடுகிற நீதிபதி, மத்தியான உணவுக்கு வீட்டுக்கு வந்து மனைவி மக்களோடு சிரித்துக் கொண்டிருக்கிறுர். அந்த வார்த்தை யால் கட்டுப்படுத்தப்படுகிற கைதி, மனைவி மக்களை எண்ணித் துடித்துக் கொண்டே சிறைக்குள் நுழைகிறுன்.

பாலனைச் சிறைக்குக் கொண்டு போய் விட்டதாக இன்ஸ்பெக்டர் சொன்ன வார்த்தையால் துடித்துப்போன அம்பிகா, நேரே சிறையை நோக்கிப் புறப்பட்டாள். கையிலே காலணுக் காசுகூட இல்லை—கடன் கொடுப்பாரும் யாருமில்லை. ஒரு பெண் கடன் கேட்கப் போனுல் இந்த நாட்டில் கடனு கொடுப்பார்கள்? "கட்டிலுக்கு வா; கொட்டமடிக்க லாம்! காசு தருகிறேன்; கொண்டு போகலாம்!" என்று கூறுவார்கள். தியாகராயநகரிலிருந்து அம்பிகா நடந்தே போனுள், சென்ட்ரல் ரெயில் நிலையத்துக்கு. அங்கேதான் இருக்கிறது சிறைச்சாலை. கால்கள் வலித் தன. பசி எடுத்து அடங்கிப் போனதாலே ஏற்பட்ட வறட்சி கலந்த மயக்கம் அவளைப் பைத்தியக்காரி போல் ஆக்கி வைத்திருந்தது. ஆனு

https://t.me/tamilpdfebooks



லும் அம்பிகா சளைக்கவில்லை. ஓய்வுககாகக் கொஞ்ச நேரம்கூட ஒரு இடத்தில் உட்காரவில்லை. பாலனைப் பார்க்க வேண்டும் என்கிற ஒரே நினைப்பு. களைத்துப்போன அவள் நெஞ்சத்தை உறுதிபெற வைத்திருந் தது. நேரே சிறைச்சாலைக்கு வந்து சேர்ந்தாள். சிறைச்சாலையை ஏற இறங்க ஒருமுறை பார்த்தாள். பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் இங்கு இருந்திருக்கிறார்கள் என்று மனதைத் திடப்படுத்திக் கொண் டாள். பக்கத்திலிருந்த சிறிய கூடாரத்திற்குள் போய் உட்கார்ந்தாள். அங்கே பல கைதிகளின் உறவினர்களும் வந்திருந்தார்கள். எழுதப் படிக்கத் தெரியாத தற்குறிகள் இந்த நாட்டில் ஏராளமாக இருக்கிறார் கள் என்பதற்காக ஒவ்வொன்றையும் எழுதிக் கொடுத்துக் காசு வாங்குவதற்கென்றே சில பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அங்கேயே நின்றபடி பேட்டி மனுவுக்கு எட்டணு என்று பேரம் பேசிக் கொண்டிருந்தார். அம்பிகாவிடம் காசு இல்லை. ஆனால், அவள் படித்த வள். ஒரு காகிதத்தை எடுத்து மனு எழுதிச் சிறை வாசலில் இருந்த பெட்டிக்குள் போட்டுவிட்டு மீண்டும் வந்து அமர்ந்தாள். கொஞ்சம் சாய்ந்து படுக்கலாமா என்று எண்ணினாள். அரசாங்க நிர்வாகத்திற்குட் பட்ட இடங்களில் அவ்வளவு சுலபமாகவா படுத்துவிட முடியும்! தூசு, துண்டு பீடி, வெற்றிலை எச்சில், சுண்ணும்புத் துண்டுகள், காகிதக் குப்பை—சுருக்கமாகச் சொன்னால் சென்னை அரசாங்க நிதி இலாகாவின் சொத்துக்கள் அத்தனையும் அங்கேதானே கிடக்கும்! கிடந்தது, அம் பிகா உட்கார்ந்திருந்த இடத்தில்! மெதுவாக முந்தானையால் கொஞ் சம் இடத்தைத் துடைத்துவிட்டுப் படுத்துக் கொண்டாள். அப்போது தான், அங்கு உட்கார்ந்தவர்களில் இளம் பெண்ணாக இருந்த ஒருத்தி யைக் கூர்ந்து கவனித்தாள். உடனே அவளது இளகிய மனம் பரிதாப உணர்ச்சிக்கு உட்பட்டது. அந்தப் பெண் அழுதழுது கண்கள் சிவந்து வீங்கியிருந்தன. முந்தானைத் தலைப்பால் வாயை மூடியபடி மேலும் அழுதுகொண்டிருந்தாள். அம்பிகா அவளைப் பார்த்து, "யாரம்மா நீ!" என்றாள்- பதில் சொல்ல முடியாமல் அந்தப் பெண் மேலும் அழுதாள். உடனே பக்கத்திலிருந்த ஒரு நடுத்தர வயதுத் தாய், சுருக்கமாக அவ ளது கதையைச் சொன்னாள்: "அந்தப் பெண் வில்லிவாக்கத்தைச் சேர்ந்த வளாம். அவளும் அவள் கணவனும் ஒரு மில்லில் வேலை செய்து கொண் டிருந்தார்களாம். அந்த மில்லில் கொஞ்சம் உயர்ந்த வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒருவன், ஒருநாள் தனியாக இருந்த அவளைக் கெடுத்து விட்டானும். அதனால் ஆத்திரம் கொண்ட அவள் கணவன் அவனை குத் திக் கொன்றுவிட்டானும். அந்தக் கொலைக் குற்றத்திற்காக அவனுக்கு ஆயுள் தண்டனை விதித்து விட்டார்களாம். அந்தச் சிறையில்தான் அவன் வைக்கப்பட்டிருக்கிறானும்"—இந்தக் கதையைக் கேட்ட அம்பிகா வின் கண்கள் கலங்கின.

"மனைவியைக் கெடுத்தவனைக் கணவன் கொன்றான். கொலை செய் தது குற்றமா, இல்லையா என்பதைப் பற்றி மட்டுமே சட்டம் ஆராய்ச்சி

https://t.me/tamilpdfebooks



நடத்தியது. கொலைக்குக் காரணமாய் இருந்தது, தண்டனையில் கொஞ்சம் கருணை காட்டத்தான் பயன்பட்டது. கற்பழித்தது நிரூபிக்கப்பட்டால் கொலைக் குற்றமாகாது என்று ஏன் சட்டத்தை மாற்றக் கூடாது?"—அம்பிகா இவ்வாறு எண்ணினாள். ஆனால், அவள் சட்ட மந்திரி அல்லவே!

"இனி என்னமா பண்ணப் போறே!" என்று அந்தப் பெண்ணைப் பார்த்து அம்பிகா கேட்டாள்.

"என்ன செய்வதென்று புரியாததால்தானே கண்ணீரே வருகிறது! அவசரத்தில் அவளுக்கு அந்த யோசனை தோன்றவில்லை. எதிர்காலத் திட்டம் என்ன என்பது அந்தப் பெண்ணுக்கே தெரியாது. ஏன், அவளிருந்த நிலையில் நாளைக்கு என்ன நடக்கும் என்பதுகூடத் தெரியாது. பொதுவாக கெடுக்கப்பட்டவள்கூட தட்டுக் கெட்டவள்தான். அதற்கு மேல் அவள் வாழ்க்கை அதே படகில் பயணம் தெய்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், கணவனுக்காகக் கண்ணீர் விடும் அந்தப் பெண் நிச்சயமா அதை விரும்பமாட்டாள். வேறு வழி?" சரி நமக்கென்ன என்று சிந்தனையை மூடிக்கொண்டாள் அம்பிகா.

"முனியாயி யாரம்மா?" என்று ஒரு குரல் கேட்டது. அவசர அவசரமாக எழுந்தாள் அந்த இளம் பெண், கூடவே இன்னொரு நடுத்தர வயதுத் தாயும் எழுந்தாள். என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க அம்பிகாவும் அவர்கள் பின்னடிச் சென்றாள். அந்தப் பெண்ணுக்குப் பேட்டி கிடைத்துவிட்டது. கணவன் அவளைப் பார்க்கக் காத்துக் கொண்டிருந்தான், சன்னலுக்கு அந்தப்புறம். இந்தப் பக்கம் போய் நின்ற அந்தப் பெண், முட்டி மோதிக்கொண்டு அழுதாள். ஒருவரை ஒருவர் தொட முடியாது. நெருங்கிய சன்னல் கம்பிகள். வருகிறவர்கள் கைதிகளுக்கு நஞ்சு கொடுத்துவிடுவார்கள் என்பதற்காகவே அவ்வளவு பத்திரமாகப் பாதுகாக்கிறார்களாம். கைதி சிறைக்குள் துடிக்கலாமே தவிர சாகக்கூடாது என்பது அரசாங்கச் சட்டத்தின் ஒரு விதி. எவ்வளவு கருணை, பணம் கொடுத்தவனை ஆளுகிற சட்டத்திற்கு!

அம்பிகா உண்மையில் அழுதுவிட்டாள். கம்பிகளுக்குப் பின்னால் நின்ற அந்தக் கைதியின் உருவம் அவளுக்கு அரை குறையாகத் தெரிந்தது. விக்கலுக்கும் விம்மலுக்கும் பிறகு அந்தக் கைதி தன் மனைவியைப் பார்த்து: "முனியாயி, நான் இனி உயிரோடு வர்றது நிச்சமில்லே. உலகத்திலே வேறே என்ன இருக்கு? நீ வேறே கல்யாணம் பண்ணிக்க" என்றான்.

உலகத்தில் தத்துவஞானிகள் என்று தனியாக யாருமில்லை. அளவு மீறிய துன்பத்திற்குப் பிறகு பிரதி ஒரு மனிதனும் தத்துவஞானியாகி விடுகிறான். "நீயவருந்திலே; நீங்குவன் யானென்ற தீயவெஞ்சொல் செவி சுடத் தேம்பினு"ளாமே சீதை. அதுபோல அந்த வார்த்தைகளைக் கேட்டுத் தேம்பினாள் முனியாயி. சில சமயங்களில் ஆறுதல் வார்த்தைதான்

https://t.me/tamilpdfebooks



அதிகத் துன்பத்திற்குக் காரணமாயிருக்கிறது. அம்பிகா சிலையாக நின்று அந்த சோக நாடகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள். கைதி கண வனுயிற்றே என்று கவலைப்படாமல் மனைவியிடமிருந்து பிரித்து இழுத் துக்கொண்டு போனார், கல்யாணமான ஒரு அதிகாரி. அவர் கவலைப்பட மாட்டார். காரணம், அலுவல் முடிந்ததும் அவர் தன் மனைவியைச் சந் திக்கப் போகிறார். ஆனால்...அந்தக் கைதி?

"அய்யா, ஒரு அஞ்சு நிமிடம்! இன்னம் ஒரு நிமிடம்! உங்களைக் கும்புடுகிறேன். சமீபத்திலே பாக்க முடியாது. நீங்க நல்லா இருக்கணும். ஐயா! ஐயா!" என்று கெஞ்சினான், கதறினான் அந்தக் கைதி; பயனில்லை. துடிக்கத் துடிக்க உள்ளே தள்ளப்பட்டான். முனியாயி "ஓ"வென்று அலறியபடியே புறப்பட்டாள். அம்பிகா பாவம்! தனக்குக் கொஞ்சங் கூட உறவில்லாத அந்தப் பெண்ணுக்காக விம்மி அழ ஆரம்பித்தாள். பெண்கள் அதிகம் நீதிபதிகளாக நியமிக்கப் படாமலிருப்பதற்குக் கார ணம் இதுதான்; வழக்கில் நியாயம் வழங்குவதற்குப் பதிலாகக் கண்ணீ ருக்குக் கருணை வழங்கிவிடுவார்கள்! அம்பிகா நீதிபதியும் இல்ல. ஆகவே, கண்ணீரையே கருணையாக வழங்கிவிட்டுச் சோர்ந்து உட்கார்ந் தாள்.

உள்ளே இருந்து வெளியே வந்த ஒருவர், "அம்பிகா யாரம்மா?" என்று கேட்டார். "நான்தான்" என்றாள் அம்பிகா.

"ஒரு அஞ்சு நிமிடம் இருங்க. நீங்க பார்க்க வேண்டிய ஆளைப் பாக்கலாம்" என்றார் அவர்.

"நீங்கள் நல்லாயிருக்கணும்" என்று மகிழ்ச்சியோடு சொன்னாள் அம்பிகா.

"எங்கேம்மா நல்லாயிருக்கிறது? நானும் கைதிதான்—நீண்ட நாள் கைதி" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனார் அவர்.

அம்பிகாவின் நெஞ்சம் துணுக்குற்றது. கைதி, உத்தியோகம் பார்க் கிறானே! ஒருவேளை உள்ளே இருக்கும் எல்லா அதிகாரிகளுமே கைதி கள்தானோ? அவள் இதயத்திலிருந்து அர்த்தமில்லாத ஒரு சிரிப்புப் புறப்பட்டது.

"சிறை, கைதிகளைத் திருத்துகிறது; திருத்துவதற்காகத்தான் சிறைக் குள்ளேயே உத்தியோகம் கொடுக்கிறது" என்று எண்ணினாள் அம்பிகா. அவளுக்குத் தெரியாது—சிறை கைதிக்குப் பசியெடுக்க வைக்கிறது. விடு தலையானதும் அவன் உணவு தேட ஆரம்பிக்கிறான், மீண்டும் உள்ளே பிடித்துப் போட்டுப் பசியைத் தொடர்கதையாக்குகிறது சிறைச்சாலை.

"அம்பிகா வாம்மா!" என்றார் உத்தியோகம் பார்க்கும் கைதி மீண்டும் வந்து. அம்பிகா அவசர அவசரமாக ஓடினாள்- சன்னலுக்கு அப்புறம் நிற்கும் பாலனைக் கண்டாள். கண்ணீர் வடித்தாள்; கதறினாள். "சுந்தரம் உங்களைப் பார்க்க வந்தாரா?" என்று கேட்டாள். "இல்லை" என்றான் பாலன்.

https://t.me/tamilpdfebooks



"எங்கே தங்குவதாகச் சொன்னார்?" என்று மீண்டும் கேட்டாள்.

"அதுவும் தெரியவில்லை" என்றான் பாலன்.

"சரி, எப்படியும் உங்களை விடுதலை செய்ய நான் முயற்சி எடுத்துக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள் அம்பிகா. பாலன் அதிகம் பேசவில்லை. போகும்போது அம்பிகாவின் மனம் "வக்கீலைப் பார்க்க வேண்டும்—வயதான வக்கீலாக" என்று கூறியது.

சிறைக்குள் திரும்பிய பாலனைப் பார்த்து ஒரு கைதி, "என்ன சாமி, யாரும் வேண்டியவங்க வந்தாங்களா? யாரு சம்சாரமா?" என்று கேட்டான்.

பாலனின் இதயம் வலித்தது. "சம்சாரம்! இந்திரா! இந்திரா எப்படி இருப்பாள்? திருமணத்தன்று நடந்த மாதிரி தற்கொலை முயற்சி...!" பாலன் அழுதேவிட்டான்.

சென்ட்ரல் ரெயில் நிலையம் அருகில் வந்தாள் அம்பிகா. இனி ஒரு அடிகூட நடக்க முடியாது என்கிற நிலைமையில் கையில் பணமில்லை என்பதைப் பற்றியும் சிந்திக்காமல் ஒரு வாடகைக் காரை கூப்பிட்டு ஏறி உட்கார்ந்து கொண்டாள். நேரே தன் வீட்டுக்கு வந்தாள். முன்கட்டில் சாய்ந்துகொண்டிருந்த தன் தாயைப் பார்த்தும் பார்க்காதவள் போல வேகமாக உள்ளே சென்றாள். அலமாரியிலேயே சாவி வைக்கப்பட்டிருந்தது. திறந்தாள்; ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளைக் கையில் எடுத்துக் கொண்டாள்; அந்தச் சத்தம் கேட்டு ஓடிவந்தாள், ரெங்கலெட்சுமி. அம்பிகாவின் கையிலிருந்த பணத்தைப் பார்த்தாள். "அது என் பணம் தொடாதே! கொண்டா இங்கே!" என்றாள். அம்பிகா அங்கிருந்த பேனாக் கத்தியை எடுத்துக்கொண்டு, பேசாதே! பேசினால் கொலை!" என்றாள்.

ரெங்கலெட்சுமி பயந்து பேசாமல் நின்றாள். விடுவிடு என்று வெளியிலே வந்த அம்பிகாவை ஒரு தந்திப் பியூன் எதிர்கொண்டான். கையெழுத்துப் போட்டுவிட்டுத் தந்தியைக் கையில் வாங்கிக்கொண்டாள். காரில் ஏறி உட்கார்ந்தபடி பிரித்துப் பார்த்தாள். பார்த்தது தான் தாமதம், முட்டி மோதிக்கொண்டு அழுதாள். காரில் ஏறி உட்கார்ந்தபடி தொடர்ந்து அழுதுகொண்டிருந்தாள். ஆனால் இப்பொழுது வந்த கண்ணீர் அவள் அடிவயிற்றிலிருந்து வந்தது.

அந்தத் தந்தியிலிருந்தது இது:

"இந்திரா பிழைப்பது அரிது. கடிதம் தொடர்கிறது—சுந்தரம்."

காரில் உட்கார்ந்திருக்கிறோமே என்ற நினைவின்றி, அம்பிகா அழுதாள். டிரைவர் பரிதாபமாக அவள் முகத்தையே பார்த்தான். ஏதோ துக்கச் செய்தி போலும் என்கிற வரைக்குத்தான் அவன் நினைக்க முடிந்தது. அம்பிகா கண்களைத் துடைத்துக் கொண்டு, "காரை எடு" என்றாள். எங்கே என்று கேட்காமலே டிரைவர் காரை ஓட்டினான். நான்கு ரோடுகள் சந்திக்கும் ஒரு இடத்திற்கு வந்தபின்தான், "எங்கேயம்மா போக

https://t.me/tamilpdfebooks



ணும்" என்று கேட்டான். "புரசவாக்கத்திற்கு விடு" என்றாள் அம்பிகா. கார் தொடர்ந்தது!

அம்பிகாவின் மனத்தில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள். தன் இடத்தைப் பற்றிக் கொண்ட இந்திராவிற்காக அவள் மனம் இளகிக் கொடுத்தது. சாதாரணமாகவே பொறாமை உணர்ச்சிக்கு அடிமைப்படும் பெண் மனம், தன் வாழ்வைப் பறித்தவள் சாகிற நிலைமைக்கு வரும்போது மகிழ்ச்சியடைவது வழக்கம். ஆனால், அம்பிகா அழுதாள். பொறாமை இல்லாத பெண்கள்கூட உலகத்தில் இருக்கிறார்கள்.

கார் செல்லச் செல்ல அம்பிகாவின் மனத்திலே கற்பனைகள் வளர ஆரம்பித்தன. "இந்திரா இறந்துவிட்டால்...?" இதையும் அவள் மனம் நினைத்தது. "அதற்குப் பிறகு...? சீச்சீ! இந்திரா சாகக்கூடாது! சாகீ மாட்டாள்!"—அம்பிகா இப்படியும் நினைத்தாள், ஏதோ எல்லாம் அவள் கையில் இருப்பது போல! சிந்தனைகளில் அல்லாடியபடி புரசவாக்கத்திற்கு வந்து சேர்ந்தாள்.

தண்டபாணி வக்கீல் வயதானவர். அம்பிகா அவரைப் பார்த்தாள். பாலன் மீதுள்ள வழக்கின் தன்மை பற்றி விவரித்தாள். உலகத்தில் வக்கீல் ஜாதியே தனி! உடம்பில் வர்ணம் ஒட்டியிருந்தால்கூட அதைக் குஷ்டம் என்று சொல்லிப் பயமுறுத்தத் தயங்க மாட்டார்கள் வக்கீல்கள்! பூதக் கண்ணாடி புத்தி அவர்களது தனி உடமை! வக்கீல் தண்டபாணியும் அதைத்தான் செய்தார். "கடத்தல் கேசா! அடடே! ரொம்ப சங்கடம் ஆச்சே! ஜாமீன்கூட கிடைக்காதே! நம்ம நிதிபதிகள் எல்லாம் இப்ப ரொம்பக் கண்டிப்பா இருக்காங்க. கடத்தல் கேசுகளிலே கொஞ்சம் கடுமையாகவே நடந்துக்கிறாங்க! நேத்துக்கூட ஒரு கேசிலே தீர்ப்பு ஆச்சு. "அஞ்சு வருடம்" போட்டாரு. அது விஷயமா அப்பீலுக்குப் போயிட்டுத்தான் இப்ப வர்றேன்" என்றார் வக்கீல்.

"ஏதோ நீங்கள்தான் எப்படியாவது முயற்சி செய்ய வேண்டும். பணத்தைப் பற்றிக் கவலையில்லை. இதோ, அருநூறு ரூபாய் வைத்துக் கொள்ளுங்கள்! என்ன கஷ்டப்பட்டாவது முதலில் ஜாமீனில் எடுத்து விடுங்கள்" என்று கூறி இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை அவரது கையில் வைத்தாள் அம்பிகா.

"பணத்தைப் பற்றிக் கவலையில்லை!" வக்கீல் இப்போது இப்படிப் பேசினார். "முயற்சி பண்றேன். இன்னிக்குப் போட்டிருக்கிற அப்பீல்கூட "சக்சஸ்" ஆகிடும். கடத்தல் கேசுன்னா என்ன? சாதாரண சாட்சிகளை வச்சே தண்டிச்சுட்டா மேல் கோர்ட்டு இல்லையா என்ன? பொம்பளையைக் கடத்தினான்—சரி. அவளே வந்து நான் இஷ்டப்பட்டுத்தான் போனேன்னு சொல்லும்போது, கேஸ் "வீக்"காகித்தானே தீரும்! நீங்க சொன்னதைப் பார்த்தா, உங்களைக் கடத்திக்கிட்டுப் போனதாத்தான் வழக்கு! இப்ப நீங்களே அவருக்காக வாதாடுறீங்க! அவருக்காக கேஸ் நடத்துறீங்க! பூ! பாத்துடலாம்! நீங்க ஒண்ணுக்கும் கவலைப்

https://t.me/tamilpdfebooks



படாதீங்க! ரெண்டு நாளிலே ஜாமீன்லே எடுத்துடறேன்!"—வக்கீல் பேசி முடித்தார்.

அம்பிகா மகிழ்ச்சியோடு நன்றி கூறிக்கொண்டு எழுந்தாள். வக்கீல் "பீஸ்" ஒன்றும் பேசாது எழுந்துவிட்டாளே என்று எண்ணிக்கொண்டு, "அப்புறம், மத்ததெல்லாம் எப்படி?" என்றார். "நீங்களே சொல்லுங்கள்" என்றாள் அம்பிகா.

"கேசை ஜெயிச்சுடலாம்! இருந்தாலும் கஷ்டம் ஜாஸ்தி! எனக்கு இப்பக் கையிலேயே நாலு "மர்டர் கேஸ்" இருக்கு, குறைஞ்சது மூவாயிரம் ரூபாயாவது..." என்று இழுத்தார் வக்கீல். அம்பிகா திடுக்கிட்டாள். ஆனாலும் மறுத்துரைக்கவில்லை. பாலன் விடுதலை பெற்றால் போதும் என்பதே அவளது எண்ணமாயிருந்தது. மூவாயிரம் ரூபாய்க்குச் சம்மதம் தெரிவித்துவிட்டு, "எப்படியும் இரண்டு நாட்களுக்குள் ஜாமீனில் எடுத்துவிடுங்கள்" என்றும் கூறிவிட்டுப் புறப்பட்டாள். அவள் மனம் இப்படிச் சொன்னது: "உலகத்திலேயே கொலை நடந்தால் சந்தோசப்படுகிறவர்கள் வக்கீல்கள்தான்!"

வெளியில் வந்த அம்பிகா "திடுதிப்"பென்று ஒரு முடிவுக்கு வந்தாள். மேலைச்சிவபுரிக்குப் புறப்பட்டுப் போய் சுந்தரத்தைப் பார்த்து, பாலன் ஜாமீனில் வெளிவரும் மகிழ்ச்சிச் செய்தியைக் கூறுவது என்பதுதான் அது. "அதிலாவது இந்திராவின் உடல்நிலை தேறுதா" என்று எண்ணினாள். உடனேயே காரில் ஏறிக்கொண்டு "எழும்பூர் ரெயில் நிலையத்துக்கு விடு" என்றாள்.

மறுநாள்...

காலையில் புதுக்கோட்டையில் இறங்கிய அம்பிகா, பஸ்ஸில் ஏறி, மேலைச்சிவபுரி வந்து சேர்ந்தாள். அப்போது சுமார் பதினொரு மணியிருக்கும். ஊருக்குள் வந்த அம்பிகாவின் எதிரே ஒரு சவ ஊர்வலம் வந்தது. அம்பிகா திடுக்கிட்டு பயந்தபடியே ஒரு சந்துப் பக்கம் நின்றுகொண்டாள். சவ ஊர்வலம் கடந்தது. கூர்ந்து கவனித்தாள். சுந்தரம், சொக்கப்ப பிள்ளை, சின்னப்ப பிள்ளை எல்லோரும் கண்ணீர் வடித்தபடி அந்த ஊர்வலத்தின் பின்னால் வந்துகொண்டிருந்தார்கள். அம்பிகா முந்தானைத் தலைப்பால் வாயை மூடிக்கொண்டாள். அழவில்லை; அழுவதற்கு அவள் உடம்பிலே திராணியில்லை. "இந்திரா இறந்துவிட்டாளே?" குழப்பம் அதிகமாக சிலையாக நின்றாள் அம்பிகா. "இனி எப்படி சுந்தரத்தைப் பார்ப்பது? என்ன ஆறுதல் கூறுவது? சுந்தரத்தின் பெற்றோர் நம்மைக் கண்டால் சும்மா விடுவார்களா? நாம்தான் இவ்வளவுக்கும் காரணம் என்று அவர்கள் நினைத்திக்கிறார்களே!"—அம்பிகா திரும்பி நடந்தாள். மேலைச் சிவபுரியில் நிற்கவே அவள் விரும்பவில்லை. கடலில் படகைக் காற்றடித்துச் செல்வது போல், சென்றுகொண்டிருந்தாள்.

சிட்டென்றும் முல்லை மொட்டென்றும், சிங்காரப் பேடையென்

https://t.me/tamilpdfebooks



றும் வர்ணிக்கத்தக்க ஒருத்தி "பள்ளியறையில் பலரையும் சந்திக்கத் தயார்" என்று கூறிவிட்டால், பொன்னையும் பொருளையும் அள்ளிக் குவித்துப் பூரித்து வாழக்கூடிய வசதி படைத்தவள்—தலையசைக்க மறுத்துத் தவிக்கிறாள்!—அபூர்வமாக இப்படியும் நடக்கும் என்பார்கள்—நடத்திக் காட்டினாள். அம்பிகா நெறியான வாழ்வுக்காக அலைந்தாள்! கற்போடு வாழ முயன்றால் கஷ்டங்கள் பல உண்டு—கண்ணகி காலத்திலிருந்து கதை இதுதானே! அந்தக் கஷ்டங்களைத் துச்சமாக மதித்தால்தான் உலகு கற்பின் செல்வியரை ஏற்றிப் புகழ்கிறது.

அம்பிகா, காட்டு வழியே நடந்து வந்துகொண்டிருந்தாள். நூறு ரூபாய்க்குமேல் மடியில் பணம் வைத்திருந்தாள். திடீரென ஒரு இடத்தில் நின்று, பஸ் போகும் பாதையை நோக்கி நடந்தாள். வெகுதூரம் அந்தப் பாதையில் நின்று பார்த்தாள். பஸ் வரவில்லை. ஒரு சிறிய "பாண்டியாக்" கார் வந்தது. அம்பிகாவைப் பார்த்து, அந்தக் காரோட்டி காரை நிறுத்தினான். உள்ளே இரண்டு பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் அம்பிகாவைப் பார்த்து, "எங்கேயம்மா போகணும்" என்று கேட்டார்கள். "புதுக் கோட்டைக்கு" என்றாள் அம்பிகா.

"ஏறிக்கொள்" என்றார்கள், அவர்கள்.

அம்பிகா ஏறிக்கொண்டாள். கார் நகர்ந்தது.

அவர்கள், சென்னையைச் சேர்ந்தவர்களாம்; நாட்டியக்காரிகளாம். புதுப்பட்டியில் நடந்த ஒரு திருமணத்தில் ஆடிவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறார்களாம். அந்த டிரைவர் அம்பிகாவைப் பார்த்திருக்கிறானாம். அதனால்தான் காரை நிறுத்தினானாம். பிறகு அந்தப் பெண்கள், அம்பிகாவைச் சென்னையிலேயே கொண்டுபோய் விடுவதாகக் கூறினார்கள். அம்பிகா ஆறுதலடைந்தாள். வழி நெடுக அம்பிகா அவர்களோடு பேசிக்கொண்டு வந்தாள். அவளது கதையைக் கேட்ட அவர்கள், அவளைத் தங்களோடு வைத்துக்கொள்ள விரும்பினார்கள். அவர்களின் பேச்சு அம்பிகாவுக்குப் பிடித்திருந்தது; சம்மதித்தாள்.

தொல்லைகளைத் தொடர்ந்து வழங்கிய சென்னை மீண்டும் அம்பிகாவை வரவேற்றது. அந்த நாட்டியக்காரிகளின் பெயர்கள், வனஜா—கிரிஜா என்பதாம். அவர்கள் வீடு பெரிய மாளிகை போல் இருந்தது. அது அவர்களது சொந்த வீடாம். அடையாறிலேயே அதுதான் பெரிய வீடாம்!—அம்பிகா ஆச்சரியத்தோடு எல்லாவற்றையும் கவனித்தாள். ஒரு சமையற்காரன், காரோட்டி, பையன், ஆயா—ஒரே தர்பார்! அம்பிகாவுக்கு இப்போது ஒரு வகையான நிம்மதி கிடைத்தது. பாலன் விடுதலை சுலபமாகும் என்று எண்ணினாள். கேரம் போர்டு விளையாடுவதும், டேபிள்-டென்னிஸ் ஆடுவதும், ரேடியோகிராமை முடுக்குவதுமாக அன்று முழுதும் உற்சாகமாக இருந்தாள். அந்த நாட்டியக்காரிகளில் வனஜா அழகி. ஆனால், அவளைக் காட்டிலும் கிரிஜா பேரழகி. இருவருமே இளகிய மனம் படைத்தவர்கள்.

https://t.me/tamilpdfebooks



தாங்கள் மலேயாவுக்குப் போயிருந்தது பற்றியும், இலங்கையில் போய் ஆடியதைப் பற்றியும் அவர்கள் அம்பிகாவிடம் பெருமையாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். அன்று இரவு சுமார் ஒன்பது மணியிருக்கும். அந்த வீட்டிற்கு ஓர் அழகிய இளம் வாலிபர் வந்தார். வனஜாவும், கிரிஜாவும் துள்ளிக் குதித்து ஓடி அவரை வரவேற்றுர்கள். வந்தவர் யாரென்று புரியாமல் அம்பிகா விழித்தாள். பளிச்சென்று, "இவர் எங்கள் மாமா" என்று அறிமுகப்படுத்தி வைத்தாள் வனஜா. அம்பிகா தெளிந்தாள். வந்த வாலிபர் விடுவிடென்று மாடிப் படிகளில் ஏறினர். வனஜாவும் பின்னலேயே சென்றுள். கீழே கிரிஜா அம்பிகாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். சிறிது நேரம் கழித்து, கிரிஜா அம்பிகாவைப் பார்த்து, "நீ தூங்கவில்லையா?" என்று கேட்டாள். அம்பிகா பதில் சொல்லாமல் சிரித்துக்கொண்டே தன் அறைக்குச் சென்று படுத்தாள். வெகுநேரம் படுக்கையில் புரண்டாள்; தூக்கம் வரவில்லை. வேதனையில் நீந்திய அவள் உள்ளம் இப்போது பழைய காதல் பாதையைத் திறந்து கொண்டிருந்தது. அந்தப் பாதையில் இப்போது பாலனும், சுந்தரமும் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். சபலப் பட்ட மனது வளைந்து வளைந்து நடக்கிறது.

"இந்திரா இறந்துவிட்டாள். வாழ்ந்திருந்தால் பாலனைப் பற்றி நாம் சிந்திக்கப் போவதில்லை. இனி பாலன் நம்முடையவரா? சுந்தரம் கூட நல்லவர்தான். பாலன்! சுந்தரம்" அம்பிகாவின் உடலும் உணர்ச்சி வசப்பட்டது. பாலன் வருவது போலவும், அருகில் உட்காருவது போலவும்...! அவள் முதலிரவு இன்பத்தைக் கற்பனையிலேயே பெற முயற்சித்தாள். மணி பன்னிரெண்டடித்தது. தூக்க உணர்ச்சியை அறவே இழந்துவிட்ட அம்பிகா, மெதுவாக எழுந்து வெளியே வந்தாள். மாடியிலிருந்து சிரிப்புச் சத்தம் பெருத்த அளவில் வந்துகொண்டிருந்தது. என்ன நடக்கிறது என்பதைக் கணக்குப் போட அம்பிகாவுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. "இந்தத் தொழிலும் நாட்டியத் தொழிலின் ஒரு கிளைதானே? ஏன் நாட்டியக்காரிகள் எல்லோரும் இப்படி இருக்கிறுர்கள்!" அம்பிகா சிரித்தாள். அவளுக்குத் தெரியாது. வெறும் நாட்டியத்தால் மட்டும் சம்பாதித்து பெரிய மாளிகை கட்டிவிட முடியாது என்பது.

மேலே என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க அவள் மனம் விரும்பிற்று. மெதுவாக மாடிப்படிகளில் ஏறினள்- மாடி அறைக் கதவு லேசாகத் திறந்திருந்தது. அடித்துக்கொள்ளும் நெஞ்சோடு அம்பிகா கவனித்தாள். அங்கே அந்த வாலிபனின் மடியில் வனஜாவும் கிரிஜாவும் சாய்ந்திருந்தார்கள். ஒரு ஆடவரின் மடியில் இரண்டு பெண்கள்! இதென்ன காதல்?

அம்பிகா வெகுநேரம் அங்கு நிற்கவில்லை. இறங்கிக் கீழே வந்துவிட்டாள். அவள் மனம் தனக்குத்தானே ஒரு ஆறுதல் கூறிக்கொண்டது. "பாவம்! இவர்கள் இந்த வழியிலேயே பழகிவிட்டார்கள். ஆனு

https://t.me/tamilpdfebooks



லும் இதயம் நல்ல இதயம். நமக்கென்ன! நாம் ஒழுங்காக இருப்போம். அதற்காக இந்த இடத்தைவிட்டுப் போக வேண்டாம்" என்று எண்ணியபடி தன் அறைக்குள் வந்து படுத்துக்கொண்டாள்.

பொழுது விடிந்தது. கொஞ்சம் முன்னுலேயே எழுந்துவிட்ட அம்பிகா குளித்து, வக்கீலைப் பார்க்கப் புறப்பட்டாள். வனஜாவிடம் சொல்லிக் கொள்வதற்காக மாடிக்குச் சென்றாள். அங்கு வனஜாவும் கிரிஜாவும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தூக்கத்தைக் கலைக்க வேண்டாமென்று எண்ணிய அம்பிகா கீழே இறங்கி வந்து, அவர்கள் காரையே எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

புரசவாக்கம் வந்து வக்கீலைப் பார்த்தாள். வக்கீல் தண்டபாணி மலர்ந்த முகத்தோடு அவளைப் பார்த்து, "நேற்றே "பைல்" பண்ணியாச்சு; முடிவு இன்னைக்குத் தெரியும். சாதகமாக இருக்கும்னு நெனைக்கிறேன்" என்றார். அம்பிகா அவர் கூடவே இருந்து, சுமார் பதினொரு மணிக்கு அவருடன் கோர்ட்டுக்குச் சென்றாள். வக்கீல் நம்பிக்கையூட்டினார். என்றாலும் அம்பிகாவின் இதயம் என்னவோ பதறிக்கொண்டுதான் இருந்தது. சுமார் மணி 2–30க்கு ஜாமீன் மனு விசாரணைக்கு வந்தது. நீதிபதி அம்பிகாவின் தாயார் சார்பில் ஆஜரான வக்கீலைப் பார்த்து, "ஜாமீனில் விடுவதில் உங்களுக்கு மறுப்பொன்றும் இல்லையே?" என்று கேட்டார். அம்பிகா உடனே அந்த வக்கீலின் அருகில் போய் நின்று வணங்கினாள். "மறுப்பில்லை" என்றார் அந்த வக்கீல். நீதிபதி, பாலனை இரண்டு நபர் ஜாமீன் பேரிலும், இரண்டாயிரம் ரூபாய் ரொக்க ஜாமீன் பேரிலும் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

அம்பிகா ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தபடி நபர் ஜாமீனுக்கு ஆள் தயார் செய்துகொண்டு வருவதாக, வக்கீலிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

## 6

சிறையிலிருந்த பாலனுக்கு எந்தச் செய்தியும் தெரியாது. ஜாமீன் முயற்சிகூட அவனுக்கு அறிவிக்கப்படவில்லை. அவன் பெரிய ஞானி மாதிரி ஆகியிருந்தான். "ரிமாண்டு" கைதிகளுக்கு வேலை கிடையாதாகையால், பாலன், கைதியறை வராந்தாவில் முன்னும் பின்னுமாக உலாவிக் கொண்டிருந்தான். சிறைக்கு வந்ததிலிருந்தே அவன் இப்படித்தான் நடந்துகொண்டிருந்தான். ஆகா! நடந்து நடந்து யோசிப்பதில்தான் எவ்வளவு யோசனைகள் பிடிபடுகின்றன! சிறைச்சாலைகளில் ஒவ்வொரு அறையிலும் கைதிகள் கரியால் ஓவியம் தீட்டியிருப்பார்கள். பெரும்பாலும் பெண் படமாகவே இருக்கும்- சிறையிலே பெண்களைப் பார்க்க

https://t.me/tamilpdfebooks



முடியாதாகையால் அவர்கள் இதிலே ஆத்ம திருப்திப்பட்டுக் கொள்வார்கள். பாலன் இருந்த அறையிலும் அதுபோல் ஒரு பெண்ணின் படமிருந்தது. அந்த அறையிலேயே அவனோடு இருந்த ஒரு கொலை வழக்குக் கைதிதான் அதைத் தீட்டியவன். அந்தக் கைதியின் பெயர் சங்கரன். மாமியாரைக் கொன்ற குற்றத்திற்காக அவன் சிறைக்கு வந்திருந்தான். அவன் வரைந்திருந்தது அவன் மனைவியின் உருவத்தைத்தானும். பாலனிடம் அவன் எல்லாக் கதைகளையும் சொல்லியிருந்தான். அவன் பெரிய ஓவியனும். தன் அத்தை மகளேயே கட்டிக்கொண்டானும். அத்தை கொஞ்சம் துடுக்குக் காரியாம். கட்டிக்கொடுத்த பெண்ணைத் தன் வீட்டிற்கே அழைத்து வந்து நாட்டியம் கற்றுக் கொடுத்தாளாம். கூடவே இருந்த அவள் தங்கைக்கும் சேர்த்து நாட்டியப் பயிற்சி கொடுத்து, அரங்கேற்றினளாம். பெயரும் புகழும் வர ஆரம்பித்ததாம். அதுமுதல் சங்கரனை வெறுப்பதற்கு ஆரம்பித்தார்களாம். அதனால் ஆத்திரம் கொண்ட அவன் தன் அத்தையைக் குத்திக் கொன்றுவிட்டானும். நீதிபதி சட்டப்படி ஆயுள் தண்டனை விதித்து விட்டாராம்.

அவன் எப்போதும் பாலனிடம் சொல்லுவான். "என்னைக்காவது சிறையிலேயிருந்து தப்பிச்சு ஓடி, என் சம்சாரத்தைக் குத்திக் கொன்னுட்டுத்தான் மறு வேலை" என்று. அப்போதெல்லாம் பாலன் அவனுக்கு ஆறுதல் சொல்லி, தத்துவம் போதிப்பான். பிறருக்கு உபதேசம் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தால் எவ்வளவு மடமடவென்று தத்துவம் வருகிறது? பாலன் சங்கரனுக்கு உபதேசிக்கும்போது, வாழ்க்கையின் ஒவ்வொரு கூறையும் அணு அணுவாகப் பிரித்து அலசி, "இப்படி செய்தால் துன்பமே இல்லை" என்று முடிப்பான். முடித்த மூன்று மணி நேரத்திற்குப் பிறகு தன் வாழ்வை எண்ணிக்கொண்டு அழுவான். அன்று மாலை சங்கரனோடு பாலன் பேசிக்கொண்டிருந்தான். "இந்தப் படத்தில் உள்ள மாதிரியேதானு உன் மனைவி இருப்பாள்?" என்று சங்கரனைப் பார்த்து பாலன் கேட்டான். "ஆம்!" என்றான் சங்கரன். "அவள் பெயர்?" என்று பாலன் கேட்டதற்கு, "வனஜா! தங்கை பெயர் கிரிஜா!" என்று முடித்தான் சங்கரன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு கைதி கையில் ஒரு வெள்ளைக் காகிதத்தோடு ஓடி வந்தான். "ஏதோ 'இன்டர்வியூ' வருகிறது" என்றான் சங்கரன். ஓடிவந்த அக்கைதி பாலனைப் பார்த்து "உங்களுக்கு ஜாமீன் விடுதலை வந்திருக்கு சார்! கூப்பிடுறாங்க புறப்படுங்க! என்றான்- பாலன் மனம் ஆனந்தப் பெருக்கில் திளைத்தது. கைதியாக இருந்து பார்த்தால்தான் விடுதலையின் சுகம் தெரியும்.

பாலன் சங்கரனிடம் பிரியா விடைபெற்றுக் கொண்டான். "நீங்க போங்க சார்! நாலு நாளையில் தப்பித்து வந்துடறேன்" என்றான் சங்கரன். பாலன் சிரித்துக்கொண்டே புறப்பட்டான். கூடவே சங்கரனும் சிறைக்கதவு வரைக்கும் வந்தான். அங்கிருந்து சன்னல் வழியே பார்த்தால் வெளியே நிற்பவர்களைப் பார்க்க முடியும். வெளியில் அம்பிகா,

https://t.me/tamilpdfebooks



வனஜா, கினஜா எல்லோரும் பாலனை எதிர்பார்த்துக்கொண்டு நின்றனர். விடுதலையாகி வந்த பாலனை உற்சாகமாக வரவேற்றாள் அம்பிகா. அடுத்த கணம் அவள் முகம் மாறுபட்டது. "இந்திரா...இந்திரா...! இறந்துவிட்டாள்...!" என்று குமுறியபடியே கூறினாள். பாலன் கதறி அழுதுவிட்டான். திடீரென்று "வனஜா! வனஜா!" என்று ஒரு சத்தம் கேட்டது. பாலன் திரும்பிப் பார்த்தான். சங்கரன் காவலர்களை மீறி ஓடிவந்து வனஜாவைத் தூக்கிக் கொண்டான். இமைப்பதற்குள் வனஜாவின் கன்னத்தை நன்றாகக் கடித்துவிட்டான் சங்கரன். வெறிபிடித்த நிலையில் அவன் இருந்தான். உடனே நாலைந்து வார்டர்கள் ஓடிவந்து சங்கரனைப் பிடித்துக் கொண்டார்கள். அவனிடமிருந்து வனஜாவை விடுவிக்க அவர்கள் பட்டபாடு பெரும்பாடாய்ப் போய்விட்டது. வனஜா பயந்து நடுங்கி ஒரு பக்கத்தில் போய் நின்று கொண்டாள். வார்டர்கள் சங்கரனைக் கழுத்தில் அடித்து உள்ளே தள்ளினார்கள். பாலன் இந்த நாடகத்தில் மனம் செலுத்த முடியாமலிருந்தான். இந்திராவின் மரணச் செய்தி, தன் தலையில் விழுந்த பேரிடியாகத் தோன்றிற்று அவனுக்கு அம்பிகாவுக்கு அந்தக் கவலை இருந்தாலும், "வனஜா நாடக"த்தைப் புரிந்துகொள்ள முடியாத குழப்ப உணர்ச்சிக்கும் உட்பட்டாள். பிறகு நால்வரும் வனஜாவின் காரில் ஏறிக்கொண்டு புறப்பட்டார்கள். வழி நெடுக வனஜா அந்தக் கைதியின் செயல் பற்றிக் கடிந்து பேசிக்கொண்டு வந்தாள். தனக்கும் அந்தக் கைதிக்கும் சிறிதுகூட உறவில்லை என்பதைக் காட்டிக் கொள்வதே அவளது நோக்கமாயிருந்தது. "என் பெயர் அவனுக்கு எப்படித் தெரிந்தது" என்று வாய்விட்டுச் சொல்லி ஆச்சரியப் பட்டாள். கூட வனஜாவும் சேர்ந்துகொண்டாள். அருகிலிருந்த பாலனுக்கு முழுக்கதையும் தெரியுமென்பது அவர்களுக்குத் தெரியாது.

"உன் மாதிரி யாராவது அவனுக்கு உறவினர்கள் இருந்திருக்கக் கூடும்" என்று தத்துவ ரீதியில் கடையை விரித்தாள் கினஜா. "ஆமாம்" போட்டாள், அம்பிகா. பாலன் சிலையாகிப் போயிருந்தான். கார் வனஜா வீட்டிற்கு வந்து சேர்ந்தது.

வந்ததும் வராததுமாக அன்றிரவே ஊருக்குப் புறப்பட வேண்டுமென்று பாலன் துடித்தான். அம்பிகா அவனுக்கு ஆறுதல் கூறி, "நாளை போகலாமே" என்றாள். பாலன் ஒரு விநாடிகூடச் சென்னையில் தங்குவதற்குத் தயாராயில்லை. இந்திராவின் உடல் எரிக்கப்பட்டிருக்குமென்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும், அவளது சாம்பலையாவது கண்டுவிட அவன் மனம் துடித்தது. வனஜாவும் கினஜாவும் அவனுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்தார்கள். அன்றிரவே மணி ஒன்பது நாற்பதுக்கு தூத்துக்குடி எக்ஸ்பிரசில் புறப்பட்டான் பாலன். அவனை வழியனுப்பி வைத்த அம்பிகா, உயிரைப் பிரிந்தவள்போல் உணர்ச்சியற்று நடமாடினாள். அன்று இரவு முழுவதும் அவள் தூங்கவே இல்லை. "ஏமாற்றிக் கட்டப்பட்ட ஒரு பெண்ணின் மீது பாலன் ஏற்படுத்திக் கொண்ட அன்பு, அவனது ரத்த நாளங்களில் எவ்வளவு கலந்துவிட்டது! இவ்

https://t.me/tamilpdfebooks



வளவு அன்பும் இனி நமக்குக் கிடைக்குமாஞல் இத்தனை நாள்பட்ட துன்பத்திற்கும் பலன் கிடைத்தது போலாகிவிடும்" என்று எண்ணமிட்டாள் அம்பிகா.

வனஜாவும் கினஜாவும் வெகு நேரம் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். நான்கு பெண்கள் ஒன்ருகக் கூடிவிட்டால் தங்களுக்குள் பலவித ரகசியங்களையும் பரிமாறிக் கொள்வார்கள். அதைக் கேட்கும் வாய்ப்பு ஒரு ஆடவனுக்குக் கிடைத்துவிட்டால் அவர்களைத் தூக்கிக் கொண்டே போய் விடுவான். நல்ல வேளையாக அவர்கள் பேசிக் கொண்ட இடத்தில் ஆடவர்கள் இல்லை. இரவு ஒரு மணிக்குத்தான் எல்லோரும் படுத்தார்கள். வனஜாவும் கினஜாவும் தனித்தனி அறையில் படுத்து உறங்கிஞர்கள். வனஜா தன்னுடைய அறையை அம்பிகாவுக்குக் கொடுத்தாள். சுமார் மூன்று மணி இருக்கும். அம்பிகாவின் அறைக்குள் சன்னல் வழியே ஒருவன் குதித்தான். அம்பிகாவின் வாயில் துணியை அடைத்தான். அந்த இருளில் யாரும் யாரையும் அடையாளங்கண்டு கொள்ள முடியவில்லை.

"அடி பாதகி, என்னை மோசம் செய்தாயே, உன்னை விடமாட்டேன்" என்ற வார்த்தைகள் மட்டும் அம்பிகாவின் காதுகளுக்கு கேட்டன.

காலை பதிஞெரு மணிக்கு மேலைச்சிவபுரி வந்து சேர்ந்தான் பாலன். ஊருக்குள் வரவர அவன் மனதும் "படபட"வென அடித்துக் கொண்டது. சவக்களை தட்டிய முகத்தோடு வீட்டருகில் வந்தான். இழவு வீட்டின் பயங்கர அமைதி அங்கே குடிகொண்டிருந்தது. பாலன் நடைப்பிணமாக உள்ளே புகுந்தான். முன்கட்டிலே இருந்த சொக்கப்பரும் சின்னப்பரும் எதுவும் சொல்லாமல் அழ ஆரம்பித்தார்கள். பாலனும் அழ ஆரம்பித்தான். உள்ளே இருந்து சுந்தரம் ஓடிவந்தான். பாலனுக்கு ஆறுதல் கூற முயன்ருன். "இறக்கும் போதுகூட உன் பெயரைச் சொல்லிக் கொண்டுதான் இறந்தாள்" என்ருர் சொக்கப்பர். "கருமம் செய்யத்தான் உனக்குக் கொடுத்து வைக்கவில்லை" என்ருர் சின்னப்பர்.

திடீரென்று "அத்தான்" என்று ஒரு குரல் கேட்டது. பாலன் திரும்பிப் பார்த்தான். வாடி வதங்கிய இந்திரா நின்று கொண்டிருந்தாள். பாலஞல் நம்பமுடியவில்லை. நடந்த கதை ஒன்றும் புரியாத நிலையில் "இந்திரா" என்று ஓடிப்போய் இந்திராவைக் கட்டிக் கொண்டான். பெற்றவர்களுக்கு முன்பு கணவனும் மனைவியும் கட்டிப் பிடித்துக் கொள்வது தமிழர் பண்பல்ல. ஆஞலும், மறைந்து விட்டாள் என்று கருதப்பட்ட மனைவியை கண் முன்ஞல் காணுகிற கணவன், இடம், பொருள் பார்ப்பதில்லை. கண்ணீரும் கம்பலையுமாக இந்திராவின் தலையைக் கோதிக் கொடுத்தான் பாலன். "இறந்தது யார்" என்று தன்னையறியாமலே கேட்டான். "அத்தை, அத்தை" என்று குமுறிஞள் இந்திரா.

https://t.me/tamilpdfebooks



"அம்மா" என்று கதறினன் பாலன், கன்று பசுவைத் தேடிக் கதறுவது போல. ஒருபுறம் மகிழ்ச்சி; மறுபுறம் வேதனை. உடலை வேதனைப்படுத்து வது இந்தக் கிடுக்கித் தாக்குதல்தான். தனி மகிழ்ச்சி மனிதனை மலர வைக்கும். தனி வேதனை மனிதனைக் கருகவைக்கும். மகிழ்ச்சி கலந்த வேதனை ஆஸ்துமா வியாதியைப் போன்றது. சாகவும் விடாது; வாழவும் விடாது.

சிறிது நேரத்தில் எல்லோரும் அழுது ஓய்ந்தார்கள். பாலன் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். சுந்தரமும் அருகில் வந்து உட்கார்ந் தான். பாலனுக்கு இப்போது அம்பிகாவின் மீது ஆத்திரம் பிறந்தது. "இந்திரா இறந்துவிட்டதாகப் பொய் சொன்னாள். எவ்வளவு கல் மனம் படைத்தவள்! நமக்காகவே வாழ்வது போலல்லவா பாவனை காட்டி னாள்"—என்றெல்லாம் எண்ணி எண்ணிப் பொருமினன் பாலன்.

"இந்திரா இறந்துவிட்டதாக அம்பிகா கூறினாள். பதறிப்போய் ஓடி வந்தேன்" என்றான் பாலன், சுந்தரத்திடம். சுந்தரத்திற்கு அது சுருக்கென்று தைத்தது.

"அம்பிகா ஏன் பொய் சொல்ல வேண்டும்? சரிதான். பெண்களின் இதயம் அவர்களது வார்த்தையிலே இல்லை. அது ஒரு தனி உலகம். சந்திர மண்டலத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளுக் குக்கூட எட்டாத உலகம். நமக்கெங்கே தெரியப் போகிறது! ரெயிலில் போகும்போது அவள் நடத்தியதெல்லாம் நாடகமாகக்கூட இருக்க முடியும்" என்று எண்ணமிட்டான் சுந்தரம்.

"எப்படி நீ விடுதலையானாய்?" என்று பாலனைக் கேட்டான் சுந் தரம். நடந்த நிகழ்ச்சிகளை விவரித்தான் பாலன். "ஒரு நல்லதைச் செய்து ஒரு தீய வார்த்தையையும் போட்டு வைத்திருக்கிறாள் அம்பிகா" என்ன வேடிக்கை! இப்படி நினைத்தபோது சுந்தரத்தின் மனதுக்குள் ளேயே ஒரு சிரிப்புத் தோன்றிற்று. அவர்கள் பேச்சிலே சின்னப்பரும் சொக்கப்பரும் வந்து கலந்து கொண்டார்கள். இந்திரா ஒரு மூலையில் வந்து உட்கார்ந்தபடி அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தாள். பாலன் அடிக்கடி அவளைப் பார்த்து மனதுக்குள்ளேயே ரசித்துக் கொண்டான். பகல் உணவைக்கூட அந்த பலவீன நிலைமையிலும் இந்திரா மாடிக்கு எடுத்துக் கொண்டு சென்றாள். பாலனுக்குத் தனி யாகத் தன் கையாலேயே பறிமாறினாள். பாலன் அதைச் சாப்பிட வில்லை. "சாப்பிடுங்கள்" என்றாள் இந்திரா பரிவோடு. அவளை அருகில் இழுத்து, தன் மடியில் சாய்த்துக் கொண்டு. "நீ சாப்பிட்டு விட்டாயா" என்று மெதுவாகக் கேட்டான் பாலன். தன் வலது கன்னம் அவனது மார்பில் பட சாய்ந்து கொண்டு "இல்லை" என்றாள் இந்திரா. தன் நோய் முழுக்கக் குணமாகி விட்டதாக இந்திராவுக்கு ஒரு மயக்கம். ஒரு பிடி சோறு எடுத்து அவளுக்கு ஊட்டப்போனன் பாலன். தடுத்த இந்திரா "நீங்கள்?"—என்று கேட்டாள். பாதியைத் தன் வாயில் போட்டுக் கொண்டு பாதியை அவளுக்கு ஊட்டினன் பாலன். "கொஞ்

https://t.me/tamilpdfebooks



சம் பொறுக்கக் கூடாதா?" வாயிலிருந்த சோற்ருேடு இந்திராவை முத்தமிட்டான் பாலன். இந்திரா அந்தச் சுவையையும் சேர்த்து உண்டாள். மறு கவளம் எடுக்கவில்லை பாலன். பசி அடங்கிவிட்டது. கையைக் கழுவாமலேயே வேட்டியில் துடைத்துக் கொண்டான். கை கழுவுகிற நேரத்தில் அவளைப் பிரிந்திருக்க வேண்டுமே. அந்த அரவணைப்பை இழந்திருக்க வேண்டுமே—அதற்காகவே அவன் எழவில்லை. இந்திரா அவன் உதட்டில் ஒட்டியிருந்த உணவுச் சிதறலை மெதுவாகத் துடைத்தாள். பாலன் கேட்டான்: "ஆண்கள் தாங்களாகவே போய் மனைவியருக்கு முத்தம் கொடுக்கிருர்கள். மனைவியரும் இணங்கிக் கொடுக்கிருர்கள். ஆனல், அவர்களாகவே வந்து முத்தம் கொடுத்தால் எவ்வளவு மகிழ்ச்சிக்குரியதாகவே இருக்கும்." இந்திராவுக்கு இந்த வார்த்தைகளைப் புரிந்து கொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை. சிரித்துக் கொண்டே தலையைத் தூக்கினுள்...அடடா! உலை கொதிப்பதைக் கண்டு எஞ்சின் கண்டுபிடித்த விஞ்ஞானிபோல், பெண்களின் முத்தத்தைக் கண்டுதான் தபால் ஆபீஸ் முத்திரை கண்டுபிடித்தார்கள் போலிருக்கிறது—பாலன் இப்படிச் சொல்லவில்லை. அந்த நேரத்தில் உவமை எங்கிருந்து வரும். கவிஞர்கள் எழுதிவைத்த உவமையெல்லாம் கற்பனையில் தோன்றியது. அனுபவ நேரத்தில் உவமையும் வராது, ஆராயவும் தோன்ருது.

மறுபடியும், "சாப்பிடுங்கள்" என்ருள் இந்திரா.

"பசியில்லை" என்று கூறிய பாலன் அவள் அங்குமிங்கும் விலக முடியாதபடி கட்டுபடுத்தி வைத்துக் கொண்டான். பிரம்மச்சாரியாய் இருப்பதிலே தொல்லை இல்லை. ஆனல், கணவனுய் இருப்பவன் சில நேரங்களில் மனைவியிடம் அடையும் மகிழ்ச்சியை பிரம்மச்சாரி கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. அந்த நேரத்தில், உலகத்தில் துன்பமே இல்லை"—என்கிற எண்ணம் பாலனுக்குத் தோன்றிற்று. தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் வழக்கின் நினைவு அப்போது அவனுக்கு வரவே இல்லை.

"கேட்க மறந்துவிட்டேனே; உனக்கு உடம்புக்கு என்ன?" என்று கேட்டான் பாலன். அவளைப் பார்த்த பிறகு அதைக் கேட்கும் நினைப்பே அவனுக்கு வராமலிருந்தது.

"ஒன்றுமில்லையே!" என்று பொய் சொன்னுள் இந்திரா.

தியாகத்திற்கு உருவங்கள் பல இருக்கலாம். ஆனல், அது பிறந்த இடம் என்னவோ பெண்ணின் இதயம்தான். தான் நோயுற்றிருப்பதைச் சொன்னல் கணவனது எண்ணங்களுக்குத் தாழிடப்பட்டுவிடுமோ என்ற பயத்திலே அவள் பொய் சொன்னுள். பாலன் அதை நம்பவில்லை. "சும்மா சொல்லுடா கண்ணு" என்று முகத்தோடு முகம் சேர்த்துக் கேட்டான் பாலன்.

மனைவியை "அடா" என்று கணவனும், கணவனை அம்மா" என்று

https://t.me/tamilpdfebooks



மனைவியும் பால் மாறி அழைப்பதுதான், காதற்கதையின் சுவையான பகுதி. அப்படிக் கேட்டும் தன் உடம்புக்கு ஒன்றுமில்லையென்றே சாதித்தாள் இந்திரா. பொழுது சென்று கொண்டிருந்தது. அந்தக் காதற் புறுக்கள் ஒன்றை ஒன்று வட்டமிட்டுக் கொண்டிருந்தன. வெளி உலகம் ஒன்றிருப்பது அவர்களுக்குத் தெரியவில்லை. மாலை ஐந்து மணி சுமாருக்கு அவர்களிருந்த அறைக்கதவு தட்டப்பட்டது. தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு ஓடிப் போய்க் கதவைத் திறந்தாள் இந்திரா. அப்போது ஒரு புதிய தெம்பு அவள் உடலில் பாய்ந்திருந்தது. கதவுக்கு அந்தப் பக்கம் கையில் இரண்டு கோப்பை காப்பியை வைத்துக் கொண்டு நின்றாள் கமலம். இந்திரா அதை வாங்கிக் கொண்டு கதவைச் சாத்தினாள். கமலத்தைத் தன் கணவன் பார்த்துவிடக் கூடாது என்பதற்காகவே அவசரமாகக் கதவைச் சாத்தினாள். தன்னைப்பற்றிய தாழ்வு மனப்பான்மை அவளுக்கு. கமலத்தைப் பார்த்துவிட்டால் கணவனுக்கும் தனக்கும் அந்த நேரமிருக்கும் ஒருமை உணர்ச்சி குறைந்து விடுமோ என்ற பயம். கமலமும் அதை உணர்ந்து. "விடுவிடு" என்று கீழே இறங்கிப் போய்விட்டாள். திரும்பிய இந்திரா அங்கே ஒரு வேடிக்கையைக் கண்டாள். அவள் மனம் பூரித்தது. நெருப்புக் கோழிபோல் தலையணைக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தான். "நீ தாழிடுவதென்ன? நானே அவளைப் பார்க்க மாட்டேன்" என்று சொல்வது போலிருந்தது அது. இந்திரா "காபி" என்றாள். கோப்பையை வாங்கிக் கீழே வைத்துவிட்டு மீண்டும் அவளை அருகே உட்காரவைத்துக் கொண்டான் பாலன். இரண்டு குழந்தைகள் பிறந்து குடும்ப வாழ்க்கை கடமையாக மாறுகிற வரை கணவனுக்குக் காதல் சலிப்பதில்லை; சாப்பாடு பிடிப்பதில்லை. இந்திரா படித்தவள் அல்ல. ஆனாலும், இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியாதவள் அல்ல. அவனுடைய விருப்பத்தைச் சிறிதுகூட அவள் தட்டி நடக்கவில்லை.

அன்று இரவு இந்திராவை அழைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போவதென்று தீர்மானித்தான் பாலன்- கணவனிடத்தில் முழு நம்பிக்கை கொண்டுவிட்ட இந்திரா, தங்கையின் மீதுள்ள அன்பால், "அவளையும் அழைத்துப் போகலாமே" என்றாள். பாலன் சம்மதித்தான்.

மேலைச் சிவபுரியில் ஒரே ஒரு சினிமாக் கொட்டகை உண்டு. அதில் அப்போது ஒரு பழைய குடும்பப் படம் நடந்து கொண்டிருந்தது. பாலன், இந்திரா, கமலம் மூன்று பேரும் முதல் வகுப்பு ஆசனங்களில் வந்து அமர்ந்தார்கள். படம் இரண்டு சுருள் ஓடிய பிறகு பாலன் எழுந்து வெளியே சென்றான். சிறிது நேரத்திற்கு பிறகு வந்து அமர்ந்தான். இந்திராவுக்கு சுருக்கென்று தைத்தது. அவன் அப்போது கமலத்தின் அருகில் உட்கார்ந்திருந்தான். படம் ஓடிக் கொண்டிருந்தது.

"என்ன தவறு செய்துவிட்டோம்! கமலத்தை ஏன் அழைத்து வந்தோம்?"---இவ்வாறு எண்ணித் துடித்தாள் இந்திரா. கமலமோ என்

https://t.me/tamilpdfebooks



‘‘கமலத்தை ஏன் அழைத்து வந்தோம்?’’

https://t.me/tamilpdfebooks



சாணும் ஒருச்சாணுய்க் குறுகி உட்கார்ந்திருந்தாள். அசம்பாவிதமான இந்தச் சந்தர்ப்பத்தை அவள் எதிர்பார்த்தவள் அல்ல. தான் விரும்பாத ஒன்றையே காரணமாகக் கொண்டு மேலும் தன்னை வெறுப்பாளே இந்திரா என்று அவள் நெஞ்சம் துடியாய்த் துடித்தது. படத்திலே கதாநாயகனும் கதாநாயகியும் உல்லாசமாகப் பேசுகிற கட்டம் நடந்தது. இந்திராவின் பார்வை அதிலே வெறுப்போடு விழுந்தது. படத்திலே ஒரு உற்சாகமான கட்டம் வந்தபோது பாலன் சிரித்தபடியே பக்கத்திலிருந்த கமலத்தின் தோளில் தட்டி, திரும்பி அவளைப் பார்த்தான். திடுக்கிட்டான்—துள்ளிக் குதித்தான். எழுந்துபோய் இந்திராவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். ஆம்; அந்தத் தவறு அவன் விரும்பிச் செய்ததல்ல; இருளிலே ஏற்பட்ட தடுமாற்றம். மெதுவாக இந்திராவைப் பார்த்தான். அவளோ, மேனி கொதித்து வியர்வை வெள்ளத்தில் உட்கார்ந்திருந்தாள். அவளையறியாமலே கண்ணீர் பொலபொல வென்று வழிந்து கொண்டிருந்தது. சேலைத் தலைப்பால் மூக்கைச் சிந்தினாள். அதைக் கவனித்த கமலம் தழு தழுத்த குரலில் "அக்கா" என்ருள். "பளிச்"சென்று அவள் கன்னத்தில் அறைந்த இந்திரா, "பேசாமல் கிட சனியனே" என்றபோது கமலத்தின் உயிர் நின்று மீண்டது. பாலன் இதைப்பார்த்து மெதுவாக இந்திராவோடு ஒட்டி உட்கார்ந்து கொண்டு அவள் காதோடு காதாக "தெரியாமல் நடந்து போச்சு இந்திரா. உன் மேலே ஆணையாகச் சொல்றேன். வேணும்னு போய் உட்காரல்லெ. என்னை நம்பு" என்ருன். இந்திரா பதில் சொல்லவில்லை.

"இன்னும் நீ சந்தேகப்பட்டால் நான் செத்துத்தான் என் புனிதத் தன்மையை நிரூபிக்க முடியும்" என்று கலங்கியபடி மேலும் பேசிய பாலனை நிமிர்ந்து பார்த்த இந்திரா, அவன் கைகளை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டாள். மனத்துக்கு மீண்டும் ஒரு அமைதியைத் தேடிக் கொண்டாள்.

# 7

அம்பிகா திமிறிஞள்; கத்த முயன்ருள்; முடியவில்லை. அந்த முரடன் அவளை அழுத்தமாகப் பிடித்திருந்தான். "என்னைச் சிறைக்கனுப்பி விட்டு ஆட்டம் போடுகிருயா, ஆட்டம்? உன் அழகைக் கெடுத்து அலங்கோலமாக்குகிறேன் பார்" என்று கூறிக்கொண்டே அவளது முந்தானையாலேயே அவளது கைகளைக் கட்டிஞன். கட்டிவிட்டு பையிலிருந்து ஒரு நெருப்புப் பெட்டியை எடுத்து ஏற்றிஞன். அந்த ஒளியில் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். திடுக்கிட்டான். போய் "ஸ்விட்சை"ப் போட்டான். தீராத குழப்பம் அவனை ஆட்கொண்டது.

https://t.me/tamilpdfebooks



"சத்தம் போடாமல் நீ யார் என்று சொல்! சத்தம் போட்டால் "கொன்றுவிடுவேன்" என்று கூறிக் கொண்டே, அவள் வாயிலிருந்த துணியை எடுத்தான் அம்பிகா, பயந்து நடுங்கியபடி, "என் பெயர் அம்பிகா. இங்கே விருந்தாளியாகத் தங்கியிருக்கிறேன்" என்றாள். "வனஜா எங்கே?" என்று கேட்டான் அவன், பக்கத்து அறையைக் கையைக் காட்டினாள் அம்பிகா. மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு பக்கத்து அறைக்குப் போனான் அவன். எதிர்பாராதவிதமாக "திருடன்—திருடன்" என்று கூச்சல் போட்டாள் அம்பிகா. உடனே பளிச்சென்று அவன் வேகமாக ஓடி சன்னல் வழியே குதித்துப் பறந்தான். விளக்குகள் ஏற்றப்பட்டன. வேலைக்காரர்கள் ஓடி வந்தார்கள். வனஜாவும் கிரிஜாவும் பதறி அடித்துக் கொண்டு வந்தார்கள். அம்பிகா தன்னைச் சமாளித்துக் கொண்டு நடந்த விபரங்களைச் சொன்னாள். "வனஜா எங்கே என்று கேட்டான் அவன்" என்று கூறும்போது வனஜாவின் முகம் கறுத்தது. மென்று விழுங்கியபடி "அவன் முகத்தை நன்றாகக் கவனித்தாயா? நாம் ஜெயிலுக்குப் போயிருந்தபோது ஓடிவந்து கலகம் செய்தானே ஒரு கைதி, அவன் மாதிரி இருந்ததா?" என்று கேட்டாள் வனஜா. அம்பிகாவுக்கு இப்போது தான் பிடிபட்டது. "ஆம் அவனேதான்" என்று கத்தினாள் பிறகு இரவு முழுவதும் வனஜா தூங்கவே இல்லை. கிரிஜாவும் பதறிப்போனாள்.

மறுநாள் வனஜாவின் வீட்டுக்கு ஒரு கூர்க்காக்காரன் காவலனாகக் கொண்டுவரப்பட்டான். வெளியிலே போகும் போதுகூட அவனையும் கூட்டிக்கொண்டே போவது எனத் தீர்மானித்தாள் வனஜா. அம்பிகா ஒரு பெரிய புதிருக்குள் சிக்கிக் கொண்டிருந்தாள். ஜெயிலில் சந்தித்த கைதிக்கும் வனஜாவுக்கும் ஏதோ தொடர்பிருக்க வேண்டும்—என்கிற வரைக்குத்தான் கணக்குப்போட அவளால் முடிந்தது. அது என்ன தொடர்பு என்பதுதான் பதில் காண முடியாத புதிராக இருந்தது. சரி நமக்கென்ன?—என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள் அம்பிகா.

இரண்டு நாட்கள் நகர்ந்தன.

அன்றைக்கு மதித்தியானம் வனஜா, கிரிஜா, அம்பிகா மூவரும் கேரம் போர்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். காவல்காரன் ஓடி வந்து, "ஒரு பெரிய மனிதர் காரில் வந்திருக்கிறார்; கறுப்புக் கண்ணாடி போட்டிருக்கிறார்; அரைகுறைத் தமிழில் பேசுகிறார்; வடநாட்டுக்காரராம்! உங்களைப் பார்க்க வேண்டுமாம், பட விஷயமாக!" என்றான். உடனே ஜனஜா எழுந்து அவரை உட்காரச் சொல் என்று கூறிவிட்டு உள்ளே போய் ஆடம்பரமாகத் தன்னைச் சிங்காரித்துக் கொண்டு திரும்பி வந்தாள். முன் பகுதியில் வந்த வடநாட்டுக்காரர் அமர்ந்திருந்தார். வனஜா அவரை வணங்கியபடி உள்ளே வந்து எதிரே அமர்ந்தாள். தான் ஒரு படம் எடுக்கப் போவதாகவும் ஏது ஒரு நாட்டியக்காரியின் கதை என்றும் அதற்கு வனஜாவைத்தான் கதாநாயகியாகப்

https://t.me/tamilpdfebooks



போடுவதெனத்தான் தீர்மானித்து விட்டதாகவும் அவர் கூறினர். வனஜா, மகிழ்ச்சியினால் பேச முடியாதபடி உட்கார்ந்திருந்தாள். "ரேட் விஷயமெல்லாம் என்ன?" என்று இழுத்தார் வடநாட்டுக்காரர். "நீங்களே சொல்லுங்கள்" என்று பொறுப்பை அவர் கையில் ஒப்படைத்தாள் வனஜா.

"மூன்று வருட ஒப்பந்தம் மாசம் மூவாயிரம் ரூபாய் சம்பளம்!" என்று ஒரு போடு போட்டார் அந்த வடநாட்டுக்காரர்.

"மறுக்கவா போகிறேன்!" என்றாள் வனஜா.

அவள் மனம் ஆனந்தக் கூத்தாடியது. அவர் ஆயிரம் ரூபாய்களை அவள் கையில் வைத்து, "சாயந்தரம் வருகிறேன். ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்" என்று கூறிவிட்டு எழுந்தார். வனஜாவுக்கு அவரை மிகவும் பிடித்திருந்தது. "இரவு இங்கேயே சாப்பிட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள். அவர் சிரித்துக் கொண்டே, "வருகிறேன். நான் மாமிசம் சாப்பிடமாட்டேன். பூரி, சப்பாத்தி மட்டும் செய்யுங்கள்"— என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அவர் கண்ணுக்கு மறைந்ததும், ஒரே தாவில் உள்ளே ஓடிவந்தாள் வனஜா. அம்பிகாவும் கிரிஜாவும் மும்முரமாக கேரம் ஆடிக் கொண்டிருந்தார்கள். அவர்களை ஆடவிடாமல் காய்களைக் கலைத்தபடி தன் ஆனந்தத்தை வெளிப்படுத்திக் கொண்டாள் வனஜா. ஆயிரம் ரூபாய்களையும் அவர்களுக்குக் காட்டி, "மூன்று வருட ஒப்பந்தம் மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பளம். நான் கதாநாயகி" என்று அடுக்கினாள். கிரிஜா கைதட்டி அதை வரவேற்றாள். அம்பிகாவின் முகமும் மலர்ந்தது. அதோடு சிறு ஆசையும் அவள் மனத்தில் எழுந்தது. "நாமும் நடிக்க ஆரம்பித்தால் என்ன?"—சகவாசதோசம் என் பார்களே. அது இப்படித்தான் துவங்கும். குடும்பமாக வாழ வேண்டும் என்னும் ஆசை குறைந்து, நடிக்கும் ஆசை தலை தூக்கியது அவளிடம். அதை மெதுவாக வனஜாவிடம் சொல்லியும் வைத்தாள். "எனக்கும் ஏதாவது சந்தர்ப்பம் இருந்தால் சொல்லேன்" என்றாள்.

"ஓ, எஸ்? இனி நாம் மூன்று பேருமே சகோதரிகள். நாட்டியம், நாடகம், சினிமா எல்லாவற்றிலும் சேர்ந்தே தொழில் புரிவோம்" என்றாள் வனஜா.

"இந்தத் தொழிலுக்கு வந்தால் ஒரு மாதிரியாகத்தான் போக வேண்டியதிருக்கும்" என்று ஒரு புதிய சங்கதியைத் தொடங்கினாள் கிரிஜா. அம்பிகா அதைப் புரிந்துகொள்ளவில்லை. அரை குறையாகத் தலையை ஆட்டினாள். அவள் மனது இப்போது பின்வாங்க ஆரம்பித்தது. கடைசியில் முடிவான ஒரு எண்ணம் பிறந்தது. பாலன் விரும்பினால் மணமுடித்துக்கொண்டு அவனோடு வாழ்ந்துவிடுவது. இல்லையேல் வேறு யாருக்கும் வாழ்க்கைப்படுவது இல்லை. இதுதான் அவள் செய்து கொண்ட முடிவு.

அன்று மாலைத் தபாலில் அம்பிகாவின் பெயருக்கு ஒரு கடி

https://t.me/tamilpdfebooks



தம் வந்தது. அதைப் பிரித்துப் படித்த அம்பிகா வேதனை கலந்த ஒரு ஆச்சரியத்தில் விழுந்தாள். அந்தக் கடிதம் பாலன் எழுதியது. சுருக்கமான அந்தக் கடிதம் இதுதான்:

அம்பிகாவுக்கு,

நலம். உன்னை நான் என்னவோ என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் நீ, உன் வாழ்வுக்காக எதையும் துணிந்து செய்து விடுவாய்—சொல்லி விடுவாய் என்பதை இப்போதுதான் தெரிந்து கொண்டேன். நீ விரும்பியது போல் இந்திரா சாகவில்லை. என் கண்மணி இதோ இந்த நேரத்தில் என் மடியிலேதான் இருக்கிறாள். இனி நான் உன் முகத்தைப் பார்க்கக்கூட விரும்பவில்லை. என் தாய் இறந்து விட்டாள். இனி இந்திரா என் தாயாகவும் இருந்து என்னைக் காப்பாற்றுவாள்.

இங்ஙனம்,

பாலன்.

கடிதத்தைப் படித்து முடித்த அம்பிகா அலட்சியமாகச் சிரித்தாள். இறந்தது யார் என்கிற உண்மையும் அவளுக்கு விளங்கிவிட்டது. தன்னை வெறுக்கும் பாலனை இனி ஏன்தான் விரும்ப வேண்டும் என்று ஒரே அடியாக வெறுக்கத் தொடங்கினாள். உலகத்திலேயே மேகத்தைக் காட்டிலும் வேகமானது பெண்கள் செய்து கொள்ளும் முடிவுதான். தான் சினிமாவில் நடிப்பதென்ற தீர்மானத்திற்கே வந்துவிட்டாள் அம்பிகா. அப்பொழுது வந்த தினசரிப் பத்திரிகை ஒன்றைக் கையிலேந்தியபடியே வனஜா அங்கே வந்தாள். சிறையிலிருந்து ஒரு கைதி, தப்பி ஓடியதாக ஒரு செய்தி அதிலே பிரசுரிக்கப்பட்டிருந்தது. பெயர் சங்கரன் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதிலிருந்து வனஜாவின் சந்தேகம் தெளிந்து விட்டது. தான் ஜாக்கிரதையாக இருந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்தாள். இந்தப் பட முதலாளியைக் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டால் கவலையே இராது—என்று நினைத்தாள். அன்றே அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிடுவது என்றும் தீர்மானித்தாள்.

இரவு சுமார் ஏழு மணிக்குப் பட முதலாளி வந்து சேர்ந்தார். அவரை மாடிக்குக் கூட்டிக் கொண்டு போய் தன் அறையில் உட்கார வைத்துவிட்டுக் கீழே போய்க் காப்பி கொண்டு வந்தாள் வனஜா. காப்பியை வாங்கி மேசையில் வைத்த முதலாளி எதிரே கிடந்த சினிமாப் பத்திரிகையைக் காட்டி “இதை எடு” என்றார். வனஜா அதை எடுத்து அவர் முன் நீட்டினாள். பத்திரிகையை வாங்காமல் அவள் கையைப் பிடித்தார் அவர். வனஜா வெட்கங் கொண்டவள் போலவும், விரும்பாதவள் போலவும் சிணுங்கினாள். முதலாளி அதை லட்சியம் செய்யாமல் அவளை இழுத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார். அப்போதும் திமிறினாள் வனஜா. ஆயினும் சிறிது நேரத்தில் கறுப்புக் கொடியை இறக்கிவிட்டு வெள்ளைக்கொடி காட்டி அவர் விருப்பத்திற்கு இணங்கினாள்.

https://t.me/tamilpdfebooks



மிகவும் உற்சாகமடைந்த நிலையில் முதலாளி தன்னை அறியாமல், "உன் கழுத்திலிருந்த மச்சம் எங்கே?" என்று கேட்டார்.

வனஜா சிரித்தபடி, "என் கழுத்தில் மச்சம் இருந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

முதலாளி திடுக்கிட்டார். அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்; சமாளிக்க முயன்றார். அவர் கண்களிலிருந்து கண்ணாடி கழன்று விழுந்தது. வனஜா திகைத்தாள்.

முதலாளி கறுப்புக் கண்ணாடியை எடுத்துப் பழையபடியும் மாட்டிக் கொண்டார். வனஜாவின் திகைப்பு திகைப்பாகவே நின்றது. "ஏன் திகைக்கிறாய்" என்று அவளை அணைத்தபடியே கேட்டார் முதலாளி. "ஒன்றுமில்லை" என்று கூறிவிட்டுத் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்ட வனஜா, சிரித்துக் கொண்டே அவர் மடியில் சாய்ந்துவிட்டாள். காலையில், வனஜா முன்னாலேயே எழுந்து முதலாளிக்குக் "காபி" எடுத்து வந்து கொடுத்தாள். அந்த நேரத்தில் வனஜாவை அழைத்தபடியே அம்பிகாவும் அங்கே வந்து விட்டாள், அவளை முதலாளிக்கு அறிமுகப்படுத்திய வனஜா, அவளுக்கும் ஒரு சந்தர்ப்பம் கேட்டு வைத்தாள். "நீ சொன்னால் நான் மறுக்கவா போகிறேன்?" என்று சாவியை அவளிடம் கொடுத்து வைத்தார் முதலாளி. சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்ட முதலாளி அம்பிகாவின் முன்னிலையிலேயே வனஜாவின் மீது தனக்குள்ள அன்பை வெளிப்படுத்திக் கொண்டு வெளியேறினார்.

அன்று மாலை உற்சாகமாகப் பாடிக் கொண்டிருந்த அம்பிகாவின் முன் வக்கீல் தண்டபாணியின் குமாஸ்தா தோன்றினார். "நாளை மறு நாள் விசாரணை ஆரம்பம்" என்று சட்டப் பூர்வமாகச் சொல்லிவைத்தார். "சரி! பாலன் வந்து விடுவார்" என்று கூறி அவரை அனுப்பினாள் அம்பிகா. "நாளை மறுநாள் விசாரணை! நமக்கென்ன வந்தது? சீச்சி? அப்படி விட்டுவிடலாமா? உம்! நம்மை அவர் விட்டுவிடவில்லையா? நாம் போகாமல் இருந்தால் தண்டிக்கப்பட்டு விடுவாரே! அவர் தண்டிக்கப்பட்டால் இந்திரா கண்ணீர் வடிப்பாளே! உம்! நம் கண்ணீரை யார் கவனித்தார்கள்? ஊரார் கண்ணீரைத் துடைக்கப்போகும் ஒவ்வொருவரும் கடைசியில் தாங்களே கண்ணீர் வடிக்கும் நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். நாம் பேசாது இருந்துவிடுவோம்! அவர் இங்கு தானே வந்தாக வேண்டும்." என்றெல்லாம் சிக்குப் போட்டு சிக்கறுத்துக் குழம்பிய அம்பிகா, பாலன் தன்னைத் தேடி வந்தால்தான் போவது, என்ற முடிவுக்கு வந்தாள்.

மேலைச் சிவபுரியில் பாலன், காதல் உலகிலே களித்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் வழக்குக்கு "ஆஜ"ராகுமாறு ஒரு உத்தரவு அவன் கைக்குக் கிடைத்தது. இந்திராவிற்குக் கவலை மேலிட்டது. "மீண்டும் கணவனைப் பிரிய வேண்டுமே" என்று துடித்தாள். பாலன்

https://t.me/tamilpdfebooks



அவளுக்கு ஆறுதல்கூறிப் புறப்படத் தயாரானான். ஆனால், அவன் தந்தை அவனைத் தனியே அனுப்புவதாக இல்லை. "கூட இந்திராவையும் சுந்த ரத்தையும் கூட்டிக் கொண்டு போ" என்று கூறினார். பாலன் மகிழ்ச்சி யோடு சம்மதித்து இந்திராவையும் சுந்தரத்தையும் கூட்டிக் கொண்டு சென்றான். சென்னையில் மூவரும் ஓட்டலிலே தங்கினார்கள். நீதிமன்றத் திற்கு பாலனும் சுந்தரமும், புறப்படும்போது இந்திரா தானும் வர வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள்.

"நீ வேண்டாம். நிம்மதியாக இங்கே ஓய்வெடுத்துக்கொள். ஒரு மணிக்கெல்லாம் நாங்கள் திரும்பி விடுவோம்" என்று கூறி அவளை இருக்கச் செய்துவிட்டு பாலன் சுந்தரத்தோடு புறப்பட்டான். நீதி மன்றத்தில் பிராசிக்கியூஷன் தரப்பில் வழக்குத் துவங்கியது. அம்பிகா வின் தாய் கடுகடுத்த முகத்தோடு வந்து உட்கார்ந்திருந்தாள். பூர் வாங்க வாதம் முடிந்தது. பிராசிக்கியூஷன் தரப்பு முதல் சாட்சியாக அம்பிகாவைப் போட்டிருந்தார்கள். அவளை மறுநாள் காலை பதினொரு மணிக்கு விசாரிப்பது என்று முடிவு செய்து கோர்ட்டு கலைந்தது. சுந்தர மும் பாலனும் அறைக்கு வந்து சேர்ந்தனர். அங்கே இந்திரா படுத்த படியே சிந்தித்துக் கொண்டிருந்தாள். பாலன் வந்ததும் "தீர்ப்பு எப்படி ஆச்சு?" என்று அவசரம் அவசரமாகக் கேட்டாள். அறைக்கே தீர்ப்புச் சொல்லிவிடுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தாள் அந்தப் பேதை! அவ்வளவு சுலபமாகவா வழக்கு முடிந்துவிடும்? அதுவும் நமது நீதிமன்றங்களில்! வாலிப திபதியாக வழக்கை விசாரித்த அவர் எப்போது வயோதிகராகிறாரோ, அப்போதுதானே வழக்கு முடிவடை யும்! பாலன் சிரித்துக் கொண்டே, "நாளைக்கு மீண்டும் விசாரணை" என்றான். "இது இப்படியே எவ்வளவு நாள் நடக்கும்" என்று கேட் கேட்டாள் இந்திரா. "குறைந்தது ஆறு மாதமாவது நடக்கும்" என்று சாதாரணமாகப் பதில் சொன்னான் பாலன். "அப்படி என்றால் எதற்காக ஓட்டலில் தங்கவேண்டும்? ஒரு வீடு எடுத்துக் கொண்டு விடலாமே!" என்றாள் இந்திரா. சுந்தரம் ஆமாம் போட்டான். பாலன் இணங்கினான். மறுநாள் விசாரணை முடிந்ததும் வீடு தேடுவது என்று முடிவு செய் தார்கள். இந்திரா குளிக்கும் அறைக்குள் சென்றாள். கதவைச் சாத்திக் கொண்டாள். அப்போது சுந்தரம் மெதுவாக பாலனிடம் "நாளைக்கு அம்பிகா உனக்கு ஆதரவாகச் சாட்சியம் சொல்வாளா?" என்று கேட் அம்பிகா உனக்கு ஆதரவாகச் சாட்சி சொல்வாளா?"என்று கேட்டான். "சொல்வாள் என்றுதான் நினைக்கிறேன்" என்று சுவையில்லாமல் பதில் சொன்னான் பாலன். "ஏன், அவள் இன்றைக்கு நீதி மன்றத்திற்கு வர வில்லை" என்று சுந்தரம் கேட்டதற்கு பாலன் பதில் சொல்லவில்லை. அவன் இதயத்தில், அவன் அம்பிகாவிற்கு எழுதிய கடிதம் குத்திக் கொண்டிருந்தது. அந்த கடிதத்தைப் படித்து அம்பிகா வருந்தி, வழக்கில் அக்கரை காட்டாமலோ, எதிர்மாறாகவோ போய்விட்டால் என்ன செய்வது" என்னும் பயம் அவன் மனதில் சூழ்ந்தது. "அடடா! எவ்

https://t.me/tamilpdfebooks



வளவு முன்யோசனை இல்லாமற் செய்துவிட்டோம்!" என்று எண்ண மிட்டபடி இருந்தான் பாலன். அதைச் சுந்தரத்திடம் மெதுவாகச் சொல்லவும் செய்தான். குளிக்கும் அறைக்குள் இருந்த இந்திராவிற்கு இதெல்லாம் கேட்டது. சுந்தரம் பாலனிடம், "வா, போய் அம்பிகா வைப் பார்த்துவிட்டு வந்துவிடுவோம்" என்றான். இந்திரா வெளியில் வந்தாள், "நாங்கள் போய் வருகிறோம். நீ பத்திரமாக இரு" என்றான் பாலன். "இல்லை, நானும் வருகிறேன்" என்று புறப்பட்டாள் அவள். பாலன் எவ்வளவு மறுத்தும் பயன் இல்லாமல் போயிற்று, பிறகு அவளை யும் அழைத்துக் கொண்டு வனஜாவின் வீட்டிற்கு வந்தார்கள். அப் போது அங்கே வனஜாவும் கிரிஜாவும் இல்லை. அம்பிகா மட்டும் இருந் தாள். பாலன் வருவதைப் பார்த்து எழுந்து ஓடி வந்தாள். எல்லோரை யும் வரவேற்றாள். காபி கொண்டு வந்து கொடுத்தாள். இந்திராவோடு பேசவே அவளுக்குச் சங்கடமாக இருந்தது. பாலனிடம் எதைப் பேசு வது என்று தெரியாமல் திண்டாடினாள். அப்போதிருந்த சூழ்நிலையில் இருவரும் நல்லபடியாகப் பேசிக் கொள்ள வேண்டுமென்றால் அம்பிகா ஒரு பெரிய முன்னுரை கொடுத்தாக வேண்டும். அந்த முன்னுரையில் இந்திரா இறந்துவிட்டதாக தான் சொல்லியது ஏன் என்று விளக்கி யாக வேண்டும். இல்லையேல் சுமுகமான மனநிலை ஏற்படாது. அம்பிகா துணிந்து துவங்கினாள். நடந்ததை எல்லாம் விபரமாகச் சொன்னாள். பாலன் அதை நம்பத்தயாராய் இல்லை. ஆனாலும், அந்த நேரத்தில் நம்பு பவன் போல் தலையசைத்து வைத்தான். இந்திராவிற்கு இப்படி ஒரு நாடகம் நடந்தது அப்போதுதான் தெரியும். சுந்தரம் அந்த நேரத்தில் "அம்பிகா சிறந்த நடிகை" என்று தீர்மானித்துக் கொண்டான். பாலன் நம்புவதாக இருந்தாலும் அவன் நம்பமாட்டான் போல் இருந்தது. ஆனால், யாரும் அதை வெளிப்படுத்தவில்லை. அம்பிகா பேச்சோடு பேச்சாக தான் நடிகையாகப் போகும் முடிவையும் சொல்லி வைத் தாள்.

"இனி எனக்கு வாழ்க்கையிலே என்ன இருக்கிறது? அப்படியாவது சந்தோசமாக இருந்துவிட்டுப் போகிறேன். கண்ணீர் வடித்துக் கண்ணீர் வடித்துக் கண்களும் வீங்கிவிட்டன. சோக இருளிலேயே சுற்றிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், இப்படி ஒரு துணிகரமான முடிவுக்கு வருவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாலு காசு கையில் இருந்தால் தான் எல்லோரும் மதிப்பார்கள். வலிய வரும் எதற்குமே அவ்வளவு மதிப்பு இருக்காது. நான் வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்டப்பட்டு விட்டேன். யாரும் எனக்காகத் துளி கண்ணீர் வடித்தார்களா? ஏன் வடிக்கப் போகிறார்கள்? என் துன்பங்களுக்கு "மார்க்கெட்டு" இல்லை. சிலரது வாய், அனுதாபம் தெரிவிக்கிறது. கண்களைப் பார்த்தால்தான் இதயம் புரிகிறது. உம்! எல்லாம் வேஷக்கார உலகம்!" என்று மந்திரி களின் புத்திபோல எங்கேயோ போய் எங்கேயோ வந்து நின்றாள் அம் பிகா. சுந்தரமும் பாலனும் அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டு

https://t.me/tamilpdfebooks



மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். அம்பிகாவின் கண்களிலும் அவள் உட்கார்ந்திருந்த நிலையிலும் ஒரு தீர்மானம் தொனித்தது.

அவர்கள் போனதும் அம்பிகா கட்டிலில் வந்து சாய்ந்தாள். எதிர் பாராதவிதமாக அந்தப் படமுதலாளி அங்கு வந்து சேர்ந்தார். "வனஜா இல்லையா?" என்று கேட்டார். "இல்லை" என்றாள் அம்பிகா, பணிவோடு. "வெளியில் போயிருக்கிறார்கள். இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார்கள். உட்காருங்கள்" என்றாள். முதலாளி அமர்ந்தார். அமர்ந்தவர் திடீரென்று எழுந்தார். மாடிப் படிகளில் ஏறியபடி அம்பிகா வைக் கைகாட்டி அழைத்தார். அம்பிகா திடுக்கிட்டாள். ஆனாலும், மறுத்துரைக்கமாட்டாமல் அவர் பின்னாலேயே மாடிக்குச் சென்றாள். கட்டிலில் உட்கார்ந்த முதலாளி எதிர்த்தாற்போல் இருந்த நாற்காலி யைக் காட்டி அதில் அம்பிகாவை அமரச் சொன்னார். அம்பிகா குழம் பியபடியே அமர்ந்தாள்.

"நான் ஒன்று கேட்டால் கோபித்துக் கொள்ள மாட்டாயே!" என்று துவங்கினார் முதலாளி. "கேளுங்கள்" என்று சொல்லவந்த அம்பிகா சந்தேகத்தில் வார்த்தை வராமல் விழுங்கினாள். "நான் தனி ஆள்" என்று ஆரம்பித்தார், முதலாளி. "யார் சொன்னது? வனஜா இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவாள்" என்று மனத்தில் நினைத்துக் கொண்டாள் அம்பிகா.

"நான் வனஜாவிடம் வருவது போவதெல்லாம் தற்காலிக மகிழ்ச் சிக்காகவே தவிர சேர்ந்து வாழ அல்ல. குடியாய்க் குடித்தனமாய் வாழக்கூடிய ஒரு மனைவி எனக்குத் தேவை. உன்னைப் பார்த்ததிலிருந்து நீ மிகவும் நல்லவள் என்பது எனக்குத் தெரிகிறது. ஜாதி மதத்தில் எனக்கு அக்கறை இல்லை. நான்...நான்...உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்று நிறுத்தினார். அம்பிகா திடுக்கிட்டாள். சிறிதுகூட அவள் இதை எதிர்பார்த்தவள் அல்ல. சற்று நேரத்திற்கு முன்தான் நடிகையாகித் தீர்வது என்று முழுத் தீர்மானம் போட்டிருந் தாள். "திரும்ப அதை உடைக்க நினைக்கிறாரே இவர்! ஒருவேளை இப் படிப் பேசி நம்மையும் தற்காலிகமாக ஆக்க நினைக்கிறாரோ?" என்று எண்ணத் துவங்கிய அம்பிகா அவர் கருத்தை மறுத்துரைக்கும் பாணி யில் "நான் அதற்குத் தகுதியுள்ளவள் அல்ல" என்றாள். "தகுதியை நான் அல்லவா தீர்மானிக்க வேண்டும்" என்றார் முதலாளி.

"அம்பிகா! உண்மையைச் சொல்கிறேன். வாழ்க்கையில் நான் மிக வும் கஷ்டப்பட்டவன். படத் தொழிலுக்கு நான் வந்தது, பெண்ணாசை யால் அல்ல! சொன்னால் நம்பமாட்டாய் நீ! வனஜாவோடு நான் கொண்ட உறவை வைத்தே என்னைக் கணக்குப் போடுவாய். நான் வயோதிகன் அல்ல. வனஜாவைப் போன்ற ஓர் இளம் பெண் அருகிலே நின்று அழகு காட்டுவதும் குலுக்குவதுமாக இருந்தால் யாருக்குத்தான் ஆசை வராது? "நான் [illegible]" என்று சொல்வது போலவே அவள் அடிக்கடி நடந்து வந்தாள். வலிய வருவதை யார்தான் மறுப்பார்கள்?

https://t.me/tamilpdfebooks



அதுவும் நீண்ட நாள் தனியாக இருக்கும் என்னை ஆசைத் தீ சுலபத்தில் சூழ்ந்து கொண்டது. நான் தொட்டபோது அவள் மறுக்கவில்லை. எனக்குத் தெரியும் இப்படிப்பட்ட பெண்களின் குணம். இவளை நம்பி என் வைப்பாட்டியாகக்கூட வைத்துக் கொள்ள முடியாது. எனக்குத் தேவை குடும்பம் நடத்தக்கூடிய ஒருத்தி. லட்சக்கணக்கில் எனக்குச் சொத்து இருக்கிறது. நீ அதை ஆளத் தகுதியுள்ளவள். முழு மனதோடு கேட்கிறேன்: "என்னை மணந்து கொள்கிறாயா?"...அம்பிகாவின் மனம் மாற ஆரம்பித்தது. சபலம் தட்டிற்று. ஆனாலும், "இவர் எப்படிப் பட்டவரோ" என்ற சந்தேகம் மட்டும் நின்றுகொண்டிருந்தது. முதலாளி தன்னைப் பற்றியும் வெகுவாகச் சொல்லிக் கொண்டார். தன் கைப்பையிலிருந்து ஒரு வைர அட்டிகையை எடுத்தார். அதைக் கூர்ந்து கவனித்தாள் அம்பிகா. அவர் முகத்தையும் ஏறிட்டுப் பார்த்தாள். "அழகாகவும் இருக்கிறார்" என்று அவளுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது. அம்பிகா தலைகுனிந்து கொண்டாள். அட்டிகையை அவள் முன் நீட்டினார் முதலாளி. அவள் வாங்காமல் இருந்தாள். மெதுவாக அவள் கழுத்தில் தன் கையாலேயே அணிந்து விட்டார். அப்போதும் அவள் தடுக்கவில்லை. பையிலிருந்து பன்னிரண்டு வளையல்கள் எடுத்தார்; அணிவித்தார். அம்பிகா பேசாமல் இருந்தாள். பிறகு தோடு, மூக்குத்தி, புடைவை அத்தனையும் கையோடு கொண்டு வந்திருந்தார். அம்பிகா துணிந்து இறங்கி விட்டாள். புடைவையை உடுத்திக் கொண்டாள். தலைவாரிக் கொண்டு அவர் முன்னால் அலங்காரமாய் வந்து நின்றாள். முதலாளி சும்மா இருக்கவில்லை. அவளும் தடையொன்றும் கூறவில்லை. உடனேயே அவள் தான் அவரிடம் நடந்துகொள்ளும் முறை பற்றி வருந்தத் துவங்கினாள். "இப்படி ஏமாற்றிக் கைவிட்டு விட்டால்" என்று பயந்தாள். முதலாளி அதை அறிந்தார். "சரி, வா! இப்பொழுதே ரிஜிஸ்தரார் ஆபீசுக்குப் போய்த் திருமணம் செய்துகொள்ளலாம்" என்றார். அம்பிகா மகிழ்ச்சியோடு புறப்பட்டாள். இருவரும் ரிஜிஸ்தரார் ஆபீசுக்கு வந்து சேர்ந்தார்கள். முதற் சடங்குகள் முடிந்து கையெழுத்துப் போடவேண்டிய கட்டம் வந்தது. அம்பிகா கையெழுத்திட்டாள். முதலாளியும் கையெழுத்திட்டார். அம்பிகா கூர்ந்து கவனித்தாள் அந்தக் கையெழுத்தை.

சங்கரன்!

அவள் உயிர் நின்றுவிடும் போல் இருந்தது.

அவரை மீண்டும் நன்றாகக் கவனித்தாள், அம்பிகா. ஆம்; சந்தேகமில்லை! அதே சங்கரன்! சிறைச்சாலையில் சந்தித்த உருவம்; சிங்காரித்துக்கொண்டு வந்துள்ளது!—அவள் மேனி ஒருமுறை ஆடி அடங்கிற்று!

"சரி. போகலாம்" என்றார் முதலாளி—அதாவது சங்கரன்! அம்பிகா நடைப்பிணமாகச் சென்று காரில் ஏறினாள். அருகில் நெருங்கியபடி உட்கார்ந்து கொண்டார், முதலாளி. சாரமற்ற—சத்தற்ற வாழ்வு,

https://t.me/tamilpdfebooks



மணம் முடித்ததுமே தோன்றிவிடும் என்று எண்ணியதில்லை, அந்தப் பரிதாபத்துக்குரியவள். அவளுக்குச் சங்கரனிடம் காதல் இல்லை; காற்றாடி போல் அலைபாயும் வாழ்விலிருந்து விடுதலையும், நிம்மதியான உலகுக்குப் பாதையும் கிடைக்கும் என்றுதான் இணங்கினாள். ஆனால், "சங்கரன் தன் கணவன்" என்கிற எண்ணம் இப்போது அவளைப் பயமுறுத்தவே ஆரம்பித்தது. இப்படித்தான் வாழ்க்கை சுழித்துக்கொண்டு ஓடும். அமைதியான ஓட்டம் நிரந்தரமாகக் கிடைக்காது. வரும்; சுழிக்கும்; வருந்த வைக்கும்; துணிவு தரும்; பயம் காட்டும்; கண்ணீரை வரவழைக்கும்; செத்துப் போனால் நிம்மதி என்று எண்ண வைக்கும்; பிறகு ஓர் அசாத்தியத் தைரியம் வரும்—இவ்வளவு வர்ண பேதங்களுக்கும் இடையில்தான், மனிதன் ஆசைகளை வளர்த்துக்கொண்டே போகிறான். அம்பிகா அதற்கு விதிவிலக்கல்லள். ஆனால் அந்த நேரத்தில், அவளது சிந்தனை, உலகத்துத் தொல்லைகளெல்லாம் அவளையே வட்டமிடுவதாகக் கூறிற்று! வனஜாவும் கிரிஜாவும் அதிர்ஷ்டக்காரிகள் என்பது போல் அவள் மனம் எண்ணமிட்டது. அவள் சங்கரனை வெறுக்கத் தலைப்பட்டாள், அப்போதே! அந்த வெறுப்புத் தோன்றிய சமயத்தில், சங்கரன் அவள் தோள் மீது கை போட்டான் கார் ஓடிக்கொண்டிருந்தது. அம்பிகா, சிறிதும் தயக்கமின்றி, அந்தக் கையை எடுத்து, அவன் உடம்பிலேயே தொங்க விட்டாள்.

"சரி சரி. காரில் காதல் புரிவது இவளுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது! இயற்கைதானே!" என்று நினைத்தபடி, சிரித்துக்கொண்டே அவள் முகத்தைப் பார்த்தான் சங்கரன். பிறகு ஊடல் புரிபவன் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அம்பிகா, இந்த நாடகத்தில் சிறிது கூட அக்கறை கொள்ளவில்லை. அவள் ஒரு மாயா உலகில் அலைமோதிக் கொண்டிருந்தாள். "சங்கரன் எப்படி—எப்போது படமுதலாளி ஆனான்?"—இது அவளுக்கு நீங்காத புதிராக இருந்தது. "கொலைகாரனுக்கு என்ன! திருடிக்கூடப் பணம் சேர்த்திருக்கலாம்!" என்று தானாக முடிவு கட்டிக் கொண்டாள். மணம் முடியாமல் இருந்திருந்தால், அவனை அப்பொழுதே போலீசில் ஒப்படைத்திருப்பாள் அவள். ஆனால் இப்போது சங்கரன், தப்பி வந்த கைதி அல்லன்; அவளது கணவன்! ஆம்! கைது செய்யப்பட்டால், கண்ணீர் விடவேண்டியவள் அவள்!—அம்பிகாவின் தலை சுழன்றது. காரிலிருந்து குதித்துவிட வேண்டும் போல் தோன்றிற்று. கதவைத் திறந்தாள். படக்கென்று அவளைப் பிடித்துக் கொண்டான், சங்கரன். அம்பிகா மூச்சையுற்றாள்; சங்கரன் மடி மீது சாய்ந்தாள்.

கார், மைலாப்பூரில் ஒரு வீட்டின் அருகில் வந்து நின்றது. அதுதான், சங்கரன் இல்லம். அங்கிருந்து சில வேலையாட்கள் ஓடி வந்து கதவைத் திறந்தார்கள். அம்பிகாவைக் கைத்தாங்கலாக உள்ளே கொண்டு வந்தான், சங்கரன். படுக்கையில் கிடத்தி, தண்ணீர் தெளித்து, மூர்ச்சை தெளிவித்தான். அம்பிகா கண் திறந்தாள்.

https://t.me/tamilpdfebooks



"இது என்ன புதிய உலகம்! நான் யார்? எப்போது இங்கு வந்தேன்?"—இப்படியாக அந்த மாதிரி சமயத்தில் கேட்கவேண்டிய கேள்விகளை அவள் கேட்கவில்லை. சங்கரன் முகத்தை வெறுப்போடு நோக்கினுள். ஆனுல், அந்த வெறுப்பும் வெகுநேரம் நீடிக்கவில்லை. அவள் கண்களில் கண்ணீர் மல்கிக் கிடந்தது. "அம்பிகாவுக்கு உண்மை தெரிந்துவிட்டது!" என்பதை அவன் கண்டுபிடித்து விட்டான். தன் வாழ்வு பற்றிய சங்கடங்களும் அவன் மனதை அழுத்தின. தலை மறைவு வாழ்வு—திருடிச் சேர்த்த பணம்—அதை ஆள, ஏமாற்றி ஒருத்தியை மணந்தது—இதெல்லாம் அவன் விரும்பிச் செய்தவை அல்ல. சந்தர்ப்பம் அவனை அந்த அளவில் கொண்டு நிறுத்தியது. அதைத் தாண்டிச் செல்ல ஓர் நியாயமான—கண்ணியமான வழி துப்புரவாக இல்லை. சொன்னுல், இதை யார் நம்புவார்கள்? அதிலும் அம்பிகா எப்படி நம்புவாள்!—அவன் அழுதான். மனதிலிருக்கும் பாரம் கண்ணீர் வடிவில்தான் இருக்கிறது. அதுதான் கண்ணீராக வெளியேறுகிறது!—அம்பிகாவின் இதயம் சுலபத்தில் இளகிக் கொடுக்கவில்லை. ஆனுலும், எவ்வளவு நேரம் பெண்கள் அந்தக் கல்நெஞ்சத்தைக் கட்டிக் காக்க முடியும்!

அவள் மெதுவாக எழுந்தாள். அவன் கண்களைத் துடைத்தாள். "அம்பிகா...அம்பிகா..." என்று குழறினுன் அவன். "குபுக்"கென்று அவன் மார்பில் சாய்ந்து விம்மி விம்மி அழுதாள், அவள். அழுகை—அதுதான் தைரியத்தின் தந்தை. நிச்சயமாக, அழுவது கோழைத்தனம் அல்ல! பின்னுல் வரப்போகும் விரக்தி கலந்த வீரத்துக்கு அதுதான் முன்னுரை. இருவரும் அழுது ஒய்ந்தனர். ஒருவர் கண்ணீரை ஒருவர் துடைத்து உள்ளத்தை வெளிப்படுத்திக் கொண்டனர். கணவனும் மனைவியும் எப்போதும் இன்பத்தில் நீந்துவதைவிட பாதி நேரம் இருவரும் சேர்ந்தாற்போல் அழுவது, மகிழ்ச்சியை ஒரே அளவில் நீட்டிக்க வழிகோலும். ஆம். கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தபோது, அம்பிகாவுக்குச் சங்கரன் புதிய மனிதனுகத்தோன்றினுன்; சங்கரனுக்கு அம்பிகா உயிராகக் காட்சியளித்தாள். தலைகோதி, முகம் கோதி, கன்னத்தை வருடி, பார்த்த விழி பார்த்தபடி சிலையாக நின்று, பிறகு அவசர அவசரமாக அவள் முகத்தை மார்பில் சேர்த்துக் கொண்டான். இதெல்லாம் பக்கங்கள் விடுபடாத புத்தகத்தைப் படிப்பது போல! கொஞ்சம் கொஞ்சமாக உணர்ச்சி வெளியேறும்! பிறகு கதவைத் தாளிட்டான். கட்டிலில் அமர்ந்தபடி, அவள் தலையைத் தன் மடி மீது சாய்த்துக் கொண்டான். அம்பிகா, கதாநாயகி ஆகத் தயாரானுள்.

"அம்பிகா! உனக்கு உண்மை தெரிந்துவிட்டது என்பதை உணருகிறேன் நான். கொலை புரிந்து, சிறை சென்றவனுயிற்றே, இவனு நம் கணவன் என்று அவல முறுகிருய் நீ! அதிலும் விடுதலை பெற்றவன்கூட அல்ல; தப்பித்து வந்தவன். உன் மனம் படும்பாடு எனக்குத் தெரியும். ஏன்!—ரோஜிக் குதித்து அன்று தொல்லை கொடுத்தவனும் நான்தான்!—ஆகவே, எந்த வகையிலும் என் மீது உனக்குப் பாசம் ஏற்பட நியா

https://t.me/tamilpdfebooks



யம் இல்லே. ஆனாலும் நீ அறிந்தோ அறியாமலோ, இருக்கக்கூடிய அனைத்தையும் உன்னிடம் சொல்லிவிட நான் விரும்புகிறேன். துன்பங்களைப் பிறரிடம் சொல்வதாலே ஆறுதல் ஏற்படுகிறது. அதிலும் அந்தப் பிறர் நமக்கு நெருங்கியவர்களாக இருந்தால் மகிழ்வே முகிழ்கிறது! உன்னிடம் சொல்வதிலே எனக்குப் பெருத்த நிம்மதி கிடைக்கும். சொல்கிறேன் கேள்: நான் அதிகம் படித்தவனல்லன், ஆனாலும், படித்தவர்களைக் காட்டிலும் அனுபவம் பெற்றவன். உலகத்தை நன்ருக உணர்ந்தவன். ஒரு உண்மையை நீ அறியமாட்டாய். அன்றைக்கு, உன்னைக் கைப்பிடித்தபோதுகூட நான் அதை வெளியிடவில்லே. இன்று சொல்கிறேன். வனஜா, எனது மனைவி! நீ திகைத்துத் திணறுவாய். கதையா, கற்பனையா என்றெல்லாம் சந்தேகப்படுகிருய், இல்லே. உண்மை. என் அத்தை மகள்தான் வனஜா. அத்தையைத்தான் நான் கொலே செய்தேன். ஏன்? இன்றைக்கு வனஜா எப்படி நடந்து கொள்கிருளோ அப்படியே என் கண் முன்னுல் அப்பொழுது நடக்க ஆரம்பித்தாள். வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். கலே வெறியால் என் உள்ளத்தை உடைத்தாள்.மானம் மரியாதையையே சோதித்தாள். கேவலமான மனிதன்கூட, தன் மனைவி பிறருடன் உறவு கொள்வதைக் கண்ணுல் காணச் சகிக்க மாட்டான். நான் சராசரி மனிதன். சராசரி மனிதர்கள் கடைப்பிடிக்கும் இயற்கை நியதிகளை நானும் கடைப்பிடிப்பவன். என்னுல் பொறுக்க முடியவில்லே. அவ்வளவுக்கும் காரணமான அவள் தாயை—என் அத்தையைக் குத்திக் கொன்றேன். அதனுலே என் மானம் காப்பாற்றப்பட்டதா? இல்லே! மனைவி தப்பி வாழ்ந்தாள்—வாழ்கின்ருள். அவளேயும் கொன்றுவிடவே சிறையிலிருந்து தப்பினேன். ஒரேயடியாக அன்று கொன்று தீர்த்திருப்பேன். ஆனல், இரண்டுவகைக் குற்றங்களுக்காக நான் போலீசாரால் தீவிரமாகத் தேடப்படும் நிலைமை ஏற்படும்! ஆகவே, பொறுத்து, நேரம் பார்த்து அவளைக் கொன்று சடலத்தையே மறைத்துவிடத் திட்டமிட்டேன். அதற்கு முன்னதாகத் திருடிப் பணம் சேர்த்தேன். பட் முதலாளி என்று பட்டம் சூட்டிக் கொண்டேன். அவளோடு கொஞ்சினேன்; குலவினேன்—அறிவாய் நீ! அதற்குள் உன் நல்ல குணம் என்னைக் கவர்ந்தது; வாழ்விலே எனக்கு ஆசை பிறந்தது. சண்டாளி எப்படியோ தொலேயட்டும்; இந்த உத்தமியை மணந்து வாழ்வோம் என்று முடிவு கொண்டேன்...பிறகு நடந்தது உனக்குத் தெரியும் அம்பிகா! என்னை நம்பலாம். இதுதான் நான் வாழ்ந்த கதையும்; வாடிய கதையும். நீ எனக்குக் கிடைத்தது பெருந்தனம் கிடைத்தது போல! என்னை வெறுக்கிருயா? என் கதை உனக்குப் பிடிக்கவில்லேயா? ஏன் அப்படியே அசையாமல் இருக்கிருய்? சொல் அம்பிகா! அன்பு நிறைந்த உன் இதயம் என்னை அணைத்துக்கொள்ள இடம் கொடுக்கவில்லேயா?"—சங்கரன் என்னென்னவோ பேசிக்கொண்டு போனுன். அம்பிகா தலேதூக்கி, "அப்படியெல்லாம் பேசாதீர்கள்!" என்று கூறி, அவன் எதிர்பாராத விதமாக ஒரு பொதுவான முத்தம் பதித்தாள். சங்கரன் மேனி சிலிர்த்தது

https://t.me/tamilpdfebooks



"என்ன ஆனாலும் நீங்கள் என் கணவர். உங்களைக் கண்ணும் கருத்து மாகப் பாதுகாப்பதே இனி என் கடமை. நாம் இனி இங்கு இருக்கக் கூடாது. எங்காவது கல்கத்தாப் பக்கம் போய்விடுவோம்!"—என்றாள். அவள்.

"மறுப்பேனா? பாங்கில் ராமனாதன் என்ற பெயரில் நாற்பதாயிரம் ரூபாய்கள் போட்டிருக்கிறேன்! அதை நாளையே "வெட்டி" எடுத்துக் கொண்டு புறப்படுவோம்!" என்றான் சங்கரன். பாலன் வழக்கில் தான் சாட்சியம் சொல்ல வேண்டுமே என்கிற எண்ணமே அம்பிகாவுக்கு இல்லை.

பிறகு சங்கரன், காதல் உலகில் தான் கற்றவற்றை அம்பிகாவிடம் செயல் வழியில் விமர்சித்தான். அம்பிகா அதை ஆவலோடு வரவேற்றாள். சிந்தனையிலேயே கிடந்து வாட்டி எடுத்த இன்ப நினைவுகள், இப்போது "என்னடியம்மா! எப்படி?" என்று கேட்டுக் கொண்டிருந்தன. அவர்கள் அப்படியே ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி, இருவர் எனும் தோற்ற மின்றி மகிழ்ந்தார்கள். பொழுது சென்றது.

அவர்கள் தூங்கவில்லை.

வாழ்க்கை அப்படி ஒன்றும் துன்பமானதல்ல. இன்னல்களையும் இக்கட்டுகளையும் சாதாரணமாகக் கருதக்கூடிய மனப் பக்குவம் பெற்று விட்டால், ஆயுள் ஒரு ஐநூறு ஆண்டுகளாவது நீடிக்காதா என்று தோன்றும். அதுவும் இளம் பெண்ணொருத்தியின் மடியிலே தலைசாய்த் துக் கிடக்கும் நேரம், இன்ப உலகத்தின் முழு வடிவத்திலும் உலாவி வருகிற நேரம். அப்போது மனப் பக்குவம் இல்லாதவனுக்குக்கூடத் துன்பமில்லை. "அப்படி என்னதான் இருக்கிறது அதிலே?" என்று சிந்தித் துப் பார்த்தால்கூட, சிந்தனைக்குப் பிடிபடாத "என்னமோ" இருக்கி றது! இத்தனைக்கும் ஆண் பெண் இரு பாலாருக்குமே என்பும் சதையும் குருதியும் தான் மேனி வடிவமாக இருக்கிறது! இயற்கை இயற்கை என் கிறோமே, அது இதுதான். காதலிலே அடிபட்டு அனுபவித்து, உழன்று, "சீச்சீ! நாற்றச் சரீரம்! இதற்கு நான் அலைந்தேனே!" என்று அனு பவத்தின் விடையாக வெறுப்புத் தத்துவம் கண்டுபிடிக்கும் வேதாந்தி கூட, அந்த நேரத்தில் ஒரு பெண்ணைக் கண்டால் சபலப்படுகிறான். உலகம் அதில்தான் உருளுகிறது, பணம் கூட அதற்குத்தான் தேவைப் படுகிறது. இவ்வளவு மகத்தான சக்தி கொண்ட ஆண் பெண் உறவின் சுகத்தை அம்பிகாவும் சங்கரனும் கண்டு வரைந்தார்கள். அம்பிகாவின் மடியிலே தலைவைத்துப் படுத்த சங்கரன், பொழுது விடிகிற நேரத்தில் கண்ணயர்ந்தான். உட்கார்ந்தபடியே அம்பிகா தூங்கினாள். எழுந் தாலோ, தானும் சாய்ந்தாலோ, சங்கரன் விழித்துக் கொள்வானே என்ற பரிதாபம் கலந்த அன்பு அவள் மனதை வட்டமிட்டது. அம் பிகா—பெண்! ஆம், தாய்க்குலம் மட்டும் இல்லாவிட்டால், ஒருவரை ஒருவர் கடித்துத் தின்றுவிடுவார்கள். எல்லோருக்கும் பைத்தியம் பிடித்துவிடும். பிரமச்சரியத்தின் முதிர்ச்சி, பைத்தியம். விழித்த அம்

https://t.me/tamilpdfebooks



பிகா, சங்கரன் முகத்தை ஆசைத்திரப் பார்த்தாள். கன்னத்தை வருடிக் கொடுத்தாள், தலையைத் தடவிக் தந்தாள். தானகப் புன்னகை பூத்தாள். இரவின் இன்ப நினைவுகளை மீண்டும் எண்ணிப் பார்த்தாள். அசாத்யத் துணிவு ஒன்று அவளை ஆட்கொண்டது. வெளியில் பால்காரன் சப்தமும் வேலைக்காரர்கள் சப்தமும் "சாஸ்த்ரீய சங்கிதம்" போல "கசமுச" என எழுந்து கொண்டிருந்தன.

பொழுது நன்ருக விடிந்தது. சங்கரன் லேசாகக் கண்ணைத் திறந்தான். அம்பிகா, விழித்துக் கொண்டே இருப்பதைக் கவனித்தான். தன் தலையை அவள் கரங்கள் தாங்கியிருப்பதை உணர்ந்தான். பொழுதோ இன்பத்தோடு விடிந்ததாகத் தோன்றிற்று, அவனுக்கு!

"அம்பிகா! நீ தூங்காமலா இருந்தாய்?" அன்போடு கேட்டான். "இல்லையே! நன்ருகத் தூங்கிவிட்டேன். இப்போதுதான் விழித்தேன்." என்ருள் அம்பிகா. அவன் அதை நம்பவில்லை. உண்மையிலேயே மனைவி தூங்கியிருந்தாலும் தனக்காக அவள் தூங்காமல் இருந்தாள் என்று முடிவு கொள்ளுவதிலே கணவனுக்குப் பரம திருப்தி ஏற்படுகிறது. சங்கரன் அன்பு கலந்த ஒரு கோபத்தோடு அம்பிகாவைப் பார்த்தான். "என் தலையைத் தூக்கித் தலையணையில் வைத்துவிட்டு நீ தூங்கியிருக்கலாமே" என்பது போலிருந்தது அது. அம்பிகா சிரித்துக்கொண்டே தலை குனிந்தாள். சங்கரன் அவள் தோளில் கைவைத்து முகத்தை நிமிர்த்தி அந்தக் கண்களைக் கவனித்தான். அவள் தூங்காமல் இருந்த பெருமைக்குக் கொஞ்ச நேரம் அழவேண்டும் போலிருந்தது அவனுக்கு. இமைக்காமல் அவளையே பார்த்தான். கண்ணீருக்கு அம்பிகாவிடமிருந்து பரிவு வெளிப்படும் என்று. எண்ணுமல் எண்ணிய எண்ணத்திற்குப் பதில் கிடைக்காமல் போகவில்லை; "ஐயோ அழாதீர்கள்; என் கண்ணல்ல!" என்ருள் அம்பிகா. தனியாக இருக்கும் கணவனும் மணவியும் தாறு மாருகக் காதல் பேசினுலும் ஊருக்கா தெரியப் போகிறது? என்னென்னவோ வேடிக்கையான நாடகங்கள் இரண்டு பேருக்குள்ளேயே முடிந்து விடுகின்றன!

காலை மணி பத்தாகியும் சங்கரன் அம்பிகா நாடகம் முடிவதாயில்லை. சம்பூரண ராமாயணம்கூட காலை ஆறு மணிக்கு முடிந்துவிடும். ஆனுல் அம்பிகா சங்கரன் முதல் இரவு நாடகம் வடுவூரார் நாவல் போல வளர்ந்துகொண்டே இருந்தது. வெளியிலே வேலைக்காரர்கள், "உள்ளே எஜமானர் தூங்குகிருர்" என்று எண்ணி எழுப்பலாமா வேண்டாமா என்று தடுமாறிக் கொண்டிருந்தனர். ஒருவன் மெதுவாக, "அம்மா, அம்மா" என்று குரல் கொடுத்தபடி கதவைத் தட்டினுன். அம்பிகா எழுந்து கதவைத் திறந்தாள். அவள்தானே இப்போது எஜமானி! கதவு திறக்கும்போது அந்தக் கம்பீரமே வந்துவிட்டது அவளுக்கு. இரண்டு கோப்பைகளில் காபியோடு வேலைக்காரன் நின்றுகொண்டிருந்தான். அம்பிகா அதை வாங்கி மேசையில் வைத்துவிட்டு, "டேய்! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்று குரல் கொடுத்தாள். பிறகு

https://t.me/tamilpdfebooks



சங்கரன் எழுந்து, முகம் கழுவிக் காபி குடித்தான். அம்பிகா தன் கையா லேயே அவனுக்குத் துண்டு எடுத்து வைத்தாள். தண்ணீர் இறைத்துக் கொடுத்தாள். அவன் குளித்ததும் துவட்டிவிட்டாள். தலையைக் கோதி விட்டாள். சீவிஞள்; கடிகாரம் கட்டிவிட்டாள். பிறகு இரண்டு கைகளை யும் பிடித்துக்கொண்டு கட்டிலில் உட்காரச் செய்தாள். "இருங்கள் ஒரு ஐந்து நிமிடத்தில் வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே ஓடி ஞள்.

பதினைந்து நிமிடங்களில் அழகின் வடிவமாக அலங்காரச் சிலையாக புதிய உருவில் தோன்றிஞள். இப்போது அவள் பட்டைச் சரிகை போட்ட சிவப்பு வர்ணக் காஞ்சீபுரம் கண்டாங்கியும் ஊதா நிறத்து வெல்வெட்டு ரவிக்கையும் அணிந்திருந்தாள். கைகளிலே புதிய வளையல் கள் மின்னின. நெற்றியிலிருந்த சிறிய சாந்துப் பொட்டு அந்தத் தங்கச் சிலையின் அழகைத் தொட்டுக் காட்டுவது போல் இருந்தது. உதடு வெளுத்திருந்தது. அதைக் கவனித்த சங்கரன் அந்தக் குறையை உண் டாக்கியவன் தானே என வருத்தப்பட்டுக் கொண்டான். எதிரே நின்ற அவளை மேலும் கீழும் மாறி மாறிப் பார்த்தான். இரவு இருந்ததைக் காட்டிலும் இப்போது அவள் புதிய அழகோடு துலங்குவதாக அவன் மனம் மயங்கியது. நல்ல சேலைக்கும் ரவிக்கைக்கும் பெண்கள் ஆலாய்ப் பறக்கிருர்கள் என்ருல் அதில் அர்த்தமில்லாமல் இல்லை. அவைதான் கணவனுக்குப் பாதி வெறியை ஊட்டுகின்றன. தினமும் மனைவி சிங்காரத் தோடு விளங்கிஞல் கணவன் வேருெருத்தியை நாட நியாயமில்லை.

அம்பிகா கைகளில் ஒரு கத்தை மலர் வைத்திருந்தாள். அதை தலிற் சூடிக் கொண்டாள். அந்த மணம் அறை எங்கும் பறந்தது. சங்கரன் மூர்ச்சை போட்டு விடுவான் போல் இருந்தது. அப்படியே எழுந்து அம்பிகாவை அரவணைத்துக் கொண்டு ஒரு முத்தம் பதித்தான். "கண்ணு! கண்ணு!" என்று மாறி மாறிச் சொன்ஞன். அவள் சிரித்த படியே அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அப் போது வாசலிலே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. அதிலிருந்து யாரோ இறங்கிக் கதவைச் சாத்துகிற சப்தமும் அம்பிகாவுக்குத் தெளி வாகக் கேட்டது. அம்பிகா ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள். அங்கே வனஜா நின்ருள். இருவருக்கும் அதிர்ச்சி. வனஜா அதை எதிர்பார்த்த வள் போல முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டாள். சங்கரன் தலையைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். வனஜா அவன் அரு கில் வந்தாள். நின்ருள்; திரும்பிப் பார்த்தாள். அதற்குள் அம்பிகா அடுத்த அறைக்குச் சென்றுவிட்டாள்- வனஜா தானே போய்க் கதவைச் சாத்திவிட்டு வந்தாள். சங்கரின் அருகில் உட்கார்ந்தாள். அவனை அடை யாளம் கண்டு கொள்ளவே இல்லை. முதலாளி என்றே நம்பிஞள். "ஏன் சார் இதுதான் நியாயமா? எங்கள் வீட்டு வேலைக்காரியிடமா உங் களுக்கு ஆசை வந்தது. முதல் முதலில் உங்கள் கரம் பற்றியவள் நான். ஆண்கள் தீண்டியறியாத என் மேனியை உங்களுக்கு முதன் முதலில்

https://t.me/tamilpdfebooks



அர்ப்பணித்தவள் நான். "என் மனைவியாக இரு" என்று நீங்கள் சொல்லி யிருந்தால்கூட உங்கள் காலடியில் விழுந்து கிடக்கக் கூடியவள் நான். நினைத்துப் பாருங்கள்! அந்த ஒருநாள் நாம் எவ்வளவு சந்தோசமாக இருந்தோம்! நம் உறவை முறிக்க எங்கள் வீட்டு வேலைக்காரியே துணிந்தாள். உங்களுக்கு இது சம்மதமா? கவுரவம் இல்லாத ஒருத்தி யைப் பக்கத்திலேயே வைத்துக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா? அவளைப் போகச் சொல்லுங்கள். நான் உங்களுடனேயே இருந்து விடு கிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறேன். என்ன சொல்கிறீர் கள்?" என்று பேசியபடியே அவன் முகத்தைத் திருப்பினாள். சங்கரன் ஒரே வரியில், "எனக்கு நீ தேவையில்லை! போய்விடு" என்றான். வனஜா ஆத்திரத்தோடு எழுந்து நின்றாள். உடனே சங்கரன் எழுந்து அடுத்த அறைக்குள் சென்றுவிட்டான். கொஞ்ச நேரம் அங்கேயே நின்ற வனஜாவின் கண்களில் ஒரு பழைய தபால் உறை தட்டுப்பட்டது. அதில் "சங்கரன்" என்று விலாசம் எழுதப்பட்டிருந்தது. அவளுக்கு இப்போது வலுவான சந்தேகம் பிறந்தது. தைரியத்தோடு அவளும் அடுத்த அறைக் குள் சென்றாள். அங்கே சங்கரன் அம்பிகாவோடு ஏதோ ரகசியம் பேசிக் கொண்டிருந்தான். அவனை ஒருமுறை நன்றாகப் பார்த்துவிட்டு, "வருகிறேன் சார்" என்று விடை பெற்றுக் கொண்டாள் வனஜா.

காரில் ஏறி நேரே வீட்டிற்குச் சென்றாள். குட்டிபோட்ட பூனைப் போல் முனகிக் கொண்டிருந்தாள். அமைதியின்றி முன்னும் பின்னும் நடந்தாள். மத்தியானம் சாப்பிடக்கூட இல்லை. கினஜா காரணத்தைச் சாடைமாடையாகப் புரிந்து கொண்டு பேசாமல் இருந்துவிட்டாள். மாலை ஆறுமணி சுமாருக்கு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல வனஜா காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். நேரே போலீஸ் நிலையத்துக்கு போனாள். விவரங்களை இன்ஸ்பெக்டரிடம் சொன்னாள். உடனே இன்ஸ்பெக்டர் ஒரு நீல வாகனத்தில் சில போலீசாரைக் கூட் டிக் கொண்டு அவள் காரைப் பின் தொடர்ந்தார்.

சங்கரன் வீட்டருகே கார் வந்து நின்றது. படபடவென்று போலீ சார் இறங்கி உள்ளே சென்றார்கள். சுற்றிலும் சில போலீசார் காவல் நின்றார்கள். வனஜா வெற்றிப் பெருமிதத்தோடு தன் காரின் அருகி லேயே நின்றாள். போலீசார் வீடு முழுக்க சோதனையிடத் தொடங்கி னார்கள். ஆனால், அங்கே சங்கரன் இல்லை. ஐந்து மணிக்குச் சங்கரனும் அம்பிகாவும் காரிலே புறப்பட்டுச் சென்று விட்டார்கள் என்கிற செய்தி தான் அவர்களுக்குக் கிடைத்தது. கார் நம்பர் என்ன என்று விசாரித் தார்கள். வேலைக்காரர்கள் ஆளுக்கொரு நம்பர் சொன்னார்கள். அவர் களைக் கைது செய்து கொண்டு இன்ஸ்பெக்டர் புறப்பட்டார். வனஜா ஏமாற்றத்தோடு வீடு திரும்பினாள்.

அந்த நேரத்தில், அம்பிகாவும் சங்கரனும் சென்ற கார் சென்னை யைக் கடந்து 70 மைல்களுக்கப்பால் சென்றுவிட்டது. அம்பிகாவை அணைத்தபடி காரிலே மயங்கிக் கிடந்தான் சங்கரன்.

https://t.me/tamilpdfebooks

# 8

இந்திரா, பாலன், சுந்தரம் ஆகியோர் தியாகராய நகரிலேயே ஒரு வீடு பிடித்துக் கொண்டு தங்கியிருந்தார்கள் வழக்கு விசாரணைத் தேதியன்று மூவருமே கோர்ட்டுக்குச் சென்றார்கள். அன்றைய விசாரணையில் அம்பிகாவைக் காண முடியவில்லை என்று, ஒத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டார் ரெங்கலட்சுமியின் வக்கீல். வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. அப்படியே மூன்று முறை ஒத்திவைக்கப்பட்ட பிறகு, அதற்கு மேலும் ஒத்திவைப்பதற்கில்லை என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தார் நீதிபதி. பாலன் ஆனந்தத்தில் மிதந்தான். இந்திராவும் அப்படியே! சுந்தரம் ஒரு பெரிய காரியம் முடிந்ததாகத் திருப்திப்பட்டுக் கொண்டான். "எதற்காக வீடு பிடித்தோம்" என்று மூன்று பேருமே வருத்தப்பட்டுக் கொண்டார்கள். ஆனாலும். வழக்குத் தள்ளுபடியான மகிழ்ச்சியில் அது ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. இந்திராவும் பாலனும் அன்று இரவு முழுவதும் ஆனந்தக் கடலில் மிதந்தார்கள்.

மறுநாள் சுந்தரம் புதுக்கோட்டைக்குப் புறப்பட்டான். "இன்னும் நான்கு நாள் இருங்கள் அண்ணா" என்று வற்புறுத்தினாள் இந்திரா. அந்த வீட்டிலேயே குடியிருந்து விடுவதென்று முடிவு கட்டிக் கொண்டு தான் அவ்வாறு கூறினாள். அதை அங்கிகரித்து-விட்டு, "நாலுநாளில் வருகிறேன்" என்று கூறிப் புறப்பட்டான் சுந்தரம். இந்திராவும் பாலனும் வழியனுப்பி வைத்தார்கள்.

அடுத்தநாள் இந்திரா வாந்தி எடுத்தாள்.பாலனுக்கு விவரம் புரிந்தது திருமணம் ஆகி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன அல்லவா? சிரித்துக் கொண்டே அவள் முகத்தைப் பார்த்தான். அவள் தன் கண்களால் பதில் சொன்னாள். இந்த நிலையில் திடீரென்று பாலன் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அது ஓட்டல் முகவரிக்கு போய்த் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் சொல்லிய செய்திகளின்படி அம்பிகா கல்கத்தாவில் இருப்பதையும் திருமணம் செய்து கொண்டதையும் விளங்கிக் கொண்டான் பாலன். ஆனாலும், அதில் அம்பிகாவின் முகவரி குறிக்கப்படவில்லை.

இந்திரா தன் குடும்பத்தில்பட்ட அனுபவங்களை வைத்து வாழ்க்கையை எப்படி நடத்துவது என்று திட்டம் தயாரித்துக் கொண்டாள். கணவனின் சட்டை வேட்டிகளைத் தானே துவைத்து, பெட்டிபோட மட்டும் வெளியில் அனுப்பினாள். ஒரு பட்ஜெட் தயாரித்தாள். அதிலே அவளுக்கு வேண்டிய அலங்காரச் சாமான்கள் ஒன்றுமேயில்லை. செருப்புத் துடைப்பது முதல் சிகை அலங்காரம் வரை கணவனுக்கு எல்லாப் பணிவிடைகளையும் தானே செய்தாள். அதிலே ஒரு அலாதி உற்சாகம் அடைந்தாள். எப்போதும் தன்னை அழகாக வைத்துக் கொண்டாள்.

https://t.me/tamilpdfebooks



பத்திரிகாலயத்திலிருந்து பாலன் திரும்பும் போது, ஏதோ நிறையப் படித்தவள் போல் அரசியல் விஷயங்களை விவாதிக்க ஆரம்பித்தாள். கறுப்புப் பெண்களும் கணவனுக்குக் காதலை ஊட்ட முடியும் என்பதற்கு உதாரணமாக விளங்கினாள். "காதல் டூயட்" உள்ள "ரிகார்டு"களாக வாங்கினாள். பாடிப் பாடிப் பார்த்துக் கொண்டாள். பக்கத்து வீட்டுப் பருவதம் புது தினுசில் ரவிக்கை போட்டிருப்பதைப் பார்த்து, அது மாதிரிப் போட்டுக் கொண்டால் தானும் நாகரிகமாகத் தன் கணவன் கண்களுக்குத் தட்டுப்படலாம் என்று எண்ணி, அந்த ரவிக்கைக்காக ஒரு பத்து ரூபாய் செலவழித்தாள்.

தினசரி தன் மனைவி புதுப்புது அலங்காரத்தோடு விளங்குவதைப் பாலன் கண்டான். அவளது அந்தரங்க நோக்கம் பிடிபட்டதால் அந்த அலங்காரங்களை வெகுவாக ரசித்தான். எழுத்தாளன் அல்லவா? அழகான ஒரு பெண்ணை நினைத்துக் கொண்டு அழகற்ற ஒரு பெண்ணிடம் காதல் புரியும் சக்தி எழுத்தாளனைத் தவிர வேறு யாருக்கு வரும்? நேரே பார்த்தாலும் கண்ணாடியிற் பார்த்தாலும் இந்திரா கறுப்புத் தான். மனதாலே பார்க்கும் போதுதான் பாலனுக்கு அவள் அழகி. அவள் செய்து கொண்ட அலங்காரங்கள் ஒட்டவே இல்லை. "இது செயற்கை! இது இயற்கை" என்று எடுத்துக் காட்டிக் கொண்டுதான் இருந்தது. பாலன் அதை அவளிடம் சொல்லவில்லை. இலக்கியத்திலிருந்து மேற்கோள் காட்டி அவள் அழகை விமர்சித்தான். "சித்திரத்தில் இருப்பது போலவே இடை இருக்கிறது" என்றான். "ஆறடிக் கூந்தல் ஆவியைப் பறிக்கிறது" என்றான். சுருக்கமாக, அனுமனிடம் ராமன் வர்ணித்ததாகக் கம்பன் சொன்னதை அப்படியே கையாண்டான். இந்தக் கற்பனையிலேயே கடைசிவரை வாழ்ந்துவிட வேண்டும் என்று முடிவும் கட்டிக் கொண்டான்.

நாட்கள் நகர்ந்தன. பாலன் வாழ்க்கை வம்பில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. "எந்தவிதத் துன்பமும் இனி இருக்காது" என்று அவர்கள் முடிவு கட்டிக் கொண்டார்கள். ஆனால், உலகம் தோன்றியது முதல் ஒரே பாட்டையில் நேராக யாருடைய வாழ்வும் ஓடியதில்லையே! அவர்கள் மட்டுமா அதற்கு விதி விலக்காக முடியும்? வாழ்க்கை வளைந்து நெளிந்து போவதற்குத் தெய்வமோ, விதியோ காரணமல்ல. எல்லோர் வாழ்விலும் அது ஏற்படுகிறது என்பதற்காக அதற்கொரு அதீத சக்தி கொடுத்து விடுவதும் மடமை. காட்சி உலகின் அலை மாற்றங்கள் மனித மனதின் உணர்வை மாற்றுகின்றன. சுற்றுச் சார்பான பள்ளம் மேடுகளை உண்டாக்குகின்றன. அவற்றை ஒரே அளவில் தாண்டக்கூடிய சக்தியை ஒரு சிலரே பெறுவதுண்டு. அந்த ஒரு சிலரில் சராசரி மனிதர்களான பாலனோடு இந்திராவோ அடங்க முடியாது. வாழ்க்கையின் ஆசாபாசங்களுக்கும் தோற்றத்தின் மாற்றங்களுக்கும் வலியக் கட்டுப்படுகிற மனம் மனித மனம். அதை ஒரே நிலையில் இருக்கச் செய்யத் தொல்லைப்பட்டு முயற்சித்தால் உடம்பெல்லாம் எரிவது போலிருக்

https://t.me/tamilpdfebooks



கும். இரும்பே துருப்பிடிக்கும் போது எலும்பும் சதையும் எவ்வளவுக்குத் தாங்கும்! ஆம்! நன்கு ஓடிக் கொண்டிருந்த இந்திரா பாலன் வாழ்க்கையில் துன்பம் குறுக்கிடும் நிலைமை ஏற்பட்டது. கர்ப்பிணியான இந்திராவின் மேனியில் சில தடித்த தழும்புகள் தோன்றின. அவை நாளுக்கு நாள் அதிகரித்தன. விவரம் புரியாத பாலன் டாக்டரை அழைத்துப் பார்த்தான். அவர் கண்டுபிடித்த நோய் பாலனின் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது.

இந்திராவுக்குக் குஷ்டம்!

டாக்டர், பாலனைத் தனியாக அழைத்து வந்து இன்ன நோய் என்று முழுக்கச் சொல்ல மனம் வராமல் முக்கி முனகித் திணறிச் சாடையாகச் சொல்லி வைத்தார். அவர் சொன்னது இந்திராவுக்குத் தெரியாது. பாலன், டாக்டரை அனுப்பிவிட்டு அசந்துபோன நிலையில் இந்திராவிடம் வந்தான். "என்ன சொன்னார் டாக்டர்?" என்று கேட்டாள் அந்த இளமனதுக்காரி. சொன்னதை அப்படியே சொல்லிவிடலாம். ஆனால், சொன்ன பிறகு அவள் மனம் என்ன பாடுபடும்? பாலனின் இதயத்திலே கருணை இருந்தது; அன்பு இருந்தது; இந்திராவிடத்தில் வலிய அவனே ஏற்படுத்திக் கொண்ட பாசமும்கூடச் சேர்ந்து நின்றது.

"ஒன்றுமில்லை! இது ஒருவகையான சிரங்காம். நாலு ஊசி போட்டால் தீர்ந்துவிடுமாம்" என்றான் பாலன். தான் சொல்லுகிற ஒரு பொய் பிறரைச் சந்தோசப்படுத்துகிறது என்றால், அது மாதிரிப் பொய்களைத் தொடர்ந்து சொல்வது, மகிழ்ச்சி கொள்வது அன்பு இதயங்களின் வழக்கம். பாலன் பொய்யை ஒரு வரியோடுவிடத் தயாராயில்லை. மேலும் தொடர்ந்தான்: "நாட்டு மருந்திலேகூட இது தீர்ந்துவிடும். எதற்கும் அல்லோபதி வைத்தியர் வந்தால் நல்லதாயிற்றே என்பதற்காக அழைத்தேன்!"

இந்திரா மகிழ்ச்சியோடு அவனைப் பார்த்தாள். "சிரங்குதானே! வேறொன்றுமில்லையே!" என்றாள். பாலன் மேனி மயிர்க்கூச்செறிந்தது. சிரித்துப் பதில் சொல்ல முயன்றான். சிரிப்பா வரும்? இக்கட்டான நேரத்திலும் சிரித்துக் கொண்டே பதில் சொல்ல அவன் என்ன காந்தியா? புத்தனா? ஆனாலும் பாலன் மிகுந்த கஷ்டப்பட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "சேச்சே! வேறொன்றுமில்லை, சிரங்குதான்" என்றான்.

"ஏற்கெனவே நான் கறுப்பு. இதிலே சிரங்கு வேறு. என் தோற்றம் உங்கள் பொறுமையைத் தொடர்ந்து சோதிக்கிறது" என்று மெதுவாக இலைமறை காயாகச் சொன்னாள் இந்திரா. பாலனுக்கு அது புரிந்தது. உண்மையிலேயே அது சிரங்குதான் என்றால் உற்சாகமாகக் கூடப் பதில் சொல்லியிருப்பான். அது குஷ்டம்...! பாலனை வேதனையும் அன்பும் மாறி மாறித் தாக்கின.

"சிரங்கு வந்தால் என்ன? அது வரும் போகும்! எல்லோருக்கும்

https://t.me/tamilpdfebooks



வருவதுதானே!" என்றான் பாலன். ஆம். சிரங்கு வரும், போகும்; குஷ்டம் அல்லவே! பாலன் இதைச் சொல்லவில்லை. மனத்துக்குப் புதிய சக்தியை வரவழைத்துக் கொண்டு அவள் தலையைக் கோதிக் கொடுத்தான். வலிய ஏற்படுத்திக் கொண்ட அன்பு, அவள் உடம்பைத் தொட இடங்கொடுக்கவில்லை. கலங்கிக் கிடந்த அன்பு பார்வை அவளது உதடுகளை வட்டமிட்டது. அந்தக் கொடிய நோயின் பளபளப்பு அங்கே மின்னலிட்டது. பாலன் நடுங்கினான். "எப்படி இவளைத் திருப்தி செய்யப் போகிறோம்?" என்று அவன் மனம் குழம்பிற்று. அந்தக் குழப்பத்தை அறியாத இந்திரா மகிழ்ச்சியோடு அவன் மார்பில் சாய்ந்தாள், அவன் ஒருமுறை செத்துப் பிழைத்தான். "இருங்கள், காபி கொண்டு வருகிறேன்" என்று உள்ளே ஓடினாள் இந்திரா. பாலன் செதுக்காத சிலையாகக் கட்டிலிலேயே உட்கார்ந்திருந்தான். திரும்பிய இந்திரா ஒரு கோப்பைக் காபியை அவன் முன்னால் நீட்டினாள். சாதாரண நேரங்களில் அவள் காபி கொடுக்கும்போது "நீ ஒரு வாய் குடித்துவிட்டுக் கொடு" என்பான். அவளும் அப்படியே கொடுப்பாள். அவனும் வாங்கிக் குடிப்பான். இப்போது அவன் அப்படிச் சொல்லத் தயாராயில்லை உடனேயே கோப்பையைக் கையில் வாங்கிக் கொண்டான். ஆனால் ஊடலை எதிர்பார்த்த இந்திராவின் முகத்திலே ஏமாற்றம் கொப்பளித்தது. காபியையும் அவன் சுவைத்துக் குடிக்கவில்லை. அருவெறுப்பு உணர்ச்சியோடு மடமடவென்று குடித்து முடித்தான். இந்திராவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒன்றும் பேசாமல் திரும்பி வேறு கட்டிற்குச் சென்றாள். புதிய புடவை எடுத்துக் கட்டிக் கொண்டாள். மவுடர் தடவினாள். வாசனை பூசிக் கொண்டாள். சீவி முடித்துச் சிங்காரமாகத் திரும்பி வந்தாள். அவள் இப்போது அழகாய்த்தானிருந்தாள். அதைக் காண வேண்டிய பாலனின் இதயந்தான் இருள் தோய்ந்து கிடந்தது "அத்தான்" என்றாள்; அமைதியையே பதிலாகப் பெற்றாள். அருகிலே அமர்ந்தாள்; அவன் அசையாமல் இருந்தான். முகத்தைத் தொட்டாள் பதுமைபோல் திரும்பினான். அவனையே பார்த்தாள். அழுகை வந்துவிட்டது. "குபுக்"கென்று படுக்கையில் சாய்ந்து குமுறிக் குமுறி அழுதாள் அழுவதற்கும் சிரிப்பதற்கும் நாடி நரம்புகள் சுறுசுறுப்பாக வேலை செய்கின்றன. பாலன் அவளைச் சமாதானப்படுத்தினான். அதில் முழுமை பெற்ற அன்பு இல்லை. கொடிய நோய் என்ற செய்தி தெரிந்த அரை நாளிலேயே அந்த அன்பு பாதி தேய்ந்துவிட்டது. சுயவிளம்பரத்தால் கிடைக்கும் புகழ் போலச் சுலபத்திலே இறங்கி விடுகிறது, "வலிந்த அன்பு". இதய சுத்தத்திற்காகக் காதலிக்கிறேன் என்று எவன் சொன்னாலும் அது புரட்டு. பத்து சதவீதம் இதயத்துக்காகவும் பாக்கி தொண்ணூறு மேனி அழகுக்காகவும் என்பதுதான் காதல் கணக்கின் பங்கீடு. இந்திரா படித்தவள் அல்ல. அவளுக்கு அது தெரியாது. அவளாலே அழத்தான் முடிந்தது. இந்தச் சமுதாய அமைப்பிலே பெண்களால் அது ஒன்று மட்டும்தான் செய்ய முடியும். பாலன் அவளைச் சமாதானப்

https://t.me/tamilpdfebooks



படுத்துகிற பாவனையில் பேசிவிட்டு வெளியேறினன்.

அமைதியற்ற அவன் மனம் அவன் கால்களைக் கடற்கரையை நோக்கித் திருப்பிவிட்டது. சென்னையில் இருக்கிறவர்கள் ஏதோ கடற்கரையில் அமைதி காய்த்துத் தொங்குவதாகக் கருதுகிறார்கள். பெரும்பாலோர் அதைத் தேடியே வருகிறார்கள், சிலர் வம்பளப்பதற்காக வருவதுண்டு. அவர்கள் ரோட்டுக்குப் பக்கத்திலேயே போய் உட்காருவார்கள். பாலன் கடலுக்குப் பக்கத்திலேயே போய் உட்கார்ந்தான். குமுறிக் குமுறி அலை அடிக்கும் கடல் அவனது தொல்லையை—துயரை மிகைப் படுத்திற்றே ஒழிய குறைப்பதாயில்லை. செம்படவர்கள் படகுகளிலே வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். கரையிலே அவர்களின் பெண்டு பிள்ளைகள் அவர்களை எதிர்பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள். "சின்ன மீனு, பெரிய மீனு?—கணவன் காயப்படாமல் திரும்பினனு?" என அவர்கள் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தார்கள். கடற்கரையிலே அவர்களின் காலடிகள் பாலனின் இதயத்திலே துன்பம் நடந்து சென்ற சுவடுகள் போல் தட்டுப்பட்டன. மோதி வந்த அலை அந்த நிலப் பகுதியைப் பளபளப்பாகச் சமப்படுத்திவிட்டுச் சென்றது. அடிச் சுவடுகள் மறைந்தன. பாலனின் இதயத்திலே தோன்றிய வடுக்களை எந்த அலை தீர்த்து வைக்கும்? கற்பனை அவனைக் கடலோடு இழுத்துச் சென்றது. வாழ்வின் தேவைகளைப் பற்றி அக்கறை கொள்ளாமல் ஆணும் பெண்ணும் ஆடித்திரியும் ஆனந்த மேடையாக உலகம் ஏன் இருக்கக் கூடாது? அடிக்கடி சுவடுபடுதலும் அலை மோதுதலும், முதல் மோதல் வேதனையைத் தீர்ப்பதும், மறு மோதல் வேதனையை உண்டாக்குவதும், ஓடிவந்த அலை கிளிஞ்சல்களை விட்டுச் செல்வது போல் வந்த தொல்லைகள் அடையாளச் சின்னங்கள் வைத்து விட்டுப் போவதும்—மனிதனுக்குத்தான் எவ்வளவு தொல்லைகள்! இதற்கிடையில் எத்தனை ஆர்ப்பாட்டங்கள்! வாழ்க்கையை விமர்சித்த தத்துவஞானிகள் இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவு பெற்றெடுத்த குழந்தைகள். அந்தக் குழந்தைகளைக் கண்ட பிறகும் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் பட்டுத் தேற வேண்டியவர்கள்; பக்குவமில்லாதவர்கள் பாலன் தனக்குச் சம்பந்தமில்லாத இந்தத் தத்துவத்திலும் கொஞ்ச நேரம் செலவழித்தான்.

எப்போதும் சாவு வரத்தானே போகிறது என்ற முடிவுக்கு வந்தவன் ஒருபோதும் துன்பப்படுவதில்லை. அந்த முடிவுக்கு வரக்கூடிய பக்குவம் பாலனுக்கு இல்லை. பற்பல நினைவுகளில், அலையிலே நீந்தும் மீன்போல், அவன் எழுந்து எழுந்து அமிழ்ந்து கொண்டிருந்தான். "களுக்"கென்ற ஒரு சிரிப்பொலி அவன் காதுகளில் மோதியது. திரும்பிப் பார்த்தான். சித்திரப்பாவை போன்ற ஒரு சேயிழையும் அவள் கணவனும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். கணவன் எழுந்து ஓட முயல்கிறான். மனைவி அவன் கையைப் பற்றிக் கொண்டு ஓடவிடாமல் தடுத்தபடி சிரிக்கிறாள். அதைப் பார்க்க பாலனின் மனம் அந்த இடத்திலே அவனையும் இந்திராவையும் பொருத்திக் கொண்டு நின்றது.

https://t.me/tamilpdfebooks



பாலன் எழுந்து ஓட முயல்கிறான். இந்திரா கையைப் பிடித்துக் கொள்கிறாள். ஆனால், அவள் சிரிக்கவில்லை. பொங்கிப் பொறுமி அழுகிறாள். "இதுதானா உங்கள் பாசம்? இதற்காகவா இவ்வளவு அன்பு செலுத்தினீர்கள்? வந்தது கொடிய நோய் என்றால் அதற்கு நான் என்ன செய்வேன்? என் கட்டுக்குள் அடங்கக் கூடியகாரியமா? என்னை மீறிய ஒன்று! அதற்காக என்னை விட்டு ஓடுவது நியாயமா?" என்று இந்திரா கதறுகிறாள். பாலனின் கற்பனை வளர்ந்தது. முதலில் "கண்ணே" என்று கதறிச் சாயவேண்டிய அவனது இதயம் அந்த வரம்பை மீறி முடிவை மாற்றியமைத்தது. "என்னைத் தொல்லை செய்யாதே! என் வீட்டிலேயே இரு. ஆனால், என் காதலை எதிர்பாராதே. அதிலே உனக்கு என்ன சங்கடம்? உனக்கும் தொல்லையில்லை. எனக்கும் தொல்லையில்லை"—இப்படி ஒரு முடிவு. அது நியாயம் போலவும் தோன்றிற்று. அந்த இளங்காதலர்கள் பல்லைக் கடித்துக் கொண்டு பேசுவதன் மூலம் அன்பின் கனத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வாழப்பிறந்தவர்கள். பாலன் அந்தக் காதலர்களை அலட்சியமாகப் பார்த்தான். "எனக்கும் இப்படி ஒரு அழகான மனைவி இருந்தால் நானும் இப்படிச் சந்தோசமாகத்தான் இருந்திருப்பேன் அழகான மனைவியைப் பெறக்கூடிய தகுதி எனக்கு இல்லையா என்ன?"—அவன் மாப்பிள்ளை போல் நிமிர்ந்தான். கடற்கரை மணலைக் குவித்துக் குவித்துச் சமப்படுத்தினான். மனம் நினைப்பதைக் கை செய்கிறது. மனதிலே ஒன்றை நினைத்துக் கொண்டு கையால் ஏதாவது செய்து கொண்டிருந்தால், கை அப்படி ஒரு காரியம் செய்கிறது என்ற நினைவே வராது, வரவில்லை பாலனுக்கு. ஒரு இடத்து மண்ணை எடுத்துத்தான் இன்னொரு இடத்து மலையை உண்டாக்கினான். ஒரு மலைக்கு ஒரு மடு. இயற்கையின் நியதி. பாலனுக்குப் புதிய எண்ணம் வளர்ந்தது. அதே அளவிற்குப் பழைய காதல் குறைய ஆரம்பித்தது. எழுந்து கொஞ்ச தூரம் நடந்தான். அங்கே ஒரு கிழவனும் கிழவியும், அவர்களும் காதலர்கள் போலத்தான் சிரித்துக் கொண்டிருந்தார்கள். "அடேயப்பா இவர்கள் காதல் எவ்வளவு வருடங்கள் தாண்டி நிலைத்திருக்கிறது?—உம்—இடையிலே இவளுக்குக் குஷ்டம் வந்திருந்தால் தெரியும்"—பாலன் இப்படித் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டான். மேலும் நடந்தான். அங்கே ஒரு சிறுவனும் சிறுமியும் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். "இவர்களுக்கும் ஒரு நாள் கலியாணமாகும், இப்போது போலவே உற்சாகமாக விளையாடுவார்கள். உம்... இவளுக்குக் கொடிய நோய் கண்டால் தெரியும்"—பாலன் இந்தச் சிந்தனைக்கும் அந்த முத்திரை போட்டான். பாலனின் இதயத்திலிருந்து இந்திரா முக்கால் திட்டம் கீழே இறங்கிவிட்டாள். ஆற்றுவார் இல்லாத அந்த அபலை, பாலனின் இதய நாடகம் தன்னை வெகுதூரம் பின்தள்ளிவிட்டது என்பதை அறியமாட்டாள்.

வீட்டிலே நிம்மதியின்றித் தவித்துக் கொண்டிருந்தாள். தான் ஏன் அன்றைக்கே இறந்திருக்கக் கூடாது என்ற ஒரே கேள்விதான் அவள்

https://t.me/tamilpdfebooks



மனதிலே எழுந்து கொண்டிருந்தது. இரவு பதினேரு மணிக்கு பாலன் வீடு திரும்பினன். இந்திரா சாப்பிட அழைத்தாள். பசியில்லை என்றன். எப்போதும் அருகிலே படுத்து அவளை அணைத்தபடி தூங்கும் அவன், அன்று தனியாகப் படுத்துக் கொண்டான். இந்திரா "ஏன்" என்று கேட்கவில்லை. தமிழ்நாட்டுப் பெண்கள் அதைமட்டும் கேட்கமாட்டார்கள். நாணம் அவர்களது சொத்து" ஆனல், ஏன் தனியாகப் படுக்கிறீர்கள் என்று இந்திரா அவனைக் கேட்காததற்கு நாணமல்ல காரணம், சிரங்கு! —ஆம்! அவள் அப்படித்தான் தெரிந்து வைத்திருந்தாள். தான் ஒருபுறத்தில் பாய்போட்டுத் தனியாகப் படுத்தாள். தூக்கமா வரும்? தூங்குவதுபோல் பாவனை செய்யக்கூட அவள் தயாராயில்லை. விழித்துக் கொண்டே இருந்தாள், கொஞ்ச நேரம் கழித்தாவது பாலன் அருகிலே வருவான் என்று கருதினள். மணி ஒன்றடித்தது. பாலன் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். தாளமுடியாத இந்திரா மெதுவாக எழுந்து விளக்கை ஏற்றினள்- சத்தம் அவனுக்குக் கேட்கிற அளவுக்கு நடந்தாள். தண்ணீர் குடிப்பதுபோல் பாவனையோடு குவளையை மோதினள். செருமினள். அப்போதுதான் பாலன் மெதுவாக விழித்துப் பார்த்தான். "தண்ணீர் வேண்டுமோ" என்றள்; வேண்டாம் என்று தலையாட்டினன். பரிவோடு பக்கத்தில் வந்து, "காலைப் பிடித்து விடட்டுமா?" என்றள். "இல்லை, தூங்கு" என்று சொல்ல வந்தான். அவன் தொண்டை அடைத்தது. அவளது அன்புக் கேள்வியின் வலிமை அவ்வளவு! பதிலே எதிர்பாராமலே இந்திரா அவன் காலடியில் உட்கார்ந்து கால் பிடிக்க ஆரம்பித்தாள். அவன் மனம் இளகத் துவங்கிற்று. சிறிது நேரம் சென்றது. சூடான இரண்டு கண்ணீர்த் துளிகள் அவன் காலிலே விழுந்தன. அவனது பாராமுகம் பறந்தது. "இந்திரா" என்று அழைத்தபடியே எழுந்தான். அழுதபடியே இருந்தாள் அவள். கண்ணீரைத் துடைத்தான் அவன். "கலங்காதே" என்றன். "யார் என்ன சொன்னர்கள்? எதற்காக அழுகிறய்! சும்மா இரு" என்றன். பக்கத்திலேயே படுக்க வைத்துக் கொண்டான். இந்திரா அமைதி அடைந்தாள். மிகுந்த கஷ்டப்பட்டு அவளை அணைத்தபடியே படுத்துக் கொண்டான். மணி மூன்றடித்தது; நன்றகத் தூங்கிக் கொண்டிருந்த பாலன் தன் உதடுகளின் மேல் இரண்டு மெல்லிய உதடுகள் தவழ்வதை உணர்ந்தான். சூடான மூச்சு தன் முகத்திலே படுவதை உணர்ந்தான். இருகரங்கள் வற்ருத பாசத்தோடு தன் தலையை வருடுவதை அறிந்தான். "அதற்குக் கட்டுப்படுவதா? தூக்கத்திலேயே திரும்புவதுபோல், திரும்பிப் படுப்பதா?" என்ற குழப்பத்தில் சிறிது நேரம் இருந்து "சடக்"கென்று திரும்பிப் படுத்துக் கொண்டான். தூக்கத்தில் புரளுகிறன் என்று எண்ணிய அந்தப் பேதை; அவன் கன்னத்தில் கன்னம் வைத்துத் தன்னை மறந்தபடி சாய்ந்திருந்தாள். மனதை இறுகப் பிடித்துக் கொண்டுதான் பாலன் அதையும் சகித்தான். சிறிது நேரத்தில் குப்புறக் திரும்பிப் படுத்துக் கொண்டான். இந்திராவுக்கு அவனது இதயம் தெரியவில்லை. அதனலே அவள் கலங்க

https://t.me/tamilpdfebooks



வில்லை.

பொழுது விடிந்தது. எப்போதும் தாமதமாக எழும் பாலன் அன்று சீக்கிரமே எழுந்துவிட்டான். விடியும் பொழுதுதான் தூங்கத் தொடங்கியதால் இந்திரா நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். பாலன் சீக்கிரமாகவே குளித்தான். ஒரு சாப்பைக் கரைத்து உடம்பெல்லாம் தேய்த்தான். கொடிய நோய் தன்னைப் பற்றிக் கொள்ளக் கூடாதே என்பதிலே அவ்வளவு அக்கறை அவனுக்கு. நல்ல இதயம் மட்டும் இருந்தால் போதுமா? எல்லாம் இருந்தால்தான் உலகம் மதிக்கும். இந்திராவிடம் நல்ல இதயம் இருந்தது. எழுத்தாளன் பாலனே அதை மதிக்கவில்லை. வேறு யார் மதிப்பார்கள்?

அவள் எழுவதற்கு முன்னாலேயே வெளியேறி விட்டான் பாலான். பத்து மணிக்கு இந்திரா எழுந்தாள். பாலனைக் காணவில்லை. தன் கடமைகளைச் செய்ய ஆரம்பித்தாள். "கடிதம்" என்ற சப்தம் கேட்டுத் திரும்பினாள். தபால்காரன் நின்றான். கடிதத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். அவள் மனம் ஆனந்தத்தில் திளைத்தது.

சுந்தரத்திற்குத் திருமணப் பேச்சு நடக்கிறதாம். ஏறக்குறைய முடிந்தமாதிரிதானாம். பெண், நல்ல சிவப்பாம். "சொர்ணகிளி" மாதிரி என்று ஊரிலே சொல்கிறார்களாம்! என்ன இருந்தாலும், இந்திரா பார்த்து, "பிடித்திருக்கிறது" என்று சொன்னால்தான் கட்டிக்கொள்வானாம்! அதனால் இந்திராவும் பாலனும் உடனே புறப்பட்டு, புதுக்கோட்டைக்கு வரவேண்டுமாம்! —இப்படி, சுந்தரமே எழுதியிருந்தான். அண்ணி வரப்போகிறாள் என்று நாத்திக்குச் சந்தோசம் பொறுக்க முடியவில்லை. பாலன் சீக்கிரம் வரமாட்டானா, சங்கதியைச் சொல்ல மாட்டோமா என்று அவள் துடித்தாள். நல்ல மனதுக்கு இப்படிப்பட்ட அரிப்பு ஏற்படுவது வழக்கம். எதையும் யாரிடமாவது சொல்ல வேண்டும்.

இந்திரா கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தாள். "பெண் நல்ல சிவப்பு" என்ற வரியை மீண்டும் மீண்டும் படித்தாள். "நல்ல வேளை! நம்மைப்போல் இல்லையே! உம் நம்மைப் போல இருந்தால்தான் என்ன! நம் கணவரைப் போலத்தான் அண்ணாவும் நல்லவர்" என்று தனக்குத்தானே பேசிக் கொண்டாள். அடிக்கடி வாசலுக்கு ஓடி, பாலன் வருகிறானா என்று பார்த்தாள். ஒரு தடவை போய்ப் பார்த்தபோது பாலனுக்குப் பதிலாக டாக்டர் வந்து கொண்டிருந்தார். இந்திரா அவரை வரவேற்று உட்கார வைத்தாள். அவசர அவசரமாக "ஐயா, இந்தச் சிரங்கு ஆறுவதற்கு இன்னும் எத்தனை நாளாகும்?" என்று கேட்டாள். டாக்டரை ஆச்சரியமும் திகைப்பும் சேர்ந்து தாக்கின. "சிரங்கா! சரி, சரி, பாலன் அப்படிச் சொல்லியிருப்பார் போலிருக்கிறது" என்று சமாளித்துக் கொண்டு, "இன்னும் ஒரு வாரத்திற்குள் தீர்ந்துவிடும்" என்று ஒரு பொய்யைக் கூறிவிட்டு, ஊசியைக் கழுவுவதற்குக் கொஞ்சம் வெந்நீர் கேட்டார். இந்திரா வெந்நீர் கொண்டு

https://t.me/tamilpdfebooks



வர அடுப்பங்கரைக்குச் சென்றாள். அவள் சென்றதும் டாக்டரோடு வந்த கம்பவுண்டர் டாக்டரைப் பார்த்து, "இது சிரங்கா சார்! பார்த்தா பெருவியாதி போலிருக்கே" என்றார். டாக்டர் மெதுவாக, "அதுதாய்யா! சொன்னால் கண்ணீர் விடுவாங்களேன்னு அப்படிச் சொல்லியிருக்காங்க" என்றார்.

"ஐயோ பாவம்! இந்தச் சின்ன வயசிலேயே பெரு வியாதி வந்துட்டுது. இன்னம் எவ்வளவு நாள் வாழவேண்டியிருக்கு!" என்று வேதாந்த ரீதியில் வியாதிக்கு இரங்கினார் கம்பவுண்டர்.

வாழ வேண்டிய நாட்கள் இவ்வளவு என வரையறுத்து வைத்து விட்டது போலவே மனிதர்கள் பேசுகிறார்கள். கம்பவுண்டரின் வார்த்தையை அனுதாபத்தோடு வரவேற்றுத் தலையாட்டினார் டாக்டர். தாங்கள் எங்கிருந்து கொண்டு பேசுகிறோம் என்பதை அவர்கள் சிந்திக்கவே இல்லை. யார் காதிலே விழக்கூடாது என்று அவர்கள் மனதார விரும்பினார்களோ அவள் காதிலேயே விழுந்துவிட்டது ஆம்; அப்போது கதவருகில் வந்து நின்ற இந்திராவின் காதுகளில் டாக்டர் சொன்ன துன்ப மயமான செய்தி விழுந்தது. இந்திரா துடித்தாள். என்றுதான் அவள் துடிக்காமலிருந்தாள்! அவள் கையிலிருந்த வெந்நீர் வேறு கால்களைப் பொசுக்கியது. சத்தம் கேட்டு எழுந்து வந்தார் டாக்டர். பைத்தியம் பிடிக்கும் நிலையிலிருந்த இந்திராவைக் கண்டார். "பெருவியாதி! பெருவியாதி!" என்று மாறி மாறிக் கதறினாள் இந்திரா. டாக்டர் அதிர்ச்சி அடைந்தார். ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல், "கவலைப் படாதே அம்மா. எதுவாயிருந்தாலும் நான் தீர்த்து வைக்கிறேன். நீ ஒன்றுக்கும் பயப்படாதே" என்று ஆறுதல் கூறினார். பெரு வியாதிதான் என்று முத்திரை போட்ட பிறகு "தீர்த்து வைக்கிறேன்" என்ற வார்த்தை அவளுக்குக் கொஞ்சங்கூட ஆறுதல் தரவில்லை. அதற்கு மேல் அவர் சொன்ன ஆறுதல் வார்த்தைகளுக்கும் பலனில்லை. இந்திரா முட்டி மோதிக் கொண்டு கதறினாள். இரவிலே பாலன் விலகிப் படுத்ததும், வேண்டா வெறுப்பாகக் காப்பி குடித்ததும், வழக்கமான அன்பிலிருந்து வழுக்கிச் சென்றதும் வர்ணனைகளுக்கு ஒரு முடிவு கட்டிக் கொண்டதும் அவள் மனதிலே தோன்றி சுட்டெறித்தன. இதே பயங்கரமான பிளவு நீடித்துவிடும். "இனி நம்மைத் தொடமாட்டார். அருகிலே கூட வைத்துக் கொள்ளமாட்டார். வாழாவெட்டி! நாம் வாழாவெட்டி!"—அவள் விம்மி விம்மி அழுதாள். "அழுகிறவர்களை அழ விட்டு நடப்பது நடந்து கொண்டுதானிருக்கிறது உலகத்தில்! அழுபவர்கள்தான் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அழுகையை நிறுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, நடப்பதைத் தடுக்க நினைப்பது தனி ஒருவருக்குச் சாத்தியமே அல்ல!" என எண்ணிய டாக்டர், அதைச் சொல்ல முடியாமல் சிலையாகச் சமைந்தார். அவர் பிள்ளைகுட்டிக்காரர், இந்திராவின் வயதில் அவருக்கொரு பெண்ணும் இருக்கிறாள், தங்கையும் இருக்கிறாள்.

https://t.me/tamilpdfebooks



அழுதுகொண்டிருந்த இந்திரா "சடக்"கெனத் திரும்பினுள். "டாக்டர் அய்யா, இந்த வியாதி தீருமா? தீரக்கூடிய வியாதியா? தீர்த்து வைக்க முடியுமா உங்களால்? அய்யா அய்யா நீங்கள் நல்லாயிருக்கணும். உங்களைக் கும்பிடுகிறேன். ஏற்கனவே நான் கறுப்பு, பரிதாபத்திற்கு இறங்கித்தான் என் கணவர் என்னிடம் அன்பு செலுத்துகிருர். அதோடு இந்த வியாதியும் சேர்ந்தால், என்னை அவர் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார். உங்களைக் கும்பிடுகிறேன். என்ன செலவானுலும் சரி; இந்த நோயைத் தீர்த்துவிடுங்கள் அய்யா! அய்யா!" என்று பொறுமினுள்.

டாக்டருக்குக் கொஞ்சம் தெம்பு பிறந்தது. "உறுதியாகச் சொல்கிறேன். இந்த நோயைத் தீர்த்து வைக்கவில்லையென்முல் என் தொழிலேயே விட்டுவிடுகிறேன் போதுமா?" என்ருர். அது போதாது அவளுக்கு. அவர் தொழிலை விட்டால் யாருக்கு லாபம்? அவள் தொல்லை தொல்லைதானே!—இந்திரா அப்படி நினைக்கவில்லை; அவரை நம்பினுள். உறுதி வார்த்தைகளையும் நம்பாத அளவுக்கு அவள் உலக அனுபவம் பெற்றவள் அல்ல. "நிச்சயமாகச் சொல்லுகிறேன்" என்று தொடங்கி, "சர்வ நிச்சயமாக" என்று தொடர்ந்து, எழுதிக் கொடுத்தால்தான் நம்பிக்கை பிறக்கும் என்கிற அளவுக்கு வளர்ந்து, எழுத்துக்கும் மதிப்பில்லாமல் எந்த உறுதியையும் யாரும் மதிக்க முடியாத அளவுக்குச் சென்றுவிட்ட பரபரப்பான மனிதப் பண்பில் இந்திரா பழக்கப்பட்டவள் அல்ல. டாக்டரின் முதல் உறுதியே அவளுக்கு நம்பிக்கை தந்தது. ஓரளவுக்கு அமைதி பெற்ற இந்திராவின் வலது கையில் ஊசி போட்டுவிட்டு, ஆறுதல் மொழியும் கூறிவிட்டு டாக்டர் வெளியேறினுர்.

கொஞ்சு நேரம் அமைதியாக இருந்த இந்திராவைப் பெருவியாதி என்கிற எண்ணம் மீண்டும் தாக்கியது. கண்ணுடியில் முகத்தைப் பார்த்துப் பார்த்துக் கலங்கியபடி உட்கார்ந்திருந்தாள். சமையலில்லை, அதனுல் சாப்பிடவில்லை. சுமார் இரண்டு மணிக்கு பாலன் வந்தான். "அத்தான்" என்று அலறினுள் இந்திரா. பாலன் திகைத்தான். "ஏன் அழுகிருள்? உண்மை தெரிந்துவிட்டதா?"...பாலன் தயங்கி நின்ருன். "படார்"என்று அவன் கால்களிலே போய் விழுந்தாள் இந்திரா. பாலன் அவளைத் தொட்டுத் தூக்கினுன்- அவன் கண்களிலே கண்ணீர் ததும்பி நின்றது. அவளைக் கட்டிலில் உட்கார வைத்தான். ஆறுதல் கூறினுன். மனம் விட்டுப் பேசினுன். "இதற்காக என்னைக் கைவிட்டு விட மாட்டீர்களே" என்று, நினைத்ததை நினைத்தபடியே கேட்டு வைத்தாள் அந்தப் பேதை. பாலன் மனம் கரைந்து கொடுத்தது. "சேச்சே இப்படியெல்லாம் பேசாதே! இதே வியாதி எனக்கு வந்திருந்தால் நீ என்னை வெறுப்பாயா? அந்த இதயம் எனக்கில்லையா?" என்ருன் பாலன். சிந்தனையை எங்கெங்கோ கொண்டு வைத்திருந்த அவன், அந்தப் பரிதாபத்திற்குரிய பாவைக்காக அதை மீட்டுக் கொண்டு வந்திருந்தான். உண்மையை டாக்டர்தான் சொல்லியிருக்க வேண்டும் என அவனுல் யூகிக்க

https://t.me/tamilpdfebooks



முடிந்தது. அந்த இரண்டு இதயங்களும் கொஞ்ச நேரம் பின்னியும் பிரிந்தும் தெளிந்தன. அந்த நேரத்தில், "என்ன ஆனாலும் உன் அருகிலேயே இருப்பேன்" என உறுதி கொடுத்தான் பாலன். அமைதி கொண்ட இந்திரா அன்போடு ஊரிலிருந்து வந்த கடிதத்தை எடுத்துப் பாலனிடம் நீட்டினாள். படித்துப் பார்த்த பாலன், "இன்றிரவே ஊருக்குப் புறப்படுவோம், வருவதாகத் தந்தி கொடுத்து விடுகிறேன்" என்று பரிவோடு கூறினான்.

அன்றிரவு தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் பாலனையும் இந்திராவையும் முதல் வகுப்பில் சுமந்துகொண்டு பறந்தது.

திருச்சியில் மாறி இண்டோ–சிலோன் எக்ஸ்பிரசில் ஏறி. காலை எட்டு மணிக்குப் புதுக்கோட்டை வந்து சேர்ந்தார்கள் பாலனும் இந்திராவும். ரெயில் நிலையத்தில் சுந்தரம் மாப்பிள்ளை மாதிரி நின்றுகொண்டிருந்தான். இந்திராவையும் பாலனையும் இரு கை நீட்டி வரவேற்றான். சிரித்துக்கொண்டே கீழே இறங்கிய இந்திராவின் முகம் சிறிது நேரத்தில் கறுத்தது. தாளமாட்டாத ஒரு துன்பச் சேதியை வேண்டியவர்களிடம் புதிதாகச் சொல்லும்போது தொண்டை கனக்கும். கனத்தது இந்திராவுக்கு. சொல்லாமலும் கண்ணீர்விட ஆரம்பித்தாள். புரியாத சுந்தரம் "என்ன இந்திரா" என்று பதறியபடியே கேட்டான். அதற்குள் இடைமறித்த பாலன், "உஸ்...ஸ்...ஸ்டேஷனிலா அழுவது? பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்? பேசாமல் வா" என்றான். அங்கே கிண்டிக் கிளறிக் கேட்கக்கூடாது என்பதற்காக சுந்தரம், இந்திராவின் முகத்தைப் பார்த்தபடியே காரில் ஏறினான். எல்லோரையும் ஏற்றிக்கொண்டு கார் பறந்தது.

சுந்தரம் நிலை கொள்ளவில்லை. அழுகையின் காரணத்தை அறிந்து கொள்ளத் துடித்தான். பாலனும் கூட வந்திருப்பதால் பாலன் ஏதாவது திட்டியிருப்பான் என்று எண்ணினான். கார் வீட்டு வாசலில் வந்து நின்றது. வரவேற்பு வைபவம் நடந்தது. வரவேற்பில் அத்தனை பேரும் காட்டிய சுறுசுறுப்பு அடுத்த அரைமணி நேரத்தில் மறைந்தது. மங்கையர்க்கரசி தன் மகளின் நிலைக்காக அழத் தொடங்கினாள். மகளை மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். தாயின் கண்களுக்குப் பிள்ளைகளின் எந்த வியாதியும் ஆபாசமாகத் தெரிவதில்லை. தாய்! அதுதான் உலகம்!

சிறிது நேரம் சென்றதும் அந்த வீட்டிலே வேதாந்தம் விளையாட ஆரம்பித்தது. "இது ஒன்றும் செய்யாது! சீக்கிரமே மறைந்துவிடும்" என்று திருப்திப்பட்டுக் கொண்டார்கள்.

ஆனால், இந்திராவின் பெரு வியாதி இன்னுமொரு நாடகத்தை நடத்தப் போகிறது என்பதை அவர்கள் யாரும் சிந்திக்கக்கூடவில்லை.

"வந்தது வந்துவிட்டது: இனி என்ன செய்யமுடியும்? ஏதோ பார்ப்போம்" என்று எண்ணித் தெளிந்திருந்தாள் இந்திரா. பொழுது

https://t.me/tamilpdfebooks



செல்லச் செல்ல அவளுக்குத் தன்னைப் பற்றிய கவலை முழுக்க மறைந்தது. சுந்தரத்தின் திருமணச் சங்கதி பற்றிய பேச்சு அவள் உள்ளத்தை வடிகாலில் தங்கிய மீன் போலக் குதிக்க வைத்தது.

"பெண் பார்க்க எப்போது போவது?" என்று ஆசையும் மழலையும் தொனிக்க கேட்டு வைத்தாள் இந்திரா.

"இன்னிக்குச் சாயந்திரம் போரதாத்தான் இருக்கு" என்று பதில் சொன்னாள் மங்கையர்க்கரசி.

தோளிலே துண்டைப் போண்டுக்கொண்டு அந்த வழியாகக் குளிக்கப் புறப்பட்ட சுந்தரம் இந்தப் பேச்சில் கலந்துகொண்டான். "என்னமோம்மா! நீ பார்த்து சரின்னு சொன்னாத்தான் திருமணம்! இல்லை... ஆயுள் காலப் பிரம்மச்சாரிதான்!" என்றான். பெருமிதம் இந்திராவை தலைகுனிய வைத்தது! மெல்லச் சிரித்தாள்.

இந்திரா, "பெண் பெயர் என்னவாம்?" என்று கேட்டாள். மங்கையர்க்கரசி. கையையும் தலையும் ஆட்டி, மோன நிலையில் பெண்ணின் பெயரைத் தேட ஆரம்பித்தாள் பளிச்சென்று. "வெண்ணிலா" என்றான் சுந்தரம்.

"வெண்ணிலா! நன்றாய்த்தான் இருக்கிறது" என்றாள் இந்திரா. பாவம்! அவள் கருப்பு நிலா! இப்போது, தனி அறைக்குள் "தவம்" புரிந்துகொண்டிருந்த சின்னப்பர், திருவாய் திறந்து மொழிந்தார். "இந்த காலத்துப் பேரும்மா அது! இப்போதான் பேர் வைக்கிறதுலேயே புதுமை வந்துட்டுதே!" மங்கையர்க்கரசி சிரித்தாள்.சின்னப்பர் என்றும் புதுமைப் பெண்களின் விரோதியல்ல. எதிலும் இது மாதிரி "குத்தல்" பேசுவதில் சில பேருக்கு ஆகை இருப்பதில்லையா? அந்த பாணியில்தான் அவரும் பேசினார்.

"வெண்ணிலான்னு பேர் வச்சிருக்காங்க; நல்ல சிவப்புன்னும் சொல்றாங்க. நீ போய்ப் பாத்தாத்தான் அது என்ன நிலான்னு தெரியும்!" என்று விளக்கம் கூறிவிட்டு ஒரு புதிரையும் போட்டுவிட்டு வெளியேறினான் சுந்தரம்.

கையிலே காபியோடு வந்து, "அக்கா! அத்தானுக்கு காபி" என்றாள், கமலம். தான் வாங்கப் போன இந்திரா, ஏதோ நினைத்தவளாய், "நீயே கொண்டு போய்க் குடு" என்றாள். கமலம் தயங்கினாள். அனுவசியமான நாடகங்களுக்கு அங்கம் அமைக்க அவள் தயாராயில்லை. மங்கையர்க்கரசி, கமலத்தைப் பார்த்து, "ஏண்டி நிக்கிறே! சும்மா கொண்டு போய்க் குடு" என்றாள். கமலம் தலைகுனிந்தவாறு, பாலன் இருந்த அறைக்குள் நுழைந்தாள். பாலன் அப்போது "பொன் மொழி"களில் மூழ்கிக் கிடந்தான். பெரிய மனிதர்கள் உலகம் பற்றியும் வாழ்வு பற்றியும் என்னென்ன உதிர்த்திருக்கிறார்கள் என்கிற ஆராய்ச்சியில் அவன் ஆழப் பதிந்திருந்தான். சராசரி மனிதனுக்கு நல்ல நண்பர்கள், பெரிய மனிதர்களின் பொன்மொழிகள்தான். கமலம், "காபி" என்றாள். பாலன் திரும்பிப் பார்த்தான். "வச்சிட்டுப் போ!" என்றான். கமலம் காபியை

https://t.me/tamilpdfebooks



மேசை மேல் வைத்துவிட்டு வெளியேறினாள். திரும்பி போன்மொழி யைப் பார்த்த பாலனின் கண்களில் ஒரு விசித்திரமான வாக்கியம் தட்டுப்பட்டது. அது இது:

**தன் இதயத்தை நம்புகிறவன், உலகத்தை நம்பலாம்.**

அவனைப் பொறுத்த வரையில் அவன் தன்னுடைய இதயத்தை நம்புகிறான். ஆனால், அவனது இதயம்தான் அவனை அனுசரிக்க மறுக்கிறது. பாலன் அடுத்த வரியைப் படித்தான். அங்கே "அழகு கண்களில் இல்லை: இதயத்தில்தான் இருக்கிறது" என்று இருந்தது. பாலனுக்கு அது தெரியும்: ஆனால், இதயத்திலிருக்கிற அழகு ஏன் கண்களைக் கரிக்க வைக்கிறது? கண்களின் அபிப்பிராயத்தை ஏன் இதயம் அப்படி அப்படியே ஏற்றுக் கொள்கிறது—இதுதான் பாலனுக்குப் புரியவில்லை—பாலன் புத்தகத்தை மூடினான். எழுந்து காபிக் கோப்பையைக் கையில் எடுத்தான். கமலம் கொடுத்த காபி: கமலம் தொட்ட கோப்பை—இந்த எண்ணத்திலேகூட அவனுக்கொரு சுகமிருந்தது; சுவை இருந்தது. காபியை ஒரு வாய் குடித்தான். முகம் சுருங்கிற்று. காபி ஒரே கசப்பு. மனதுக்கு வேண்டியவர்கள் எடுத்துக் கொடுத்தால் வேம்பும் கரும்பாகும் என்பார்கள். இங்கே வேம்பு வேம்பாகவே கசந்தது. ஆம் காபிக்குச் சர்க்கரை போடவில்லை. பாலன் தன்னைச் சமாளித்துக்கொண்டு, "கமலம்! கமலம்!" என்று கூப்பிட்டான். கமலம் பயந்தபடியே வேதனையோடு "என்ன" என்றாள். "கசக்கிறது" என்றான் ரத்தினச் சுருக்கமாக. கமலம் தன் கையைக் கடித்துக் கொண்டாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட இந்திரா உடனே எழுந்து அடுப்பங்கரைக்கு ஓடினாள். சர்க்கரைச் சீசாவை எடுத்துக் கமலத்தின் கைகளில் கொடுத்து, "கொண்டு போய்க் குடுடீ" என்றாள். கமலம் வாங்கிக் கொண்டு நடந்தாள். "காபி போடும்போது அதில் சர்க்கரையும் போடுவது விதி" என்றான் பாலன் வேடிக்கையாக.

"போட்டதாக நினைவு. கலக்கிப் பாருங்கள்" என்றாள் கமலம், சுருக்கமாக.

கலக்கிவிட்டு ஒரு வாய் குடித்த பாலன், "உண்மையிலேயே சர்க்கரை போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றான், பணிவாக. கமலம் சர்க்கரைச் சீசாவை நீட்டி "அரை வீசை சர்க்கரை இருக்கிறது; வேண்டு மட்டும் போட்டுக் கொள்ளலாம்" என்றாள் கிண்டலாக.

உடனே பாலன், "இதைக் காபி போடும்போதே கவனத்தில் வைத்துக்கொள்வது நலம்" என்றான் குத்தலாக. அடுப்பங்கரையில் கமலத்திற்கு ஏற்பட்ட பயம் இப்போது எங்கேயோ போய்விட்டது.

"யோசனைக்கு நன்றி" என்றாள் கமலம். பாலன் சிரித்துக்கொண்டே காபியைக் குடிக்கான். இந்திரா இதைக் கவனிக்காள் "பாலன் மகிழ்ச்சியோடு இருக்கிறான்; காரணம், கமலம் அவன் கண்ணெதிரே இருக்கி

https://t.me/tamilpdfebooks



ளுள்!"—பளிச்சென்று இந்த எண்ணம்தான் வந்தது இந்திராவுக்கு. அவள் வருத்தப்படவில்லை; கமலத்தின் மீது கோபப்படவும் இல்லை. பாலன் இருந்த அறைக்குள் நுழைந்தாள்.

"எப்படி இருந்தது காபி?" என்ருள் ஏதும் அறியாதவள் போல.

"கமலம் போட்டது; எப்படி இருக்கும்?" என்று கேள்வி உருவத்தில் பதில் கொடுத்தான் பாலன். இந்திரா சிரித்தாள்; ஆம், அதைச் சிரிப்பு என்றுதான் பாலன் நினைத்தான். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் வேதனைப்படும் நிலைமை. மனிதர்களுக்கு மட்டும்தான் வருகிறது அதுமாதிரி நேரங்களில் ஆடு மாடுகளில் ஒன்ருகப் பிறந்திருக்கக்கூடாதா என்ற எண்ணங்கூட மனிதர்களுக்கு ஏற்படுகிறது. இந்திராவுக்கு அந்த எண்ணம் வரவில்லை. ஆனாலும், தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையில் அவளுக்கு வேதனை பிறந்தது: அதை வெளிப்படுத்தாமல் "இன்னும் கொஞ்சம் கொண்டுவரச் சொல்லட்டுமா?" என்ருள். "போதும்" என்று சொன்ன பாலன், புத்தகத்தை எடுத்துக் தட்டிய படியே அமர்ந்தான்.

"குளிக்கவில்லையா?" என்று கேட்டாள் இந்திரா.

"குளிக்கணும்" என்று சுவையின்றிப் பதில் சொன்ஞன் பாலன்.

"என்ன குளிக்கணும்! ஆண்டுக்கொரு முறையா? ஆறு மாதத்திற்கு ஒரு முறையா?" என்று கேலி பேசிக்கொண்டே உள்ளே நுழைந்தான் சுந்தரம்.

பாலன் கிண்டலாக, "நீ இன்றைக்குக் குளித்து-விட்டாய்; அதளுலே பேசுகிருய்! எனக்கல்லவா தெரியும் உன் சங்கதி! தொடர்ந்து: ஒன்பது மாதம் பதினைறு நாட்கள் குளிக்காமலிருந்திருக்கிருயே! அந்தக் கதையைச் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

சுந்தரம் பாலனை ஆச்சரியமாகப் பார்த்தான். தேதி, கிழமை, மணியோடு கச்சிதமாகச் சொல்லிவிட்டால், பொய்க்கு உண்மையின் உருவம் வந்துவிடுகிறது. உலகத்துப் பொய்களின் தந்தையரான எழுத்தாளர்களுக்கு நன்ருகத் தெரியும். ஆம், பாலன் எழுத்தாளன்! ஒருவரை வாழ வைக்க அதிகாரம் படைத்த அரசாங்கத்திற்குப் பலகாலம் பிடிக்கலாம்; உண்மையான காதலர்கள் ஒன்று சேருவதற்குத் தாண்ட முடியாத ஆயிரம் தடைகளிருக்கலாம்: நல்லவர்கள் உயிர் வாழ்வது நாட்டு நடப்பில் கடினமாகவே இருக்கலாம்; ஆனல் நாற்காலியில் உட்கார்ந்தபடியே ஒரு மணி நேரத்தில் பேஞ முனையிலேயே அத்தனைக்கும் வாழ்வளித்து விடுபவன் எழுத்தாளன்! எழுத்தாளனது கதாபாத்திரம் ஆஸ்துமாவியாதில் அவதிப்பட்டாலும் இறுதியில் அவன் விரும்பினல் அந்த நோயைத் தீர்த்துவிடுவான். ஆனல், உலகத்தில் ஆஸ்துமாவுக்கு இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப் படவில்லை! இத்தகைய "சர்வ வல்லமை பொருந்திய" எழுத்தாளச் சாதிக்குப் பாலனும் ஒரு வாரிசு.

சுந்தரம் இதைச் சொல்லிக் காட்டி, "நீங்கள் என்ன சொன்னலும் அது உண்மையாகி விடுகிறதப்பா, உலகம் உருப்பட்டதும் உருப்படாமற்

https://t.me/tamilpdfebooks



போனதும் உங்களாலேதான்'' என்றான்.

பாலன் பதில் சொல்லுவதற்கு முன்னாலேயே சுந்தரம் தானே ஒரு திருத்தம் கொண்டு வந்தான்—

“உலகம் உருப்பட்டதற்கு வேறு எழுத்தாளர்கள் காரணமாக இருக்கலாம், ஆனால் உருப்படாமற் போனது உன்னாலேதான்'' என்றான்.

பாலன் இப்போது உண்மையிலேயே சிரித்தான். நம்மைத் தாக்குவதாகவே இருந்தாலும் நல்ல நகைச் சுவையாயிருந்தால் அது நம்மையும் சிரிக்க வைக்கும். சிரித்தபடியே பாலனும் ஏதோ பதில் சொல்லி வந்தான். சுந்தரம் இடைமறித்து, “போதும் போதும்! பதில் சொல்லாதே! மூக்கைத் துடைத்துக் கொள்! மூக்கு உடைந்து முக்கால் மணி நேரமாகி விட்டது'' என்றான்.

பாலன், “சரி சரி இதே மாதிரி உன் மூக்கையும் உடைக்கிறேனா இல்லையா பார்!'' என்று சபதம் செய்தான். ,

இந்திரா சிரித்தாள். மாமியார் வீட்டில் இருந்துகொண்டு மாப்பிள்ளை, மைத்துனனைக் கேலி செய்வதில், அடடா! எவ்வளவு சுகமிருக்கிறது! அப்போது மனைவியும் பக்கத்தில் நின்றுவிட்டால் பொழுது இப்படியே போகக்கூடாதா என்று தோன்றும்.

பாலன் மனதில் இந்திராவுக்கு அவ்வளவு நெருக்கமான இடமில்லை என்றாலும், கதவிலே சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்த அவளது புனிதமான தோற்றம் அவனது மனத்தில் அமைதி கலந்த அன்பை ஊட்டி வைத்திருந்தது. அந்த நேரத்தில் கமலமும் உள்ளே வந்து சேர்ந்தாள், கோப்பையை எடுத்துப் போவதற்காக. பாலன் அவளையே கண் கொட்டாமல் பார்த்தான். இந்திரா சாடையாக அதையும் கவனித்தாள். கமலம் சென்றுவிட்டாள். அப்போது அலமாரியிலிருந்து ஒரு வேட்டியை எடுத்து விரித்தான், சுந்தரம். அந்த வேட்டிக்குள்ளிருந்து ஒரு ரவிக்கை கீழே விழுந்தது. பாலன் அதைப் பார்த்துத் துள்ளிக் குதித்து, “ஆகா! இது ஏது? கல்யாணத்து-க்கு முன்னாடியே ரவிக்கை! சபாஷ் காதல் கல்யாணமா? அதற்குள் ரவிக்கைக்கு அளவெடுத்து வாங்கியாகி விட்டதா? இனி எதற்காகப் பெண்ணைப் போய்ப் பார்ப்பது? அது தான் ரகசியப் பேச்சு வார்த்தைகூட நடந்திருக்கும் போலிருக்கிறதே!'' என்று சொல்லிவிட்டு இந்திராவின் முகத்தைப் பார்த்தான். இந்திரா ஆச்சரியத்தோடு சுந்தரத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

“சீச்சீ! சலவைத் தொழிலாளி தவறாகக் கொண்டு வந்திருக்கிறான். இது யாருடைய ரவிக்கையோ என்னவோ! எனக்குத் தெரியாது'' என்றான் சுந்தரம் திகைப்போடு.

“வேட்டி உன் வேட்டிதானே!'' என்று கேட்டான் பாலன்.

“ஆம்!'' என்றான் சுந்தரம் அசடு வழிய.

“அப்படியென்றால், வேறு ரவிக்கை அதற்குள் எப்படி வரும்? இது ஏதோ மர்மம்தான். ஒரிஜினல் ரவிக்கையா...இல்லை...'' என்று இழுத்தான் பாலன்.

https://t.me/tamilpdfebooks



"சேச் சே! என்ன ஆளப்பா! நீ! அப்படியே காதலியிருந்தாலும் ரவிக்கையாயா வாங்கிக்கொண்டு வருவேன்!"

"யார் கண்டது! ஆனந்த உலகத்திலே பறந்திருப்பீர்கள். கலிங்கத்துப் பரணியிலே, இன்பத்தில் திளைத்த ஒருத்தி நிலவொளியைச் சேலை என்று எடுத்து உடுத்தினளாமே, அதுமாதிரி, பொழுது விடிவதற்கு முன்னால் புறப்பட வேண்டுமே என்று அவசர அவசரமாக எழுந்திருப்பீர்கள். உன் சட்டையை அவளும், அவள் ரவிக்கையை நீயும் மாற்றிப் போட்டுக் கொண்டிருப்பீர்கள். வீட்டுக்கு வந்ததும் உனக்கு விபரம் புரிந்திருக்கும். கழற்றி மடித்து அலமாரியில் வைத்திருப்பாய். இல்லை... இப்படித்தான் நடந்ததா? அல்லது-, இதே மாதிரி வேறு கதை...?" என்று இழுத்தான் பாலன்.

சுந்தரம் ஏதோ பதில் சொல்ல வந்தான். பாலன் இடைமறித்து, "போதும்! போதும்! மூக்கைத் துடைத்துக் கொள்! மூக்கு உடைந்து முக்கால் மணி நேரமாகிவிட்டது" என்றான். சுந்தரம் தலைகுனிந்தான். இந்திரா, "எழுத்தாளர் எழுத்தாளர்தான்! பதிலுக்குப் பதில் சொல்லி விட்டார்" என்று பெருமைப்பட்டுக் கொண்டாள்.

சுந்தரம் இந்தக் கற்பனைப் பின்னலிலிருந்து விடுபட்டுக்கொண்டு, "இது எப்படி வந்ததென்று தெரியவில்லையே? என்றான், மாறி மாறி.

பாலன் அதைப் பறித்துக்கொண்டு முகத்திற்கு முன்னால் நீட்டிய படி. "ஏ, ரவிக்கையே, நீ வசிக்கும் இடம் எது! இங்கே எப்படி வந்தாய்? உன் தலைவி உன்னைத் தூது அனுப்பினளா? சங்கதியைச் சொல் என் தங்கமே!" என்றான்.

இந்த வேடிக்கைப் பேச்சும் சிரிப்பொலியும் கமலத்தின் காதுகளில் விழ, அவள் சன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். பார்த்தவள் திடுக்கிட்டாள். "அக்கா! அக்கா!" என்று அழைத்தாள். இந்திரா அறையை விட்டு வெளியே வந்தாள்.

"அத்தான் வைத்திருப்பது என் ரவிக்கை அக்கா" என்றாள் கமலம்.

இந்திரா திடுக்கிட்டு உள்ளே ஓடி பாலனின் கையிலிருந்த ரவிக்கையைப் பறித்துக்கொண்டு, "இது கமலத்தின் ரவிக்கையாம்" என்று கூறிய படியே வெளியேறினள்.

பாலன் மேனி சிலிர்த்தது.

"பார்த்தாயா! சலவைத் தொழிலாளி எல்லா உருப்படிகளையும் ஒன்றாகச் சேர்த்து மடித்திருக்கிறான். அதனால் நேர்ந்ததுதான் இந்தத் தவறு. இப்போதாவது புரிந்துகொள்!" என்றான் சுந்தரம்.

பாலன் சிரிக்கவில்லை. அவன் இப்போது வேறு உலகில் பிணைந்திருந்தான்.

சுந்தரம் தலைவாரிக்கொண்டு வெளியிலே வந்து, "இலை போடுங்கள்! நேரமாகிவிட்டது" என்றான்.

இலைகள் போடப்பட்டன. கமலம் பரிமாறினள். எல்லோரும் சாப்பிட்டார்கள். பாலன் அரைகுறையாகச் சாப்பிட்டு முடித்தான்.

https://t.me/tamilpdfebooks



மூன்று மணி சுமாருக்கு இரண்டு வாடகைக் கார்களில் எல்லோரும் ஏறிக்கொண்டு பெண் பார்ப்பதற்காகக் கோட்டையூர் வந்து சேர்ந்தார்கள். பெண் வீடு அன்று திருமண வீடு போலவே காட்சியளித்தது. மேலைச் சிவபுரியிலிருந்து சொக்கப்பரும் முன்கூட்டியே அங்கு வந்திருந்தார். எல்லோருக்கும் பலகாரம் செய்திருப்பதாகவும் சாப்பிட வேண்டுமென்றும் பெண்ணின் தந்தை முன்னாலேயே வேண்டுகோள் விடுத்தார். மங்கையர்க்கரசியும் சின்னப்பரும் அதைக் கண்டிப்பாக மறுத்துவிட்டனர். நிச்சயதார்த்தம் முடிவதற்கு முன், பெண் வீட்டில் சாப்பிடக் கூடாதாம். சாப்பிட்ட பிறகு கல்யாணப் பேச்சு முறிந்துவிட்டால் நன்றாயிருக்காதாம்!—மறுத்ததற்கு சின்னப்பர் சொன்ன காரணம் இதுதான். பேச்சு முறிவதற்கு நியாயமே இல்லை என்றும், சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும் என்றும் பெண் வீட்டார் வற்புறுத்தினர். "சரி; பெண்ணைப் பார்த்துவிட்டுப் பிறகு சாப்பிடுவோம்" என்றார் சின்னப்பர். இந்திராதானே முக்கியமாகப் பார்க்க வேண்டும்? அதற்காக இந்திராவை உட்கார வைத்துக்கொண்டு பெண்ணைக் கூட்டி வந்தார்கள்; இந்திராவுக்கெதிரே உட்கார வைத்தார்கள். இந்திரா பார்த்தாள்—அழகு வடிவும் இளம் பெண்; சுண்டினால் ரத்தம் தெறிக்கும்; அவ்வளவு சிவப்பு. மின்னல் இடை என்று சினிமாவில் வர்ணிப்பார்கள்—ஆனால் அதில் கதாநாயகிக்குக் குந்தாணி இடை இருக்கும். ஆனால், இந்தப் பெண்ணுக்கு உண்மையிலேயே மின்னல் இடைதான். இந்திரா அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "உன் பெயர் என்ன அம்மா?" என்று கேட்டாள், "சாரதை" என்று தலைகுனிந்தபடியே சொன்னாள், அந்த மென்மொழியாள்! இந்திரா சிரித்துவிட்டுத் தாயைப் பார்த்து சாடையாகத் தலையாட்டினாள். "பரம திருப்தி" என்பது போலிருந்தது அது. பிறகு, முடித்துக் கொள்வதென்று தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தோடு எல்லோரும் பலகாரம் சாப்பிட அமர்ந்தார்கள். சாப்பிடும் போது இந்திராவுக்குப் பக்கத்தில் உள்ளூர்க்காரி ஒருத்தி அமர்ந்திருந்தாள். இந்திராவையே பார்த்துக்கொண்டிருந்த அவள் பாதிச் சாப்பாட்டிலேயே எழுந்து போய்க் கை கழுவினாள். பெண்ணின் தாயிடம் போய் "குசு குசு"வென்று ஏதோ பேசினாள்; சிறிது நேரத்தில் அந்த வீடு முழுக்க ஆங்காங்கே இரண்டு மூன்று பெண்களாகக் கூடி "கச முச"வென்று ஏதோ பேச ஆரம்பித்தார்கள். வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்ளும் கட்டம் வந்தது. "நாள் பார்த்து-விடலாமா?" என்று கேட்டார் சின்னப்பர். அப்போது பெண்ணின் தாய் ஓடிவந்து, பெண்ணின் தந்தையிடம் ஏதோரகசியம் பேசினாள். உடனே சின்னப்பரின் கேள்விக்கு மென்று விழுங்கலானார் பெண்ணின் தந்தை! "கொஞ்சம் யோசிக்கலாம்" என்று இழுத்தார். சுந்தரம், பாலன், சின்னப்பர் எல்லோரும் திடுக்கிட்டார்கள். "என்ன இந்த இழுப்பு?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டார் சின்னப்பர். பெண்ணின் தந்தை பதில் சொல்லவில்லை. அதற்குள் மங்கையர்க்கரசி ஆத்திரத்தோடு அங்கே வந்தாள்.

https://t.me/tamilpdfebooks



சின்னப்பரைப் பார்த்து, "வாருங்கள் போகலாம்!" இவர்கள் சம்மந்தமே தேவையில்லை!" என்று பதறினாள்.

குழம்பிய சின்னப்பர் கொஞ்சம் துணிவுடனேயே, "என்ன நடந்தது? விஷயத்தைச் சொல்லு! ஏன் இப்படிப் பதறுகிறாய்? இங்கேயும் சண்டைதானா?" என்றார்.

"சண்டையுமில்லை; வம்புமில்லை! ஒருத்தருக்கொருத்தர் "குசுகுசு"ன்னு பேசிக்கிறாங்க. இந்திராவுக்குக் குஷ்டமாம்! அவ இருக்கிற வீட்டிலே எப்படிப் பெண்ணைக் கொடுக்கிறதுன்னு யோசிக்கிறாங்களாம்; இந்தப் பெண்ணு இல்லேன்னா, ஊரிலே நாட்டிலே ஆயிரம் பொண்ணு இருக்கு, வாங்க போகலாம்" என்றாள். சுந்தரத்தின் தலையில் சம்மட்டி கொண்டு அடிப்பது போலிருந்தது. பாலனின் மேனி வியர்த்தது. இந்திரா அங்கேயே அழ ஆரம்பித்தாள். மணப் பெண்ணாக வேண்டிய சாரதை மதுரை எரித்த கண்ணகி போல் எழுந்து நின்றாள். சுந்தரமும் எழுந்து நின்றான்.

"அறிவு கெட்டவர்கள்! மனிதத்தன்மையே இல்லாத இவர்கள் வீட்டில் சம்மந்தம் செய்துகொள்ள வந்தோமே, நமக்கு இது வேண்டியதுதான். அப்பா, புறப்படுங்கள்! பெண்ணுக்கா பஞ்சம்? மாப்பிள்ளை இருக்கிறான் ஒரு வீட்டிலே என்று தெரிந்தால், அந்த வீட்டு வாசலிலே பெண்களைக் கொண்டுவந்து சந்தை போட்டுக் காட்டுவார்கள். திருமணமாகாத பெண்கள் அவ்வளவு பேர் இருக்கிறார்கள் இந்த நாட்டில்! வாருங்கள் அப்பா! அம்மா புறப்படு! இந்திரா வாம்மா! பாலன் எழுந்திரு!" என்று ஆத்திரத்தோடு கத்தினான் சுந்தரம்.

"நில்லுங்கள்!" என்று ஒரு குரல் கேட்டது. சாரதை முன்னால் வந்தாள். தன் தாயைப் பார்த்து "உனக்கு அறிவு ஏதாவது இருக்கிறதா? வந்தவர்களை இப்படித்தான் அவமானப்படுத்துவதா! நீயா போய் வாழப்போகிறாய்? நல்லதோ, கெட்டதோ அங்கு வாழ வேண்டியவள் நான். மாப்பிள்ளையிடம் கோளாறு? சொல்லு! அவர் தங்கைக்கு வியாதி என்றால் யாருக்கென்ன? ஏன், வியாதி என்றால்தான் என்ன நானும் நீயும் கல்லுப்பிள்ளையார் மாதிரியா இருந்துவிடப் போகிறோம்! நமக்கும் ஒருநாள் அது வந்தால் அப்போது யாராவது இதுமாதிரிப் பேசினால்...கொஞ்சமாவது புத்தி வேண்டாம். இது, என் கல்யாண விஷயம், நான் முடிவு செய்து கொள்கிறேன். நான் அந்த வீட்டில்தான் வாழ்க்கைப்பட வேண்டும். அவருக்குத்தான் என்னை மண முடிக்க வேண்டும். இல்லை என்றால் என் சடலத்தைத்தான் நீங்கள் காண முடியும். மரியாதையாகப் பேசி முடியுங்கள்" என்று பொழிந்து முடித்தாள் சாரதை. அந்த இடம் மழை பெய்து ஓய்ந்தது போலிருந்தது அவ்வளவு அமைதி.

சாரதையின் தாய் அங்கிருந்த ஒரு கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஒரு மூலையில் போய் உட்கார்ந்தாள். தந்தை தலை குனிந்தபடி அங்கிருந்த வெற்றிலைப் பெட்டியில் சுாளம் போட்டுக் கொண்டிருந்தா

https://t.me/tamilpdfebooks



அமைதியைக் கிழித்துக் கொண்டு சுந்தரத்தின் பேச்சுப் புறப்பட்டது.

"வேண்டாம். இவ்வளவு ரசாபாசத்திற்குப் பிறகு திருமணம் முடித்தால் பிறகு இந்த வீட்டில் காலடி எடுத்து வைப்பதற்கு யோக்கியதை இராது. மனம் கெட்ட பிறகு மணம் எப்படிச் சோபிக்கும்? எனக்கு இந்தச் சம்பந்தமே தேவையில்லை..."—சுந்தரம் பேசி முடிக்கவில்லை; "அண்ணு!" என அலறினுள் இந்திரா.

"அண்ணு, அப்படி எல்லாம் பேசாதே! திருமணத்திற்குச் சம்மதித்துவிடு. என்னைத்தானே சொன்னுர்கள். ஏன் அண்ணு நீ பதறுகிறுய்? இல்லாததையா சொல்லிவிட்டார்கள்; இவர்கள் சொல்லாவிட்டால் மற்றவர்கள் சொல்லுகிறுர்கள். அதற்காக நான் கொஞ்சங்கூட வருத்தப்படவில்லை! சாரதைக்குத் தங்கமான குணம். மறுத்துப் பேசாதே அண்ணு! நான் கூட இருந்தால்தானே வியாதி பற்றிய சர்ச்சை. நாளைக்கே அவரும் நானும் புறப்பட்டுப் போய் விடுகிறோம்.." இந்திரா முடிக்கவில்லை. "இந்திரா!" என அலறினுன் சுந்தரம்.

"பேசாமல் இரு, அண்ணு! எதையும் பேசிக் காரியத்தைக் கெடுக்காதே" என்று கூறிவிட்டு, சின்னப்பரைப் பார்த்து, "அப்பா! பேசி முடித்துக் கொள்ளுங்கள்" என்றுள் இந்திரா, அதைத் தொடர்ந்து சாரதை தன் தந்தையைப் பார்த்து, "இம்! முடித்துக் கொள்ளுங்கள்! ஏன் வாயை மூடிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்றுள்.

இந்திராவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "ஒரு பெண்ணுக்கா இவ்வளவு துணிவு? பெண்கள் இப்படியும் பேச முடியுமா? தனது திருமணப் பேச்சு நடக்கிறதென்றுல் அப்போதெல்லாம் அடைத்த கதவைத் திறக்காமல் அறைக்குள்ளேயே கிடப்பார்களே இந்த நாட்டுப் பெண்கள்! சாரதையும் அப்படித்தானே இருந்தாள் கொஞ்ச நேரத்திற்கு முன்பு. சரிதான். தவறுகளைக் கண்டிக்கும்போது படித்த பெண்களுக்கு அசாத்தியத் துணிச்சல் வரும்போலிருக்கிறது" என்று எண்ணி எண்ணி அதிசயித்தாள்.

பெண்ணின் தந்தையும் சின்னப்பரும் வாய்மூடி மவுனிகளாக வெற்றிலை மாற்றிக் கொண்டார்கள். இந்திராவின் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. சுந்தரம் மெதுவாக அவள் அருகில் வந்து, "உனக்காகத்தான் நான் இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கிறேன்; உன்னை அவமானப்படுத்திய வீட்டில் எனக்கென்ன சம்பந்தம் வேண்டிக்கிடக்கிறது!" என்றுன்.

"அதெல்லாம் சொல்லாதே அண்ணு. இப்படிப்பட்ட பெண்ணை இனி எங்கே பார்க்கப் போகிறோம். சாரதையை உனக்குக் கட்டி வைப்பதற்காக இப்படி ஆயிரம் அவமானங்கள் வந்தாலும் நான் தாங்கிக் கொள்வேன். இப்பொழுது பேச்சு முடிந்துவிட்டது. இனி, நடந்து போன எதையும் நினைக்காதே! நீயும் சாரதையும் சந்தோசமாக வாழ்ந்தால் அதுதான் எனக்கு நிம்மதி" என்றுள் இந்திரா

சுந்தரத்தின் கண்கள் கட்டுப்பாடில்லாமல் கண்ணீர் வடித்தன.

https://t.me/tamilpdfebooks



"இதயத்திலே அணுவளவும் களங்கமில்லாத பெண்களுக்கு மேல் ஒரு தெய்வம் உலகத்தில் ஏது? நடமாடும் பொற்சிலைகள். குழந்தையின் பிஞ்சு இதயமும், இயற்கையின் குளிர்ந்த காட்சியும் மேகத்தின் கருணையும் ஒன்று திரண்டு வந்ததுபோல் நல்ல பெண்கள் காட்சியளிக்கிறார்கள். தொல்லைகளிலே கால் கைகளை மாட்டிக் கொண்டு கூப்பாடு போடும் மனிதனுக்கு நல்ல மனைவிதான் விடுதலைத் தாய். வெளி உலகத்தின் ஆசாபாசங்களுக்கும் கோபதாபங்களுக்கும் ஆளாகி இல்லறச் செல்வி ஆட்சி நடத்தும் வீட்டு உலகத்திற்குள் நுழையும் போது, களைப்புப் பறந்து போகிறது; களிப்புக் கூத்தாடுகிறது. பஞ்சணையில் சாய்ந்தபடி இருந்து. மார்பிலே மனையாளை அணைத்துக் கொண்டு மனித மனங்களின் சிக்கல்களையும், பின்னல்களையும் தத்துவ ரீதியிலே வேடிக்கையாக விமர்சனம் செய்தபடி பத்து வார்த்தைகளுக்கு ஒரு முத்தம் வீதம் பெற்றுக் கொண்டு பல நாட்கள் அப்படியே இருந்தாலும் பசி எடுக்காது, பட்டினிதோன்ருது"—இப்படி நினைத்த சுந்தரம், "பாலன் பெருமைக்குரியவன், காரணம், தன் தங்கை அவனுக்குக் கிடைத்திருக்கிருள்" என்றும் பெருமைப்பட்டுக் கொண்டான்.

அன்றையிலிருந்து ஏழாவது நாள் திருமணம் என்று முடிவு செய்து கொண்டு சின்னப்பரின் குடும்பம் புதுக்கோட்டைக்குப் புறப்பட்டது. அவர்கள் வார்த்தையைத் தட்ட முடியாமல் சொக்கப்பரும் புதுக் கோட்டைக்கு வந்து சேர்ந்தார்- கோட்டையூரில் மணப்பெண் சாரதை மகிழ்ச்சியில் திளைத்திருந்தாள்.

## 9

கோட்டையூரில் நடந்த சம்பவத்தை இந்திரா முழுக்க மறந்துவிட்டாள். அப்படி ஒரு அவமானம் தனக்கு நேர்ந்ததாகக் கருதவே அவள் தயாராயில்லை. அண்ணனுக்கு வரப்போகும் மனைவி நம் குடும்பத்திற்கு ஏற்றவள். அண்ணனையும் அவளையும் பக்கத்தில் நிறுத்தி வைத்தால் ஊரிலே எல்லோரும் கண்டு பொருமைப்படுவார்கள். அவ்வளவு அழகாக இருக்கும். வரப்போகும் அண்ணியின் கைகளுக்கு வளையல் வாங்குவதிலே இருந்து, ரிப்பன் வாங்குவது வரை இந்திரா தானே கவனித்தாள். ஆனல், பாலன் மட்டும் முழுக்க அமைதி இழந்துவிட்டான். "தொட்டுத் தழுவி சுகம் பெற முடியாமல், குடும்பம் என்ன வேண்டிக் கிடக்கிறது குடும்பம்! எவ்வளவுதான் நாமே தியாகம் செய்து கொண்டிருக்க முடியும்! வாழவேண்டிய வயதில் இப்படியே அவதிப்பட்டால் இனி எப்போதுதான் வாழ்வது?" என்ற எண்ணத்தில் இறங்கிவிட்டான் பாலன். தனியாக உட்கார்ந்திருக்கும் போதெல்லாம் அழகான பெண்ணொருத்தி தன் மனைவியாவது போலவும், அவளுடனேயே உல்லாசமாகச் சுற்றுவது போலவும் அவள் தன்னிடம் உயிரையே வைத்திருப்

https://t.me/tamilpdfebooks



பது போலவும் குழந்தையைக் கொஞ்சுவது போலத் தன்னைக் கொஞ்சு சுவதாகவும் அவள் கமலத்தைப் போல இருப்பதாகவும் கற்பனை செய்து மகிழ ஆரம்பித்தான். கல்யாண ஏற்பாடுகளின் சுறுசுறுப்பு அவன் கவனத்தைக் கவரவில்லை. ஆனால், அதிலே கமலம் கொண்ட ஈடுபாடுதான் அவன் கண்ணுக்கு விருந்தாய் அமைந்தது.

கமலம்! —பருவத்தின் முதற்படியில் நிற்கின்ற அழகுச் சிலை. பாலனின் கண்கள் அவளையே வட்டமிட்டன. பாலனின் நெஞ்சிலே அவள் அழகு போதை வெறியூட்டிற்று. அவள் குதிக்கும்போது அவளது அங்கமெல்லாம் குதிப்பதைக் கண்டு மகிழ்ந்தான். மைத்துனியைக் கேலி செய்யும் பாணியில் கொஞ்சம் கொஞ்சமாகக் காதல் வார்த்தைகளையே விட ஆரம்பித்தான். அவன் முற்றிலுமே மாறிவிட்டான். தன் அக்காள் கணவன் என்கிற அளவில்தான் அவள் அவனை மதித்தாள். அத்தான் என்பதால் கேலியிலே பங்கு கொண்டாள். அவனுடைய இதயத்திலே பொங்கிக் கொண்டிருந்த எண்ணங்களில் ஒரு துளியைக்கூட அவள் அறியமாட்டாள். தன்னிடத்திலே தவறான எண்ணம் இனி அவனுக்கு வராது என்று நம்பினாள். ஆனால், பாலனின் உள்ளம் சொல்லும் கதையெல்லாம் எழுத்துப் பிசகாமல் ஒருத்திக்கு மட்டும் புரிந்தது. திருமண வேலைகளோடு வேலையாக இந்தக் கதையையும் சாடையாகக் கவனித்தாள் அவள். காலையில் ஒரு ஆடை, மாலையில் ஒரு ஆடை என்று மாற்றி மாற்றி அணிந்து பவுடர் பூசுவதும், ஸ்நோ தடவுவதுமான ஆண்களுக்குத் தேவையில்லாத அலங்காரங்களில் ஈடுபட்டு தலையை நடு வகிடு எடுத்து வாரி கண்ணாடிக்கு முன் நின்று கால்மணி நேரம் அழகு பார்க்கும் வேலையில் திடீரென்று இறங்கியிருந்த பாலனை வேவு பார்த்து மிகச் சுலபத்திலே புரிந்து கொண்டது அந்த ஒருத்தியின் இதயம்.

இருக்காதா பின்னே. அட்டக்கரி போன்ற நிறம் அதிலேயும் பெரு வியாதி. கட்டப்பட்ட தாலியோ ஏமாற்றிப் பெற்றது. எத்தனை நாளுக்கு இதயத்தைக் காட்டி அன்பைப் பெறமுடியும்! —இந்திரா இந்தக் கணக்குக்கு வந்தாள். கமலத்தின் மீது பாலன் ஆசை வைத்திருப்பது தவறில்லை என்ற முடிவுக்கே வந்தாள். அதனால் பாலனும் மற்றவர்களும் சாப்பிட உட்காரும் போதெல்லாம் இந்திரா கமலத்தைப் பார்த்து, "கமலம் நீ போய்ப் பரிமாறு. சமையற்காரனுக்கு இங்கே வேலை இருக்கிறது." என்று பாலனுக்குக் கேட்கும்படி சொல்ல ஆரம்பித்தாள். கமலம் பரிமாறுவதையும் பாலன் சாப்பிடுவதையும் கொஞ்சம் தூரத்தில் நின்றபடியே கவனிக்கவும் தொடங்கினாள். "காபியிலே உப்பு! பச்சடியில் சர்க்கரை! சோற்றிலே சுண்ணாம்பு! ஏது கமலத்தின் சமயலா? தெரிகிறதே" என்பான் பாலன்.

கமலம் தூணுக்குப் பின்புறம் முகத்தைப் பதித்துக் கொண்டு சிரிப்பாள். பாலன் நிறையச் சாப்பிட்டுவிட்ட பிறகும், "சாப்பிடுங்கள்! சாப்பிடுங்கள்" என்று எதையாவது எடுத்து வைப்பாள் கமலம்.

https://t.me/tamilpdfebooks



"போதும் போதும்" என்று தடுக்க முயலும் சில சமயங்களில் அவள் கைகளையே பிடித்து விடுவான். சாதாரணமாகத் தொடுவதுபோல பார்ப்பவர்களுக்குத் தெரியும். அதன் உள்ளடங்கிய இலட்சியத்தை பாலனின் நெஞ்சு அறியும். தூரத்தில் நின்று பார்க்கும் இந்திராவுக்கும் இது புரியும். கமலத்தோடு தான் விளையாடுவதற்கு இந்திரா குறுக்கே நிற்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட பாலன், அதற்காக இந்திரா விடம் அன்பு பாராட்டினான். அதனால்தான் அன்பு பாராட்டுகிறான் என் பதை உணர்ந்து கொண்ட இந்திரா, கமலத்தோடு பேசுவதற்கு அதிக மான சந்தர்ப்பங்களை அவனுக்கு உண்டாக்கித் தந்தாள். அப்படித் தரு கிறாள் என்பதை நன்றாகக் கண்டு கொண்ட பாலன் இந்திராவிடத்தில் வைந்த அன்பை அதிகமாக்கிக் கொண்டான். இந்த முக்கோண வடிவ நாடகத்தில் தன் நினைவு இல்லாமல் நடமாடியவள் கமலம் ஒருத்திதான்.

சுந்தரத்தின் திருமணத்திற்கு இன்னும் இரண்டு நாட்களே இருந் தன அவர்கள் வீடு களை கட்டிக் கொண்டிருந்தது. பாலன் மாடியிலே உட்கார்ந்து படிப்பவன் போல் பாசங்கு செய்து கொண்டிருந்தான். காப்பியோடு உள்ளே நுழைந்தாள் கமலம். "காபி!" என்றாள். வேண்டு மென்றே அவன் பேசாமலிருந்தான்.

"காபியைக் குடித்துவிட்டுப் படிக்க முடியும் என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்" என்றாள் கேலியாக.

புத்தகத்தை மூடிவிட்டு நிமிர்ந்த பாலன் இடதுகையால் காபியை வாங்கியபடி வலது கையால் அவளது கையைப் பிடித்துவிட்டான். பதறிப்போய் "அம்மாடி!" என்று கதறி, கையை விடுவித்துக்கொள்ள முயன்றாள் கமலம். திணறினாள்; திமிறினாள். "விடுங்க அத்தான். விடுங்க அத்தான்!" என்று சத்தமில்லாமலே கத்தினாள். வேறு வழியின்றி அவள் கையை விடுவித்த பாலன் திரும்பிப் பார்த்தபோது அங்கே இந்திரா நின்றாள். கமலம் பயந்து போய்க் கண்ணீர் வடித்துவிட்டாள். ஒரு வார்த்தைகூடப் பேசாமல் இந்திரா அவளை அணைத்தபடியே கீழே இறங்கினாள். கீழே, ஒரு பர்மாப் பாயில் சின்னப்பரும் மங்கையர்க்கரசி யும் உட்கார்ந்து வெற்றிலை போட்டபடி உலக விவகாரங்களைப் பற்றி மும்முரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களைக் கவனிக்காதவள் போல் பின்புறத் தோட்டத்திற்குக் கமலத்தைக் கூட்டிக்கொண்டு போனாள் இந்திரா. தோட்டத்தின் வடக்கு மூலையிலே ஒரு கிணறு. அந்தக் கிணற்றின் அருகிலே துணி துவைப்பதற்காகப் போடப்பட்ட ஒரு கல். அந்தக் கல்லிலே தான் உட்கார்ந்து கொண்டு, தங்கையை அருகில் அழைத்து தட்டிக்கொடுத்தாள் இந்திரா.

"அழாதே கமலம்! ஏன் அழுகிறாய்? நான் முன்மாதிரி இல்லை இப்போது. முன்பு நான் கோபித்துக் கொள்வேன். இப்போது கோபிக்கமாட்டேன். நான் முன்பு கறுப்பாக மட்டும் தானிருந்தேன். இப்போது அப்படியில்லை. பார்க்கிறாயல்லவா" என்றாள். கமலம் பதில் சொல்லவில்லை. அழுதபடியே நின்றாள்.

https://t.me/tamilpdfebooks



"கமலம், ஒரு நல்ல காரியத்திற்காகக் கேட்கிறேன். நன்ருக முடிவு செய்துதான் கேட்கிறேன். பயப்படாமல், கூச்சப்படாமல் பதில் சொல்" என்ருள் இந்திரா. அவள் என்ன கேட்கப் போகிருளோ என்று திகைத்த படி நின்ருள் கமலம்.

"உண்மையிலேயே அத்தான் உன்னை விரும்புகிருர்; நீயும் அவரை விரும்புகிருயா?"

இந்திரா இந்தக் கேள்வியைக் கேட்டதும் கமலம் திகைத்துப் போனுள். "அக்கா!" என்ருள் நடுங்கியவாறு.

"பயப்படாதே கமலம்! நாம்தானே பேசிக் கொண்டிருக்கிருேம்! வேறு யாருமில்லை. அக்காளிடம் பேசுகிருேமென்று கருதாதே! உன்னிடத்தில் அக்கறையுள்ள யாரோ ஒருத்தியோடு பேசுவதாக எண்ணிக் கொண்டு பதில் சொல். மனதிலிருப்பதை அப்படியே சொல். எதையும் மறைக்க வேண்டிய அவசியமில்லை. எந்த வார்த்தைகளும் இனி என் மனதைப் புண்படுத்த முடியாது. பட்டுப்பட்டுக் காய்த்துப் போய்விட்டது உள்ளம். இப்போது சலனமற்ற மனதோடுதான் உன்னைக் கேட்கிறேன். தைரியமாகப் பதில் சொல்" என்ருள் இந்திரா.

"அக்கா! உண்மையைச் சொல்கிறேன். அவரிடத்தில் எனக்குக் கொஞ்சங்கூட ஆசை இல்லை. அவரிடம் நான் காட்டும் அக்கறையெல்லாம் உன் பொருட்டுத்தான். அவர் சந்தோசமாக இருந்தால் உன்னை நன்ருக வைத்துக் கொள்ளமாட்டாரா என்ற நப்பாசையினுல்தான் அவருக்கு அவ்வளவு பணிவிடைகள் செய்தேன். இன்று நீ கண்ட காட்சி, நான் கொஞ்சங்கூட எதிர்பாராமல் நடந்த ஒன்று. காபி கொடுக்கத் தான் போனேன்; கையைப் பிடித்துவிட்டார். அக்கா! ஆண்களுக்கு அது வெகு சுலபம். அத்தான் என்ன, அதற்கு விதிவிலக்கா? என்னை நம்பு. நீ வாழவேண்டும்; உன்னை அவர் மகிழ்ச்சியோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் என்றென்றும் எனது தீராத ஆசை" என்ருள் கமலம். இந்திரா வெறிச்சிட்ட பார்வையோடு சோர்ந்த நிலையில் உட்கார்ந்திருந்தாள். தண்ணீர் ஊற்றினுல் தழைத்து வளரும் கொடி வெந்நீர் ஊற்றினுல் கருகிப் போகிறது. ஆனுல், வெந்நீரும் நீர் தான்! அன்பு வார்த்தையில் துளித்துத் தழைக்கும் குடும்பப் பெண்களின் இதயம், சுடு சொல்லில் தளர்ந்து கருகிப் போகிறது. சுடு சொல்லும் சொல்தான்!—இந்திரா பாலனிடம் கேட்க விரும்பிய சொற்கள் தண்ணீர் போன்றவை. ஆனுல், தன்னை அறியாமல் பாலன் உதிர்த்த பலவும் வெந்நீர் போன்றவை. இந்திரா கருகிய கொடியாகக் காட்சி தந்தாள். கமலம், அந்தக் கோரமான காட்சியைக் கண்டாள். அக்காள் வாழ்வு மறுபடியும் துளிர்விடாது என்பதுதான் அந்தப் பேதைப் பெண்ணின் ஆசை. கமலத்தை விரும்புகிருன்; இந்திராவுக்கு அது நன்ருகத் தெரிகிறது. இந்த நிலையில் கமலத்தின் களங்கமற்ற சுபாவம் எவ்வளவு தூரம் இந்திராவைக் கவர முடியும்?

"கமலம், உன்னை நான் நம்புகிறேன். உன்னை என் தங்கையாகப்

https://t.me/tamilpdfebooks



பெற்றது கிடைக்க முடியாத பாக்கியம் என்றே நான் நினைக்கிறேன். ஆனல்...அத்தான் உன்னை விரும்புகிருர். நான் அவரை இனித் திருப்திப் படுத்த முடியாது. வெறும் வாய் வார்த்தையைத் தவிர அவர் வேறு எதையும் இனி என்னிடம் விரும்பமாட்டார். வாலிப வயது. அவர்தான் என்ன செய்வார். கமலம்! நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். அந்த முடிவை உன்னிடம் சொல்கிறேன். நீ பதில் சொல்லாதே! கலங்காதே! ஏன் என்று கேட்காதே! "அக்காள் இட்ட ஆணை; ஏற்றுக் கொண் டோம்!" என்று ஏற்றுக்கொள். நீ சம்மதித்து விட்டால் மற்றவர்களுக் குச் சமாதானம் கூற என்னல் முடியும்! இந்த ஏற்பாட்டை நான் விரும்புவதற்குக் காரணம், எனது சுயநலம்தான். அத்தான் என்னைவிட்டு வெகுதூரத்தில் விலகிவிடாமல் இருப்பதற்குத்தான் நான் இந்த முடி வுக்கு வந்துள்ளேன். வாழ்க்கையின் வளமான சுகத்துக்கு வாய்ப்பு இனி இல்லை என்ருலும், நிழலில் இருக்கிறேம் என்ற நிம்மதியாவது எனக்குத் தேவை. அதற்காகத்தான் இந்த முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்..."— என்று அடிப்படைப் பேச்சையே அதிகம் பேசிய இந்திரா, விஷயத்திற்கு சீக்கிரம் வரமாட்டாள் போல் தோன்றிற்று. கமலம் திகைத்தபடி குறுக்கிட்டு, "என்ன சொல்கிருய் அக்கா?" என்ருள்.

"நீ...நீ...அவரை மணந்து கொள்ள வேண்டும்" என்று திக்கித் திணறிச் சொன்னல், இந்திரா.

"அக்கா?" என்று அலறிய கமலம், இந்திராவின் தோளில் சாய்ந்து விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

"அழாதே கமலம். ஏன் அழுகிருய்! உன்...கண்ணீரைக் கடந்த பக்குவம் உனக்கு இன்னும் வரவில்லை- எனக்கு வந்துவிட்டது. கமலம்! இதை நான் வேண்டா வெறுப்பாகச் செய்வதாகக் கருதாதே! உண்மை யிலேயே நான் இந்த ஏற்பாட்டை விரும்புகிறேன். நானே பெருவியாதி பிடித்தவள்!—திரும்பத் திரும்ப இதை ஏன் நான் சொல்கிறேன் தெரி யுமா? அத்தானுக்கு என்மீது ஏற்படக்கூடிய அருவெறுப்பு, எனக்கே என்மீது ஏற்படுகிறது. அதனல்தான்!—இதை எவ்வளவுதான் ஒரு வயசுக்காரரர் சகித்துக் கொண்டிருக்க முடியும்? இன்றில்லாவிட்டாலும் நாளை, பளபளப்பான ஒரு மேனியின் கவர்ச்சியில் அவர் விழுந்துவிட நியாயம் உண்டு. தாளமாட்டாத தாகம் எடுத்தால் நாற்றம் எடுத்த தண்ணீரைக்கூட சுகாதார அதிகாரியே குடித்துவிடுவான்! தெரியாதா உனக்கு? நீ படித்தவள்- படிக்காத எனக்குத் தெரிந்ததைவிட உனக்கு அதிகம் தெரியுமே! எண்ணிப்பார். அப்படி என் அத்தான் ஏதாவதொரு பெண்ணின் பின்னலே போய்விட்டால் பிறகு என் நிலை என்ன? தாலி யோடு தாய் வீட்டில் தங்கிவிடும் வாழா வெட்டிகளில் நானும் ஒருத்தி ஆகவேண்டும். படத்தைப் பார்த்து, "இவர் என் கணவர்" என்று மகிழ் வதைத் தவிர வேறு வழி இல்லாமல் போகும். அதைக் காட்டிலும் எனக்கென்று இல்லாவிட்டாலும் உனக்கென்ருவது அவர் நம் வீட் டோடு தொடர்பு கொண்டிருந்தால், நானும் அவரை அடிக்கடி

https://t.me/tamilpdfebooks



பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்குமல்லவா? அதனுல்தான் நான் இந்தக் காரியத்திற்குத் துணிந்தேன்- வேறொருத்தி என் அத்தானை வசியப்படுத்தி விட்டால், பணிவிடை செய்ய எனக்கு வழி கிடைக்காது. நீயே அவர் மனைவி ஆகிவிட்டால், படுக்கை தட்டிப் போடுவதிலிருந்து பால் கொண்டு வந்து வைப்பதுவரை மனப்பூர்வமாக நானே செய்வேன்..." —இந்திரா நிறுத்தவில்லை. கமலம், அவள் வாயைப் பொத்தினுள். பொத்திய கையை எடுத்துவிட்டு இந்திரா, கமலத்தின் தலையைக் கோதிக் கொடுத்தவாறு மேலும் பேசினுள்.

"வெட்கத்தைவிட்டு இவ்வளவையும் நான் சொல்கிறேன்—காரணம் என்ன? கமலம்! எனக்கு நிம்மதி வேண்டும். எனக்குக் கிடைக்காதது வேறொருத்திக்குக் கிடைக்குமென்றுல், அந்த வேறொருத்தி எனக்கு வேண்டியவளாக இருக்க வேண்டும். எனக்கு வேண்டியவர்கள் உன்னைத் தவிர வேறு யார் இருக்க முடியும்! கண்ணு! நீ இனி எந்தப்பதிலும் சொல்லி என்னை மாற்ற முயற்சிக்காதே. நான் முடிவு செய்து கொண்டு தான் உன்னிடம் கையெழுத்துக்கு வந்திருக்கிறேன். அத்தான் அடிக்கடி ஒன்று சொல்வார். நம் நாட்டில் குமாஸ்தா செய்கிற முடிவில்தான் மந்திரி கையெழுத்துப் போடுகிருராம். அதுமாதிரி செய்கிற முடிவாகவே வெளி உலகத்திற்குத் தெரியுமாம்! என் தங்கமே ஒப்புக்கொள். மற்ற விஷயங்களை நான் சீக்கிரமே கவனிக்கிறேன்!" என்று முடித்தாள் இந்திரா.

கமலம் பதில் சொல்லவில்லை. அழுதாள். அதையே பதிலாகத் தந்தாள். பத்து நாளைக்கு ஒரு முறையாவது அழவில்லை என்றுல், அவள் பெண்ணே அல்ல! ஆம்; இந்த நாட்டில் கண்ணீர் விடுதல் அவர்களுக் கென ஒதுக்கப்பட்ட தொழில்!

"சொல், கமலம். இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது. அழுவதற்குத்தான் என்ன அவசியம் ஏற்பட்டு விட்டது? ஊரிலே அக்காளும் தங்கையும் ஒருவரையே மணந்து வாழவில்லையா? இது என்ன அதிசயமா! அவர்கள் எல்லாம் சண்டை போட்டபடியே ஒரு கணவனேடு வாழ்கிருர்கள். நானும் நீயும் சந்தோசமாகவே வாழ்வோம். பிறர் பார்த்துப் பொருமைப்படக்கூடிய அளவுக்கு நம்முடைய வாழ்க்கையை நடத்துவோம். அத்தான் மிகவும் நல்லவர். எனக்கு மட்டும் இந்தப் பெரு வியாதி வராமல் இருந்திருக்குமானுல், அவர் என்னிடம் எவ்வளவு அன்பு செலுத்துவார் என்பது எனக்குத் தெரியும். அது முழுமையும் உனக்குக் கிடைப்பதில் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?"—இந்திரா படபடவெனப் பேசினுள். தீர்க்கமான ஒரு முடிவைச் செய்து கொண்டு பேசத் தொடங்கினுல், வார்த்தைகள்தான் எப்படி வந்து விடுகின்றன. அவளது இடைவிடாத பேச்சிலே கமலம் அசந்து போனுள். "இனி அக்காளைத் திருப்திப்படுத்துவது என்பது அத்

https://t.me/tamilpdfebooks



தானே மணப்பதுதான்" என்று கமலம் எண்ணமிடும் அளவுக்கு இந்திராவின் "வாதம்" போய் நின்றது.

"அக்காளுக்கு அமைதிவேண்டும். மகிழ்ச்சி வேண்டும். அது, அத்தானை நான் மணப்பதன் மூலம் கிடைக்குமென்று அக்காள் உறுதியாகச் சொல்கிறாள். சொல்கிற விதத்திலிருந்து பார்த்தால், நியாயந்தான் போலிருக்கிறது"—கமலம் இப்படி நினைக்கத் துவங்கினாள்.

"என்னதான் சொல்கிறாய், அக்கா!" என்று திடீரென்று கேட்டாள் கமலம், இந்திராவைப் பார்த்து.

"அத்தானை, நீ மனப்பூர்வமாக மணந்து கொள்வதாக எனக்கு உறுதிகொடு" என்றாள் இந்திரா.

தலைகுனிந்தபடியே, "உன் விருப்பம் அதுவானால், நான் மறுக்கவா போகிறேன்?" என்றாள் கமலம்.

இந்தப் பதிலைக்கேட்ட இந்திரா, சடக்கெனக் கமலத்தை அணைத்துக் கொண்டு பூரித்தாள். தன்னைச் சீரழித்துக் கொண்டு பிறருக்கு வாழ்வளித்துப் பூரிப்பதற்குத்தான் தியாகம் என்று பெயர். இந்திராவின் கண்களிலே ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. கமலத்தின் கண்களிலே—எந்த உணர்ச்சியில் பிறந்ததென்று தெரியாத கண்ணீர் பெருகிற்று.

அப்போது மெதுவாகக் கள்ளனைப்போல் அந்தப் பக்கம் வந்து எட்டிப்பார்தான் பாலன். குற்றமுள்ள நெஞ்சு—அதன் தன்மையே அதிசயம்! "என்ன பேசிக் கொள்ளுகிறார்களோ? கமலம் இனி தன்னிடம் எப்படி நடந்து கொள்வாளோ? இதை யாரிடமாவது—ஒரு வேளை சுந்தரத்திடமே சொன்னாலும் சொல்லிவிடுவார்களோ?" என்றெல்லாம் பயந்தபடிதான் பாலன் அங்கே வந்து எட்டிப் பார்த்தான். அன்றிரவே ஏதாவதொரு சாக்குப்போக்குச் சொல்லி, சென்னைக்குப் புறப்பட்டுவிட வேண்டும். என்ற முடிவுக்கு அவன் வந்திருந்தான். கிணற்றடியில் நடந்து முடிந்த "சட்டசபை" ரகசியக் கூட்டத்தின் முடிவை அறிந்தவன் அல்ல அவன்.

அவன் வந்து பார்த்தபோது இந்திராவும் கமலமும் ஒருவரையொருவர் அன்போடு அணைத்த நிலையில் காணப்பட்டார்கள். அதைப் பார்த்த பாலன், வேறொரு கணக்குக்கு வந்தான். இனி, தன்னோடு பேசவே கூடாது என்று இந்திரா கமலத்தைக் கேட்டது போலவும், கமலம் அதற்குச் சம்மதித்தது போலவும் அந்த மகிழ்ச்சியிலேதான் கமலத்தை இந்திரா கட்டி அணைத்து மகிழ்கிறாள் என்றும் கணக்கிட்டான். அவன் இதயம் முடிவில் அவனைப் படாதபாடுபடுத்திற்று. கண்டிப்பாக—யாரிடமும் சொல்லாமலேயே அன்றிரவு சென்னைக்குச் சென்றுவிடுவது என்ற தீர்மானத்தை மறுபடியும் நிறைவேற்றிக் கொண்டு, தோட்டத்திலிருந்து திரும்பி மாடிக்கே சென்றுவிட்டான்.

கமலத்தின் சம்மதத்தைப் பெற்றுவிட்ட இந்திரா புது மலர்ச்சி பெற்றவளானாள். கமலத்திற்குத் தலைவாரிப் பின்னிவிட்டாள். மலர் வாங்கிச் சூட்டினாள். சாந்துப் பொட்டு வைத்து, கன்னத்தைத் தொட்டு

https://t.me/tamilpdfebooks



அப்படியும் இப்படியும் திருப்பி அழகு பார்த்தாள். நீண்ட நாட்களுக்குப் பிறகு, தங்கையைத் தன்கையாலேயே அலங்கரித்து மகிழ்ந்தாள். "இந்த அழகை அவர் நன்ருக ரசிப்பார். இடைவிடாத முத்தங்கள் தருவார்" என்று சொல்லவில்லை; ஆனால், நினைத்தாள், அவர் ரசிப்பார் என்பதிலேயேதான் பெருமைப்பட்டாள்.

கட்டிலறையில், முதலிரவில் அவர் தன்னைத் தொட்டதையும் குறும்புத்தனமாக நடந்து கொண்டதையும் அப்படியே கமலத்தோடு பொருத்திப் பார்த்தாள். "அவரும் இவளும் ஒன்ருகத் தூங்கினல், அந்த அழகே தனிதான்" என்று எண்ணிய எண்ணத்தைப் புன்னகையில் வெளியிட்டாள். அடிக்கடி அக்காளின் மலர்ந்த முகத்தையே கவனித்தாள் கமலம்.

திடீரென்று அங்கே பிரசன்னமாகி, இலை போட்டிருப்பதாகச் சங்கு ஊதினன் சமையற்காரன்.

"போய், அத்தானைச் சாப்பிடக் கூப்பிடு, கண்ணு!" என்ருள் இந்திரா.

கமலம் தயங்கினுள். கைவளையலைச் சரி செய்தபடி தலைகுனிந்திருந்தாள். வளையலை அவள் தொட்டுக் கொண்டிருந்த காட்சி, "காபி கொடுக்கப் போன போது இந்தக் கையைத்தான் பிடித்தார். இப்போது மறுபடியும் போகச் சொல்கிருயே!" என்பது போலிருந்தது. இந்திரா அவள் முகத்தைத் தூக்கி, "போடா கண்ணு! இனிதான் நீ அவரது மனைவியாகப் போகிருயே! அப்படியே வேடிக்கையாக விளையாடினல்தான் என்ன?" என்ருள்.

கமலம் ஒரு பெருமூச்சோடு எழுந்து, மாடிப்படிகளில் ஏறினுள்; தயங்கித் தயங்கி நின்ருள். அங்கேயும் தொடர்ந்து வந்த இந்திரா "போம்மா" என்ருள் பரிவோடு. கமலம், மாடி அறைக்கு வந்தாள். அங்கே, பாலன் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். கதவுக்கு இந்தப்புறம் நின்ருள் கமலம். கமலத்தைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டான் பாலன். பள்ளிப் பருவத்தைக் கடந்தவனைக் கூடப் பிரம்பால் அடிக்கும் வாத்தியார், மனச்சாட்சி ஒன்றுதான்!

"சாப்பிட வாருங்கள்!" என்ருள் கமலம்.

"பசியில்லை" என்ருன் பாலன்.

—அதற்குமேல் கமலம் அங்கே நிற்க விரும்பவில்லை. திரும்பினுள் இறங்குவதற்காக. அங்கே, மாடிப்படியிலேயே நின்று கொண்டிருந்த இந்திரா, "சும்மா கொஞ்சம் சாப்பிடலாம்; வாங்கன்னு கூப்பிடு" என்று பாடம் சொல்லித் தந்தாள். கமலமும் இந்திராவும் பேசுவது பாலனுக்குத் தெரியாதவாறு அந்த அறையின் அமைப்பு இருந்தது.

"சும்மா கொஞ்சம் சாப்பிடலாம் வாங்க" என்று அதையே ஒப்பித்தது அந்தக் கிளி!

"வேண்டாம்" என்று ரத்தினச் சுருக்கமாகப் பதில் கொடுத்தான், அந்த எழுத்தாளன்.

https://t.me/tamilpdfebooks



கமலம் அக்காள் முகத்தைப் பார்த்தாள்..

"இங்கே கொண்டு வரட்டுமான்னு கேளு!" என்று சொல்லித் தந்தாள், மெதுவாக இந்திரா.

"இங்கே கொண்டு வரட்டுமா?" என்று அப்படியே கேட்டாள் கமலம்.

பாலன் திகைத்தான்—என்ன இது! அதிசயம்! பயம் தெளிந்துவிட்டதா?—அவனுக்குப் புரியவில்லை. அவன் குழப்பம் குழப்பமாகவே இருந்தது.

"வேண்டாம்!" என்றான் அதற்கும்.

"இல்லே! கொண்டு வரேன்னு சொல்லிவிட்டு வா!" என்றாள் இந்திரா.

"கொண்டு வாரேன்!" என்று சொல்லிவிட்டு இறங்கினாள் கமலம்.

கீழே மங்கையர்க்கரசியும் சின்னப்பரும் ஓயாத பேச்சுப் பேசிக் கொண்டிருந்தார்கள். சுந்தரம் வெளியே போனவன் வீடு திரும்பவில்லை. கீழே இறங்கிய சகோதரிகளைப் பார்த்து, தாய், "இந்திரா! சுந்தரம் வர நேரமானாலும் ஆகும். ஒம் புருஷனைச் சாப்பிடச் சொல்லு!" என்றாள். "இதோ! அதைத்தான் சொல்லிவிட்டு வருகிறோம்!" என்று பதில் சொன்ன இந்திரா, கமலத்தை அழைத்துக் கொண்டு மறுகட்டிற்குச் சென்றுவிட்டாள்.

காலம்போன தம்பதிகள் வெற்றிலேயோடு போர்புரிந்தபடி "ஊர்க்கதை" பேசுவதைத் தொடர்ந்தனர்.

சிறிது நேரத்தில் கமலம் சாப்பாட்டுத் தட்டைக் கையில் ஏந்தியபடி முன்வர, அவளை முன்னால் தள்ளுகிற பாவனையில் பின்னால் வந்தாள் இந்திரா. அதைக் கவனித்த மங்கையர்க்கரசி, "ஏம்மா! ஒம் மருஷன் எங்கேயோ இப்ப இறங்கிப் போனாரே!" என்றாள் இந்திராவைப் பார்த்து.

"வெளியிற்போயிருப்பார்! வந்துவிடுவார்!" என்றபடி கமலத்தை அழைத்துக் கொண்டு சாப்பாட்டோடு மாடிக்குச் சென்றாள் இந்திரா.

கீழே உட்கார்ந்திருந்த சின்னப்பர், மனைவியைப் பார்த்து, "ஆமா! மாப்பிள்ளை போறபோது, எந்திரிக்காம மாடுமாதிரி உக்காந்திருக்கியே! மக்குக் கழுதை!" என்றார் செல்லக் கோபத்தோடு.

"அது சரி விடுங்க. புதுமாப்பிள்ளையா! பழைய மாப்பிள்ளை தானே!" என்று செல்லமாகப் பதில் சொல்லி வைத்தாள் மங்கையர்க்கரசி.

மாடியில் மேசையைத் தட்டி, தரையைக் கூட்டி, ஒழுங்கு செய்தாள் கமலம். இந்திரா அவளைப் பார்த்து, "கண்ணு! அத்தானுக்கு நீ சோறு போடுறதை நான் ஒளிஞ்சு நின்னு பாக்கப் போறேன். முந்தி மாதிரியே சிரிச்சுக்கிட்டு சோறு போடணும். கையைத் தொட்டாக்கூட சிணுங்காதே!" என்றாள்.

கமலம் தலையசைத்தாள், சம்மதத்திற்கு அறிகுறியாக.

https://t.me/tamilpdfebooks



"கல்யாணத்துக்கு அப்புறம் எப்படி இருப்பீங்க இங்கிறதை இப்பவே பாத்துடனும் போல் இருக்குது. 'சந்தோசமா சாப்பாடு போடணும்! தெரியுதா?" என்றாள் இந்திரா.

கமலம் "நிலம் நோக்கி" நின்றாள்.

திடீரென்று பலமான காற்றடிக்கத் துவங்கிற்று. சன்னல்கள் மடமடவென அடித்தன.

"சாப்பாட்டைச் சரியா மூடு! தூசி விழும்" என்று சத்தமிட்டாள் இந்திரா.

மூடப்போன கமலத்தின் காலில், அந்த சூறைக் காற்று, மேசையிலிருந்த ஒரு கடிதத்தை சமர்ப்பித்தது. அதை சாதாரணமாகக் கருதி, சாப்பாட்டை மூடிய கமலம், அந்தக் கடிதத்தை எடுத்து மேசையின் மேல் மீண்டும் வைத்தாள், அதன் மேலே இருந்த ஒரு வரி பளிச் சென்று அவள் கண்களில் பட்டது.

அதில் "இந்திராவுக்கு" என்றிருந்தது.

"இதென்ன கடிதம்?" என்று பிரித்துப் படித்த கமலம், "அக்கா!" என்று கத்தினாள். படிக்கத் தெரியாத இந்திரா, "என்ன!" என்றபடி அவள் அருகில் வந்தாள்.

"அத்தான் கடிதம் எழுதி வச்சுட்டுப் போயிட்டார்!" என்று பதறினாள், கமலம்.

"என்ன எழுதியிருக்கார்? படி! படி!" என்று துடித்தாள் இந்திரா.

கமலம் நடுங்கும் கரத்தோடு படித்தாள்.

"அன்புள்ள இந்திராவுக்கு.

நான் கண்காணாத இடத்துக்குப் போய்விடப் போகிறேன். என்னைத் தேட வேண்டாம். உயிரோடிருந்தால் மீண்டும் சந்திப்போம்.

அன்புள்ள,
பாலன்."

படித்தாள் கமலம், துடித்தாள் இந்திரா; கதறி அழுதாள்.

"ஐயோ, இந்த முடிவை உடனே அவருக்குச் சொல்லாமல் போய் விட்டேனே! சொன்னால் போயிருக்கமாட்டாரே!" என்று சொல்லிச் சொல்லி அழுதாள். அழுகைக் குரல் கேட்டு கீழே இருந்த எல்லோருக்கும் மாடிக்கு ஓடிவந்தார்கள். அப்பொழுதுதான் கீழே வந்த சுந்தரமும் பதறிப்போய் மாடிக்கு ஓடிவந்தான்.

"என்ன! என்ன! ஏம்மா?" என்று தேற்றியபடி தாங்களும் அழ ஆரம்பித்தார்கள், மங்கையர்க்கரசியும் சின்னப்பரும். கண்ணீர் சிந்தி நின்ற கமலம், சுந்தரத்திடம் கடிதத்தை நீட்டினாள். படித்துப் பார்த்த சுந்தரத்திற்கு விஷயம் விளங்கவில்லை. "ஏன், பாலன், கண்காணாத இடத்துக்குப் போக வேண்டும்! இந்திராவுக்கு அவனுக்கும் ஏதாவது தகராறு நேர்ந்திருக்குமோ!"— இவ்வாறு எண்ணிய சுந்தரம், "ஏம்மா! ஏதாவது சண்டையா?" என்று கேட்டான், இந்திராவைப் பார்த்து.

https://t.me/tamilpdfebooks



"இல்லே! எதுவும் இல்லே!" என்று சொன்னபடியே அழுதாள் இந்திரா.

"சரி! இப்ப ஒண்ணும் ரெயில் கிடையாது. டவுனுக்குள்ளேதான் திரிவான், போயிக் கூட்டியாந்திடுறேன்"" என்று கூறியவாறு வெளியேறினன், சுந்தரம்.

ஓய்ந்த இந்திராவும் மங்கையர்க்கரசியும், தங்கள் சங்கடத்தைப் பரிமாறிக் கொண்டார்கள். கமலமும்கூட இருந்தாள். அப்போதும் இந்திரா, தான் செய்து வைத்திருக்கும் முடிவைத் தாயிடம் கூறவில்லை.

,பாலனைக் கண்டுபிடிக்கச் சென்ற சுந்தரம், மாலையில் வீடு திரும்பினன். அவனுடனேயே வெளிறிய முகத்தோடு பாலனும் வந்தான்? வரும்போது. சுந்தரமும் பாலனும் ஒருவரோடொருவர் பேசவில்லை. வந்த பிறகும் ஊமையாகவே இருந்தார்கள். பேச வேண்டியவற்றை சுந்தரம் ராஜ வீதியில் பாலனைக் கண்டுபிடித்த உடனேயே பேசிவிட்டான். பாலன், எதையும் தெளிவாகச் சொல்லவில்லை என்றாலும் சுந்தரம் ஓரளவு விளக்கமாகக் கூறினன்- கமலத்தின் கையைப் பிடித்த பிரச்சினை மட்டும் அங்கே அடிபடவில்லை. காரணம், சுந்தரத்திற்கு அது தெரியாது.

பாலனை அழைத்துக்கொண்டு வந்த சுந்தரம் அமைதியின் ஒரு நுனியைப் பிடித்துவிட்ட பாவனையில் அசந்து உட்கார்ந்தான். எதிரே பாலன் உட்கார்ந்தான் சிபாரிசு செய்து கூட்டி வரப்பட வேண்டிய நிலையில்தான் இருப்பதற்காக அவன் மகிழ்ந்தான். எல்லா மாப்பிள்ளைகளுக்குமே இதில்தான் அலாதி மகிழ்ச்சி.

இந்திரா மெதுவாக, முந்தானைத் தலைப்பைக் கையில் தாங்கியவாறு, பாலனிடம் வந்து, "சாப்பிட வாருங்கள்" என்ருள். மாலை, மணி ஆறு. சாப்பிடாமலா இருந்திருப்பான்? "சாப்பிட்டு விட்டேன்" என்ருன், பாலன்.

"எங்கே சாப்பிட்டீங்க?"—இது இந்திரா.

"ராஜவீதி ஓட்டலில்!" இது பாலன்—இப்போது சின்னப்பரும் அங்கே வந்து, கொஞ்சம் சாப்பிடும்படி சிபாரிசு செய்தார். பாலன் முன்பு கூறிய பதிலேயே அவருக்கும் கூறினன். சுந்தரம் பாலனையும் இந்திராவையும் தனித்துவிட விரும்பி, வேறுபுறம் சென்றுவிட்டான். சின்னப்பரும் குறிப்பறிந்து விலகினர்.

"வாருங்கள், மாடிக்குப் போவோம்!" என்ருள், இந்திரா. பாலன் அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

"நிறையப் பேச வேண்டும். ஒரு நல்ல முடிவு செய்திருக்கிறேன். வாருங்கள்" என்ருள். அந்த முடிவை உடனேயே சொல்லி பாலன் சந்தோசப்படுவதைக் கண்ணுல் காண வேண்டும் போலிருந்தது அவளுக்கு! அப்போதுதான் தனக்கும் அமைதி கிடைக்குமென்று அவள் நம்பினுள்.

பாலன் கோபுரத்துப் பொம்மை நிலையிலிருந்து விலகி, எழுந்து அவள் பின்னுல் சென்ருன். இருவரும் மாடிக்கு வந்து சேர்ந்தார்கள்.

https://t.me/tamilpdfebooks



இந்திரா, தூசு படிந்திருந்த மெத்தையைத் தட்டிப் போட்டாள். கொஞ்ச நேரம் மவுனம் நிலவியது. இந்திரா, அந்த மவுனத்தைக் கலைத்தாள்.

"நீங்கள் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. அதற்காக நீங்கள் எப்படி நடந்து கொண்டாலும் நான் வருத் தப்படமாட்டேன்"—என்ருள்.

கமலத்தின் கையைப் பிடித்தது தவறில்லை என்று பாலனுக்கும் படவேண்டும், அதுபற்றி அவன் வருத்தப்படக் கூடாது; வெட்கப்படக் கூடாது—இந்த ஆசையில்தான் அவள் பேச்சைத் துவக்கிஞள்.

"என்ன இருந்தாலும் "கொழுந்தியா" தானே? நீங்கள் நடந்து கொண்டது ஒன்றும் தவறில்லே! கமலம் அறியாப் பெண்...நான்கூட அதைப்பற்றித் தவருக நினைக்கவில்லை. ஏன்...நாளைக்கு...அவளேயே நீங்கள் விரும்பிஞல்கூட மணம் முடித்து வைக்கத்தான் நான் ஆசைப் படுகிறேன்."

பாலன் திடுக்கிட்டான்.

இந்திரா, சலனமின்றித் தொடர்ந்தாள்.

"ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்? உண்மையைச் சொல்கிறேன். அக் காளும் தங்கையும் அன்னியோன்யமாகவே வாழ்வோம் என்று முடிவு செய்து கொண்டுதான் உங்களிடம் சொல்கிறேன். அத்தான்! நான் இனி வாழ்க்கைக்கு லாயக்கற்றவள். கமலம் உங்கள் மனைவியாஞல்தான் எனக்கு மகிழ்ச்சி. மரத்துப்போன இந்த உடம்புக்கு, இனி சுகம் ஒன் றும் தேவை இல்லை. என்னை மணந்து கொண்டதற்காக உங்கள் இளமை யும் அழகும் பாழாகக்கூடாது. கமலம் உங்கள் மனைவியாஞல்...அதில் அவள் சுகம் பெற்ருல், நான் சுகம் பெறுவது போலத்தான்!"

பாலனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் தலை சுற்றிற்று. வாயடைத் துப் போய் உட்கார்ந்திருந்தான். முகம் மட்டும் தாஞக மலர்ந்தது!, இந்திரா அதைக் கவனித்தாள்.

"நில்லுங்கள் அவளை வரச் சொல்லுகிறேன். அவளிடமே கேட்டு விடுங்கள்..." என்று கூறியபடியே பதிலை எதிர்பார்க்காமல் "படபட" வெனக் கீழே இறங்கிஞள் இந்திரா.

இந்திராவின் போக்கால்—வார்த்தையால், பாலனை வியப்புச் சூழ்ந்தது. இந்திராவின் தியாக உள்ளத்தை நன்ருக அறிந்தவன்தான் பாலன். ஆஞலும் அவ்வப்போது வரும் "மகத்தான சுயநலம்" அதை மறக்கடித்து விடுவது வழக்கம். இப்போது பாலன் தன்னையே நொந்து கொண்டான். தெரிந்தும், இந்திராவை நன்ருகப் புரிந்து கொண்டிருந் தும் திடீரென ஏன் இந்தக் காரியம் செய்தோம், என அவன் நினைவு குத்திற்று.

அன்னம் நடப்பது போல் அந்தச் சின்னவள் நடந்து மாடிப்படி ஏறுவதை, மயான அமைதியிலிருந்த பாலன் உணர முடிந்தது. ஆம்; கமலம் மெதுவாக ஏறி மாடி அறைக்கதவோரம் வந்து நின்ருள். பாலன்,

https://t.me/tamilpdfebooks



தான் முதலில் பேசககூடாது என்ற விரதத்தோடு, வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டு அவளைக் கவனிக்காதவன் போல் சாய்ந்து கிடந்தான். கொஞ்ச நேரம் தானும் சிலையாகி நின்றாள் கமலம். அவளுக்குப் பின்னால் வந்த இந்திரா இந்த அமைதியைத் தாளமுடியாமல் அவளைப் பிடித்து உள்ளே தள்ளினாள். அந்த வேகத்தில், பாலனின் கட்டில் அருகிலேயே வந்து நின்றாள் கமலம். பாலன் அடங்காத மகிழ்ச்சியோடு அவளைக் கூர்ந்து கவனித்தான்.

கமலம்!—இப்போது அவள் அலங்காரவதியாக வந்திருந்தாள். சாதாரணமான நிலையில் பார்த்தாலே பாதி உயிர் பறந்து போகும்! அலங்காரமும் சேர்ந்து கொண்டால்...? கமலத்தின் கூந்தல் தாங்கியிருந்த ஒரு கொத்து மல்லிகை தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தது. மனிதனைக் கெடுப்பதே மலர் வாடைதான்! "குப்"பென்று அடிக்கும் மலர் வாடையில் மயங்கிவிழும் மனிதன், அந்த மலர் குடியிருக்கும் கூந்தலுக்கு உடையவளை அவள் கருப்பாக இருந்தாலும் காமக் கண் கொண்டுதான் நோக்குவது வழக்கம்! பாலனுக்கு முன்னால் நின்றதோ ஈடு கட்ட முடியாத பேரழகு—தனிமை! மனைவியே சம்மதித்து அனுப்பியுள்ளாள்!—போதாதா? பாலன் காதல் சுரத்தோடு "கமலம்!" என்றான். கமலம் தலைகுனிந்து நின்றாள். பாலன் எட்டி அவள் கையைப் பிடித்தான். அவள் மேனி சிலிர்த்தது. அந்தக் கையிலிருந்த வளையலை, மேல் புறமாகத் தள்ளிவிட்டான். இப்போது அவனுக்கு தைரியம் வந்துவிட்டது. கையைப் பிடித்து இழுத்துத் தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டான். அவன் புதிய உலகத்துக்குப் புறப்படுபவனாகக் காணப்பட்டான்.

"கமலம்! நீ என்னை விரும்புகிறாயா?"

இல்லை! நிச்சயமாக அவள் அவனைக் காதலிக்கவில்லை. அக்காள் காதலிக்கச் சொல்லி ஆணையிட்டாள்; அக்காளுக்காகவே அங்கு வந்துள்ளாள். ஆனால், கமலம் அதைச் சொல்லவில்லை.

"உம்..." என்று தலையசைத்து ஆமோதித்தாள். பாலன் அவள் முகத்தை நிமிர்த்தினான். முழுமதியின் பாலொளியை அந்த முகத்திலே கண்டான். எந்த உருவமும் நிழலாடாத இரு கரு விழிகளுக்குள்ளும் தன் உருவம் பிரதிபலிப்பதைக் கண்டான். செய்து வைத்தது போன்ற இமையும், அதிலே அலங்கரிக்கப்பட்டிருந்த மைச் சிதறலும், பளிச்சென்று ஒளிவீசும் கண்களும்—சிற்பியின் கற்பனைக்கு அப்பாற்பட்ட அந்தச் சிலை வடிவின் ஒருபாகமாகத் தன் கைகளுக்குள் அகப்பட்டிருப்பதை நினைத்ததும் அவன் உயிரே நின்றுவிடும் போலிருந்தது. "லிப்ஸ்டிக்" பூசாமலே இவ்வளவு சிவப்பு எப்படி வந்தது என்று அதிசயித்தான். சிறு பிளவுகள்கூடக் காணப்படாத அந்தச் சித்திர உதடுகளில், பாலன்...தன்னை மறந்து ஒரு முத்தம் பதித்தான்; மேனி ஆடி அடங்கிற்று. பாலன் உலகை மறந்தான். "கமலம்!" என்று தாளமாட்டாமல் கூறி, தன் கைகளுக்குள் முழுக்க அரவணைத்துக் கொண்டான்.

https://t.me/tamilpdfebooks



கமலம், தன்னை மறந்து அவன் மார்பில் சாய்ந்திருந்தாள்.

"நீ என்னை மணந்து கொள்ளப் போவதாக இந்திரா சொன்னாள்.."—என்று இழுத்தான்.

கமலம் பேசாமலிருந்தாள்.

"உனக்குச் சம்மதந்தானே?"

கமலம் கண்களை மூடிக்கொண்டாள்.

"சொல் கமலம்?"

கமலத்தின் முகம் சிவந்தது!

எழுத்தாளனுக்கு அதற்கு மேல் சொல்லவா வேண்டும்? கண்டவுடனே கையைப் பிடிக்கிற வல்லமையும், பார்வையிலேயே பாடம் படிக்கிற புத்திக் கூர்மையும் எழுத்தாளன் ஒருவனுக்குத்தானே வரும்!—பாலன் புரிந்து கொண்டான். முத்தங்களைத் தடையின்றி வழங்க ஆரம்பித்தான்.

இந்திரா!—அவள் இந்த நாடகத்தைக் கவனித்துக் கொண்டு தானிருந்தாள்! கண்ணீரோடு—ஆனந்தத்தோடு! பாலன் அதற்கு மேலும் கமலத்தோடு விளையாட விரும்புபவன் போலக் காணப்பட்டான். இந்திரா அதை விரும்பவில்லை. திருமணத்திற்கு முன்னால் கணவனாக வரப்போகிறவனோடுகூட— விளையாட மாட்டார்கள் உயர் குடும்பப் பெண்கள்.

பாலனின் கரங்கள் நிலை மறக்கத் துவங்கின. கமலம் கூனிக்குறுகி அவன் மடியில் சாய்ந்து கிடந்தாள். யாரும் பார்ப்பார்களோ! என்ற பயம் வேறு அவள் நெஞ்சைக் கவ்வியது. இந்திரா மாடிப்படியில் நாலு படி இறங்கி நின்று கொண்டு, "கமலம்!" என்று குரல் கொடுத்தாள். கமலம், பசுக்குரல் கேட்ட கன்று போல் அவன் கைகளிலிருந்து விடுபட்டு படபடவென இறங்கினாள். பாலன் வருந்தவில்லை!— "இனி கமலம் நமக்குத்தான்!" என்ற நம்பிக்கைதான் அவனுக்கு வந்துவிட்டதே! உற்சாகமாக மெல்லிய குரலில் பாட ஆரம்பித்தான். இப்போது அவனை உதைத்தாலும் அந்த வீட்டை விட்டுப் போகமாட்டான்! இந்திரா அதில் வெற்றி பெற்றுவிட்டாள்.

## 10

அன்று திருமணம்! சுந்தரத்திற்கும் சாரதைக்கும்! வீடு மேளச் சத்தத்தில் மிதந்தது. எல்லோரும் திருமண வேலையில் மூழ்கிக் கிடந்தார்கள். பாலன் மட்டும் கமலத்தைப் பார்ப்பதற்கு அலைந்து கொண்டிருந்தான். அதை அறிந்து கொண்ட இந்திரா, மெதுவாக பாலனிடம் வந்து, "தப்புத் தவறு ஒண்ணும் செஞ்சு வச்சுறாதீங்க! சும்மா இருங்க!

https://t.me/tamilpdfebooks



ஒரு பத்து நாள் பொறுத்துக்குங்க!" என்று சொல்லிவிட்டு பதில் பெறுமலே பறந்தாள்.

இரவு வந்தது. மண வீட்டிலிருந்து, மாப்பிள்ளையும் பெண்ணும் பிரிக்கப்பட்டார்கள். தனி அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இந்திரா அண்ணனையும் அண்ணியையும் அனுப்புகின்ற பணியைக் கவனித்தாள். அண்ணியின் கன்னத்தில் சாந்துப் பொட்டு வைத்தாள். களங்கமில்லாத அந்தக் கண்ணுடி அழகைப் பார்த்து யாரும் திருஷ்டி வைத்துவிடுவார்களாம். அதனுல்தான் சாந்துப் பொட்டினுல் ஒரு செயற்கைக் களங்கம் உண்டாக்கினுளாம்.

மணி பதினென்று அடித்தது. அதுவரை கமலத்தை மறந்துவிட்ட இந்திரா, "கமலம் கமலம்" என்று அழைத்தபடி தேட ஆரம்பித்தாள். கீழே எங்கும் காணவில்லை. அவள் நெஞ்சம் துணுக்குற்றது. "கமலம்! கமலம்!" என்று கதவைத் தட்டினுள். அவளைப் பயம் சூழ்ந்தது. கல்யாண வீட்டில் ரசாபாசம் நிகழ்ந்து விடக்கூடாதே என்று அவள் அஞ்சினுள்.

உள்ளே என்ன நடக்கிறதென்பதை அறிய இந்திராவால் முடியவில்லை. ஆனுல், கமலம் உள்ளேதான் இருக்கிருள் என்பது மட்டும் அவளுக்குப் புரிந்துவிட்டது.

"விடுங்கள்! அக்காள் கூப்பிடுகிருள்! அக்காள் கூப்பிடுகிருள், விடுங்கள்!" என்ற பெண் குரல் கமலத்தின் குரல்தான்!—இந்திராவின் தலை சுழன்றது. படபடவெனக் கதவைத் தட்டினுள். கதவு திறக்கப்பட்டது. பலவந்தமாக பாலனிடமிருந்து விடுபட்டு ஓடிவந்து தாழைத் திறந்தாள் கமலம்! இந்திரா பயந்த நிலையில் அவளைப் பார்த்தாள். கமலம் அலங்கோலமாக நின்ருள். அவள் மேனி நடுங்கிக் கொண்டிருந்தது. இந்திரா அவளை அணைத்தவாறு அறைக்குள்ளேயே சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள். வெளியார் யாரும் பார்த்துவிடக்கூடாதே என்ற பயம்தான் அவளுக்கு. பாலன் ஒரு புறமாகத் திரும்பிச் சாய்ந்து கொண்டிருந்தான்.

"இது நியாயந்தாஞ? யாருக்காவது தெரிந்தால் என்ன ஆவது? ஏன் இந்த அவசரம்?" இந்திரா பாலனிடம் முதன் முறையாக, கடிய குரல் காட்டினுள். பாலன் பேசவில்லை. குற்றவாளி அவன்! கோழையானுன்.

"கொஞ்சம் பொறுத்தால் என்ன கெட்டுப் போய் விட்டது! எவ்வளவு தூரம் இணங்கிக் கொடுக்கிறேன், நீங்களும் கொஞ்சம் ஆர அமர எதையும் செய்யக் கூடாதா? கமலம் உங்களுக்குத்தான் என்று உறுதியாகவே கூறிவிட்டேன்! என் இடத்தை முற்றிலும் அவளுக்குத் தரத் துணிந்துவிட்டேன். கழுத்திலே ஒரு பொட்டுத் தாலி ஏறுவதற்கு முன் அப்படி என்ன பசி? யாராவது பார்த்திருந்தால் மானம் மரியாதை என்ன ஆவது? கெட்டதற்குப் பிறகு, திருமணம் முடிந்ததாகக்கூட

https://t.me/tamilpdfebooks



ஊரிலே சொல்வார்களே! "கெட்டுப் போய்விட்டாள், வேறு வழியில்லை. அவனுக்கே கட்டிக் கொடுத்து விட்டார்கள்" என்றுதானே சொல்வார்கள்! அதுதான் பெருமையா?"—இந்திரா படபடவெனப் பொழிந்தாள். தங்கையைத் திரும்பிப் பார்த்தாள். மேலாடை கிழிந்து அவள் நின்ற கோலம் இந்திராவை வேக வைத்தது. கமலம் முகம் புதைத்து நின்றாள்.

"எல்லாம் உன்னால்தானே வந்தது! எதற்கெடுத்தாலும் என்னையே அனுப்பினாய்! அவரைத் திருப்தி செய்ய வேண்டுமென்ற உன் ஆசைக்கு என்னைப் பலியிடத் துணிந்தாய். மானம் போகும் நிலைக்கு வந்து நிற்கிறது, உன் தியாகச் செயல்! வேறொருவரை மணந்து நான் நன்றாக வாழ்வேனே! இந்தக் காமாந்தக்காரனுக்கு என்னைக் கட்டிவிட நீதானே முடிவு செய்தாய்! உனக்காகத்தானே இணங்கினேன். தண்ணீர் கேட்டார்; கொடுக்க வந்தேன். தாழிட்டுவிட்டார் கதவை! சத்தம் போடுவேனா? போட்டால் மானம் என்ன ஆவது? பிறகு உன் முடிவுதான் என்ன ஆவது? அதற்காக மெதுவாகவே மறுத்தேன்; திமிறினேன்! நீ மட்டும் வராமலிருந்தால், என் முதலிரவு பலாத்காரமாகவே நடந்திருக்கும். பாரடி என் கோலத்தை!" என்று கமலம் சொல்லவில்லை; ஆனால், அவ்வளவு புகைந்தது அவள் மனதில். வயிற்றுப் பசி எடுத்தவன், பிணம்—மலம் என்று பார்ப்பதில்லை. உடற்பசி எடுத்தவன், தாய்—சேய் என்று பார்ப்பதில்லை.

இந்திரா, கமலத்தின் தலையைக் கோதிக் கொடுத்தாள். "என்ன செய்தீர்கள்?" என்று கேட்டாள், பாலனைப் பார்த்து! என்ன கேட்பதென்று புரியாமல் இப்படிக் கேட்டு வைத்தாள் அந்த அப்பாவிப் பெண்! கமலத்தின் கன்னத்தில் பல இடங்களில் அழுத்தமாகப் பல் பதிந்த தழும்பு காட்சியளித்தது; அழகான புதிய பெண்ணோடு காதல் புரியும் போதுதான் மனிதன் அசல் நாயாகிறான். பாலன் பேசாமலே இருந்தான். உடனே இந்திரா, கமலத்தைப் பார்த்து, "நில் கண்ணு. புதிய ரவிக்கை எடுத்து வருகிறேன். அதுவரை கதவைத் திறக்காதே!" என்று கூறிவிட்டு, பாலனையும் பார்த்து, "நீங்கள் நன்றாயிருப்பீர்கள். கொஞ்ச நாள் பொறுங்கள். அதுவரைக்கும் நீங்கள் வெளியே எங்காவது சென்று வர ஆசைப்பட்டாலும் சென்று வாருங்கள். இங்கே ரசாபாசம் வேண்டாம்" என்று கூறிவிட்டுக் கதவைத் திறந்து வெளியேறிச் சாத்திக் கொண்டு கீழே இறங்கினாள். இப்போது கமலமும் பாலனும் தனித்திருந்தார்கள். பாலன் மறுபடியும் அவளருகில் வந்து எட்டிப் பார்த்தான். கமலம் சடக்கென அவன் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "என்னைக் கெடுத்து விடாதீர்கள்! இன்னும் நீங்கள் இதுமாதிரி நடந்தால் நான் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை!" என்று கூறிவிட்டு எழுந்து சுவற்றருகில் நின்று கொண்டாள். பாலன் சாமியாடிபோல் வேர்த்து விறுவிறுத்து உட்கார்ந்திருந்தான்.

https://t.me/tamilpdfebooks



இந்திரா ஒரு புதிய ரவிக்கையோடும் சேலையோடும் மேலே வந்தாள். கமலத்திடம் கொடுத்து மாற்றிக் கட்டிக் கொள்ளச் சொன்னாள். கமலமும் அந்த அறைக்குள்ளேயே மறைவாகக் கதவருகில் சென்று சேலை மாற்றிக் கொண்டு ரவிக்கையையும் மாற்றினாள். அதை ஒரு காகிதத்தில் சுற்றி எடுத்துக் கொண்டாள் இந்திரா. இருவரும் பூனைகள்போல் மாடிப்படிகளில் இறங்கினார்கள். பாலன், பெருமூச்சு விட்டுத் திரும்பிப் பார்த்தான்.

மனிதன் வர்ணம் மாற்றும் பச்சோந்தி! தினசரி மனிதனது நிறம் மாறுகிறது; குணம் மாறுகிறது. காலையிலிருந்த புத்தி மாலையில் இருப்பதில்லை. ஏன் இருப்பதில்லை என்பதற்குக் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை. பாலன் ரோஷக்காரனாக இருந்தான், நான்கு நாட்களுக்கு முன்பு. அந்த ரோஷம் எப்படிப்பட்டது என்கிற அடிப்படையையே மறந்து விட்டான் இன்று. அரிப்பெடுக்கும் உள்ளம், தினவெடுக்கும் உடல், படபடவென எழும் உணர்ச்சி, இவை மனிதனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை என்ற வாழ்க்கை இலக்கண விதிக்கு இலக்கியமாகத் திகழ்ந்தான், பாலன்!

கீழே இறங்கிய இந்திராவும் கமலமும் ஒன்றுமே நடக்காதது போல நடந்து கொள்ள முயன்றார்கள். நடிப்புக் கற்றுக் கொண்டார்கள். சிரித்தார்கள்; திருமணக் கலகலப்பில் முழுப் பங்கு கொண்டு, அமைதியடையத் தொடங்கிய வீட்டில் தாங்களும் துயில ஆரம்பித்தார்கள்.

தனி அறையில் விடப்பட்ட சுந்தரமும் சாரதையும் முதல் இரவின் முதல் அனுபவத்தில் பூரித்திருந்தார்கள். தலை திருப்பி நின்று ஓரக் கண்ணால் சாரதை பார்க்கவும், அப்படிப் பார்க்கிறாள் என்பதிலே சுந்தரம் பெருமைப்படவும் கைதொடவும், கன்னி சிலிர்க்கவும், நாணத்தால் முகம் சிவக்கவும், "சிவந்த முகம் செந்தாமரையோ" எனச் சொல்லாமல் சுந்தரம் சிரிக்கவும்; மல்லிகைப் பூவின் "சில்"லென்ற மணம் அவனைக் கொல்லவும், பதினாறு ஆண்டுகள் சீதோஷ்ண நிலைக்கு ஆட்பட்ட மேனி எப்படிச் சிலைபோலவே இருக்கிறது என்று ஆச்சரியப்பட்டுக் கூர்ந்து கவனிக்கவும், அவள் அதிலே மகிழவும், "படா"ரென்று அவளைப் படுக்கையில் தள்ளி, "பேசமாட்டாயா?" என்று சுந்தரம் கேட்கவும், "ஊகூம்!" என்று அவள் ஊமை வேடம் போடவும் சிரிங்கார ரசத்தின் சாரம் முழுவதும் அங்கே அணுஅணு-வாக ரசிக்கப்பட்டது!

சாரதை புதியவள்—சுந்தரம் புதியவன்! புதியவர்களின் முதற்காதல் புனிதமானது- பிரமச்சாரியத்திலேயே பல அனுபவங்களைப் பெற்று, பிறகு மணம் புரிகிறவன் மனைவியை ரசிக்க முடியாது. புதிது! புதிது! அதுவே காதலில் பெரிது! புதிய காதலில் உடற்பசி சீக்கிரம் எழுவதில்லை. ஒரு மணி நேரத்திற்கு மேல் உதடுகளே காதல் உலகின் எல்லை

https://t.me/tamilpdfebooks



யாக நிற்கின்றன. உடம்பின் மற்ற தோற்றங்கள் படிப்படியாக விளங்க ஆரம்பிக்கின்றன. சுகம், வெகு நேரம் கதையாகவே நீடிக்கிறது. "உலகம் இப்படியே இருக்க வேண்டும்! என்றும் இளமை! என்றும் புதுமை! இதுவே வாழ்வின் தினசரிப் பாடமாக அமைய வேண்டும்" என்றெல்லாம் ஆசை எழுகிறது. ஆனால், அனுபவப்பட்டவனின் முதலிரவு, உடற் பசியிலேயே தொடங்கி விடுகிறது!—சுந்தரம் நல்லவேளையாக வைராக்கிய பிரம்மச்சாரியாக வாழ்ந்திருந்தான். ஆகவே, அழகுச் சிலையான சாரதையை அவனால் வெகுவாக ரசிக்க முடிந்தது. அவனுடைய குரலிலே அதுவரை அவள் வாழ்ந்து வந்த உலகம் பாடாத இசை தட்டுப்பட்டது. கலைந்திருந்த அவனது தலையை அவள் சரிப்படுத்திய போது சுந்தரத்தின் இதயம் கருணைத் தெய்வத்தின் கரங்களுக்குள் கட்டுப்பட்டுக் கிடந்தது. தாயின் அன்பு இதயம் தாரத்திடம் காணப்படும் போது உலகம்தான் எவ்வளவு இனிமையாக இருக்கிறது! வயது வந்த மனிதன் குழந்தையாவது மனைவியின் மடியில்தான். பயிலும் மொழியும் மழலையாகவே பிறப்பதும் அப்போதுதான்! சுந்தரம் குழந்தையானான். சாரதை தாயானாள். தாய் குழந்தையைக் கொஞ்சினாள். அதிலே சாறு பிழிந்த காதல் மலர்ந்தது; முத்தங்கள் காவியம் பாடின! தாங்கள் மட்டுமே உலகத்தில் மிச்சமிருப்பதாகக் கருதி அவர்கள் வாழ்க்கை இன்பத்தை ரசித்தார்கள். பொழுது விடிந்தது, அவர்களது விழித்த கண்களுக்கு எதிரே! ஏன் விடிந்தது பொழுது! இன்னும் நீண்டிருக்கக் கூடாதா என்று ஏங்கினார்கள், தம்பதிகள். என்ன செய்வது! இரவு போனால் பகல்—பகலுக்கு வேறு கடமை! இது இயற்கையின் விதி! சுந்தரமும் சாரதையும் விடிந்த பொழுதுக்கு இணங்கிக் கொடுத்து விலகி வெளியேறினார்கள்!

வெளியில் வந்த சாரதைக்கு வேடிக்கை காத்திருந்தது. முகத்தைக் கூர்ந்து கவனித்து, "பல் பட்டிருக்கிறது!" என்றாள் ஒருத்தி, பக்கத்தில் நின்ற கமலத்தின் நெஞ்சு "துட்"டென்றது. "உதடு வெளுத்திருக்கிறது" என்றாள் ஒருத்தி. அவள் கலிங்கத்துப் பரணி படித்தவள் போலிருக்கிறது.

"தூக்கமே இல்லையா, துப்புரவாக?" என்று ஆவலோடு கேட்டாள் ஒரு ஆரணங்கு. தன் கணவன் தூங்காததை அப்பொழுது நினைத்துக் கொண்டாள், ஆறு பிள்ளைகள் பெற்ற அவள்! சாரதை, இரவு பெற்ற இன்பத்திற்குமேல் அதிகமாக இதை ரசித்தாள். நாம் மகிழ்ந்ததை மற்றவர்கள் ஒப்புக்கொண்டு, பொறாமைப்பட்டால்கூட, நமக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

மடமடவென மங்கையர்க்கரசி அங்கே வந்தாள். சாரதையின் கையைப் பிடித்துக் கொண்டு, கூட நின்ற பெண்களைக் கோபமாகப் பார்த்துவிட்டு, "வாம்மா குளிக்க!" என்று இழுத்துக்கொண்டு போனாள். பெண்கள் சிரித்தனர். ஆனால், அங்கே நின்ற கமலம் சிரிக்கவில்லை; சிந்தனை உலகில் பறந்தாள். அப்படியே தூணில் சாய்ந்தாள்.

https://t.me/tamilpdfebooks



அப்பொழுதுதான் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தான் பாலன்!— கமலம் வேறுபுறம் திரும்பி நடந்தாள்.

இந்திரா இப்பொழுது தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். தாய் தந்தையரிடம் திருமணப் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று விளங்காமல் தவித்தாள். உடனே சம்மதிப்பார்களா? அல்லது, "உனக்காக அவளையும் பலியிட முடியாது!" என்று கூறிவிடுவார்களா?—அவளுக்குப் புரியவில்லை. இந்தக் கேள்விக்கு விடையைச் சரியாக—தெளிவாக—திட்டவட்டமாகக் கண்டுபிடிக்காமல், பாலனுக்கு வாக்குக் கொடுத்துவிட்டதற்காக, அவள் இப்போது தன்னையே நொந்து கொண்டாள்.

பாலனுக்கு அன்று முழுவதும் இருக்கை கொள்ளவில்லை! கமலத்தை சும்மா பார்த்துக்கொண்டே இருந்து திருப்தி அடைய அவன் தயாராயில்லை. மற்ற படிக்கட்டுகளில் இறங்கக் கமலம் தயாராயில்லை. ஆகவே, தான் சென்னைக்குப் போவதாக மீண்டும் மிரட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். இந்திராவை, மாடிக்கு அழைத்தான். அவளும் உடனே ஓடிவந்தாள்.

"நான் இன்றிரவு சென்னைக்குப் புறப்படுகிறேன்" என்றான்.

"ஏன்?"

"வேலையிருக்கிறது!"

"நான்கு நாட்களுக்கு அந்த வேலையை ஒத்திப் போடக்கூடாதா?"

"இல்லை நான் போயாக வேண்டும்."

"ஏன் இப்படி அடிக்கடி மாறுகிறீர்கள்?"

"அதைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை."

"என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்! திருமணத்திற்கு முன்னால். எதுவும் நடப்பது நன்றாக இருக்குமா?"

"நான் அதற்காக ஒன்றும் போகவில்லை. கமலத்தைத் திருமணம் செய்து கொள்வது மட்டுமே என் வாழ்க்கையின் லட்சியம் அல்ல!"

ஒரு லட்சியமுமில்லாத தன்னலக்காரனும் தனக்கு உயர்ந்தோர் லட்சியம் இருப்பதாக முரசறைவதிலே பெருமைப் படுகிறான்! பாலனும் அதில் பெருமைப்பட்டுப் பேசினான்.

"இப்பொழுது என்ன வேண்டும் உங்களுக்கு! கமலம்தானே! வரச் சொல்கிறேன்! எப்படியோ நடந்து கொள்ளுங்கள்! எங்கள் இரண்டு பேருடைய பிணத்தையும் சேர்ந்தாற்போல் பார்த்தாவது, பிறகு திருப்தி அடையுங்கள்!"—இந்திரா படபடவெனப் பேசினாள். அவள் உதடு துடித்தது. நெஞ்சு விம்மித் தாழ்ந்தது. கண்கள் குளமாயின. "ஏன் இன்னும் வாழ்ந்து தொலைகிறேன்! சாவு வரக் கூடாதா!" என்று தனக்குத்தானே பேசிக் கொண்டாள். நிலம் பார்த்த படி வேதனைப் பிம்பமாக நின்றாள்.

"அதெல்லாம் பேசாதே! எனக்குக் கமலமும் தேவையில்லை. நீயும்

https://t.me/tamilpdfebooks



தேவையில்லை. நான் நினைத்தால் எவ்வளவோ!"—என்றான் பாலன். அவன் பேச்சிலே "திமிர்" நிறைந்து நின்றது. ஆண்களின் வாழ்க்கைக்கு வரம்பே இல்லை! இது அவர்களுக்கு எவ்வளவு வசதியாக இருக்கிறது! எத்தனை பெண்களின் கண்ணீருக்குக் கடினமாகி விடுகிறது! நினைத்ததைப் பெறவேண்டும் என்பதிலே ஆடவனு-க்கிருக்கிற பிடிவாதம், பெண்களுக்கு இருப்பதானால் உலகில் குடும்ப வாழ்வே இருக்காது! பெண்களின் தியாக உணர்ச்சிதான் குடும்ப வாழ்வைக் கட்டிக்காத்து வருகிறது.

பாலன் அவள் கண்ணெதிரே மூட்டை கட்ட ஆரம்பித்தான். இந்திரா கண்ணீரோடு, அவன் கால்களிலே விழுந்தாள்.

"அத்தான்! உங்களைக் கும்பிடுகிறேன். எப்படியோ இன்னும் கொஞ்ச நாளில் சாகவேண்டிய என்னை இப்பொழுதே கொன்றுவிடாதீர்கள்! நீங்கள் எதைக் கேட்டு நான் மறுத்தேன்! அத்தான்! இது நம் குடும்ப கவுரவத்தைப் பொறுத்த விஷயம்! மானம்! மானம்! இல்லையேல் வாழ்ந்து என்ன பிரயோசனம்! அத்தான்! என்னை மன்னித்து விடுங்கள்! நான்கு நாட்களில் சென்னைக்குத் திரும்பிவிடுவோம். வேண்டுமானால், கமலத்தையும் அழைத்துக்கொண்டு வருகிறேன். நான் சொல்வதைக் கேளுங்கள்! உங்கள் பாதங்களைக் கண்ணீரால் கழுவுகிறேன். போகாதீர்கள்!"—என்று கதறினாள் இந்திரா. பாலன் மனம் இளகுவதாயில்லை. சபல சித்தம் கொண்ட நெஞ்சுகூட, காம நினைவில் கல்லாகிறது!

"என் கால்களை விடு! உன் கண்ணீர் என்னைப் பலமுறை கரைத்திருக்கிறது. இப்போது நான் ஒரு முடிவுக்கே வந்து-விட்டேன். சென்னையில் போய் தனியாகவே வாழப் போகிறேன்..."

பாலன் முடிக்கவில்லை. இந்திரா எழுந்தாள். மாம்பழம் அறுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஒரு கத்தியை எடுத்தாள். இவ்வளவு நேரமும், அறைக்கு வெளியில் நின்று கண்ணீரோடு இதைக் கவனித்த கமலம், "அக்கா!" என்று அலறினாள்.

இந்திரா திரும்பினாள். கமலம் உள்ளே ஓடி வந்தாள்.

"ஏன் கமலம் பதறுகிறாய்? நான் தற்கொலை செய்துகொண்டு விடுவேன் என்றா? பைத்தியமே! இனி எனக்கு ஏது சாவு? நான் எப்போதே செத்துவிட்டேன். மிச்சமிருக்கும் பிணத்தை உருத் தெரியாமல் ஆக்கிவிடட்டும், அத்தான். அவர் கையால் அழிவதைத் தவிர இந்த உடம்புக்கு வேறென்ன பாக்கியம் இருக்கப் போகிறது...!" என்றாள் இந்திரா.

கமலம் என்ன பதில் சொல்வாள். தன்னலமற்ற அந்தப் பரிதாபத்திற்குரியவள் அக்காளின் கைகளை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். பாலன், இந்த நாடகத்தில் கரைந்துவிடுபவனாக இல்லை. ஆனாலும். இன்னும் கொஞ்ச நேரம் தனக்காக இந்திராவும் கமலமும் கலங்க வேண்டும் என்ற நினைப்பில் படுக்கையில் உட்கார்ந்தான்.

https://t.me/tamilpdfebooks



"கமலம்! நீ போம்மா!" என்று கலங்கிய குரலில் சொன்னாள் இந்திரா.

அவள் கைகளை விட்டுவிடாமல், "அக்கா!" என்று விம்மினாள் கமலம்.

"நான் ஒன்றும் செய்துகொண்டுவிட மாட்டேன், கலங்காதே கமலம்! சாகவேண்டுமென்ற எண்ணம் வந்தாற்கூட உனக்காக உயிரோடிருப்பேன். போம்மா" என்றாள் இந்திரா. வேண்டியவர்களுக்காகக் கண்ணீர் வடிப்பதில் ஒரு திருப்தி இருக்கத்தான் செய்கிறது.

கமலம் கீழே இறங்கிச் சென்றாள்-

இந்திரா பாலன் கையோடு வைத்திருந்த பெட்டியை மெதுவாக எடுத்து, கட்டிலுக்குக் கீழே வைத்தாள். அவனது காலணிகளைக் கழற்றினாள். பாலன் மறுக்க நினைத்தவன்—சுயநினைவு அற்று உட்கார்ந்திருந்தான்.

"அத்தான் நாளைக்கே நாம் புறப்பட்டு விடுவோம். அதற்குள் கமலம் விஷயமாக பேசி முடித்துவிடுகிறேன், என்னை நம்புங்கள். உங்கள் வாழ்வுதான் என் வாழ்வு! அத்தான்!..." இந்திரா குழம்பிக் குளறினாள். எப்படியாவது அவன் திருப்தியுற்று, "சரி இந்திரா! உன் சொல்லை நான் மறுப்பேனா?" என்று சொல்லிவிட மாட்டானா என்பதே அந்த வெள்ளை மனதின் ஆசை. ஆண்கள் என்ன அவ்வளவு "இதயம்" படைத்தவர்களா? பாலனும் அவர்களில் ஒருவன்தானே! பாலன் பேசாமலேயே இருந்தான்.

"சொல்லுங்கள் அத்தான்!" என்று கம்மிய குரலில் கேட்டாள் இந்திரா.

பாலன் இப்போது ஒரு திட்டம் போட்டுக்கொண்டிருந்தான். அவனது கற்பனை உள்ளம் அந்தத் திட்டத்தைப் பிரமாதமான அளவில் ஆராய்ந்தது- அது சரியான வழி என்ற முடிவும் தோன்றவே, பாலனின் முகபாவம் மாறிற்று. ஒரு புது மலர்ச்சி தட்டுப்பட்டது. இந்திராவை ஏறிட்டுப் பார்த்தான். "இங்கே வா!" என்றான். இந்திரா அவன் எதிரே கொஞ்ச தூரத்தில்—அதே படுக்கையில் அமர்ந்தாள்.

"இந்திரா! உன் மீது எனக்கும் வெறுப்பில்லை. என்னிடத்தில் உனக்கு எவ்வளவு பிரியம் இருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சும்மா விளையாட்டுக்குத்தான் போய்விடப் போவதாக பயமுறுத்தினேன். இவ்வளவு தூரம் எனக்காக வளைந்து கொடுக்கும் உன் மனம் ரொம்பவும் துன்பப்பட்டு விட்டது. அதை மறந்துவிடு! நாளைக்கு நாம் சென்னைக்குப் புறப்பட்டு விடுவோம்..." என்றான் பாலன்.

இந்திராவின் மனம் குளிர்ந்தது. உற்சாகம் பெருக்கெடுத்தது- அத்தான் மனது மாறிவிட்டது! தன் கண்ணீர் அந்தக் கல்லைக் கரைத்துவிட்டது என்று இந்திரா நம்பினாள். "அத்தான்!" என்றாள் ஆசையோடு. பெண் மனம்—அதைப் புரிந்து கொள்ளவே முடியாது என்கிறார்கள். மடையர்கள்! ஏன் முடியாது? அன்போடு இரண்டு ஆறுதல்

https://t.me/tamilpdfebooks



வார்த்தைகள் சொன்னால், பெண் மனம் எல்லாவற்றையும் கக்கிவிடும்!"

"இந்திரா நாளைக்குக் கமலத்தையும் அழைத்துக்கொண்டு போவோம்..." என்று இழுத்தான், பாலன். தன் திட்டத்தின் சாரத்தை இப்படி ஆரம்பித்தான்! இந்திரா திடுக்கிட்டாள். அதை அறிந்த பாலன், "பைத்தியமே, நான் தவறாக அங்கு நடந்துவிடுவேன் என்று நினைக்கிறாயா? நிச்சயமாகச் சொல்கிறேன். இனி, திருமணம் ஆகும்வரை, அவளைத் தொடமாட்டேன்! என்னை நம்பு. உன் ஆறுதலுக்காகத்தான் அவளையும் அழைத்துப் போக விரும்புகிறேன். உனக்கும் துணையாக இருக்கும்!

இந்திரா இந்தப் பேச்சையும் நம்பினாள்.

"சரி அத்தான்!" என்றாள். பாலன் முகம் அளவுக்கு மேல் மலர்ந்தது. இந்திரா பாலனிடம், "இருங்கள்; வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டுக் கீழே இறங்கிச் சென்றாள்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்து, "அப்பா, அம்மாவிடம் சொல்லிவிட்டேன். நாளைக்கு நாம் கமலத்தையும் அழைத்துக்கொண்டு போகிறோம்" என்றாள். பாலன் இந்திராவை அணைத்துக் கொண்டான். அப்பொழுது அவளுக்குக் குஷ்டம் இருப்பது அவனுக்குத் தெரியவில்லை.

கமலம் அமைதியிழந்தாள். பாலன் ஏதோ திட்டம் போட்டிருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டாள். "இனி நடக்கப் போகிறது ஏதோ ஒரு நாடகம்! அதிலிருந்து எப்படித் தப்புவோம்?" என்று இப்பொழுதே கவலைப்பட ஆரம்பித்தாள்.

மறுநாள் மாலை இரயிலில், முதல் வகுப்பில், பாலன், இந்திரா, கமலம் மூவரும் அமர்ந்திருந்தனர். அவர்களை வழி அனுப்பிவிட்டு, இந்திராவின் முகத்தைத் தங்கள் மனத் திரையிலிருந்து அகற்ற முடியாமல் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள் சுந்தரமும், சாரதையும்.

# 11

**!** கை வண்டி நிலையத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போதே சுந்தரம் அமைதி இழந்துவிட்டான். இரண்டு நாட்களாக புதுமண மயக்கத்தில் தங்கை இந்திராவின் முகத்தை அவன் சரியாகப் பார்க்காமல் இருந்தான். வண்டியில் அவள் அமரும்போது அந்த முகத்தைக் கவனித்த சுந்தரத்துக்குப் பல சந்தேகங்கள் தோன்றின. சிக்கலிலே உழலும் மனிதனின் சிந்தனை தேங்கிய முகம், பார்க்கிறவர்களை, "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்" என்று கேட்க வைக்கும். இந்திராவைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்கக்கூடிய நிலையில் சுந்தரம் இல்லை அப்போது. அதனால் வீட்டுக்கு வந்தும்கூட அந்தக் கேள்வியிலிருந்து

https://t.me/tamilpdfebooks



விடுபட முடியாதவனுக அவன் இருந்தான். சாரதை அங்கே வந்தாள். "என்ன சிந்தனே" என்று கேட்டாள். "ஒன்றுமில்லே" என்ருன் வழக்கம் போல். சாரதை அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்ருள்; அவன் முகம் ஒரு மாதிரியாக மாறிற்று. "தன் மீதுதான் ஏதாவது கோபமா" என்று அவள் எண்ணத் தொடங்கினுள்- கோபம் வருவதற்குக் காரணம் ஒன்றுமில்லே என்ருலும் குழைவுமிகுந்த பெண் மனம் அப்படிச் சிந்தித்தது.

சுந்தரம் அவளேச் சரியாகக் கவனிக்காமல் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தான். "ஏனுங்க..." என்று இழுத்தாள் அவள்- அவன் தலே தூக்கிப் பார்த்தான். "என்மேல் ஏதாவது கோபமா?" என்று கேட்டாள். சுந்தரம் சிந்தனே கலேந்தது- "சீச்சீ, பைத்தியம். ஏன் அப்படி நினேக்கிருய்? உன் மேல் கோபப்பட என்ன இருக்கிறது?" என்றபடி அவள் அருகில் வந்தான். கறுகறுவென்று வளர்ந்திருந்த அவளது கூந்தலிற் கை வைத்து, முகத்தைத் தூக்கி, அந்த வட்ட நிலாத் திட்டின் வடிவழகை இமை கொட்டாமல் பார்த்தான்.

இருவரும் கட்டிலில் வந்து அமர்ந்தார்கள். சாரதை அருகில் இருந்த மயக்கத்தில் சுந்தரம் தங்கையைப் பற்றிய கவலேயைக் கொஞ்சம் மறந்திருந்தான். காற்று வராத இடத்தில் அவர்கள் இருந்ததால் சுந்தரத்தின் மேனி வியர்த்தது. மெதுவாக அவனது சட்டைப் பொத்தானேக் கழற்றி வாயால் ஊதினுள் சாரதை. ஈசலின் இறகிலே இருந்துவரும் காற்றுப்போல் அவள் இதழிலே இருந்த வந்த காற்று, சுந்தரத்தின் வியர்த்த மேனிக்கு ஆறுதல் தந்தது. மின்சார விசிறியைப் போட்டிருந்தாலும் அவனுக்கு அந்த ஆறுதல் கிடைக்காது. கொவ்வை இதழ்களுக்கிடையில் புறப்படும் அந்தக் காற்று குளிர்ந்த மேகத்தின் நீரோட்டத்தோடு வருகிறது. சாரதை அதோடு நிற்கவில்லே. தன் முந்தானேத் தலேப்பால் அவனது மார்பையும் கழுத்தையும் துடைத்தாள். கலேந்து, பின்புறம் ஒதுங்கியிருந்த அவனது தலேமயிரை, நெற்றியிலே தள்ளிவிட்டுச் சற்று அழகு பார்த்தாள் சாரதை. "அத்தான்" என்ருள்- "என் பெயரைச் சொல்லு பார்க்கலாம்" என்று மெதுவாகக் கேட்டான் சுந்தரம். "அய்யய்யோ! சொல்லக் கூடாது" என்ருள் அவள். "அடே! சும்மா சொல்லு! நாம்தானே இருக்கிறேம்! வேறு யார் இருக்கிருர்கள்?" என்ருன் அவன். "உஸ்! சும்மா இருங்கள்! அதெல்லாம் மரியாதை இல்லே" என்று செல்லக் கோபத்துடன் பேசினுள் அவள். "அடே! சொல்லுன்னு"—அவனும் செல்லமாகப் பேச ஆரம்பித்தான். "நான் மாட்டேன்" என்ருள் சாரதை. "அப்படியானுல் நான் இப்பொழுதே தற்கொலே செய்துகொள்வேன்" என்று பயமுறுத்தினுன் அவன்.

"ஐயோ! அப்படியெல்லாம் பேசாதிர்கள்!"

"பின்னே சொல்லு!"

"எப்படிச் சொல்றது?"

https://t.me/tamilpdfebooks



"சுந்தரம்னு சொல்லு."

"எனக்கு வெட்கமாக இருக்கு?"

"எங்கிட்டே என்ன வெட்கம்!"

"......"

"உம்! சொல்லு."

"சுப்பிரமணியம்."

"இதுவா என் பேரு!"

"ஐயோ...வேண்டாமுங்க!"

"பாத்தியா!"

"சரி, சொல்றேன்...சுந்...தரம்...!"

—என்று சொல்லிவிட்டுச் சேலைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டாள் சாரதை. தமிழ்நாட்டுப் பெண்களுக்கு மட்டும்தான் இந்தப் "பெயர் சொல்லா நோய்" சுந்தரம் அப்படியே அந்தச் சேலைத் தலைப்பைப் பறித்துவிட்டுத் தன் பெயரைச் சொன்ன அந்த இதழ்களை "நறுக்" கென்று கடித்துவிட்டு அவளைப் படுக்கையில் சாய்த்தான். "ஏ கழுதே! ஏன் பெயர் சொன்னாய்? நான் அம்மாவிடம் போய்ச் சொல்லட்டுமா" என்று பயமுறுத்தினான் அவன். "ஐயய்யோ சொல்லிடாதீங்க! தப்பு, தப்பு" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள் அந்தக் கட்டழகி.

அன்றைய இரவு இருவருக்கும் ஆனந்த இரவாகக் கழிந்தது. நாட்கள் அப்படியே நகர்ந்தன.

பத்து நாட்களுக்குப் பிறகு ஒருநாள் காலையில் சுந்தரம் கண் விழித்தபோது, அன்றையப் பொழுது அவன் மனதை வாட்டி எடுக்கும் என்பதை அறியாமலிருந்தான். பன்னிரண்டு மணிக்கெல்லாம் அவன் கைக்குத் தபால் ஒன்று கிடைத்தது. பிரித்துப் பார்த்த அவன் தலையில் பேரிடி விழுவது போல் தோன்றிற்று- அந்தக் கடிதம் சென்னையிலிருந்து வந்தது.

அந்தக் கடிதத்தில் இருந்தது இது:

அன்புள்ள அண்ணாவுக்குக் கமலம் எழுதிக் கொண்டது. அண்ணா, களங்கமற்ற உங்கள் மனம் கவலைப்படும்படியாக ஒரு சோகமான செய்தியைச் சொல்லப் போகிறேன். தங்கள் அன்புத் தங்கை—என் அக்காள் நான்கு நாட்களாகச் சித்தப் பிரமை பிடித்திருக்கிறாள். யாரையும் அடையாளம் தெரியவில்லை. சதா பிதற்றிக் கொண்டிருக்கிறாள். நான்கு நாட்களாக நானும் கண்ணீரிலேயே காலத்தைக் கழிக்கிறேன். அத்தானிடம் சொல்லிக் கடிதம் எழுதச் சொன்னேன். இந்தச் சேதியைத் தங்களுக்குத் தெரிவிக்கவே கூடாதென்று ஒரேயடியாக மறுத்துவிட்டார். நானே இப்போது அவருக்குத் தெரியாமல் தபால் நிலையத்துக்கு வந்து இந்தக் கடிதம் எழுதுகிறேன். அக்காளுக்கு வைத்தியம் பார்க்கும்

https://t.me/tamilpdfebooks



முயற்சிகூடச் செய்யவில்லை அவர்- நீங்கள் உடனே புறப்பட்டு வந்தால் தான் அக்காளை உயிரோடு பார்க்கலாம்.

இப்படிக்கு தங்கள் தங்கை,
கமலம்.

சுந்தரத்தின் நெஞ்சில் வேலாகப் பாய்ந்தது இந்தக் கடிதம். தன் தங்கையின் அளவற்ற துயரத்தை எண்ணி எண்ணிப் பொறுமிற்று அவன் இதயம். வசதியான குடும்பத்தில் பிறந்தும், வாழ்வில்லையே தங்கைக்கு என்று எண்ணும்போது அவன் மூளை குழம்பிற்று. தலையணையில் முகத்தைப் புதைத்து அழுதான். சாரதை அங்கே வந்தாள். கண்ணீர் விடும் கணவனைக் கண்டாள். என்ன நடந்தது என்று புரியாமல் திகைத்தாள். அறிவறியாப் பிஞ்சுமனம்! அத்தானின் அருகிலே உட்கார்ந்தாள் சாரதை. தன் இரண்டு கைகளாலும் அவன் முகத்தைத் தூக்கி, "ஏனத் தான் அழுகிறீர்கள்?" என்று அரைகுறையாகக் கேட்டாள். பதில் சொல்ல நாவெழவில்லை அவனுக்கு. பயங்கரத் தோற்றம். அவனது முகம் பல கதைகள் சொல்லிற்று அவளுக்கு. "காலையில் அழைத்த போது நான் வரவில்லையே அதற்காக அழுகிறீரா? சேச்சே இருக் காது! பிறகு என்ன காரணம்?—" "அத்தான், சொல்லுங்கள் என்ன நடந்தது?" என்று கேட்டாள். சுந்தரம் நிமிர்ந்து உட்கார்ந்தான்- பதில் சொல்லாமல் கமலத்தின் கடிதத்தை எடுத்து நீட்டினான். சாரதை படித்துப் பார்த்தாள். பொலபொலவென்று உதிர்ந்தது கண்ணீர்.

"இந்திரா இந்திரா" என்றே முனகினான் சுந்தரம். பிறகு திடீரென எழுந்தான். கண்களைத் துடைத்துக் கொண்டு, "சாரதை; இரு, இதோ மெய்யப்பச் செட்டியார் வீடுவரை போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு ஓட்டம் பிடித்தான். சாரதை, கமலத்தின் கடிதத்தை மேலாடைக்குள் மறைத்தவாறு கீழிறங்கிச் சென்றாள்.

## 12

சென்னையில் இந்திராவின் இல்லம் களை இழந்து காணப்பட்டது. மற்றவர் வருந்தச் சகியாத அந்த மாதரசி சித்தப்பிரமை பிடித்துச் சிரித்துக் கொண்டே இருந்தாள். பாலன் பகலிலே வீட்டுக்கே வராமல் அலுவலகத்திலேயே தங்க ஆரம்பித்தான். இரவு ஒரு மணிக்கு வந்து காலை ஆறு மணிக்கெல்லாம்—இந்திரா விழிப்பதற்கு முன்னே எழுந்து வெளியிலே சென்று விடுவான். ஏதோ ஒரு பயங்கரமான குற்றத்தைச் செய்துவிட்டவன் போலக் காணப்பட்டான். அக்காளின் சித்தப் பிரமைக்கு அத்தான்தான் காரணமாயிருக்கும் என்று ஓரளவு புரிந்து

https://t.me/tamilpdfebooks



கொண்டிருந்தாள் கமலம்.

"அன்றிரவு அன்போடு பாலூட்டினார் அத்தான். அந்தப் பால்... அதிலே...ஆம், அப்படித்தான் ஏதாவது இருக்கும்" கமலம் கணைபட்ட புறுவாக இந்த எண்ணத்தில் துடித்தாள். "அன்றிரவு அக்காள் அமைதியாகத் தூங்கினாளே, அவள் விடியுமுன்னே விழிக்கமாட்டாள் என்ற தைரியத்தில்தானோ ஒருவேளை அத்தான் அன்று...?"—கமலம் முகத்தைக் கைகளால் புதைத்துக் கொண்டு அழுதாள். மிருகங்களுக்குக்கூட ஓரளவு, மனப் பக்குவம் உண்டு. காம நோய் பற்றியவன் மிருகத்திலும் கடைகெட்ட மிருகம்—இந்திரா மட்டும் இல்லையென்றால் கமலம் அப்போதே பாலனைக் குத்திக் கொன்றிருப்பாள். அக்காளுக்காகப் பொறுத்தாள். இப்போது அமைதி இழந்து தவிக்கிறாள்.

அறிவு தெளியாத கூட்டத்திலே பாலனும் ஒருவன். அவனுக்குத் தேவை கமலம். அந்த மீனைப் பிடிப்பதற்குத் தூண்டியில் போடப்பட்ட இரைதான் இந்திரா. இதுதான் பாலனின் சித்தாந்தம். தன் பொருட்டு இந்த உலகமே அழிவதானாலும் அவனுக்குச் சம்மதம்தான். சிறிதளவு வளைந்து கொடுக்கிற இரக்கமானாலுங்கூட நிறைந்த சுகம் கிடைக்காது என்பதைத் தனது குறுகியகால அனுபவமாகக் கொண்டிருந்தான் அவன். கமலத்தை மணமுடிப்பது எப்போது? நாம் காதல் உலகில் களிப்பது எப்போது? காலதாமதமாகுமானால் வாலிபம் என்னாவது? என்றெல்லாம் சிந்தித்து கமலத்தை எப்படியும் பிடித்து விடுவது என்று முடிவு கட்டிக் கொண்டிருந்தான் பாலன். அந்த ஆசை அவனுக்கு வரக் காரணமாயிருந்த இந்திராதானே பலியாகக்கூடிய நிலைமைக்கு வந்தாள்.

அன்று இரவு!

பாலன் நிலை கொள்ளாமல் தவித்தான். இந்திரா கமலத்தைப் பக்கத்திலேயே படுக்க வைத்துக் கொண்டு தூங்கினாள். தன் கணவனிடத்திலே அவ்வளவு நம்பிக்கை அவளுக்கு. பாலனுக்கு இந்தக் காட்சி வெறுப்பைத் தந்தது. அவன் திட்டம் வேறு. அதற்கு இந்திரா இடையூறு. நான்கு இரவுகளைத் தூங்காமல் கழித்துவிட்டான். அது நாலு யுகங்களாகத் தோன்றிற்று. அன்றிரவு, அவன் ஒரு முடிவுக்கே வந்திருந்தான். கொஞ்சம் தூக்க மருந்து வாங்கி வந்தான். "பருகு கண்ணே, பருகு!" என்று பாசத்தோடு இந்திராவுக்கு ஊட்டினான். "பால் கொடுக்கிறாரே அத்தான், அக்காளிடம் பரிவு காட்டுகிறாரே அத்தான், அருகில் உட்காருகிறாரே அத்தான், அன்பாகப் பேசுகிறாரே அத்தான்! வாழட்டும்! அக்காள் வாழட்டும்!" என்று கசிந்துருகி மகிழ்ந்தது கமலத்தின் சின்ன மனம். அத்தான், அக்காளுக்குப் பால் கொடுத்தது தன்னைப் பாழ்படுத்தும் திட்டத்தின் முதற்படி என்பதை அறியாமல் இருந்தது அந்தப் பக்குவமற்ற பிஞ்சு மனம். அக்காளும் அத்தானும் அருகிருந்த காட்சியைக் கண்டு நெக்குருகி நின்றாள் கமலம். இந்திராவைப் பாலன் தன் மார்பில் சாய்த்துக் கொண்டபோது இனி இல்லை

https://t.me/tamilpdfebooks



துன்பம் என்று எக்காளமிட்டாள் கமலம். சாய்ந்த இந்திராவின் கண்கள் தூக்கத்திற்காக மூடியபோது தன் வாழ்விலே பயங்கரமான புதிய பாதை திறக்கப் போகிறது என்பது கமலத்திற்குத் தெரியாது.

இந்திரா தூங்கினாள். கமலம் அதைக் கண்டாள். "அக்காள் எவ்வளவு நிம்மதியாகத் தூங்குகிறாள்! அத்தானது பரிவு அவளை அவ்வளவு ஆனந்தத்தில் ஆழ்த்தி அமைதியைத் தந்துவிட்டது போலும்!" என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தாள். அக்காள் சார்பில் அத்தானுக்கு நன்றி தெரிவிப்பவள் போல, கடைக்கண்ணால் பார்த்தாள்; புன்னகையை மலர வைத்தாள். ஆனால், அந்தப் பார்வைக்கும் புன்னகைக்கும் அவள் கொண்டிருந்த பொருளை, பாலன் ஏற்றுக்கொள்ளவில்லை. தனக்குத் தேவையான ஒரு பொருள், அதில் இருப்பதாக அவன் முடிவு கட்டிக் கொண்டான். "பெண் சிரித்தால் போச்சு; புகையிலை விரித்தால் போச்சு" என்பார்கள். களங்கமின்றி ஒரு பெண் ஒருவனைப் பார்த்துச் சிரித்தாலும் ஆடவனுக்கு அது காதல் விளம்பரமாகத்தான் தெரியும். முன்பின் அறிமுகம் இல்லாத இருவருக்கே இது இயற்கையென்றால், கமலத்தின் சிரிப்புக்கு பாலன்...? ஆம்! அவன், கமலம் சம்மதித்து விட்டதாகவே கருதினான்.

தன் "கிருஷ்ண மனோ பாவ"த்தைத் திரையிடத் துவங்கினான். "நான் இன்னும் சாப்பிடவில்லை!" என்றான் கமலத்திடம். "இதோ" என்று ஓட்டமாக ஓடி சோறு, குழம்பு முதலியவற்றை அடுப்பிலிருந்து இறக்கி, வட்டிலில் எடுத்து வைத்தாள் கமலம். எல்லாவற்றையும் சரியாக வைத்துவிட்டு, "சாப்பிட வாருங்கள்!" என்று மெல்லிய குரலில் அழைத்தாள். பாலனுக்கு அது இன்ப நாதமாக ஒலித்தது. கமலம், தன் மனைவியின் இடத்திலிருந்து அழைப்பதாகத் தோன்றிற்று, அவனுக்கு. சாப்பிட உட்கார்ந்தான். சோறு செல்லும்? கமலம், அன்போடு பரிமாறினாள்; பாலன் கடமைக்காகச் சாப்பிட்டான். அவள் ஊறுகாய் எடுத்து வைக்கும்போது, காயைத் தொடாமல் கையைத் தொட்டான். "வேடிக்கைக்காக" என்றெண்ணி, அவள் களங்கமில்லாமல் சிரித்தாள். "விபரம் வெள்ளித்திரையில் காண்க?" என்பதுபோல் அவன் அவளைப் பார்த்தான். சாப்பாடு முடிந்தது. கைகழுவ எழுந்தான். தண்ணீர் எடுத்துத் தந்தாள் கமலம்; கழுவினான்.

"நீ சீக்கிரம் சாப்பிடு!" என்றான்.

'உம்..." என்று அந்தச் சிலை தலை அசைத்தது.

பாலன், தன் அறையில் வந்து அமர்ந்தான். இன்ப நினைவுகள் அவனை இழுத்தன. இந்திராவை எட்டிப் பார்த்தான். "உலகம் மிகவும் யோக்கியமானது" என்று நம்புபவள் போல, அவள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். தன் தூக்க மருந்து நன்கு வேலை செய்வதை உணர்ந்த பாலன், தனக்கும் கமலத்துக்குமிடையே அந்த இரவு யாரும் தடைக்கல்லாக நிற்கமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக்

https://t.me/tamilpdfebooks



கொண்டான். கமலம் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு வரமாட்டாளா என்பதுதான் இப்போது அவன் கவலையாக இருந்தது.

கமலம் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, எல்லாவற்றையும் எடுத்து ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டு வந்தாள். கண் துயிலும் அக்காளின் அருகிலே சற்று நின்றாள். போர்வையை எடுத்துப் போர்த்திவிட்டாள். அந்தக் கரிய கன்னத்தில் பெரு நோயின் வடுக்கள் பளபளவென மின்னுவதைக் கமலம் கண்டாள். அவளை அறியாமல் கண்ணீர் புறப்பட்டது.

**"பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால்—மிகப்**
**பீழையிருக்குதடி தங்கமே தங்கம்"**

—என்று வீதியில் யாரோ பாடிக் கொண்டு செல்லும் சத்தம் கமலத்துக்குக் கேட்டது. அவள் நினைவு விளக்கங்களோடு பறந்தது.

பெண்!—அந்தப் பிறப்பே பீழையுடையது என்பது சமுதாய நடைமுறை வகுத்து வைத்திருக்கும் விதி. ஆண், பெண் சமத்துவம் என்பதெல்லாம் ஏட்டில் எழுதிப் பார்க்கவும், மேடையில் பேசித் தீர்க்கவும் அழகாயிருக்கலாம். நடைமுறை, பெண்மையின் பரிதாபத் தன்மையை விளக்குகிறது. எடுபிடி வேலைகளுக்கும், சிற்றின்பத்திற்கும் ஏற்றதொரு நல்ல இயந்திரம், பெண் என்றுதான் ஆடவர் உலகம் கணக்கிடுகிறது. பெண்ணை மலர்கள் என்று ஏன் ஆடவர்கள் வர்ணிக்கிறார்கள்? மலர், மனிதனுக்கு மணம் தருகிறது; மனிதன் மலருக்கு என்ன தருகிறான்?—தன்னைத் திருப்தி செய்தும், அதே நேரத்தில் தன்னிடமிருந்து ஒன்றையும் எதிர்பாராமலும் இருக்கும் பொருள்களைத்தான் மனிதன் பெண்ணுக்கு உவமிக்கிறான். இது அவன் திட்டமிட்டுச் செய்வதல்ல. இதய உண்மை!—அவனை அறியாமல் வெளிவருகிறது!

அவள் வெகு நேரம் சிந்திப்பதற்கு வழியில்லாமல், பாலனின் குரல் அவளை அழைத்தது. கமலம், அத்தானின் அழைப்பைப் பற்றிச் சிறிது சந்தேகப்பட்டாள். என்றாலும், அதைக் காட்டிக் கொள்ளாமல், மெதுவாக, அவனது அறைக்கு வந்தாள். கதவோடு கதவாக நின்றாள். பாலன் கண்டான்.

"உள்ளே வா!" என்றான்.

அவள் பயந்தபடி உள்ளே சென்றாள்

"உட்கார்!" என்றான்.

"இல்லை. சும்மா நிற்கிறேன்" என்றாள்.

"அடே! உட்கார் என்கிறேன்!" என்றான், அன்பான அதிகாரத்தோடு.

அவள் சற்று தூரத்தில் அமர்ந்தாள்.

பாலன் மெதுவாக அவள் கையைப் பிடித்தான்.

https://t.me/tamilpdfebooks



"வேண்டாம்! உஸ்...அக்காள் விழித்துக் கொள்வாள்! உஸ்... கொஞ்சம் பொறுங்கள்...உங்களைக் கும்பிடுகிறேன். திருமணம் ஆகட்டும்! ஐயையோ! இதென்ன பிடிவாதம்! ..." என்று திமிறினள்.

பாலன் விடவில்லை.

எருமையின் குளம்புக் கிடையே, தாமரை எவ்வளவு நேரம் போராட முடியும்? கழுதையின் வாயில் வீழ்ந்த காகிதம் என்ன செய்ய இயலும்? துடித்த கமலம் துவண்டாள்; போராடிய மாது பூவானுள்.

பருவத்தின் உணர்ச்சிகளும் சேர்ந்து, அவளைப் பாழ்படுத்தின.

இனி பாலனைத் தவிர யாரும் கமலத்தை மணக்க முடியாது.

கமலம் அழுதுவிடுவாள் போல் இருந்தது. பாலன் சமாதானம் சொல்லத் துவங்கினுன். தன் அன்பு முழுவதையும் சொரிந்தான். கற்பனைகளை அடுக்கிவிட்டு, அவளைச் சமாதானப்படுத்தினுன்.

பிறகு வெகு நேரம்வரை, அவள், அவன் கைளுக்கிடையே இருந்தாள். பொழுது விடியும் தருணத்தில்தான் அந்தப் பூங்கொடி, களைப்போடு தன் படுக்கைக்குச் சென்று கண்ணயர்ந்தது.

காலை மணி எட்டு இருக்கும். நன்கு தூங்கிக் கொண்டிருந்த கமலத்தின் முதுகில் "படா"ரென ஒரு அடி விழுந்தது. திடுக்கிட்டு எழுந்த கமலம், அங்கே இந்திரா தலைவிரிகோலமாக நிற்பதைக் கண்டாள்.

"என்னடி தங்காய்! ஏன் துயில்கின்றுய்?" என்று பாட ஆரம்பித்தாள் இந்திரா. கமலம் செத்துப் பிழைத்தாள்.

என்ன நடந்தது? இந்திரா ஏன் இப்படி ஆனுள்? இரவு நடந்ததைக் கண்டுவிட்டாளா?

கமலம் வாய் புதைத்து ஒரு மூலையில் ஒதுங்கினுள். இந்திரா, "மாமூல் பைத்தி"யங்கள் போல ஆடிப் பாடவில்லை. படுக்கையில் உட்கார்ந்து சிரிக்க ஆரம்பித்தாள்.

அந்தச் சிரிப்பு!—அது அன்று முழுவதும் நிற்கவே இல்லை.

அக்காளுக்குச் சித்தப்பிரமை என்பதைக் கண்டு கொண்ட கமலம், அலறி அழுதாள். அதிர்ச்சி அடைந்த பாலன், வீட்டை விட்டுக் காலை பத்து மணிக்கெல்லாம் வெளியேறி விட்டான். அன்று முழுவதும் சமையல் இல்லை. கமலமும் இந்திராவும் ஒரு கவளங்கூட உண்ணவில்லை.

கண்ணீர், கமலத்தின் முழுநேர வேலையாயிற்று.

மறுநாள்தான் அண்ணனுக்குக் கடிதம் எழுதினுள், கமலம்.

அதிலிருந்து மூன்றுவது நாள் மாலை சுமார் ஆறுமணியிருக்கும், சுந்தரமும் சாரதையும் ஒரு காரிலே வந்து இறங்கினுர்கள். "அண்ணு!" என்று அலறினுள் கமலம். அலட்சியமாகப் பார்த்து, "வாய்யா! சவுக்கியமா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள், இந்திரா.

https://t.me/tamilpdfebooks



சுந்தரமும சாரதையும் வெறிச்சிட்டுப் போன அவளது முகத்தை யும், தன் நினைவற்றிருப்பதையும் கண்டு துவண்டார்கள். இதில் எதையும் காணப் பாலன் அங்கு இல்லை. சிறிது நேரங்கழித்து, "என்ன நடந் தது?" என்று கமலத்தைப் பார்த்து விபரங் கேட்டான், சுந்தரம்.

"இரவு தூங்கினுள்; காலையில் எழுந்தபோது பித்துப்பிடித்திருந் தது" என்று மட்டும் சொன்ஞன் கமலம். வேறு எதை அவள் வாய் விட்டுச் சொல்ல முடியும்?

"யார் பார்க்கிறுர்கள்?" என்று கேட்டான், சுந்தரம்

கமலம் வைத்தியர் பெயரைச் சொன்ஞள்.

சாரதை கண் கலங்கி நின்ருள். இந்திராவைப் பார்த்தபடி, சுந்தரம் தனக்குத் தெரிந்த ஒரு வைத்தியரின் முகவரியை நினைவுபடுத்திக் கொண்டு, அவரைப் பார்ப்பதற்காக வீட்டைவிட்டுப் புறப்பட்டான். இரவு பதினேரு மணிக்கு, சென்னையிலேயே பிரபலமான ஒரு வைத்தி யரைக் கையோடு அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

இந்திரா தொடர்பில்லாமல் பாடிக் கொண்டிருந்தாள். அவள் அமர்ந்திருந்த கட்டிலில் கை வைத்தபடி தரையில் உட்கார்ந்தாள், சாரதை. கமலம் அடுப்பங்கரையில் இருந்தாள். வைத்தியரைக் கண்ட தும் சாரதை எழுந்து நின்ருள். வைத்தியர், இந்திராவின் அருகில் வந் தார். இந்திரா அவரைப் பார்த்துச் சிரித்தாள்.

"ஐயா சாப்பிட்டாச்சோ?" என்று, அங்க சேட்டைகளோடு கேட்டாள். வைத்தியர் பதில் சொல்லாமல் அவளைச் சோதிக்கத் துவங்கிஞர். அவளை, நாக்கைத் திறக்கச் சொன்ஞர். படாரென அவரை அறைந்தாள், இந்திரா! வைத்தியர் வருந்தவில்லை.

பைத்தியக்காரர்களின் தாக்குதல் இப்படித்தான் இருக்கும். அதற் குத் தனி முக்கியத்துவம் இல்லை என்பது அவருக்குத் தெரியும்.

வைத்தியர் பலவந்தமாக அவளது வாய்க்குள் ஒரு மருந்தைத் தடவிஞர். சிறிது நேரத்தில் இந்திரா குமட்டிக் குமட்டி வாந்தி எடுத் தாள். வைத்தியர் அந்த வாந்தியை ஒரு பாத்திரத்தில் பிடித்துக் கொண் டார். பிறகு இதயத்தைப் பரிசோதித்தார். குழப்பத்தோடு தலையை ஆட்டிஞர். சுந்தரமும் சாரதையும் அவரையே கவனித்தபடி அமைதியாக நின்ருர்கள். கமலம் ஒரு கதவருகில் நின்றபடி இதனைக் கவனித்தாள். வைத்தியர் பிறகு வாந்தியைப் பரிசோதித்தார். தீர்மானத்தோடு தலையை ஆட்டிஞர். ஆம்! அவர் நோயின் காரணத்தைக் கண்டுபிடித்து விட்டார்!

"இது செயற்கை விளைவுதான்" என்ருர்.

"என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான், சுந்தரம்.

"ஊமத்தை விதை சாப்பிட்டிருக்கிறுள்!" என்ருர்.

https://t.me/tamilpdfebooks



சுந்தரம் திடுக்கிட்டான்.

"நல்லவேளே, விதை, அளவில் அதிகமில்லே. அதனுல்தான் சாவிலிருந்து தப்பியிருக்கிருள்" என்று தன் திருப்தியைத் தெரிவித்தார் வைத்தியர், அதோடு "ஊசி போட்டால் தீர்ந்துவிடும் என்றுலும், நாலேந்து மாதங்கள் ஆகும்; அதுவரை எச்சரிக்கையாகக் கவனித்து வாருங்கள்" என்று சொல்லி ஒரு ஊசியும் போட்டார்.

வைத்தியர் போனுர்.

சுந்தரம் நின்றுன்.

பாலன் வந்தான். சாரதை அடுப்பங்கரைப் பக்கம் சென்று விட்டாள்.

"வாருங்கள்!" என்றுகூட வரவேற்காமல் "எப்பொழுது வந்தீர்கள்?" என்று கேட்டான், பாலன்.

"மாலேயில்தான்" என்று அக்கறையில்லாமல் பதில் சொன்னுன் சுந்தரம்.

மனிதன் பெண்ணெடுப்பவனுகவே இருந்து விட்டால் தொல்லே இல்லே. பெண்ணேக் கொடுப்பவனுக்குத்தான் மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத சந்தர்ப்பங்கள் அதிகம்.

"சாப்பிட்டுவிட்டீர்களா?" என்று கடமைக்காகக் கேட்டு வைத்தான், பாலன்.

"சாப்பாடா செல்லும்?" என்று கேள்வியில் பதில் தந்தான் சுந்தரம்.

பாலன், சுந்தரத்தின் மனநிலேயைப் புரிந்து கொண்டான். அடுத்தொரு கேள்வியும் போடாமல் தன் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டான். சுந்தரமும் சாரதையும் கண் விழித்தபடி, இந்திராவின் அருகிலேயே இருந்தார்கள். சுந்தரத்திற்கு ஏற்பட்டிருந்த குழப்பமெல்லாம், "இந்திரா ஊமத்தை விதை தின்னவேண்டிய அவசியம் என்ன வந்தது?" என்பதுதான்.

இரவு சுமார் இரண்டு மணியிருக்கும். சுந்தரம், பாலனின் அறைக்குள் மெதுவாக எட்டிப் பார்த்தான். பாலன், அங்கே, அளவிலா நிம்மதியோடு தூங்கிக் கொண்டிருந்தான். "இவனுக்கென்ன! இதுபோனுல் இன்னென்று! நம்மையல்லவா ரத்தபாசம் கொல்கிறது!" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டே, கமலம் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தான், சுந்தரம். கமலம், அங்கே தீயிடைப்பட்ட புழுவாகத் துடிக்கும் மனதோடு அமர்ந்திருந்தாள்.

"கமலம்!" என்று அழைத்தான், அவன்.

"அண்ணு!" என்று எழுந்தாள், அவள்.

https://t.me/tamilpdfebooks



"என்னம்மா நடந்தது? இந்திரா, ஏன் ஊமத்தை விதை தின்ருள்? உனக்குத் தெரியாதா? சொல்லம்மா!" என்ருன்.

"எனக்கு ஒன்றும் தெரியாதண்ணு! எப்போதும் போலத்தான் இருந்தாள்...திடீரென்று, காலையில் இப்படி ஆகிவிட்டாள்..." என்று, உமிழ்நீரை உள்ளிழுத்துக் கொண்டே பேசிஞள், கமலம்.

சுந்தரம் ஒன்றும் புரியாமல் குழம்பிஞன். உடனே ஒரு முடிவுக்கு வந்தான். மறுநாளே புதுக்கோட்டைக்குப் புறப்படுவது என்பதுதான் அது. அதைச் சாரதையிடம் வெளியிட்டான்.

"இந்திரா?" என்று ஐயத்தோடு வினவிஞள் சாரதை.

"அவள் இல்லாமலா! கமலத்தையும் அழைத்துக்கொண்டு போய் விடுவோம். பாலன் எக்கேடு கெட்டாலும் சரி!" என்ருன் சுந்தரம்.

மறுநாள் காலை, பாலன் எழுந்து குளிக்காமலேயே வெளியில் புறப்பட்டான். அவன் திரும்பி வந்து பார்த்தபோது, வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்டுக்காரர்கள் சாவியைக் கொடுத்தார்கள். பாலன் அலட்சியமாக அதைப் பெற்றுக்கொண்டு பெருமூச்சு விட்டான்.

"அப்பாடா! பெரிய தொல்லை தீர்ந்தது!" என்று வாய்விட்டுச் சொன்ஞன். கதவைத் திறந்து உள்ளே வந்தான். மாலை "மெயில்" பத்திரிகை, கதவிடுக்கின் வழியாக உள்ளே போடப்பட்டிருந்தது. எடுத்துப் பார்த்தான்; திடுக்கிட்டான். அதன் முதற் பக்கத்தில் இருந்த செய்தி அவன் எண்ணத்தைக் கவர்ந்தது.

சங்கரன், கல்கத்தாவில் கைது செய்யப்பட்டுத் திரும்பவும் சிறைக்குள் தள்ளப்பட்டாஞம். தாளாத அம்பிகா தற்கொலை புரிந்துகொண்டாளாம்! "ஐயோ பாவம்!" என்று அவளுக்கு அனுதாபம் தெரிவித்தது, அவன் வாய்!

இங்கே...

புதுக்கோட்டைக்கு வந்து சேர்ந்த இந்திராவைப் பார்த்து, சின்னப்பரும் மங்கையர்க்கரசியும் கண்ணீர் வடித்தனர். அவளுக்கு வைத்தியம் பார்ப்பதில் முனைந்தனர். சென்னை வைத்தியர் சொன்ன மருந்தையே வாங்கி, ஊசி போட்டு வந்தார்கள்.

**மா**தங்கள் நான்கு கடந்தன.

இந்திரா குணம் பெற்று வந்தாள். ஆஞலும், பைத்தியத்தின் சாயல் அவள் முகத்தைவிட்டு அகலவில்லை. தன் நினைவு தெளிவாக வரவில்லை. அதோடு, அவள் அப்போது ஒன்பது மாத கர்ப்பிணியாக இருந்தாள். "மாதம் ஒன்பது" என்று பேசிக்கொண்டார்கள், மங்கையர்க்கரசியும் சாரதையும். அதைக் கேட்ட கமலம், "இங்கே மாதம் நான்கு!" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டே வெம்பிஞள். ஊரறியாத கரு, உறவு

https://t.me/tamilpdfebooks



சொல்ல முடியாத கரு, வேர்விட்டு வளர்ந்து கொண்டிருந்தது, அவள் வயிற்றில். "அக்காள், சுயநினைவோடு இருந்தால், உடனே திருமணத்தை முடித்து வைத்திருப்பாள். ஆனாலும் இனி திருமணத்தை முடித்துத்தான் என்ன பயன்? ஊர் தன்னைப் புனிதவதி என்று ஒப்புமா?"—கமலம் துடித்தாள்.

திடீரென்று ஒரு நாள், சாரதையின் பெற்றோர், கோட்டையூரிலிருந்து வந்து சேர்ந்தனர். தங்கள் பக்கத்து ஊரான வேலங்குடியில் திருவிழா நடப்பதாகவும், அதற்கு மங்கையர்க்கரசியின் குடும்பத்தை அழைக்க வந்ததாகவும் கூறினார்கள். மங்கையர்க்கரசி, இந்திராவின் நிலையைக் கூறி மறுத்தாள். "இந்திராவையும் அழைத்துச் செல்வோம். ஆத்தாள் திருவிழா! ஆடு வெட்டிப் பூசை! மறுக்காதீர்கள்!" என்று கெஞ்சினாள், சாரதையின் தாய். சாரதையும்கூடச் சேர்ந்து அழைத்தாள். கடைசியில் வருவதாக ஒப்புக்கொண்டாள், மங்கையர்க்கரசி.

சின்னப்பர், ஒரு கொழுத்த கடாவை, பூசைக்கு வெட்டுவதற்காக வாங்கி வந்தார்.

கமலம் அந்தக் கடாவைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். எல்லோரும் கோட்டையூருக்கு வந்து சேர்ந்தனர்.

வேலங்குடியில், திருவிழா களை கட்டிக்கொண்டிருந்தது. ஏராளமான கடாக்களும் கோழிகளும் பலிக்காகக் கொண்டு வரப்பட்டிருந்தன. கரும்பு வண்டிகளும், தேங்காய் வண்டிகளும் ஏராளமாக வந்திருந்தன. குங்குமம் விபூதி முதலியவற்றைக் குவித்து வைத்துப் பணமாக்கிக் கொண்டிருந்தார்கள் சிலர். மேள தாளங்கள், கொம்பு வாத்தியங்கள், மூலைக்கு மூலை முழங்கிக் கொண்டிருந்தன. தொட்டில் கட்டி குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு, ஆத்தாள் கோவிலை ஊர்வலம் வந்துகொண்டிருந்தார்கள், சிலர். வேலங்குடி காளியாத்தாளின் பெருமை பற்றி, பக்தர்கள் பேசிப் பேசி மகிழ்ந்தார்கள்.

காளியாத்தாளின் கோவிலுக்கு எதிரே ஒரு பலிபீடம். அதில் ஆடுகளும் கடாக்களும் நிறுத்தப்பட்டு, பலி கொடுக்கப்பட்டன.

தலை தனக்கு என ஒதுக்கிக்கொண்டான் பூசாரி.

"தோலைக் கொடு!" என விலை பேசினான் தோல் வியாபாரி.

"கறியைத் தள்ளிவிட்டுப் பிறகு பேசு?" என்று முண்டியடித்துச் சொன்னான் கடா கொண்டு வந்த பக்தன்.

மனிதன் கொஞ்சம் ஏமாந்தால், இப்படித்தான் அவனை ஆளுக்கொரு பக்கம் பிரித்துக்கொண்டு போய்விடுவார்கள் என்பதை நிரூபித்தது, அந்தக் காட்சி.

"நல்ல கடா! எட்டு வீசைக்குக் குறையாது" என்று ஒரு பக்தன், குடும்பத்தோடு குதூகலித்துக் கொண்டிருந்தான்.

காளியாத்தாள் வழக்கம் போல் இதைப் பார்த்துக்கொண்டிருந்

https://t.me/tamilpdfebooks



தாள். குவித்துக் கிடந்த தலையும் தோலும், அவளைத் தேவியாகக் கொண்ட மதத்தின் "பெருமை"யைப் பாடிக் கொண்டிருந்தன.

அப்போது, இழுத்து வரப்பட்டது, சின்னப்பர் வாங்கிய கடா. பின்னாலேயே சின்னப்பர், மங்கையர்க்கரசி, கமலம், இந்திரா, சாரதை, சுந்தரம், சாரதையின் பெற்றோர் ஆகியோர் வந்தனர். சாரதையின் பெற்றோருக்கு அங்கே தனி மரியாதை நடந்தது. சாரதையின் தந்தை தான் அந்தக் கோவில் நிர்வாகி என்பதால் அவ்வளவு மரியாதை.

மற்ற குடும்பங்கள் கடா வெட்டும்போது "பெண்கள் இங்கே நிற்கக்கூடாது" என்பான் பூசாரி.

அவர்கள் நிர்வாகியின் உறவினர்களாகையால் அவர்களை மட்டும் அனுமதித்தான்.

இந்திரா, வலப்புறம் நின்றாள்; கமலம் இடப்புறம் நின்றாள். மற்றவர்கள் பின்னால் நின்றார்கள்.

கடாவின் கழுத்தில் மஞ்சள் பூசப்பட்டது.

கமலம், தன் கழுத்தில் பூசுவதாக எண்ணிக் கொண்டாள்.

கடாவின் கழுத்தில் மாலை போடப்பட்டது.

பெரிய வாளை ஓங்கினான், பூசாரி.

படாரென விழுந்தது வெட்டு.

கடா உயிரோடு நின்றது.

ஆனால், ஒரு பெண்ணின் தலை துடித்துத் துள்ளி விழுந்தது.

"ஓ!"வென அலறிற்றுக் கூட்டம்.

இந்திராவின் முகத்தில் ரத்தம் தறித்து முகமே செந்நிறம் கொண்டு விளங்கிற்று. சுந்தரமும் சாரதையும் பெற்றோரும், "கமலம், கமலம்" என்று கதறினார்கள், ஆம்! ஆட்டை வெட்டும்போது குறுக்கே விழுந்தது கமலம்தான்! கூட்டம் திசை தெரியாது ஓடிற்று. பூசாரி நடுநடுங்கிப் போனான். கமலத்தின் தலையும் உடலும் தனித் தனியே துடித்துக் கொண்டு கிடந்தன. சாரதையும் இந்திராவும் மூர்ச்சையானார்கள். மங்கையர்க்கரசி பைத்தியம் பிடித்தவள் போல் கதறினாள். சில விநாடிகளில் புதிய கூட்டம் கூடிவிட்டது அங்கே. தான் பலியானதன் காரணத்தைக் கூறமுடியாத கமலத்தின் அழகு முகம் பலரது கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது. சிறிது நேரத்தில் நீல வாகனம் வந்து நின்றது. போலீஸ்காரர்கள் படபடவென்று இறங்கினார்கள். கமலத்தின் பலியால் தான் தப்பித்துக் கொண்ட கடா ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தது. போலீசார் பூசாரியைக் கைது செய்தார்கள். குறிப்புக்கள் எடுத்துக்கொண்டபின், கமலத்தின் தலையையும் உடலையும் நீலவானத்தில் ஏற்றிக்கொண்டு மருத்துவ மனைக்குச் சென்றார்கள். இப்போது மங்கையர்க்கரசியும் மூர்ச்சையுற்றாள். சின்னப்பரும் சுந்தரமும் புழுவாய்த்

https://t.me/tamilpdfebooks



இந்திரா பாலனின் மார்பில் சாய்ந்தாள்.

https://t.me/tamilpdfebooks



துடித்தார்கள். மூர்ச்சையுற்றுக் கிடந்த இந்திரா முனக ஆரம்பித்தாள். கூட்டத்திலிருந்த பெண்கள் இந்திரா சாய்ந்து கிடந்த இடத்தைச் சுற்றி நான்கு சேலைகளைத் திரையாகப் பிடித்துக் கொண்டார்கள். அதிர்ச்சியில் இந்திரா அங்கேயே ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்தாள். கூட இருந்த பெண்கள் அவளுக்கு வேண்டிய சிகிச்சைகள் செய்தார்கள்- இரண்டு பேர் ஓடி மூன்று கார்களைக் கொண்டு வந்து இந்திராவும் குழந்தையும் உட்பட எல்லோரையும் தூக்கிக்கொண்டு சாரதையின் பிறந்த வீட்டுக்குச் சென்றார்கள். கோட்டையூர் முழுவதும் அன்று அங்கு கூடியிருந்தது. ஊரே அதைப் பற்றித்தான் பேசிற்று! அந்தக் குடும்பத்தில் எல்லோருமே அதிர்ச்சி அடைந்து போயிருந்தார்கள். பிரசவித்த இந்திரா மயங்கிக் கிடந்தாள். வீடு ரணகளப்பட்டது. "கமலம் கமலம்" என்றே எல்லோரும் கதறினார்கள். அக்காளின் ஆனந்தத்திலேயே தன் வாழ்வு அடங்கியிருக்கிறது என்று கருதிய அன்பின் செல்வி, அத்தனை பேரையும் விட்டுவிட்டு மடிந்துவிட்டாள். நெறி இழந்தபின்பு வாழ்வு எதற்கு என்று எண்ணிய அந்தத் தமிழணங்கு, "இதுதான் தனக்கு நியாயமான முடிவு" என்று எண்ணியபடியே பலியானாள். அந்தக் குடும்பத்தில் எல்லோருக்கும் அன்று சுயநினைவு வர, வெகு நேரம் பிடித்தது.

கமலத்தின் பிணத்தைக் கொடுக்கப் போலீசார் மறுத்துவிட்டனர். கவிஞர்களின் கவிதைகளையெல்லாம் தனக்குள் அடக்கிக் கொண்டிருந்த அந்த மெல்லிய உடலை—அழகிய வடிவத்தை அந்தக் குடும்பத்தினர் மீண்டும் காணவே முடியவில்லை. களங்கத்தை ரத்தத்தால் துடைத்து-விட்டு, கமலம் மறைந்துவிட்டாள்.

அன்றே பாலனுக்குத் தந்தி கொடுக்கப்பட்டது. அன்று இரவு வெகு நேரத்திற்குப் பிறகு, பிரசவக் களைப்பில் இருந்த இந்திரா கண்விழித்தாள். இப்போது அவளது சித்த மயக்கம் தெளிந்திருந்தது. பழைய இந்திராவாக இருந்தாள். எல்லோர் முகங்களும் அழுதழுது வீங்கியிருப்பதைக் கண்டாள். "என்ன நடந்தது" என்று கேட்டாள். சாரதை அவள் மேல் விழுந்து, "கமலம் போய்விட்டாள்" என்று கதறினாள். பலவீனமான நிலையிலிருந்த இந்திரா தாளாத மேனியை அழுதழுது நோக வைத்தாள். மறுநாள் காலையில் பாலன் வந்து சேர்ந்தான். வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாகக் கதறினான். ஓடிப் போய்ச் சுந்தரத்தின் கால்களிலே விழுந்தான். சுந்தரம் அவன் தோள்களைப் பிடித்துத் தூக்கித் தானும் அழ ஆரம்பித்தான். இந்திரா பிரசவ அறையிலிருந்து தள்ளாடியபடி எழுந்து வந்தாள். பாலன் தடாரென்று அவள் கால்களிலே போய் விழுந்தான். கமலத்தைத் தொட்டபோது அவன் சாதாரணக் குற்றவாளியாக இருந்தான். கமலத்தின் தற்கொலை அவனைப் பயங்கரக் குற்றவாளியாக்கியது. மன்னிப்புக்காக அவன் மன்றாடினான். யாருடைய கால்களிலே விழவும் அவன் தயாராயிருந்தான். கிரீடம்

https://t.me/tamilpdfebooks



சுமந்த தலை போல நிமிர்ந்திருந்த அவன், நாலுபேர் கூடித் தன்னை உதைத்தாலும் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இருந்தான். இந்திரா மெதுவாக அவன் கைகளைத் தொட்டாள். பாலன் எழுந்தான். "இந்திரா! என்னை மன்னித்து விடு! எல்லாவற்றிற்கும் இந்தப் பாவிதான் காரணம்" என்று கெஞ்சினான். இந்திராவின் கண்களிலே கண்ணீர் ததும்பி நின்றது. அந்தக் கண்ணீரிலே இரண்டுவித உணர்ச்சிகள் பிரதிபலித்தன. தங்கை போய்விட்டாளே என்ற துக்கம் ஒன்று, போன தங்கைதான் தன்னை வாழ வைத்தாள் என்ற மகிழ்ச்சி ஒன்று. ஆம்!. பாலன் இனி அவள் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டான்!

நாட்கள் நடந்தன. அந்தக் குடும்பத்திலே துக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. கமலத்தின் படத்துக்கு மாலையிட்டு எல்லோரும் வணங்கி எழுந்தார்கள்.

வேலங்குடியிலே திருவிழா சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டது.காளியாத்தாள் நிரந்தரமாகச் சிறைப்படுத்தப்பட்டாள்.கமலத்தின் பலி இந்திராவை வாழவைத்ததோடு, ஏராளமான கடாக்களுக்கும் உயிர்ப்பிச்சை அளித்தது. கமலத்தின் நினைவில் சின்னப்பர், சொக்கப்பர் இருவரது குடும்பங்களிலும் புது மலர்ச்சியை ஏற்படுத்தி வைத்தது. இந்திரா ஒருநாள் "குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம்" என்று கேட்டாள் பாலனிடம். அப்போது அங்கே வந்த சாரதை, "கமலம் என்று வையுங்கள்" என்றாள். பாலனின் கண்களிலே நீர் நிரம்பியது சாரதை மறுபுறம் நடந்தாள். இந்திரா பாலனின் மார்பிலே சாய்ந்தாள். அவள் கையிலே பெண் குழந்தை சிரித்தபடி இருந்தது. அந்தச் சிரிப்பிலே பாலனின் களங்கம் முழுவதும் விலகியது. இந்திராவின் பெருநோய் அவன் கண்களுக்குத் தோன்றவே இல்லை. அவர்களின் வாழ்க்கைப் படகு இன்ப நதியிலே பயணம் தொடங்கிற்று.

அருகிலேயே ஒரு படகு வருகிறது. அதிலே யார் இருக்கிறார்கள்? ஆம்! சாரதையும் சுந்தரமும் காற்றுக்குக்கூட இடந்தராமல் கட்டிப் பிணைந்திருக்கிறார்கள்.

அந்த, ஆண்டில்தான்,

அவர்கள் வீட்டிலே திருவிழா ஆரம்பித்தது.

வேலங்குடித் திருவிழா நின்றது.

**(முடிந்தது)**

---

ஆசிரியர், வெளியிடுபவர்: பா. சிவந்தி ஆதித்தன் 533-அ, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-600007 அச்சிட்டவர்: ஆர். பாஸ்கரன், ராணி அச்சகம், 533-அ, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-600007.